# இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்

மணவை முஸ்தபா

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இஸ்லாமும்
# சமய
# நல்லிணக்கமும்

ஆசிரியர்:
மணவை முஸ்தபா, எம்.ஏ:

விலை ரூ. 50/-

சௌதா பப்ளிகேஷன்
AE 103, அண்ணா நகர்,
சென்னை - 600 040.

# Islaamum Samaya Nallinakkamum

Author:
**MANAVAI MUSTAFA**, M.A;

**Price Rs. 50/-**

**Soudhaa Publication**
**AE 103, ANNA NAGAR,**
**CHENNAI - 600 040.**

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | **ISLAAMUM SAMAYA NALLINAKKAMUM** |
| Author | : | **Manavai Mustafa** |
| Copyright | : | Author |
| First Edition | : | March 1996 |
| Re-Edition | : | January 2000 |
| Paper used | : | White cream wove |
| Printing points used | : | 10 points |
| Size of the book | : | Crown octovo |
| No. of Pages | : | 228 |
| Price | : | Rs. 50/- |
| No. of Copies Printed | : | 1000 |
| Type Setting | : | **Shri Surakshaa Computers**<br>D-129, First Main Street,<br>Annanagar East,<br>Chennai - 600 102. |
| Printer | : | **Creative Offset**<br>57, Kumarappa Street,<br>Nungambakkam,<br>Chennai - 600 040. |
| Binding | : | Paper back |
| Publishing place | : | **Soudhaa Publication**<br>AE 103, Anna Nagar,<br>Chennai - 600 040. |

# காணிக்கை

சமய நல்லிணக்கத்திற்காக
உழைத்த உத்தமர்களின்
இனிய நினைவுக்கு
இந்நூலை காணிக்கையாக்குகிறேன்

நூலாசிரியர்

# முன்னுரை

ஒருமைப்பாடு குறித்தும் சமய நல்லிணக்கம் பற்றியும் முன் எப்போதையும் விட இப்போது அதிகமாகப் பேசப் படுகிறது; எழுதப்படுகிறது; முனைப்புடன் சிந்திக்கப் படுகிறது. இவற்றின் இன்றியமையாத் தேவை இன்று பெரிதும் உணரப்படுவதே இதற்குக் காரணம். சமய நல்லிணக்கமே ஒருமைப்பாட்டின் அடித்தளமாகும்.

சமய நல்லிணக்கத்திற்கு இறை மறையாகிய திருக்குர் - ஆனும் அதன் வழிப்பட்ட இஸ்லாமிய மார்க்கமும் அதனை உலகில் நிலைநிறுத்திய பெருமானாரின் வாழ்வும் வாக்கும் உலகிற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அமைந்துள்ளன வெனலாம்.

இஸ்லாத்தின் ஒளியில், சமய நல்லிணக்கத்தை அண்ணலாரின் வாழ்க்கை வழியே வரலாற்றுப் பூர்வமாக ஆய்வதுதான் இந்நூலின் நோக்கம்.

உலக மக்களுக்கு நேர்வழி காட்ட இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்து இறைதூதர்களையும் அவர்கட்கு வழங்கப்பட்ட வேதங்களையும் முழுமையாக நம்பப் பணிக்கிறது இறுதி வேதமான திருக்குர்ஆன். இதையே பெருமானாருக்கு அறிவுறுத்தும் வகையில் அல்லாஹ், "எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் உங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் நாங்கள் நம்புகிறோம். எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒருவனே, நாங்கள் அவனுக்குத்தான் முற்றிலும் வழிப்பட்டு நடக்கிறோம் என்று கூறுவீர்களாக" (திருக்குர்ஆன் 129:46) எனப் பணிப்பதன் மூலம் இறை வேதங்களும் அவை புகட்டும் இறைவனும் ஒன்றே எனக் கூறி, இறை ஒருமைப்பாட்டை நிலைநாட்டு கிறது திருமறை.

இத்தகைய சிந்தனையின் விளைநிலமாக விளங்கிய பெருமை நம் தமிழ்மண்ணிற்குப் பண்டுதொட்டே உண்டு.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பழந்தமிழனின் இறைக் கோட்பாடே இஸ்லாத்தின் அடித்தள இறைக் கொள்கையாக அமைந்துள்ளது. மற்றும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழனின் சமுதாயக் கோட்பாடு இஸ்லாமிய மார்க்கத்தின் சகோதரத்துவக் கோட்பாட்டின் ஆணிவேராக அமைந்துள்ளதெனலாம்.

இஸ்லாம் இன்று இனம், மொழி, நிறம், பண்பாடு, புவியியல் பிரிவுகள் அனைத்தையும் கடந்த நிலையில் புவியெங்கும் பரவியிருக்கிறதென்றால் அதற்கு அடிப்படைக் காரணம் ஒரே ஆத்மாவிலிருந்து படைக்கப்பட்ட மனிதனின் மூலாதாரம் ஒன்றாக இருப்பதுதான்.

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் தவறான கண்ணோட்டத்தில் இஸ்லாமிய சமய நல்லிணக்க உணர்வுகள் சிலரால் மறைக்கப்பட்டன; மாற்றி, திரித்துக் கூறப்பட்டன; தவறாக விளக்கப்பட்டன. உண்மை நீண்ட நாள் உறங்க முடியாதல்லவா? அறிவுலகம் விழித்துக் கொண்ட நிலையில் இன்று திருமறைச் செய்திகளும் பெருமானார் வாழ்வும் வாக்கும் அறிவியல் பூர்வமாக நுணுகி ஆராயப்படுகின்றன. ஒருமைப்பாடு, சமய நல்லிணக்கப் போக்கு போன்ற உயர் கொள்கைகள் பூத்துக் குலுங்கும் பூங்காவாக இஸ்லாத்தைக் கண்டு உலகம் பேருவகை கொள்கிறது. அதன் வெளிப்பாடே இந்த ஆய்வு நூல்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை அதன் மனிதக் கண்ணோட்டம் தனித்துவமுடையதாகும். இறையம்சமாக, இறைவனின் ஏகப்பிரதிநிதியாக மண்ணுலகில் விளங்கும் மனிதனின் இயல்புகளை அடியொற்றியே அவன் உயர்வுக்கும் உயர்தகைமைக்கும் வழிகாட்டுகிறது இஸ்லாம்.

மனிதன் இறை நெருக்கம் கொள்ள, மாபெரும் ராஜபாட்டை யாக அமைந்திருப்பது அவனது மனிதத்தவமேயாகும்.

உலகை உரிய வழியில் திருத்தி சரியான இறைநெறியில் வழிநடத்த வந்த உத்தமர்களில் மனிதத்துவத்தை முன்னிருத்தி செயல்பட்டு வெற்றி பெற்றவர் நாயகத் திருமேனியாவார். மனித உணர்வை மதித்து, மனிதநேயத்தைப் போற்றி அன்பாலும் இனிய பண்பாலுமே மனிதகுலத்தை ஒன்றிணைக்க முடியும் என்பதை செயல்வடிவில் மெய்ப்பித்த பெருமையும் அண்ணலாருக்கே உண்டு.

இறை நெறியாகிய இஸ்லாத்தை முழுமைப்படுத்தும் மாபெரும் இறைப் பொறுப்பை ஏற்ற ஏந்தல் நபி, அதை வெற்றிகரமாக நிறைவேற்ற அன்பு, பண்பு, மனித நேயம், சகோதரத்துவம் ஆகிய உயர் தன்மைகளையே அதிகம் கையாண்டு வெற்றி பெற்றார். ஒரு மனிதன் தன்னொத்த மற்றொரு மனிதனை, அவன் எச்சமயத்தவனாயினும், அவனை எப்படி மதிக்க வேண்டும், எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை அதிகமதிகம் வலியுறுத்தினார். இதைத் தெளிவுபட எடுத்து விளக்கும் அரிய நிகழ்ச்சியொன்று பெருமானார் வாழ்வில் நடைபெற்றது.

அபூபக்ர் (ரலி) இஸ்லாத்தில் இணைந்து பெருமானாரின் வலக்கரமாக விளங்கிய நிலையிலும் அவரது துணைவியார் இஸ்லாத்தில் இணையாமல் சிலை வணக்கச் சமயத்திலேயே இருந்து வந்தார். இந்நிலையில் ஒரு நாள் தன் மகள் அஸ்மாவைக் காண சிறு அன்பளிப்புப் பொருளுடன் வந்தார். மாற்றுச் சமயத்தைச் சார்ந்த தன் தாயாரை இஸ்லாமிய விரோதியாகக் கருதிய அஸ்மா அவரை வீட்டிற்குள் நுழையவே அனுமதிக்கவில்லை. அவரை ஏறிட்டும் பார்க்க விரும்பாத அஸ்மா அவரது அன்பளிப்பையும் ஏற்க மறுத்துவிட்டார். இச்செய்தியை அறிந்த நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மிகவும் வேதனைப் பட்டார். உடனே அஸ்மாவை

அழைத்து 'உன் தாயாரை வீட்டிற்குள் அனுமதிப்பதோடு அவர் தரும் அன்பளிப்பையும் ஏற்று. உன் தாயாரைக் கண்ணியப்படுத்து' எனப் பணித்தார். இம் மனிதநேய உணர்வே சமய நல்லிணக்கத்திற்கு உயிர்மூச்சாகும்.

அனைத்து வேறுபாடுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் மனித குலத்தை ஒரு குலமாகக் கண்ட அண்ணலெம் பெருமானார் அவர்கள், "படைக்கப்பட்டவை அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பத்தினரே" எனக் கூறியுள்ளார். அது மட்டுமல்ல,

"சீப்பின் பற்களைப்போல் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே"

என்ற நபிமொழி மக்களினம் சமத்துவமாக, சகோதரத் துவமாக வாழ வேண்டியவர்கள் என்பதை உறுதிப் படுத்துகிறது.

இஸ்லாத்தின் பார்வையில் முஸ்லிமாக இருந்தாலும் முஸ்லிம் அல்லாதவனாக இருந்தாலும் முதலில் அவன் மனிதன்; அதன் பின்னரே அவன் சமயம், இனம், மொழி என்பன வரமுடியும். எனவேதான், 'மனித நேயத்தின் உயிராக' முஹம்மது நபியைக் கண்ட பிரிட்டானிய கலைக் களஞ்சியம், "அனைத்து மதத் தலைவர்களையும் வெற்றி கண்டவர் முஹம்மது நபி" எனப் புகழ் மாலை சூட்டி மகிழ்கிறது.

இன்றைய உலக ஒற்றுமைக்கு மனிதகுல ஒருமைப் பாட்டிற்கு சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலை நாட்டி, மனித உள்ளங்களின் ஒருங்கிணைவை நிலை நிறுத்த பேருதவி புரியவல்ல சமய நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமாக அமைந்துள்ளது. இதற்கு உதவியாக முன்பு 'பெருமானாரின் பிற சமயக்

கண்ணோட்டம்' எனும் நூலை எழுதி வெளியிட்டேன். தமிழ் கூறு நல்லுலகம் அதை ஏற்றுப் பேராதரவு தந்தது. இப்போது 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்' எனும் இந்நூலையும் அவ்வாறே எழுதி வழங்க ஆவல் கொண்டேன்.

இந்நூலுக்குத் தகுதி மிக்க பெரியார் ஒருவரிடம் அணிந்துரை பெற எண்ணியமாத்திரத்தில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் பெரியவர் திரு சி.சுப்பிரமணியம் அவர்கள் நினைவே என் மனக்கண்முன் நிழலாடியது. அரசியலிலும் சமுதாயப் பணியிலும் பட்டறிவின் நிறைகுடமாக விளங்கும் அவர்கள் என்மீதும் என் தமிழ்ப் பணிமீதும் பேரன்பு கொண்டவர்கள். அவர்களை அவ்வப்போது சந்தித்து அளவளாவும் பழக்கமுடைய நான் அவர்களோடு உரையாடி மகிழும்போதெல்லாம் புதிய புதிய உணர்வுகள் என்னை ஆட்கொள்ளும். அவர்களிடம் என் விழைவைக் கூறியபோது, அவர் தன் உடல் நலிவான நிலையிலும் பேரார்வப் பெருக்கோடு ஒப்புக்கொண்டு ஒரு சில நாட்களுக்குள் நூலைப் படித்து அழகியதோர் அணிந்துரையை எழுதித் தந்து பெருமைப்படுத்தினார்கள். இந்நூல் வெளிவந்ததில் அவர்கட்குப் பெரும் மகிழ்ச்சி. அன்னாருக்கு நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அவ்வாறே என்மீது அன்பும் மதிப்பும் கொண்ட சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியும் ஆக்கச் சிந்தனை யாளருமாகிய மாண்பமை சி.மு.அப்துல் வகாப், எம்.ஏ; பி.எல் அவர்களிடம் இந்நூலுக்கு முகவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். என் விருப்பத்தை உடனே ஏற்றுக் கொண்ட அவர்கள் தனது அலுவல்களுக்கிடையே இந்நூலை முழுமையாகப் படித்து, ஆய்வு அடிப்படையில் முகவுரை தந்து சிறப்பித்துள்ளார்கள். இன்றையச் சமுதாயச் சூழலில் இத்தகைய நூல்கள், பெருமளவில் வெளிப்படுவதன் மூலம்

இஸ்லாத்தின் உண்மை நிலையும் சமுதாய மேம்பாடும் வலுப்படும் என்ற அவர்தம் சிந்தனை வரவேற்கப்படத்தக்க ஒன்று என்பதில் ஐயமில்லை, அவர்கட்கும் என் இதய நன்றிகளைப் புலப்படுத்திக் கொள்ள விழைகிறேன்.

இந்நூலை அழகிய முறையில் வெளிவர தூண்டுகோலா கவும் துணையாகவுமிருந்த என் துணைவியார் திருமதி சித்தை செளதா அவர்கட்கும் முகப்போவியம் வரைந்த திரு கலைமதி அவர்கட்கும் என் நன்றி.

முதற் பதிப்பை ஏற்று ஆதரவளித்த தமிழுலகம் இம்மறு பதிப்பையும் ஏற்றுப் பேராதரவு நல்கும் என நம்புகிறேன்.

சென்னை - 40

மணவை முஸ்தபா
நூலாசிரியர்

# அணிந்துரை

'இஸ்லாம் மதத்தைப் பற்றி பலர் நினைப்பது, அம்மதம் மற்ற மதங்களை உண்மையானவை என்று ஏற்றுக் கொள்வ தில்லை; மற்ற மதங்களுக்கு இஸ்லாம் எதிரி; மற்ற மதத்தி னரை இஸ்லாமிய மதத்திற்கு மாற்றவதே இஸ்லாமியரின் அடிப்படைக் கொள்கை; அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வன்முறைகளையும் பயன்படுத்தத் தயங்குவதில்லை'. இம்மாதிரியான கருத்துகளெல்லாம் இஸ்லாமிய மதத்தின் உண்மைத் தத்துவங்களை உணராதவர்கள் சில காலங்களிலே, சில இடங்களிலே நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு இக் கருத்துகள் உருவாகியிருக்கின்றன என்பது திரு மணவை முஸ்தபா அவர்கள் இயற்றியுள்ள "இஸ்லாமும் சமய நல்லி ணக்கமும்" என்ற நூலினுள் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் கருத்துகள். அதற்கு குர்ஆனிலிருந்து தக்க ஆதாரங்களை எடுத்து விளக்கியிருக்கிறார். முஹம்மது நபிகளார் தனது சிஷ்யர்களுக்கும் தன்னைப் பின்பற்றுகின்றவர்களுக்கும் விளக்கியுள்ள புத்திமதிகளையும் சான்றாக இந்நூலில் விரிவாகக் காட்டியுள்ளார்.

உண்மையான முஸ்லிம் யார் என்பதை நபிகள் நாயகம் விளக்கியுள்ளதை இங்கு எடுத்துக்காட்டுவது சாலவும் சிறந்த தாகும். இந்நூலின் 12-13 பக்கங்களில் நூலாசிரியர் இதை எடுத்துக் கூறியிருக்கிறார்:

"முஸ்லிம் ஒருவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களை மட்டும் இறை தூதராக, இஸ்லாமிய மார்க்க வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு விட்டால் மட்டும் அவர் ஒரு முழுமை யான முஸ்லிம் ஆகிவிட முடியாது. அவ்வாறு கருதுவதும் இஸ்லாமிய மரபு அன்று.

காரணம், ஒருவர் ஒரு முழுமையான முஸ்லிம் ஆக வேண்டுமெனில் அவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களோடு, அவர்கட்கு முன்னதாக மனித குலத்தை இறைவழியில் வழிநடத்த, வல்ல அல்லாஹ்வால், முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) முதற்கொண்டு அனுப்பப்பட்ட மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களையும் அவர்கட்கு இறைவனால் அருளப்பட்ட அனைத்து வேதங்களையும் ஒப்புக் கொண்டால் மட்டுமே அவர் முழுமையான முஸ்லிமாக ஆக முடியும் என்பதுதான் அண்ணலார் வாக்கும் இஸ்லாம் உணர்த்தும் கோட்பாடுமாகும்."

இஸ்லாம் மார்க்கத்தில் கட்டாயத்திற்கு இடமே இல்லை என்பதை விளக்க பல நிகழ்ச்சிகளை நூலாசிரியர் சித்தரித்துக் காண்பித்துள்ளார். திருக்குர்ஆன் "உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர்களுக்கு அவர்கள் மதம்" எனக் கூறுகிறது. "இஸ்லாத்தில் நிர்ப்பந்தமே இல்லை" என்பது திருக்குர்ஆனில் கண்டுள்ள தத்துவம். "நபியே! நீர் கூறும் (முற்றிலும் உண்மையான இவ்வேதமானது உம் இறைவனால் அருளப் பெற்றது. விரும்பியவர் இதை விசுவாசிக்கலாம். விரும்பாதவர் இதை நிராகரித்து விடலாம்." இதுவும் திருக்குர்ஆனில் கண்டுள்ளது என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இஃது பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப் பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்த அடிகளாரும் இதே அடிப்படையில் இஸ்லாத்தை பற்றிய கருத்துகளை கூறியுள்ளார். இஸ்லாமும் இந்து மதமும் இணைந்து வாழ்வது அவசியம் என்பது விவேகானந்தரின் கருத்து.

சமய நல்லிணக்கம் இந்தியாவிற்கு மட்டுமல்ல பல உலக சமுதாயங்களுக்கும் மிகவும் தேவையானது. இக்

*கொள்கையை பரப்புவதற்கு திரு மணவை முஸ்தாவின் நூல் பெரிதும் பயன்படும் எனக் கருதுகிறேன்.*

*தக்க தருணத்தில் இந்நூல் வெளிவருகிறது. இதைச் சமைத்துக் கொடுத்த திரு மணவை முஸ்தபா அவர்களுக்கு நமது பாராட்டுதலையும் நன்றியையும் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.*

*18-4-1996*
*சென்னை - 85*

**சி.சுப்பிரமணியம்**
*(முன்னாள் மத்திய நிதியமைச்சர், மகாராஷ்டிர மாநில முன்னாள் ஆளுநர்)*

# முகவுரை

“இஸ்லாமும், சமய நல்லிணக்கம்” என்ற இந்த அரிய ஏட்டினை என்னிடம் தந்து, இதற்கு ஒரு முகவுரை வழங்குமாறு அருமை நண்பர் மணவை முஸ்தபா அவர்கள் கூறினார். முன்னுரையிலிருந்து இறுதிவரை படித்தேன். ஒரு சிறிய 228 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில் இவ்வளவு அதிகமான விவரங்களை, அவரால் சொல்லப்பட்டிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. ஏனெனில் இந்த அளவு விவரங்களை வைத்துக் கொண்டு சிலர் இரண்டு மூன்று புத்தகங்களை எழுதி முடித்துவிடுவர். சமூக நலனையும் நாட்டு நலனையும் காக்கும் நோக்குக் கொண்டவர் என்பதால் பொருள் நாடும் எண்ணத்தை விட்டு, நலன் நாடும் பணியில் இந்த நூலை எழுதி வெளியிட்டுள்ளார் என்பது என் கருத்து.

இஸ்லாத்தைப் பற்றி இஸ்லாமியர் இஸ்லாமியருக்கே எழுதிக் கொண்டிருப்பது, பேசிக் கொண்டிருப்பது தமிழக முஸ்லிம்களின் நிலை. முஸ்லிம்கள் கூடும் மசூதிகளாகட்டும் மாநாடுகளாகட்டும் இவைகள் இதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. தமிழகத்தில் தமிழில் வெளியிடப்படும், இஸ்லாமிய சமய நூல்களை வாங்கிப் பாருங்கள், இது நன்கு விளங்கும். அவைகளில் காணப்படும் நடையும் சொற்களும் இன்னும் அதிகமாகவே நான் மேற் சொன்ன கருத்தைத் தெளிவுபடுத்தும். ஆனால் மணவையார் அவர்கள் இந்த நூலில் தன் கருத்துகளை முஸ்லிம்களும் மற்றவர்களும் படிக்க வேண்டும்; தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு இனிய எளிய தமிழில் அரபு வார்த்தைகளைக் குறைத்து (தவிர்த்து) எழுதியுள்ளார். இவர் தொடர்ந்து இந்தத் திருப்பணியில் இயங்க வேண்டும்.

திருக்குர்ஆனின் வசனங்கள், நடைமுறை இவைகளைப் பின்பற்றி இஸ்லாமிய மன்னர்கள் இந்தியா உட்பட மற்ற நாடுகளில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைத் தெளிவாகக் கூறி, இஸ்லாத்தையும் மன்னர்களையும் பற்றித் தவறான கருத்துகளைச் சுட்டிக் காட்டியுள்ளது பாராட்டுதற் குரியது. 94-ம் பக்கத்தில், நான்காவது கலீபாவான அலி (ரலி) அவர்களின் ஆட்சியின்போது பைசாந்தியப் பகுதியில் வாழ்ந்த கிருத்தவ மக்களைத் தூண்டிய இரண்டாம் கான்ஸ்டாண்டின் வேண்டுகோளை உதறித்தள்ளி, அந்தக் கிறிஸ்தவ மக்கள், "உங்களுக்கு வேண்டுமானால் அவர்கள் சமய விரோதிகளாகப் படலாம். ஆனால் நாங்கள் ஒரு கிறித்துவ ஆட்சியில் பெற முடியாத முழுமையான மதச் சுதந்திரத்தோடு வாழ்கிறோம்" என்று கூறிய வரிகளும் 196-ம் பக்கத்தில் விவேகாநந்தரின் 'எதிர்கால இந்தியா' எனும் நூலிலிருந்து எடுத்துக்காட்டியுள்ள ஏழைகளுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் முஸ்லிம் ஆட்சி சுதந்திரம் அளித்தது; அதன் காரணமாகத்தான் நம் மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர் முஸ்லிம்களானார்கள், கத்தியும் நெருப்பும் கொண்டே இம்மத மாற்றம் அனைத்தும் நடந்தது என நினைப்பது பைத்தியக்காரத்தனம்" என்ற வரிகளும், மேற் சொன்ன கருத்தினை விளக்குகின்றன.

நபிகள் பெருமானாரின் வாழ்ந்து காட்டிய முறைகள், திருக்குர்ஆன் கூறும் கருத்துகள், மாற்று மதத்தையும் மதத்தாரையும் இஸ்லாத்தின் பக்கம் வர வற்புறுத்தக் கூடாது என்ற ஆணித்தரமான கருத்துகளையும் பக்கம் 53-லிருந்து 94-வரை பல எடுத்துக்காட்டுகள் மூலம் காண முடிகிறது.

அதோடு சமய நல்லிணக்கத்திற்கு ஆசிரியர் பக்கம் 204-ல் கூறும் "சாதாரணமாக இரு சமயங்களைச் சார்ந்தவர் களிடையே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படை

*யில் ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அதை இரு தனிப்பட்ட மனிதர்களிடையே ஏற்பட்ட தகராறாக மட்டுமே கருதி செயல்பட வேண்டுமேயல்லாது, இரு மதத்தவர்களுக்கு மிடையேயான மதச் சண்டையாகக் கருதும் போக்கு அறவே ஒழிய வேண்டும்" என்ற அறிவுரை மிகவும் வரவேற்கத் தக்கது.*

*ஆசிரியர் மணவை முஸ்தபா அவர்கள் சிறந்த தமிழறிஞர்; தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், தமிழ்க் கூரியரின் ஆசிரியராக 1967-லிருந்து பணியாற்றிக் கொண்டு, எழுதியும் மொழிபெயர்த்தும் வெளியிட்ட நூல்கள் 36. அஃதோடு தென் மொழிகள் புத்தகப் பொறுப்புக் கழகத்தின்* (Southern Languages Book Trust) *சார்பில் 120 புத்தகங்களின் பதிப்பாசிரியராவார். தமிழக அரசின் 'கலைமாமணி' 'திரு.வி.க விருது,' 'தமிழ்த் தூதுவர்,' 'வளர் தமிழ்ச் செல்வர்' பட்டம், 'அறிவியல் தமிழ்ச் சிற்பி' ஆகிய விருதுகளைப் பெற்றவர்.*

*இறுதியாக இந்த, 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்' என்ற நூலை வெளியிட்டதன் மூலம் தமிழுக்கும், இஸ்லாத்திற்கும் அரிய சேவை செய்துள்ளார். இந்த நூலை ஒவ்வொரு தமிழ் முஸ்லிமும் கட்டாயம் வாங்கிப் படிப்பதோடு, தனது மற்றைய தமிழ்ச் சகோதரனுக்கும் வாங்கி வழங்க வேண்டும்.*

*20-4-1996*
*சென்னை - 104*

சி.மு. அப்துல் வகாப், எம்.ஏ; பி.எல்;
நீதிபதி
சென்னை உயர்நீதி மன்றம்

பெருமானாரின் பிறந்த நாளை முன்னிட்டு கட்டுரை யொன்றை எழுதியனுப்புமாறு 'தினமணி' ஆசிரியர் திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க "பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதி அனுப்பினேன்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். நான் அனுப்பியிருந்த கட்டு ரையை அப்போதுதான் படித்து முடித்ததாகவும் உடனடி யாகத் தொடர்பு கொள்வதாகவும் கூறினார். தொடர்ந்து அவர்: "அண்ணலார் பற்றிய உங்கள் கட்டுரையைப் படித்த போது நீண்ட காலமாக எனக்கிருந்த பல ஐயப்பாடுகள் அகன்று விட்டன. 'பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' கட்டுரையின் கருத்துகள் இன்றைய உலகு முன் உரத்த குரலில் ஒலிக்கப்பட வேண்டியவை. இக்கருத்துகள் உரிய முறையில் பரப்பப்படாததாலேயே தேவையற்ற பல பிரச்சினைகள் இன்று நம்மிடையே தலைதூக்கிக் கூத்தாட்டம் போட நேர்ந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் நீங்கள் கட்டுரை மட்டும் எழுதியதாக நான் கருதவில்லை. இதன் மூலம் இன்றையத் தேவையை நிறைவு செய்ய அற்புதமான சமூக சேவையைச் செய் திருப்பதாகவே கருதி மகிழ்கிறேன். உடனே உங்களைப் பாராட்ட வேண்டும் என்ற உந்துதலாலேயே உங்களுக்கு உடனடியாகப் போன் செய்தேன்." எனத் தன் அறிவுப் பூர்வமான உள்ளுணர்வுகளை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

## வெறுப்பு மறைந்து விருப்பு மிகுந்தது

கட்டுரை வெளியான பின்பு பல வாசகர்கள் அக்கட்டுரை பற்றிக் கருத்துரைத்திருந்தார்கள். பலரும் வரவேற்று எழுதியிருந்த கடிதங்களில் திரு பி. பெருமாள் என்பவர் எழுதிய கடிதம் பின்வருமாறு இருந்தது. "...கட்டுரையைப் படிப்பதற்கு முன் இஸ்லாம் மதம் பற்றித் தவறான எண்ணம் கொண்டிருந்தேன். இந்தியச் சமயங்களை அழிக்க வந்த சமயம் என்றே இஸ்லாத்தைப் பற்றி எண்ணியிருந்தேன். பிற மதங்களை மதிப்பதே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை என்பதை குர்ஆனி லிருந்து எடுத்துக்காட்டுகள் தருவதன் மூலமாகவே சிறப்பாக விளக்கியிருந்தார் கட்டுரையாளர். இதைப் படித்தபின் என்னுள் இருந்த வெறுப்பு விலகியது மட்டுமல்ல, இஸ்லாம் மதம்மீது மதிப்பு ஏற்பட்டுவிட்டது. இஸ்லாம் கொள்கை வழி நடப்பதன் மூலமே மத சுமுக நிலை பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது."

'தினமணி' ஆசிரியரின் தொலைபேசி உரையாடலும் தொடர்ந்து வெளியான வாசகர் கடிதமும் எனக்குப் பல உண்மைகளை வெளிப்படுத்தின. இஸ்லாத்தைப் பற்றியும் குறிப்பாக அதன் பிற சமயங்களைப் பற்றிய கருத்தோட்டம், பிற மத தீர்க்கதரிசிகள், அவர்கள் மூலம் வெளிப்பட்ட வேதங்கள், கடவுளர், சமயச் சடங்குகள் பற்றிய இஸ்லாமிய நோக்கும் போக்கும் போன்றவற்றை அறிந்து கொள்வதிலே மற்ற சமயத்தவர்க்குள்ள பெரும் நாட்டத்தை என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

## நெறிப்படுத்தவே தவிர வெறிப்படுத்த அல்ல

உலகத்துச் சமயங்கள் அனைத்துமே அன்பையே போதிக்கின்றன. 'அன்பின் வழியது உயர் நிலை' என்பது தான் சமயங்களின் உயிரோட்டமான கருத்து. மனித நேயம்

போற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. ஏனெனில், 'மனிதன் இறையம்சமானவன்' என இஸ்லாம் போதிப் பதைப் போல உலகச் சமயங்கள் பலவும் எடுத்தோது கின்றன. ஆனால், அதற்குப் புறம்பான முறையில் மத நடவடிக்கைகள் அமைகின்றனவென்றால் அதற்கு மதம் காரணம் அல்ல. அந்த மதத்தை வழி நடத்துவதாகக் கூறி கொள்ளும் போலிச் சமயவாதிகளும் சமயப் போர்வையில் சுய லாபம் தேடியலையும் சுய நலக் கும்பல்களுமே காரணமாகும். சமய நெறிக்குப் புறம்பாக மக்களுக்கு மதவெறியைப் புகட்டி சமயத்தின் உன்னதத்தையே உருக்குலைத்து விடுகிறார்கள். இத்தகைய சமூக விரோதி களை இனங்கண்டு ஒதுக்குவதன் மூலமே உண்மைச் சமயத்தின் உன்னதத்தை நிலை நாட்ட முடியும் என்பதை நாம் உணர்ந்து தெளிய வேண்டும்.

மேலும், மக்களுக்கு அவரவர் சமயத்தின் உண்மைத் தத்துவங்களை, கொள்கை கோட்பாடுகளை உரிய முறை யில் உணர்த்துவதன் மூலம் அனாவசியமான ஐயப்பாடு களை நீக்கி மனித உள்ளங்களை நெருக்கமடையச் செய்ய முடியும்.

## அடிப்படை தேடும் ஆக்க விமர்சனம்

ஒரு முஸ்லிம் எந்தச் சமயத்தைப் பற்றியும் அறிந்து கொள்வதில் தவறில்லை. அஃது அவசியமும்கூட. அம் மதத்தவரின் சமயக் கருத்துகளை-தத்துவ நுட்பங்களை சடங்குகள், பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றைப் பற்றி தொடர்புடைய சமய அறிஞர்களோடு ஆக்க பூர்வமான விமர்சனக் கண்ணோட்டத்தில் வாதிப்பதும் ஆய்வதும் அம் மதக் கோட்பாடுகள், கொள்கைகள், சடங்கு, சம்பிரதாயங்கள் எந்த அளவுக்கு அச்சமயத்தின் இறை தூதரின் மூலக் கருத்துக்கு இசைவானவை என்பதை

யும் எந்த அளவுக்கு போலித்தனமும் பொய்மையும் கொண்டுள்ளது என்பதையும் அறிந்து கொள்ள இயலும்.

இதற்கு மாறாக, அம்மதத்தவர் முஸ்லிம்கள் பின்பற்றும் கொள்கை கோட்பாடுகளைக் கொண்டவரல்ல என்றோ, தான் வணங்கும் முறையில் இறைவணக்கம் செய்யவில்லை என்ற காரணத்துக்காகவோ ஒரு முஸ்லிம் பிற மதத்தை எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கும் உரிமை ஒரு முஸ்லிமுக்கு இல்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் ஒரு மதக் கருத்தின் வடிவம், காலப் போக்கில் எவ்வாறெல்லாம் மனிதர்களின் மாற்ற திருத்தங் களுக்கு ஆட்பட்டு, மூல வடிவை இழந்து நிற்கும்பாங்கை, இறைத் தூதர்களின் மூலக் கருத்தை இயன்றவரை இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் அடிப்படையில் விளக்கி உண்மையை உணரத் தூண்டுவதில் தவறேதும் இல்லை.

### சமய அறிவின்மையே அனைத்துப் பிரச்சினைக்கும் அடிப்படை

பிற சமய அன்பர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் இஸ்லாமிய உணர்வுகளை, சிந்தனைகளை, எடுத்து விளக்கினால் அவர்கள் எளிதாக விளங்கிக் கொள்ளக் காத்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமல்ல, இஸ்லாமியத் தத்துவ நுட்பங்களை எளிய முறையில் எடுத்துக் கூறினால், அவற்றைப் படித்து மனதுள் இறுத்தி, அவற்றை ஆழச் சிந்திக்க அளாவும் உள்ளங்கள் பல இருப்பதை மறுக்க முடியாது. இதன் வாயிலாக இஸ்லாத்தை உரிய முறையில் அணுகாமலும் அறியாமலும் அதன் மீது தவறான கண்ணோட்டம் செலுத்தி வருபவர்கள் தங்கள் தவறான உணர்வையும் கருத்தையும்

திருத்திக் கொள்ளவும் தெளிவு பெறவும் வாய்ப்பேற்படுகிறது. இதனால் முஸ்லிம்களுக்கு பிற சமயத்தவர்களுக்குமிடையில் தவறான கண்ணோட்டங்கள் மறையவும் மன நெருக்கம் ஏற்படவும் சமூக ஒருங்கிணைவு உருவாகவும் வாய்ப்பேற்படுகிறது.

இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டதா?

இஸ்லாமிய நெறி பற்றிய உணர்வுகளும் சிந்தனைகளும் பிற சமய மக்களிடையே பரவலாகப் பரவாமற் போனதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு.

பிற இந்தியச் சமயங்களைப் போலல்லாமல் இஸ்லாம் வெளிநாட்டிலிருந்து வந்த அந்நிய சமயம் என்ற எண்ணம் மக்களிடையே அழுத்தமாகப் பதிந்திருப்பதோடு, அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாக முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவை ஆண்டு வந்ததுமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவில் மட்டுமல்லாது உலகெங்கும் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்ட ஒரு மார்க்கம் என்ற ஒரு தவறான கருத்து, வரலாற்றாசிரியர்களால் புனைந்துரைக்கப்பட்டிருப்பதாகும். நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இத்தவறான பிரச்சாரத்துக்கு அதிகாரப் பூர்வமான ஆதாரங்கள் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

ஐரோப்பாவில் இருநூறு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்த சிலுவைப் போரின் விளைவாகவும் இந்தியாவில் இருநூறு ஆண்டுகள் நடைபெற்ற ஆங்கில ஆட்சியில் இங்குள்ள இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றிணைய விடாமல் தடுத்து, அவர்களிடையே வேற்றுமை உணர்வையும் பகைமை உணர்வையும் வளர்க்கும் வகையிலும் ஆங்கில வரலாற்று ஆசிரியர்களால் புனைந்துரைக்கப்பட்ட ஒன்றே 'இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது' என்ற கோஷம். இதன் அடிப்படையில்

மிகத் தவறான பிரச்சாரம் முனைப்பாக மக்களிடையே தொடர்ந்து செய்யப்பட்டது. இதைப்பற்றி,

"இஸ்லாம் உலகிலேயே மிகவும் தவறாக விவரிக்கப் பட்ட - தவறாக புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம் என்று உண்மையிலேயே உணர்கிறேன்" என்று பி.பி.சியில் 'இஸ்லாம் நம்பிக்கையும் சக்தியும்' (Islam-Faith and Power) என்ற தொடரைத் தயாரித்தளித்த ரோஜர் ஹார்டி என்பவர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை பொதிந்த உணர்வாகும். உண்மையின் ஒளியை நீண்டகாலத்துக்கு மூடிமறைக்க இயலாது என்பதற்கு இஃது ஒரு சான்று!

இத்தவறான கருத்தின் அடிப்படையில் பார்த்தால் கூட, ஆட்சி அதிகாரத்திலிருந்த முஸ்லிம்கள் வாள் வலிமையை முழுமையாகப் பயன்படுத்தியிருந்தால் முஸ்லிம் அல்லாத வர்கள் யாரையுமே இந்நாட்டில் காணும் வாய்ப்பு இன்று ஏற்பட்டிருக்காது. இஸ்லாம் தவிர வேறு மதங்கள் அனைத் துமே மறைந்து போயிருக்கும். ஆனால் அத்தகைய நிலை எதுவும் ஏற்படவில்லை. அன்று போலவே இன்றும் முஸ் லிம்கள் இந்நாட்டில் சிறுபான்மையினராகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து வாளால் இஸ்லாம் பரப்பப்பட்டது என்பது கற்பனையாகப் புனைந்துரைக்கப் பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, இஸ்லாமியக் கோட்பாடும் திருக்குர்ஆன் இறைமொழியும் அண்ணலார் வாக்கும் இதைக் கடுமையாக எதிர்க்கிறது.

"நாவாலும் கரங்களாலும் தீங்கு விளைவிக்காதவனே முஸ்லிம்" என்பது நபி மொழியாகும். எவ்வகையிலும் பலாத்காரத்தைப் பயன்படுத்தி மற்றவரை இஸ்லாமிய நெறியின்பால் இணைப்பது இஸ்லாமிய நெறிமுறை களுக்கு முற்றிலும் நேர்மாறான, முரண்பட்ட செயலாகும்" என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

"இஸ்லாத்தில் நிர்ப்பந்தம் இல்லை" என்பது திருக்குர்ஆன் திருமறை தரும் வாக்கமுதமாகும்.

காஷ்மீரப் பகுதியில் எக்காலத்தும் முஸ்லிம் மன்னர் களின் ஆட்சி நடைபெற்றதில்லை. ஹிந்து மன்னர் களின் ஆட்சி மட்டுமே அண்மைக்காலம்வரை நடைபெற்றது. ஆனால், காஷ்மீரத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மை யினர் முஸ்லிம்களேயாகும். அதேபோன்று, கேரளப் பகுதியிலும் எக்காலத்தும் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி நடைபெற்றதாக வரலாறே இல்லை. ஆனால், கேரள மாநில மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் முஸ்லிம்கள் ஆவர். இவற்றிலிருந்து முஸ்லிம் மன்னர்களின் ஆதிக்கம் ஆட்சி அதிகாரங்களின் துணையோடு வாளால் இஸ்லாம் பரப்பப்பட்டது என்ற கற்பனைக் கூற்று வேரற்ற மரமாக வீழ்ந்து விடுகிறது.

ஆரம்பத்தில் இஸ்லாம் பரவிய காலத்தில் முஸ்லிம்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாயினர். மற்றவர்களின் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள தற்காப்பு முயற்சிகளில் ஈடுபட்டதைக் கொண்டு அவர்கள் இஸ்லாத்தை வாளால் பரப்பினர் எனக் கதைகட்டி விடலாயினர். இஸ்லாத்தின்மீது காழ்ப்பும் முஸ்லிம்கள்மீது வெறுப்பும் கொண்ட ஆங்கில வரலாற்றாசிரியர்கள்.

தொடக்க காலம் முதலே தொடர்புண்டு

இந்தியாவைப் பொறுத்தவரை, பெருமானார் அரபகத் தில் பிறந்து இஸ்லாமிய மார்க்கத்தை நிலைநாட்டுவதற்கும் முன்பிருந்தே அரபு நாட்டிற்கும் இந்தியாவுக்கும் குறிப் பாகத் தமிழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. வணிக நிமித்தம் இத்தொடர்பு வலுவாக இருந்து வந்துள்ளது என்பதற்கு இலக்கியங்களும் சான்றுரைத்து நிற்கின்றன.

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்

அரபு வணிகர்கள் மூலமும், முனைப்புடன் இஸ்லா மியச் செய்தியை உலகெங்கும் பரப்ப விழைந்த நபித் தோழர்களின் வாயிலாகவும் அண்ணலார் காலம் முதலே இங்கு இஸ்லாம் கால் பாவத் தொடங்கியதெனலாம். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற மூலமந்திரத்தை உயிர் மூச்சாகக் கொண்ட இஸ்லாமிய மார்க்கம் தமிழகத் தில் அழுந்தக் காலூன்றக் காரணம் அதே இறைக் கொள்கை யையும் சமுதாய நோக்கையும் சங்ககாலம் தொட்டே தமிழகம் தன் உயிர் மூச்சாகக் கொண்டிருந்ததுமாகும். காலவோட்டத்தில் இவ்வுயர் சிந்தனைகளை எங்கோ இழந்துவிட்டு நின்ற தமிழகத்தில் மீண்டும் அவ்வுயர் சிந்தனைகள் எதிரொலிக்கத் தொடங்கியவுடன், காணாமற் போன தன் அன்புச் செல்வத்தை மீண்டும் பெற்று மகிழும் தாயின் மகிழ்ச்சியில் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று முழங்கிய இஸ்லாத்தை தமிழகம் ஏற்று மகிழ்ந்ததில் வியப்பில்லை.

## இஸ்லாம் ஆனவனே தவிர ஆக்கப்பட்டவன் அல்ல

இன்றும் தமிழக முஸ்லிம்களில் யாராவது ஒருவரைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று வினாத் தொடுத்தால் அடுத்து வரும் பதில் "நான் ஒரு இஸ்லாமானவன்" என்பதாகவே இருக்கும். இதிலிருந்து தானாக இஸ்லாமியநெறியை ஏற்று அதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இஸ்லாம் ஆனவனே அன்றி யாரும் எதற்காகவும் கட்டாயப்படுத்தி 'இஸ்லாம் ஆக்கப்பட்டவன் அன்று' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

## இஸ்லாமிய நெறியும் இந்திய முஸ்லிம் மன்னர்களும்

அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவை முஸ்லிம் மன்னர்கள் ஆண்டதாக வரலாறு கூறுகிறது. அவர்கள் நாடாளும் மன்னர்கள் என்ற அளவில் இந்தியா வில் அரசோச்சியுள்ளார்களே தவிர, தாங்கள் சார்ந்த இஸ்லாமிய நெறியைப் பரப்ப பெரும் முயற்சிகள் எதையும் செய்தார்கள் என்பதற்கு வலுவான சான்றுகள் எதையும் வரலாற்றில் காண முடிய வில்லை.

இன்னும் சற்று நெருக்கமாக, அவர்கள் சமய வாழ்வை நுணுகிப் பார்த்தால், ஒரு சாதாரண முஸ்லிம், ஒரு சராசரி இஸ்லாமியன் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள, 'ஐம்பெரும் கடமை'களைக்கூட முழுமையாக நிறைவேற்றி னார்கள் என்று கூறமுடியவில்லை. அரசு கட்டில் ஏறிய பெரும்பாலான முஸ்லிம் மன்னர்கள் இஸ்லாமிய நெறிப்படி வாழ்ந்தார்கள் என்றுகூடத் துணிந்து கூற முடியவில்லை. எல்லாவகையிலும் இஸ்லாமிய நெறிப்படி வாழ முனைந்த சக்கரவர்த்தி ஔரங்கஸீப் ஆலம்கீர், இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில், வசதி படைத்தவர் கட்குக் கட்டாயக் கடமையாக அமைந்த 'ஹஜ்' கடமையை இறுதிவரை நிறைவேற்றாமலேயே மறைந்தார் என்பதுதான் வரலாற்று உண்மை.

## இஸ்லாமிய ஒளி ஏற்றிய ஞானிகளும் சூஃபிகளும்

ஆழ்ந்து நோக்கின் இஸ்லாமிய நெறியை சாதாரண மக்களிடம் எடுத்துச் சென்றவர்கள், அவர்களிடையே எடுத்துக் கூறி விளக்கி மனதில் பதிந்து நிலைபெறச் செய்த வர்கள் இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் செல்வர்களாகிய சூஃபிகளும் மார்க்க ஞான மேதைகளுமே யாவர். பிற சமயத்தவர்கள் மத்தியில் இஸ்லாமிய ஞானச் செல்வர்கள்

வாழ்ந்து காட்டிய வாழ்வியல் முறையே பிற சமயத்தவர் உள்ளத்தை ஈர்த்து, அவர்களை இஸ்லாத்தின்பால் இணையத் தூண்டின என்பது ஒப்பமுடிந்த உண்மையாகும்.

வட இந்தியாவில் ஆஜ்மீரில் அடக்கமாகியுள்ள குவாஜா மொய்னுதீன் சிஸ்தி, டெல்லி நிஸாமுத்தீன் அவுலியா, தமிழகத்தில் நத்தர்ஷா அவுலியா, நாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டகை போன்ற இஸ்லாமிய மேதைகளும் பீர் முஹம்மது அப்பா, குணங்குடி மஸ்தான் போன்ற இஸ்லாமிய மெய்ஞ்ஞானக் கவிஞர்களும் அவர்கட்குச் சீடர்களாக இருந்தவர்களில் பெரும்பாலோரும் பிற சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்து, இஸ்லாமிய நெறியை ஏற்று முஸ்லிம்களானவர்கள் என்பதே காலச்சுவடாகப் பதிந்து விட்ட உண்மை. இஸ்லாமிய மெய்ஞ்ஞானப் புலவர்களின் ஞானப் பாடல்கள் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று அனைத்துச் சமய மக்களின் இதய மெல்லாம் எதிரொலித்தது போன்றே இன்றும் அவர்தம் மெய்ஞ்ஞானத் தமிழ்ப்பாடல்கள் இஸ்லாமிய நெறியை மக்கள் உள்ளங்களில் எத்தி வைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. இனியும் அப்பணி தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

எனவே, இஸ்லாம் முஸ்லிம் மன்னர்களால், வாளால் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெள்ளத் தெளிந்த உண்மையாகும்.

### இஸ்லாம் எச்சமயத்திற்கும் எதிரானது அன்று

இஸ்லாமிய நெறியை மக்கள் தாங்களாக விரும்பி ஏற்றுக் கொண்டதற்கு அடித்தளக் காரணம். அஃது எந்தவொரு சமயத்திற்கும் எதிராக வந்த சமயம் அல்ல

என்ற உணர்வை மக்கள் அழுத்தமாகப் பெற்றிருந்ததே யாகும். இந்த உண்மையை ஞானிகளும் இஸ்லாமிய மார்க்க ஞானச் செல்வர்களும் திருமறை வழியும் பெருமானார் பெருவாழ்வு வாயிலாகவும் உணர்ந்திருந்த தோடு வலுவாக மக்களிடையே உணர்த்தி வந்ததுமாகும்.

"இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் எதிரானது அன்று" என்பது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் புகழ் பெற்ற பொன்மொழியாகும்.

இஸ்லாம் பிற சமயக் கருத்துகளை, கடவுளர்களை, சமயத் தலைவர்களை, சமயச் சடங்குகளைக் குறை கூறிப் பேசுவதை, கருத்துரைப்பதைக் கடுமையாகத் தடுக்கிறது.

"உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர்களுக்கு அவர்கள் மார்க்கம்" (திருக்குர்ஆன் 109-6) எனவும்.

"அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்கு கிறார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்" (திருக்குர்ஆன் 6:108)

எனவும் கூறப்பட்டுள்ள திருமறைக் கருத்துகள் இஸ்லாத்தின் பிற சமயச் சகிப்புணர்வின் எல்லை எதுவெனக் காட்டுகிறது.

'பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய் போலுமே! மெய் போலுமே' என்ற முதுமொழியொன்று தமிழில் உண்டு. அதற்கொப்ப பிற சமயங்கள் பற்றி இஸ்லாம் கொண்டுள்ள சமயப் பொறை உணர்வுக்கு மாறாக 'இஸ்லாமியர்கள் தங்கள் ஆதிக்க அதிகார பலத்தைக் கொண்டு வாளால் பரப்பினர்' என்றெல்லாம் இந்திய மக்களை சமய அடிப்படையில் பிரித்து வைக்கும் போக்கை மேற்கொண்டிருந்த வெள்ளையர்களும் பிறரும் தங்கள் அதிகார, பிரச்சாரப் பலத்தையும் வசதிகளையும் கொண்டு

தவறான உணர்வுகளையும் கருத்துகளையும் இஸ்லாமிய விமர்சனம் என்ற போர்வையில் எழுத்து வடிவில் வலுவாகப் பரப்பினர் என்பது கடந்த கால வரலாறு. இஃது இஸ்லாத்தின் பிற சமயக் கண்ணோட்ட உணர்வுக்கும் சிந்தனைக்கும் முற்றிலும் மாறான ஒன்று என்பதை திருக்குர் ஆன், வாயிலாகவும் பெருமானார் வாழ்வையும் வாக்கை யும் விளக்கும் 'ஹதீஸ்'கள் மூலமாகவும் நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

## அனைத்து இறை தூதர்களையும் வேதங்களையும் ஏற்பவனே உண்மையான முஸ்லிம்

உலகில் உள்ள அனைத்துச் சமயங்களையும் மதிக்கப் பணிக்கிறது இஸ்லாம். சமய சகிப்புணர்வு என்பது இஸ்லாத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகும். இதனையே இஸ்லாமியக் கோட்பாடும் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்வும் வாக்கும் நமக்கு நாளும் பறை சாற்றிக் கொண்டுள்ளது.

ஒருவர் எந்த இறைதூதரை அல்லது சமயத் தலைவரை மனப்பூர்வமாக ஏற்றுப் பின்பற்றுகிறாரோ அவர் அச்சமயத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுவது உலகியல் மரபு. சான்றாக, மோசஸ் எனும் மூஸா (அலை) அவர்களை மட்டும் ஒருவர் ஏற்றால் போதும் அவர் யூத சமயத்தவராக ஆகிவிட முடியும். அதேபோன்று ஏசு நாதர் எனும் ஈஸா (அலை) அவர்களை ஒருவர் ஒப்புக் கொண்டுவிட்டால் போதும் அவர் கிறிஸ்தவராகிவிட முடியும். அவ்வாறே புத்தரை ஏற்பவர் பௌத்தராகவும் மகாவீரரைப் பின்பற்று பவர் சமண சமயத்தவராகவும் இருக்க முடியும். அதே வழியில் சிவனை ஏற்பவர் சைவராகவும் திருமாலைப் போற்றி வழிபடுபவர் வைணவராகவும் இருக்க முடியும்.

*ஆனால், முஸ்லிம் ஒருவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களை மட்டும் இறை தூதராக, இஸ்லாமிய மார்க்க வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு விட்டால் மட்டும் அவர் ஒரு முழுமையான முஸ்லிம் ஆகிவிட முடியாது. அவ்வாறு கருதுவதும் இஸ்லாமிய மரபு அன்று.*

*காரணம், ஒருவர் ஒரு முழுமையான முஸ்லிம் ஆக வேண்டுமெனில் அவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களோடு, அவர்கட்கு முன்னதாக மனித குலத்தை இறைவழியில் வழிநடத்த, எல்லாம் வல்ல அல்லாஹ்வால், முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) முதற்கொண்டு அனுப்பப்பட்ட மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களையும் அவர்கட்கு இறைவனால் அருளப்பட்ட அனைத்து வேதங்களையும் ஒப்புக் கொண்டால் மட்டுமே அவர் முழுமையான முஸ்லிமாக ஆக முடியும் என்பதுதான் அண்ணலார் வாக்கும் இஸ்லாம் உணர்த்தும் கோட்பாடுமாகும். இதையே,*

*"(நம்பிக்கையாளர்களே) நீங்களும் கூறுங்கள்! அல்லாஹ்வையும் எங்களுக்கு அருளப்பெற்ற (இவ்வேதத்)தையும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யாகூப் முதலியவர்களுக்கும், இவருடைய சந்ததிகளுக்கும் அருளப் பெற்ற யாவற்றையும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததையும் மற்றைய நபிமார்களுக்கு அவர்கள் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டிருந்தவற்றையும் நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர்களிலிருந்து எவரையும் (நபியல்லவென்று) நாம் பிரித்துவிடமாட்டோம் அன்றி, அவனுக்கே நாங்கள் முற்றிலும் வழிபடுவோம்," (2 136)*

*எனக் கூறி திருமறையாம் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.*

இங்கு முக்கியமான ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு முஸ்லிம் இறைவனின் இறுதித் தூதராகிய நாயகத் திருமேனி அவர்களையும் இறுதி வேதமான திருக்குர்ஆன் திருமறையையும் முழுமையாக ஏற்றுக் கொள்கிறார். ஆனால், இறுதித் தூதருக்கு முந்தைய நபிமார்களையும் அவர்கட்கு வழங்கப்பட்ட வேதங்களை யும் ஒப்புக் கொள்கிறார். இங்குப் பயன்படுத்தப்படும் ஏற்றுக் கொள்ளல், ஒப்புக் கொள்ளல் என்ற இரு சொற்கள் உணர்த்தும் உட்பொருளை நன்கு உணர வேண்டும். இதை எளிதாகப் புரிந்து கொள்ள ஒரு எளிமையான உதாரணம் மூலம் அறியலாம். ரயில் பயணம் மேற்கொள்ளும் ஒருவர் இன்று நடைமுறையிலுள்ள நேர அட்டவணைப்படி, அதைப் பின்பற்றி ரயிலுக்குச் சென்று பயணம் மேற்கொள் கிறார். அவர் பழையதான, முந்தைய நேர அட்ட வணையைப் பின்பற்றுவதில்லை. ஏனெனில், அவ்வட்ட வணை மாற்ற திருத்தங்கட்கு உட்படுத்தப்பட்டுவிட்டது. அதனால் அவ்வட்டவணை ரயில் நேரம் அறிவதற்கோ அல்லது பயணத்தை மேற்கொள்வதற்கோ நாம் பயன் படுத்துவதில்லை ஆயினும், மாற்ற திருத்தங்கட்கு உட்பட்டதாயினும் பிந்தைய அட்டவணை இல்லை என்றாகி விடாது. முன்பு இருந்த அட்டவணையை ஒப்புக் கொள்கிறோம். நடைமுறையிலுள்ள இன்றைய அட்டவணையை ஏற்றுக் கொண்டு பின்பற்றுகிறோம்.

இதேபோன்றுதான் முன்னர் இறைவனால் மக்களுக்கு இறைநெறி புகட்டி வழி நடத்த வந்த நபிமார்களையும் அவர்கட்கு இறைவனால் அளிக்கப்பட்ட இறை வேதங் களையும் ஒரு முஸ்லிம் ஒப்புக் கொள்கிறார். ஆனால், இறைவனின் இறுதித் தூதராக வந்த நபிகள் நாயகம் அவர்களையும் அவர்கட்கு இறைவன் நல்கிய இறுதி வேதத்தையும் ஒரு முஸ்லிம் முற்றாக ஏற்றுப் பின்பற்று கிறார். இதன்மூலம் அவர் முழுமையான முஸ்லிமாகிறார்.

இதிலிருந்து முந்தைய நபிமார்களும் அவர்கட்கு வழங்கப்பட்ட இறைவேதங்களும் அவ்வச் சமயத்தவர் கட்கு மட்டும் உரிமையுடையதன்று. ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உரியதாகின்றது. தோரா வேதம் யூதர்கள் வேதம் மட்டுமன்று; இன்ஜீல் வேதம் கிருஸ்தவர்கட்கு மட்டுமன்று; அவ்வாறே ஏப்ரஹாம் எனும் இபுறாஹீம் (அலை) அவர்கட்கும்- ஏன்-ஆதி மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) அவர்கட்கும் வழங்கப்பட்ட மூலவேதமும் ஒவ்வொரு முஸ்லிமுடைய வேதமாகும் என்பது தான் இஸ்லாமியக் கோட்பாடு.

இவ்வாறு விண்ணளாவும் அளவுக்குப் பரந்த சமயக் கண்ணோட்டத்தை இஸ்லாமிய மார்க்கம் உணர்த்திக் கொண்டுள்ளது. இதைச் சமய சகிப்புணர்வின் உச்சகட்டம் என்றே கூறவேண்டும்.

**உலகெலாம் நபிமார்கள்**

இன்றைய உலகில் மக்கள் பேணும் மதங்கள் பல உள்ளன. இவற்றுள் சில காலத்தால் முற்பட்டவை. இன்னும் சில காலத்தால் பிந்தியவை. இஸ்லாம் நிலை பெறுவதற்கு முன் உலகப் பெரும் சமயங்களாக யூத, கிறிஸ்தவ, இந்து, சமண, பௌத்த சமயங்கள் உலகில் நிலவி வந்தன. இன்னும் சொராஸ்டிரியம் போன்ற சிறு சிறு சமயங்களும் உலகில் ஆங்காங்கே இயங்கி வந்தன எனலாம்.

இச் சமயங்களின் தோற்றத்திற்கு மூலவர்களாக விளங்கியவர்கள் அந்தந்த பகுதிக்குள் அடங்கியவர் களாகவே இருந்தார்கள். யூத, கிருஸ்தவ சமயாச்சாரியர்கள் அனைவருடைய தோற்ற வரலாறுகளும் பாலஸ்தீனத்துக் குள் அடங்கியதாகவே உள்ளது. அந்நாட்டிற்கு வெளியே அவர்கள் யாரும் தோன்றியதாக வரலாறு இல்லை.

அதேபோன்று இந்து மத, சமண, பௌத்த சமயங்களைத் தோற்றுவித்த இறை அவதாரங்கள், ரிஷிகள் எல்லோருமே இந்திய மண்ணோடு சரி. பாரத மண்ணிற்கு வெளியே அவர்களில் யாருமே தோன்றியதாக எந்த வரலாறும் இல்லை. இந்தியாவுக்கு வெளியே, கிழக்காசிய நாடுகளில் பெருமளவில் பரவி, பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த கௌதம புத்தர் உட்படச் சமயச்சாரியர்கள் அனைவருமே இந்தியாவுக்குள் மட்டுமே தோற்றம் பெற்றுள்ளார்கள் என்பதுதான் வரலாறு.

ஆனால், இஸ்லாமிய மரபுப்படி, இறைவனால் படைக்கப்பட்ட மனித சமுதாயத்துக்கு இறைவனின் நேர் வழி உணர்த்தி வழிகாட்டிட, இவர்கள் உட்பட அனுப்பப் பட்ட ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்கள் உலகெங்கும் தோற்றம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் எல்லா நாட்டிலும் எல்லா இனத்திலும், எல்லா மொழிகளி லும் பிறந்துள்ளார்கள். இவர்களில் சிலர் ஒரு நாட்டு மக்களை இறை நெறியில் வழி நடத்தியிருக்கிறார்கள். வேறு சில நபிமார்கள் குறிப்பிட்ட இன மக்களை நல்வழியில் செலுத்தியிருக்கிறார்கள். இன்னும் சிலர் குறிப்பிட்ட மொழி பேசும் மக்களுக்கு இறை நெறியைப் புகட்டி வழிகாட்டியிருக்கிறார்கள். இவ்வாறு இறை தூதர்கள் தோன்றாத நாடோ, இனமோ, மொழியோ இருந்ததாக வரலாறு இல்லை எனலாம். இதையே திருக்குர்ஆன்,

"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வருப்பாரும் பூமியில் இருக்கவில்லை" (திருக்குர் ஆன் 35-24)

எனத் திருமறை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

## அவரவர் தாய் மொழியில் இறைவேதம்

உலகெங்கும் உள்ள ஒவ்வொரு இனத்துக்கும் வகுப்புக்கும் எனத் தோன்றிய இறை தூதர்கட்கு இறை வழிகாட்ட மறைமொழி வழங்கிய இறைவன், அவற்றை அவரவர் தாய்மொழியிலேயே வழங்கினான் என்பதைத் திருக்குர்ஆன் மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

*"(நபியே!) ஒவ்வொரு தூதரும் (தம் மக்களுக்கு) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அவரவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்." (திருக்குர்ஆன்:14-4)*

என இறைவன் தன் திருமறையில் தெளிவாகக் கூறியிருப், பதிலிருந்து மண்ணுலக மக்களுக்கு இறைநெறி உணர்த்தி நேர்வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி களுக்கு அவரவர் தாய்மொழியிலேயே இறை வேதங்கள் அருளப்பட்டன என்பது உறுதிப்படுகிறது. இவ் வகையில் பலப்பல இறை தூதர்கள் - தீர்க்கதரிசிகள் தோன்றியிருக்கலாம். அவர்கட்கு இறை வேதங்களும் அவரவர் மொழியில் அருளப்பட்டிருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் பழம்பெரும் மொழியான தமிழிலும் இறை வேதங்கள் வல்ல அல்லாஹ்வால் வழங்கப்பட்டிருக்கலாம் என எண்ணுவதில் தவறிருக்க முடியாதல்லவா?

## மனிதர்களிலிருந்தே இறைதூதர்கள்

இறைவனால் மக்களுக்கு வழிகாட்ட அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் பற்றி ஹிந்து சமயம் கூறுவது என்ன?

'இறைவன் தன் தீர்க்கதரிசிகளை மனிதர்களிலிருந்தே தேர்ந்தெடுத்துள்ளான். ஏனெனில் இறைவனது சிறப்பையும் அவன் வேதத்தையும் இறைவனின் அருட்கொடையாக

நமக்குப் போதிக்க வந்தவர்களாதலால் நம்மைப் போன்றே அவர்களும் மனிதர்களாக இருக்க வேண்டுவது அவசிய மாகும். அப்போதுதான் அவர்கள் மனிதப் பண்பையும் மனப் போக்கையும் உணர்ந்து, மனிதர்களோடு பழகி, இறைச் செய்தியைப் போதிக்க முடியும். இவ்வாறு இறைச் செய்தியை மக்களுக்கு உணர்த்தி அவர்களை இறை வழியில் செலுத்த மனு (ஆதாம்) முதல் அனுப்பப்பட்ட இறை தூதர்கள்-தீர்க்கதரிசிகளின் மொத்த எண்ணிக்கை 313' என ஹிந்து சமயக் கோட்பாடுகள் தெரிவிக்கின்றன. இஸ்லாம் மார்க்கம் முதல் நபி ஆதாம் (அலை) தொடங்கி இறுதி நபி (சல்) அவர்கள் வரை ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் இறை தூதர்கள் மனித குலத்துக்கு வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்டுள்ளதாக இஸ்லாமியக் கோட்பாடு கூறுகிறது.

'ஹிந்து சமய மரபுப்படி இறைவனால் அனுப்பப்பட்ட 313 இறை தூதர்களில் 20வது தீர்க்கதரிசி 'பிரஹ்மா' ஆவார். இவரே 'ஆப்ரஹாம்' என கிருஸ்தவ பைபிள் கூறுகிறது. 'இப்றாஹீம் நபி' எனத் திருக்குர் ஆன் குறிப்பிடுகிறது. இவரே இறைவனின் தீர்க்கதரிசி 'பிரஹ்மா' என 'இந்தியா பிரிக்கப்பட்டால்' என்ற நூலில் (பக். 36) பாபு ராஜேந்திரப் பிரசாத் குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து ஹிந்து சமயம் உட்பட அனைத்துச் சமய தீர்க்கதரிசிகளும் ஒரே மூலக் கொள்கையைப் பரப்ப வந்தவர்களே என்பது தெளிவு.

### முதல் நபிக்குக் கூறியதே இறுதி நபிக்கும்

இதில் நாம் கவனிக்கத்தக்க சிறப்பம்சம் ஆதி மனிதரும் ஆதி நபியுமாகிய ஆதாம் (அலை) அவர்கட்கு எந்தச் செய்தியை இறைவன் வேத மொழியாக வழங்கினானோ அதே இறைச் செய்தியைத்தான் இறுதி நபியாகிய

பெருமானார் (சல்) அவர்கட்கும் வழங்கியதாக இறைவன் தன் திருமறையாம் திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறுகிறான்.

*"(நபியே) உமக்கு முன்வந்த இறை தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையேயன்றி (வேறொன்றும் உமக்குக் கூறப்படவில்லை." (திருக்குர்ஆன் 41-43)*

மேற்கூறிய இறைச் செய்தியிலிருந்து ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதுதான் இறை தூதர்கள் பல நூறாயிரம் பேர்களாக இருந்தாலும் அவர்கள் வாழ்ந்த கால கட்டங்கள் வெவ்வேறாக இருந்தாலும், நாடுகள், பேசிய மொழிகள் பலவாக இருந்தாலும் சமுதாயச் சூழலுக்கும் பெருகி வந்த மக்களின் மன வளர்ச்சிக்குமேற்ப அவர்கள் இறை தூதர்கள் மூலம் பெற்றுவந்த இறைச் செய்திகள்-வேத நெறிகளின் அடிப்படை போதனைகளின் சாரம் ஒன்றாகவே இருந்தன என்பது தெளிவு.

மறை கூறும் இறை தூதர்கள்

மனித குலத்துக்கு இறை நெறி புகட்டி வழிகாட்ட வந்த இறை தூதர்கள் ஒரு இலட்சத்து இருபத்தினான் காயிரம் எனக் கூறப்படினும் இருபத்தைந்து பேர்களின் பெயர்கள், வரலாறுகள் மட்டுமே திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றவர்கள் பெயர்கள் இடம் பெறாவிட்டாலும் அவர்களைப் பற்றியும் ஒட்டு மொத்தமாகத் திருக்குர்ஆன் குறிப்பிடத் தவறவில்லை.

*"நபியே! நிச்சயமாக உமக்கு முன்னர் தூதுவர்கள் பலரை அனுப்பியிருக்கிறோம். அவர்களில் சிலருடைய சரித்திரத் தைத்தான் நாம் உமக்குக் கூறியிருக்கின்றோம். அவர்களில் பலருடைய வரலாற்றை நாம் உமக்குக் கூறவில்லை." (திருக்குர்ஆன் 40:78)* என்பது திருமறை தரும் இறைவாக்காகும்.

## ஏன் இத்தனை நபிமார்? இத்தனை வேதங்கள்?

மனித குலத்துக்கு வழிகாட்ட ஆதாம் (அலை) தொடங்கி நபிகள் நாயகம் (சல்) அவர்கள் வரை இறை தூதர்களாக வந்த ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்களுக்கு முப்பத்தியாறு வேதங்களை வழங்கியதாக இஸ்லாமிய மரபு வழிச் செய்தி கூறினும், ஒரே விதமான அடித்தளத்தைக் கொண்ட வேதச் செய்தியை ஏன் இறைவன் மீண்டும் மீண்டும் வழங்க வேண்டும்? இவற்றை மக்களிடையே பிச்சாரம் செய்து பரப்பி நிலை நிறுத்த இத்தனை தீர்க்கதரிசிகளை ஏன் மனிதர்களிலிருந்து தேர்ந் தெடுக்க வேண்டும்?

ஆதாம் (அலை) முதல் அண்ணலார் (சல்) அவர்கள் ஈராக வந்த நபிமார்கள் அனைவரும் ஏக இறைவனாகிய ஒரே இறைவனையே வணங்கப் பணித்தனர் என்பதை நபிமார்கள் வரலாறுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. அவர்கள் வாயிலாக இறைவனால் மக்களுக்கு அருளப் பட்ட இறை வேதங்களும் ஏக இறைவனையே வணங்கப் பணித்தன. இவ்விறை நெறிக்குப் புறம்பாக எந்த ஒரு தீர்க்கதரிசியும் தங்கட்கு இறைத் தன்மையும் அதீத சக்தியும் இருப்பதாகவோ, தங்களையே இறைவனாக மக்கள் வணங்க வேண்டுமென்றோ கூறியதாக எந்தக் குறிப்பும் இல்லை. ஒவ்வொரு இறை தூதரும் பரம் பொருளாகிய ஏக இறைவனையே வணங்கப் பணித்தார்கள்.

ஆனால், இவ்வாறு சரியான நேர்வழியில் இறைநெறி புகட்டி வழிகாட்டிய இறைதூதர்-தீர்க்கதரிசி மறைந்த பின்னர், அவரைப் பின்பற்றி வந்தவர்கள், அவர்மீது கொண்ட அன்பு, பாசம், மரியாதை ஆகியவைகளின் காரணமாக, அவர்மீது கொஞ்சங் கொஞ்சமாக இறைத்

தன்மையை ஏற்றுவர். காலப்போக்கில் இறைதூதரான அவர் இறைச் சக்தியின் வடிவமாகவே வாழ்ந்து மறைந்தவர் எனப் புகழாரம் சூட்டி, அவர்மீது இறைத்தன்மையை முற்றாக ஏற்றிப் புகழ்வர். நாளடைவில் அவர் இறைவனாகவே வாழ்ந்து மறைந்தவர் எனத் தம் விருப்பம் போல் இறை தூதரை இறைவனாகவே ஆக்கிவிடுவர். அதற்கேற்ப தம் விருப்பப்படி கற்பனையாகப் பல இறைத் தன்மை கொண்ட சம்பவங்களை உருவாக்கி, இவ்விறை தூதரின் வாழ்க்கை வரலாற்றோடு இணைத்தும் விடுவர். இவ்வாறு செய்வதன் மூலம் அத்தீர்க்கதரிசியை மக்களின் உணர்வில் அழுத்தமாக நிலை நிறுத்த முடியும் என்ற நோக்கில் செயல்பட அவ்விறை தூதர் நாளடைவில் மக்களால் மக்கள் முன் இறைவனாக ஆக்கப்பட, அடுத்தடுத்து வரும் மக்களும் அவரை இறைவனாகவே எண்ணி வழிபடுவர். இவ்வாறு ஏக இறைவனை வணங்கப் பணித்த இறைதூதர்களே இறைவனாக்கப்பட்டனர்,

இந்நிலைமை இறுதித் தூதராகிய தனக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற உணர்வில் பல எச்சரிக்கைகளை மக்களுக்கு விடுத்துச் சென்றுள்ளார் பெருமானார் (சல்) அவர்கள்,

"கிருஸ்தவர்கள் மர்யமின் மகனை (இயேசுவை) அளவு கடந்து உயர்த்தியதைப் போல், என்னை நீங்கள் உயர்த்தாதீர்கள். நானும் அல்லாஹ்வின் அடிமைதான். எனவே, என்னை அல்லாஹ்வின் அடிமை என்றும் அவனுடைய தூதர் என்று மட்டும் அழையுங்கள்", எனக் கூறியுள்ளது இங்குக் கவனித்தற்குரியதாகும்.

அதே போன்று, அவ்விறை தூதர்கள் மூலம் இறைவனால் அருளப்பட்ட இறை வேதங்களிலும் மாற்ற திருத்தங்கள் செய்யப்பட்டன. வேத மொழிகளுக்கு

விளக்கம் செய்ய முற்பட்ட சமய அன்பர்கள் தங்கள் வெறுப்பு, விருப்புகளை வேத வசனங்களில் சேர்க்கவும் நீக்கவும் செய்தனர். இறை தூதருக்குப் பின்னர், அவரது இறைநெறியை, வேத வழியில் பரப்புவதாகக் கூறிக் கொண்டே. வேத வசனங்களை மாற்றியும் திருத்தியும் தீர்க்கதரிசியின் வாழ்வைத் தம் போக்கில் அமைத்து மக்களி டையே பரப்புவர். இத்தகைய போக்கால் இறை தூதர்களின் வாழ்வும் வாக்கும் இறை வேதங்களின் உட்கிடக்கையும் தடம் புரண்ட நிலையில், மாறுபட்ட போக்கில் அமைவது தவிர்க்க முடியாததாகியது. இவ்வாறு வழி மாற்றப்பட்ட தீர்க்கதரிசியின் மாறுபட்ட, அவரால் உணர்த்தப்பட்ட வேதத்தின் மாசுபட்ட போக்கை மாற்றி, மீண்டும் மக்களை நேர் வழிக்குக் கொண்டுவந்து. சரியான தடத்தில் வழி நடத்த மீண்டும் ஒரு இறை தூதர் இறைவனால் அனுப்பப் படுவர். மக்களுக்கு இறைநெறி புகட்ட மீண்டும் அவருக்கு மூலவடிவில் முந்தைய அடித் தளத்திலேயே திரும்பவும் வேதம் அளிக்கப்படும். இதுவே இறை தூதர்களின் வரலாறாகவும் இறை வேதங்களின் போக்காகவும் அண்ணலார் காலம் வரை அமைந்திருந்தது.

## இறை தூதர்-இறைவேதங்களில் வேற்றுமை இல்லை

மனிதர்களில் மட்டுமல்ல அவர்களை இவ்வுலகில் இறை நெறியில் வழி நடத்த வந்த இறை தூதர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடில்லை. அவர்கட்கு இறைவனால் வழங்கப்பட்ட வேதங்களிலும் சிறந்தது, சிறப்புக் குறைந்தது என்ற தாரதம்மியம் கடுகளவும் இல்லை. அனைத்து இறை தூதர்களும் அவர்கள் பெற்ற அனைத்து இறை வேத வாக்குகளும் ஒரே நிலைப் பாட்டையுடையனவேயாகும்.

*நபிமார்களிடையே பேதம் கற்பிப்பதை இஸ்லாம் அறவே தடை செய்கிறது. தீர்க்கதரிசிகளிடையே வேறுபாடு காட்டுபவன் 'காபிர்' ஆவான் என இஸ்லாம் கருதுவதாக மார்க்க ஞானிகள் கூறியுள்ளனர்.*

*உலக மக்களுக்காக முப்பத்தியாறு முறை வேதம் வெளிப்பட்டிருப்பினும் அவற்றுள் வேறுபாடு இருப்பது போல் தோன்றினும் அவற்றுள் முரண்பாட்டைக் காணவே முடியாது*

**ஆதாம் முதல் அண்ணலார் வரை இஸ்லாம்**

*வல்ல அல்லாஹ்வால் வழங்கப்பட்ட இறைநெறியாகிய இஸ்லாம் மார்க்கம் அண்ணல் நபி (சல்) அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது அல்ல. முதல் மனிதர் ஆதாம் (அலை) அவர்களால் இறைக் கட்டளைப்படி முதல் நபி என்ற முறையில் உலகுக்கு முன்மொழியப்பட்ட இறை நெறியாகும். ஆதாம் (அலை) தொடங்கிய அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள்வரை இறைவனால் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு வழிகாட்ட அனுப்பப்பட்ட ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் நபிமார்கட்கும் அந்நெறியே இறைவனால் மீண்டும் மீண்டும் வழங்கப்பட்டது. இவ்விறை தூதர்கள் உலகெங்கும் உள்ள எல்லா நாடுகளிலும் எல்லா இனங்களிலும் எல்லா மொழிகளிலும் தோன்றியிருக்கிறார்கள் என்பதை முன்பே பார்த்தோம். இதையே திருமறையாம் திருக்குர் ஆன்,*

*"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வகுப்பாரும் (பூமியில்) இருக்கவில்லை" (திருக்குர்ஆன் 35:24) மேலும்,*

*"ஒவ்வொரு வகுப்பினருக்கும் (நம்மால்) அனுப்பப் பட்ட ஒரு தூதர் உண்டு" (10:47)*

மேற்கண்ட இரு இறைவசனங்களிலிருந்து உலகிலுள்ள மனித இனங்கள் அனைத்திலும் இறை நெறிபுகட்டி மக்களை நல்வழிப்படுத்தும் இறைதூதர்கள், தீர்க்கதரிசிகள் தோன்றியிருக்கிறார்கள் என்ற பேருண்மை இனிது புலப்படுகிறது. இவர்கள் வாயிலாக அவ்வக் காலப் போக்குக்கும் சூழலுக்கும் மக்களின் அறிவாற்றலுக்கும் புரிந்துணர்வுக்கும் ஏற்ற வகையில் இறை தூதர்களும் இறை வாக்குக்கு விளக்கம் தந்து போதித்திருக்கிறார்கள் என்பதை திருக்குர்ஆன் திருமறையும் பெருமானார் (சல்) அவர்களின் பேருரையும் தெளிவுபடுத்துகின்றன.

### வளர்ச்சிக்கேற்ப வழிகாட்டு நெறி

பெருமானாருக்கு முன்னதாக இறைவன் அனுப்பிய இறை தூதர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டும் என அமைந்தார்கள். அவர்கட்கு இறைவன் அளித்த செய்திகள் அப்பகுதியின் சூழலுக்கும், அப்பகுதி மக்களின் தன்மைக்குமேற்ப அமைந்து அவர்களை வழிநடத்தின. அப்பகுதி மக்களின் தாய்மொழியில் அமைந்த அவ்விறைச் செய்தியும் ஒரு குறிப்பிட்ட கால வரைக்குட்பட்ட அளவிலேயே அமைந்தன

காலத்தின் போக்குக்கும் சூழலுக்கும் தேவைக்குமேற்ப புதிய இறைச் செய்தியோடு முந்தைய நபியைவிடத் திறம்பட்டவராக மற்றொரு நபி அப்பகுதி மக்களிடையே தோற்றம் வழங்குவார். இதுவே நபிமார் தோற்றம் பெற்ற வரலாறு.

### சொன்னதோடு வாழ்ந்து காட்டியவர்

அண்ணலாருக்கும் முன்னதாக, உலக மக்களுக்கு வழிகாட்ட வந்த இறை தூதர்கள் எல்லோருமே சொல்லள

வில் இறைநெறியைப் போதிப்பவர்களாகவே இருந்தனர். ஆன்மீக வழியில் உள்ளத்தை வளப்படுத்தவும் வலுப்படுத்தவும் அவர்கள் தங்கள் சொல்லாற்றலைப் பயன்படுத்தினார்கள். அவர்களின் ஆற்றல்மிகு சொற்பொழிவுகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டின. ஆயினும், அவ்விறைத் தூதர்கள் தாங்கள் போதித்தவாறே வாழ்ந்து காட்டும் தகைமையைக் கொண்டிருக்கவில்லை.

காரணம், அத் தீர்க்கதரிசிகள் வாழ்க்கையின் அனைத்து வகைகளிலும் முறைகளிலும் வாழும் வாய்ப்பைப் பெற்றவர்கள் அல்லர். ஓரிரு வகையான வாழ்க்கை முறைகளைப் பெற்றவர்களாகவே வாழ்ந்தவர்களாவர். சான்றாக, 'ஏப்ரஹாம்' என அழைக்கப்படும் இபுறாஹீம் (அலை) அவர்கள் அரசு நடத்தியவராகவோ போர்ப்படைத் தளபதியாகவோ வாழ்ந்தவர் அல்லர். அதே போன்று இயேசுநாதர் என்று அழைக்கப்படும் ஈஸா (அலை) அவர்கள் குடும்பத் தலைவராகவோ ஆட்சியாளராகவோ வாழும் வாய்ப்புப் பெற்றவரல்லர். எனவே, அவர்கள் ஆன்மீக வாழ்வின் அடிப்படையிலான வாழ்க்கை நெறி முறைகளை போதித்தவர்களாக விளங்கினர்.

ஆனால், இறுதித் தூதரான முஹம்மது நபி (சல்) அவர்கள் வெறும் போதனாசிரியராக மட்டுமல்லாது மனித வாழ்வின் அழகிய முன்மாதிரியாகவும் வாழ்ந்துகாட்ட இறைவனால் அனுப்பப்பட்டவராவார். மனித வாழ்க்கையில் எத்தனை படித்தரங்கள் உண்டோ அத்தனையிலும் வாழ்ந்து காட்டிய மனிதப் புனிதராவார். அவ்வப்போது இறைவனால் அருளப் பெற்ற இறைச் செய்தியை மக்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறியதோடு அமையாது அப்போதனைக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் அண்ணலார். அதனாலேயே இறைவன் தன் திருமறையில் பெருமானாரை

'ஓர் அழகிய முன்மாதிரி' யாக மனித குலத்துக்கு வழிகாட்ட அனுப்பியுள்ளதாகக் கூறியுள்ளான்.

"உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரில் அழகான முன் மாதிரி அமைந்திருக்கிறது" *(33:21)*

என்பது மறைதரும் இறைமொழியாகும்.

பெருமானார் இஸ்லாமிய மார்க்கம் பற்றி எடுத்துக் கூறி விளக்கிய செய்திகளும் அவற்றை செயல் முறையில் உணர்த் தும் வகையில் பெருமானார் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறி முறைகளும் கொண்ட தொகுப்பாக 'ஹதீஸ்'கள் திரு மறைக்கு அடுத்த நிலையில் மார்க்க விளக்க நூலாக விளங்கி வருகின்றன.

## இறவா மறைமொழி!

ஆதாம் (அலை) முதல் அண்ணலார் (சல்) ஈராக வந்த இறைதூதர்கட்கு தவ்ராத், இன்ஜீல், புர்க்கான் உட்பட சுமார் முப்பத்தியாறு வேதங்கள் இறை தூதர்கள் மூலம் வழங்கப் பட்டுள்ளதாக இஸ்லாமிய மரபுச் செய்தி கூறுகிறது. இவற்றில் சில திருமறையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றுள் பல வேதங்களும் அவற்றிற்குரிய வேத மொழிகளும் மறைந்து விட்டன. சில மொழிகள் வேதங் களை மட்டும் சுமந்து கொண்டுள்ளனவே தவிற, மக்களின் வாழ்விலிருந்து ஒதுங்கி வழக்கொழிந்து போய்விட்டன. இன்னும் சில மொழிகள் வேத மொழிகள் என்ற பெருமையை மட்டும் உடையனவாக இயங்கா மொழி களாகிவிட்டன. ஆனால், இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் திருமறை வந்த மொழியாகிய அரபி மொழி ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகியும் கூட, இன்னும் ஆற்றல் மிக்க மொழியாக மக்களிடையே விளங்கி வருகிறது. உயிர்ப்புத்

தன்மை மிக்க உலகச் செம்மொழிகளில் (Classical Languages) ஒன்றாகத் திகழ்கிறது. அரபு நாடுகளின் ஆட்சி மொழியாகவும் கல்வி நிலையங்களில் பயிற்சி மொழியாக வும் கோடிக்கணக்கான மக்களின் பேச்சு வழக்கு மொழியாக வும் திகழ்ந்து வருகிறது. மறை மொழி என்ற நிலையில் அரபி மொழி அறிந்த மக்கள் உலகெங்கும் நூறு கோடிக்கு மேல் பரவியுள்ளனர். உலகில் அரபி மொழிக்குக் கிடைத் துள்ள இப்பெருமைமிகு சிறப்பு வேறு எந்தவொரு மொழிக்கும் வாய்க்கவில்லை என்றே கூறலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டங்களில் இறைத்தூதர் மூலம் இறைவன் அளித்த வேதங்களில் பல மறைந்து போயின என்பது வியப்புக்குரிய செய்தியன்று. அப்படியே இருப்பனவாகக் கூறப்படும் வேதங்களும்கூட முழு வடிவில் இல்லை. அரைகுறையாகக் காணப்படும் அவற்றிலும் ஏராளமான இடைச் செருகல்கள். எது இறைவாக்கு, எது இடைச் செருகல் எனக் கண்டறிய வியலாநிலையில் ஏராளமான கலப்படச் சமாச்சாரங்கள்!

போகட்டும், வரலாற்றிற்குப் பிந்திய கால கட்டங் களில் இறைத்தூதர்கள் மூலம் இறைவனால் வழங்கப்பட்ட இறைவேதங்களாவது வழங்கப்பட்ட வடிவிலேயே இருக்கின்றனவா என்றால், அங்கும் ஏமாற்றமே மிஞ்சு கிறது. வரலாற் றுக்குப் பிந்தி வந்த வேதங்களில் திருக்குர் ஆன் தவிர்த்து அனைத்து வேதங்களும் மாற்ற திருத்தங்கட்கு உட்பட்டனவாகவே உள்ளன. அசல் வடிவில் இல்லாத அவற்றில் வேத விற்பன்னர்கள் தங்கள் விருப்புவெறுப்பு களுக்கேற்ப மாற்ற திருத்தங்களை இவ்வேதங்களில் இடைச் செருகலாக ஏற்படுத்தத் தவறவில்லை. இதனால் இறை வாக்குகளை காலப்போக்கில் மறந்து விட்டனர் என்றே கூற வேண்டும். இதையே திருமறை,

*"அவர்கள் தங்கள் வேத வசனங்களைச் சரியான இடங்களிலிருந்து மாற்றுகிறார்கள்.....!" (5:13)*

எனத் திருமறையாம் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறியுள்ளது.

## திருத்தப்படா திருவேதம்

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு அளிக்கப் பட்ட இறைவேதம் அன்று முதல் இன்றுவரை காற்புள்ளி, அரைப்புள்ளிகூடத் திருத்தப்படாத, கடுகளவு மாற்றமும் செய்யப்படாத திருமறையாக, செம்மையான முறையில் இருந்து வருகிறது. இதற்கு மனிதக் காப்பல்ல, இறை காப்பே காரணமாகும்.

*"நிச்சயமாக நாம்தான் இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம். ஆகவே, (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே (அதன் பாது காவலனாகவும்) அதனை இரட்சித்துக் கொள்வோம்." (திருக்குர்ஆன் 15:9)*

எனத் திருமறையிலே இறைவன் கூறுகிறான். மாற்றம், திருத்தம், கூட்டல், குறைத்தல் ஏதுமில்லாது இவ்வுலகுள்ள ளவும் இத்திருமறை இறைவனால் பாதுகாக்கப்படும் என்பதும் உறுதி.

## முந்தைய வேதங்களை உண்மையாக்கும் திருக்குர்ஆன்

பெருமானார்க்கு முன்னதாக இறைவனால் அனுப்பப் பட்ட நபிமார்களைப் பற்றியும் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள வேதங்களைப் பற்றியும் இஸ்லாமியத் திருமறை,

*"(நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும் நாம்தான் உம்மீது அருளினோம். இது தனக்கு முன்னுள்ள (மற்ற) வேதங்களையும் உண்மையாக்கி*

*வைக்கின்றது. அன்றி, அவற்றைப் பாதுகாப்பதாகவும் இருக்கிறது." (திருக்குர்ஆன் 5:48)*

எனத் தெளிவாகக் கூறுவதன் மூலம் ஆதாம் (அலை) தொடங்கி அண்ணல் நபிகள்நாதர்வரை வந்த இறைத் தூதர்களையும் அவர்கள் வாயிலாக மக்களுக்கு இறைவன் வழங்கிய வேதங்களையும் உண்மையாக்குகிறது திருக்குர் ஆன். அதுமட்டுமல்லாது உலகத்து மூல வேதங்களைப் பாதுகாத்து மக்களுக்கு இனங்காட்டும் ஒன்றாகவும் திகழ்கிறது.

### திருத்தமாக முந்தைய சமயக் கோட்பாடு

பல்வேறு உலகப் பெரும் சமயங்களின் கொள்கை களும் கோட்பாடுகளும் திருத்தமான முறையில் திருக்குர் ஆனில் இடம் பெற்றிருப்பதை எளிதாகக் காண முடிகிறது.

இதை நபிமார்களின் வரலாற்றுப் போக்கிலேயே நன்கு உணர்ந்து தெளியலாம். மோசஸாகிய மூஸா (அலை) அவர்கள் போதித்த இறை நெறிக் கோட்பாடுகளும் வாழ்வியல் நெறிகளும் மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. காலம் தன் போக்கில் எத்தனையோ மாற்ற திருத்தங்களை, மேடு பள்ளங்களை சமுதாய வாழ்வில் உருவாக்கவே செய்தன. ஈஸா நபி வந்த பின்னர் முந்தைய மூஸா நபியின் கொள்கைகளும் கோட்பாடுகளும் ஈஸா நபியால் செம்மைப் படுத்தப்பட்டு, சரியான வடிவில் மக்களுக்கு வழங்கப் பட்டன. பின்னர் அது கிருஸ்தவ சமயமாகப் பிற்காலத்தில் துலக்கமடையலாயிற்று. காலப் போக்கில் மாற்ற திருத்தங் கட்கு ஆட்பட்ட நிலையில் மக்களிடையே வழங்கிய இறை நெறிக் கோட்பாடுகளும் சமய வாழ்வியல் போக்குகளும் மீண்டும் சரியான வழித்தடத்தில் மீட்டமைக்கப்பட்டன. இத்தகைய மீட்டாக்க முயற்சியில் முன்னுதாரணமாக

வாழ்ந்துகாட்டி, இறைநெறியை நிலை நிறுத்தியதில் அழகிய முன்மாதிரியாக பெருமானார் (சல்) அவர்களும் அவர்களின் வாழ்வும் வாக்கும் இறைமறையாகிய திருக்குர் ஆனும் அடித்தளமாக அமையலாயின.

இவ்வாறு இஸ்லாம் பழங்காலம் முதலே உருவான பல்வேறு சமயங்களின் தொடர்ச்சியாகவே இன்றும் விளங்கி வருகிறது எனலாம். இத்தொடர்ச்சி முதல் மனிதர் ஆதாம் (அலை) தொடங்கி இன்றைய முஸ்லிம்வரையி லான தொடர்ச்சியாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல ஆதாம் (அலை) வாழ்ந்த காலத்தையும் இன்றைக்கு நாம் வாழும் காலத்தையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக வும் பெருமானார் வாழ்வும் வாக்கும் இஸ்லாமிய நெறி முறையும் அமைந்துள்ளன என்பது தெளிவு. உலகின் அனைத்துப் பகுதிகளும் மக்களினமும்கூட ஒருங்கிணைக் கப்படும் நிலை இதனால் உருவாகிறதெனலாம்.

**அனைத்தும் மனிதனுக்காக**
**மனிதன் இறைவனுக்காக**

இறைவன் மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் மண்ணிலும் விண்ணிலும் கடலாழத்திலும் படைத்தளித் துள்ளான். மறை பொருளான பலவற்றை அறிந்துணர நுண்மான் நுழைபுலத்தையும் மனிதனுக்களித்துள்ளான். பகுத்தறிவின் துணை கொண்டு ஆய்ந்து அவற்றையெல் லாம் நுகர்ந்தின்புற அவனால் இயலும். ஆனால், மனிதனை இறைவன் படைத்ததன் நோக்கம் அவன் தன்னை வணங்க என்பதே இஸ்லாமியக் கோட்பாடு

*'மண்ணையும் விண்ணையும் மனுவுக்காகப்*
*படைத்தான்*

*மனுவைப் படைத்தான் தனை வணங்க'*

என இறை நாட்டத்தை பீர் முஹம்மது அப்பா கூறுகிறார்.

## அனைத்துச் சமய அடிப்படை இறை வணக்கமே

உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் இறை வணக்கத் தையே உயிர் மூச்சாகக் கொண்டுள்ளன. மனிதர்கள் உணர்வாலும் செயலாலும் தன்னைப்படைத்த இறை வனுக்கு நன்றி செலுத்தும் வகையில் இறை வணக்கம் புரிய வற்புறுத்துகின்றன. இறை வணக்கத்தை வலியுறுத்தாத சமயம் உலகில் எதுவுமில்லை.

## இறை வணக்கம், உணர்வையும் உயிரையும் பொறுத்தது

இறை வணக்க முறைகள் பல்வேறு வகைகளில் முறை களில் அமையலாம். இறை வணக்க முறைகளில் வேறு பாடுகள் இருக்கலாம். ஆனால், வணங்கப்படும் சக்தி இறைவனே. இறைவணக்கம் என்பது உடலைவிட உணர்வைப் பொறுத்த விஷயமாகும். எனவே இறை வழிபாட்டில் வணக்க முறைகளைவிட வணங்கும் தன்மைக்கே முதலிடம்.

## ஆறு பலவாயினும் சங்கமிக்குமிடம் கடலே

உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள், யூதர்கள், பௌத்தர்கள் சமணர்கள், ஜொராஸ் டிரர்கள் என ஒவ்வொரு சமயத்தவரும் பல்வேறு வகையான வணக்க வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி இறை வணக்கம் புரிகின்றனர். இறைவனைப் போற்றி வணங்கும் வழிபாட்டு முறைகள் வெவ்வேறாயினும் வணங்குவது இறைவனாகவே இருப்பது கவனித்தற்குரிய தாகும். இதையே அறிஞர்களும் கவிஞர்களும் ஆறுகள் பலவாயினும் அவை இறுதியில் ஒன்று சேரும் இடம்

கடலர்கவே அமைகிறது எனக் கூறிச் சென்றுள்ளனர், நுணுகிப் பார்த்தால் அனைத்துச் சமயங்களின் வழிபாட்டு முறைகள் அனைத்துமே இறைவணக்கத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதை அறிந்தின் புறலாம். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டு மென்றால் அனைத்துச் சமயச் சடங்குகளின் உள்ளீடான உணர்வும் கருத்தும் இறை வணக்கமாகவே இருப்பதைத் தெளிந்துணரலாம்.

**இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகள்**
**அனைத்துச் சமய அடிப்படைகளே**

அண்ணலாருக்கு முன்னர் வந்த இறைதூதர்களுக்கு வழங்கப்பட்ட இறைச் செய்திகளும் பெருமானார் (சல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட இறைச் செய்தியும் ஒரே மாதிரியான அடித்தளத்தைக் கொண்டவை என்பது நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு வழங்கப்பட்ட இறைச் செய்தி மூலம் எல்லா வகையிலும் உறுதிப்படுகிறது.

"(நபியே!) உமக்கு முன்வந்த தூதுவர்களுக்குக் கூறப் பட்டது எதுவோ, அதனையேயன்றி (வேறொன்றும்) உமக்குக் கூறப்படவில்லை" (திருக்குர் ஆன் 41:43)

என்பது திருமறை தரும் செய்தியாகும்.

இதை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள இஸ்லாத் தின் அடித்தளமான ஐம்பெரும் கடமைகளை இன்னும் நுணுக்கமாக ஆயும்போது அவ்வுண்மை தெள்ளதின் புலனா கும்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் என்னனென்ன?

1. ஈமான் எனும் இறை நம்பிக்கை

2. தொழுகை எனும் இறை வணக்கம்

3. நோன்பு எனும் விரதம்
4. ஜகாத் எனும் தான தருமங்கள்
5. ஹஜ் எனும் புனிதப் பயணம்

இந்த ஐம்பெரும் கடமைகளான கோட்பாடுகள் உலகத்துச் சமயங்கள் அனைத்தினுடைய அடித்தளமாகவும் அமைந்திருப்பதிலிருந்து, அகிலத்துச் சமயங்கள் அனைத்துமே இறைவனால் அருளப்பட்டவை. ஒரே விதமான போக்குடையவை என்பது தெளிவாகிறது. அவற்றை இனி ஆராய்வோம்.

இறை நம்பிக்கை

இறை நம்பிக்கை இஸ்லாத்தில் 'ஈமான்' எனக் குறிப் பிடப்படுகிறது. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஈமான் எனும் இறை நம்பிக்கை தலையாயதாக அமைந் துள்ளது.

இறை நம்பிக்கையை வலியுறுத்தாத சமயம் எதுவுமே மண்ணுலகில் இல்லையெனலாம். உலகத்துச் சமயங்கள் அனைத்தும் இறைவன் மீது மனிதன் ஆழமான, அழுத்த மான நம்பிக்கை கொண்டு இறை வழிபாடு செய்யச் சொல் கின்றன. இஸ்லாமிய இறைவழிபாட்டிற்கும் பிற சமய இறை வழிபாட்டிற்குமிடையே சிறு வேறுபாடு உண்டு. மற்ற சமயங்கள் வலிவுறுத்துவது போன்று இஸ்லாமும் இறையருட்திறத்தினை உணர்த்தி, இறைவன் மீது நீங் கொணா நம்பிக்கை கொள்ள வற்புறுத்தினாலும் அவ்விறை நம்பிக்கை ஒரே இறைவன் என்ற அழுத்தமான ஆழமான கோட்பாட்டின் மீது அமைந்துள்ளது.

"இறைவன் ஒருவனே; அவன் உருவமற்றவன்; அவன் இணையற்றவன்; துணையற்றவன்; அவன் ஆணும் அல்லன்; பெண்ணும் அல்லன்; அலியும் அல்லன்; அவன்

யாராலும் பெறப்படவும் இல்லை; யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை என்ற இறைக் கோட்பாடு மீது அசைக்க முடியாத அடித்தளத்தில் உறுதிமிகு இறை நம்பிக்கையானது அமைந்துள்ளது.

## இறைவன் ஒருவன், பெயர்கள் பல

ஒரே இறைவன் என்ற உணர்வையும் கருத்தையும் பழம்பெரும் வேதங்களும் வேத விற்பன்னர்களும் எடுத்துக் கூறி விளக்கி வந்துள்ளார்கள். இதைப் பற்றி காஞ்சி மாமுனிவர் காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்கள் 1958 மே மாதத்தில் சென்னையில் நிகழ்த்திய உபதேசப் பேருரையில்,

"கடவுள் ஒருவரே, பல உருவங்களைப் பல பெயர்களில் தாங்கி இருக்கிறார். நாம் நம்முடைய மனத்தைப் பண்படுத்தி, அதை எந்தப் பெயரையுடைய எந்த உருவத்தையாவது தெளிவான பக்தியோடு 'நினைத்து' வணங்கி அர்ப்பணம் செய்தால் மோட்சம் கிடைக்கும். காளிதாசர் (குமாரசம்பவக் காவியத்தில்) 'ஒரே மூர்த்தி முக்குணங்களை ஒட்டி, மூன்று ரூபமானார்' என்று கூறுகின்றார். ('இங்கு ரூபம்' என்பது ஜடரூபம் அல்ல. 'ஜோதி ரூபம்') இந்த உண்மையை ரிக்வேதம், 'தெய்வம் ஒன்று' ஞானிகள் அதைப் பல பெயர்களால் வழிபடுகின்றனர் என்பதால் உணரக் கிடக்கின்றது. கீதையிலும் இந்த உண்மை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது," எனக் கூறியுள்ளார்.

இங்கு ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்கள் 'எந்தப் பெயரையாவது, "எந்த உருவத்தையாவது 'நினைத்து' அர்ப்பணம் செய்தால் மோட்சம் கிடைக்கும் என்று கூறுவதன் மூலம் தெய்வத்தின் பெயரை மனத்தளவில் 'நினைத்து' வழிபடுவதன் வாயிலாக ஒரே இறைவனை மனத்தளவில் எண்ணி அருவ வழிபாடு செய்யப் பணிக்கிறார். அதோடு 'தெய்வம்'

*ஒன்று, அதை ஞானிகள் பல பெயர்களால் வழிபடுகிறார்கள் என்று ரிக்வேதம் கூறுவதாகச் சொல்வதன் மூலம் ஓரிறைக் கொள்கையை ஹிந்து சமய பழம்பெரும் வேதங்களும் போற்றுவதாக உறுதி செய்துள்ளது அறிந்தின்புறத் தக்க தாகும்.*

**'இறைவன் பிறப்பு, இறப்பு அற்றவன்'
பகவத்கீதை புலப்படுத்தும் உண்மை**

*பகவத் கீதை மிகச் சிறந்த ஹிந்து சமய வேத நூலாகப் போற்றப்படுகிறது. போர்க்களத்தில் தளர்ச்சியுற்ற அர்ச்சுன னுக்கு வீரத்தையும் விவேகத்தையும் வளமான வாழ்க்கை நெறியையும் புகட்டும் வகையிலான கண்ணனின் உபதேசத் திரட்டே இவ்வேத நூல். இந்நூலின் 4-6வது வசனம் "கடவுள் பிறப்பு அற்றவர்" என அறுதியிட்டு உறுதிப்படக் கூறுவது இறைவனின் தன்மையை முழுமையாக உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இதன் மூலம் இறைத்தன்மையை- இறையருட் திறத்தை புலப்படுத்தும் இறைத் தீர்க்கதரிசியாகவே கண்ணன் இங்கு காணப் படுகிறார்.*

**அனைத்து வேதங்களும் மதங்களும் ஒரே
பரம்பொருளையே போதிக்கின்றன**

*கௌதம மகரிஷி வேதங்களின் சாரத்தையும் நுட்பங் களையும் நன்கு உணர்ந்து தெளிந்தவர். அவர் தன் சீடர் களுக்கு மனிதப் பிறப்பின் மகத்துவத்தைப் பற்றி உபதேசிக் கும்போது,*

*" 'ஸ்ருதி' என்னும் தரும சாஸ்திரம் நான்கு மறைகள் (வேதங்கள்), உபநிஷதங்கள் எல்லாமே ஒரே பரம் பொருளையே குறிக்கின்றன. இதிலிருந்து எல்லா வேதங் களும் மதங்களும் உலகம் தோன்றியது முதல் அழிவுவரை*

ஒரே பரம் பொருளைப் போதிப்பதையே நியதியாகக் கொள்ள வேண்டும்" என்று போதித்துள்ளார். அத்துடன் "பல பரம்பொருள் உண்டென்று ஒரு மதம் கூறுமானால் அது மதமல்ல" என்றும் தீர்மானமாகக் கூறியுள்ளார்.

பிரஹ்மாவின் ஏகத்துவக் கொள்கை

ஹிந்து சமயம் "பிரஹ்மா" என அழைக்கும் இறைதூதர் தன் சந்ததிகளுக்கு உபதேசமாகக் கூறுவனவற்றுள் குறிப் பிடத்தக்க உபதேசமாக கீழ்க்காணும் போதனை அமைந்துள்ளது.

"இறைவன் உங்களுக்காக ஒரு பரிசுத்தமான மார்க்கத்தை குறிப்பிட்டிருக்கிறான். ஆகவே, நீங்கள் அம்மார்க்கத்திலேயே ஸ்திரமாக இருந்து மரணமடையும் போது ஏக தெய்வ வழிபாட்டிலேயே மரிக்க வேண்டும்; இறைவனுக்கு எதையும் ஒப்பாக்கி வணங்காதீர்கள்" என்பதாகும்.

(ஹிந்து தர்மம் பக். 112)

இறைவனை அறிவதே 'பிரம்ம வித்தை'

மேலும், தன் சீடர்களுக்கு உபதேசிக்கும் கௌதம மகரிஷி, அவர்களை நோக்கி, "இப்பொழுது உங்களுக்கு மிகப் பெரிய வித்தையொன்று கற்றுக் கொடுக்கப் போகிறேன். அதுதான் மனிதன் பிறவாமல் இருப்பதற்கு வழிகாட்டும் கல்வியாகும். 'பிரம்ம வித்தை' என்று அதற்கு பெயர். அதாவது, நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள். நமது தந்தை அவரே; தாயும் அவரே; அவரே அம்மையப்பரும் ஆவார். அவரை அறிந்து கொள்வதே-அவரைப் பற்றிய அறிவைப் பெறுவதே பிரம்ம வித்தையாகும்" எனக் கூறியுள்ளார்.

## இன்ஜீல் எனும் விவிலியம் கூறும் ஏகத்துவம்

இயேசு என அழைக்கப்படும் ஈஸா (அலை) அவர்கள் ஏகத்துவத்தைப் பற்றிக் கூறிய கருத்துகள் விவிலிய நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன.

*பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செயல்படுகிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப் பவனேயல்லாமல், என்னை (இயேசுவை) நோக்கி, "கர்த்தரே! கர்த்தரே! என்று சொல்கின்றவன் அதில் பிரவேசிப்பதில்லை." (மத்தேயு 7:21)*

இதிலிருந்து ஏகப் பரம்பொருளைத் தவிர வேறு யாரையும் 'இறைவன்' எனக் குறிப்பிடுவதை இறை தூதரான ஈஸா (அலை) அவர்கள் அறவே விரும்பவில்லை என்பதை அறிந்துணர முடிகிறது. மேலும்,

*"பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லா திருங்கள்; பரலோகத்தில் இருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாக (இறைவனாக) இருக்கிறார்".*

*(மத்தேயு 23:9)*

இயேசுவை நோக்கி, மறைநூல் வல்லார் ஒருவர், *"அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?"* என்று கேட்டார். அதற்கு இயேசு,

"நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மன தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவ்ராகிய கடவு ளிடம் அன்பு கூர்வாயாக" என்பதுதான் முதல் கட்டளை என்றார். அதற்கு மறைவல்லார்,

"கடவுள் ஒருவரே; அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று நீர் கூறியது உண்மையே".

*(மாற்கு 12:29, 30.32)*

இதிலிருந்து ஒரே இறைவன் என்ற கோட்பாட்டையே ஈஸா (அலை) அவர்கள் வலியுறுத்தியதாக இன்ஜீல் வேதத்திலிருந்து தெளிவாக அறிகிறோம்.

## இறை வணக்கம்

உலகத்துச் சமயங்கள் அனைத்துமே இறை வணக்கத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப் பணிக்கின்றன. இறைவனை வணங்குவதற்காக மேற்கொள்ளும் சமயச் சடங்கு முறை கள், அதற்காகப் பயன்படுத்தும் பூசனைப் பொருட்கள் அநேகம் இருக்கலாம். இவற்றில் மாறுபாடும் வேறுபாடும் இருக்கலாம். ஆனால், இஸ்லாமிய இறை வணக்க முறையைப் பொறுத்தவரை இத்தகைய மாறுபாடு, வேறுபாடு போன்றவற்றிற்கெல்லாம் அறவே இடமில்லை. இஸ்லாமிய இறை வணக்கக் கோட்பாடு திட்ப, நுட்ப முடையதாகும். இறை வணக்கத்திற்கு உள்ளமும் உணர்வுமே அடித்தளமாக அமைகின்றன. வல்ல அல்லாஹ்வை மனத்தால் மட்டுமே நினைக்க முடியும். இறைவனை சாதாரண நிலையில் ஒரு நாளைக்கு ஐவேளையும் நள்ளிரவுத் தொழுகையான தஹஜ்ஜத் எனும் சிறப்புத் தொழுகை உட்பட ஆறு வேளையும் இறை வணக்கம் புரிய இஸ்லாம் பணிக்கிறது.

## இறை வழிபாட்டின் அடித்தளம் ஒன்றே

இறைவனை வழிபடும் ஒரு ஹிந்து தன் இதயம் முழுவதிலும் இறையுணர்வை நிரப்பிய நிலையில் சரீர வணக்கத்தில் ஈடுபடவேண்டும். சரீர வணக்கம் என்பது முகவாய், செவிகள் இரண்டு, தலை, புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு எனும் எட்டு உறுப்புகளும் நிலத்தில் படிய இறை வணக்கம் புரியவேண்டும் எனப் பணிக்கிறது. இந்தியச் சமயங்கள் பலவும் இவ்வணக்க முறையையே வலியுறுத்துகின்றன.

இதையே இஸ்லாமிய மார்க்கமும் இறை வணக்கத் தொழுகையின்போது நெற்றி, மூக்கு, இரண்டு உள்ளங் கை விரல்கள் உட்பட இரு பாதங்களின் விரல்களை பூமியின் மேல் நட்டு, இரு முழங்கால்கள் ஆக எட்டு உடல் உறுப்புகள் தரையில்பட தொழுகை நடத்த வேண்டும் எனப் பணிக்கிறது.

கிருஸ்தவ சமயமும் இதே முறையில் சிறிது வித்தியாசத்துடன். இறை வணக்க முறை ஒரே மாதிரியான முறையையும் போக்கையும் கொண்டிருப்பது, இவை ஒரே மூலத்திலிருந்து கிளைத்தவைகள் என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

இந்தியாவின் மிகப் பெரிய சமயமான 'ஹிந்து' சமயம் உட்பட உலகத்துப் பெரும் சமயங்கள் அனைத்தும் சாதாரண நிலையில் ஒரு நாளைக்கு ஐவேளை பூஜையையும், அத்துடன் சிறப்புப் பூஜையான நள்ளிரவுப் (நடு ஜாமம்) பூஜையையும் இறை வணக்க நேரங்களகக் கொண்டுள்ளன.

எனினும், இஸ்லாத்தில் இப்படித்தான் இறை வணக்கம் அமைய வேண்டுமென வரன்முறையான, கட்டுக் கோப்போடு கூடிய முறை உண்டு. ஆனால், பிற சமயங் களின் வணக்க, வழிபாட்டு முறைகளில் ஒருபோக்கான முறை இருந்தபோதிலும் அதைக் கடைப்பிடிக்க கடுமை யான கட்டுப்பாடு ஏதும் இல்லை என்பதை நடைமுறை வணக்க வழிபாடுகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். அதிலும், ஒரு முஸ்லிம் இறைவனை ஒரு நாளைக்கு ஐந்துமுறை குறிப்பிட்ட இடைவெளிகளில், குறித்த நேரங்களில் கட்டாயம் தொழ வேண்டும் என்ற கடுமை யான கட்டுப்பாடு கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுகிறது. இதற்கு ஆன்மீக அடிப்படையில் மட்டுமல்லாது உளவியல் போக்கிலும் நோக்கிலும் ஒரு மனிதன் இருபத்தி நான்கு

மணிநேரமும் இறைச் சிந்தனையோடும் இறை அச்சத் தோடும் வாழ இஸ்லாமிய ஐவேளைத் தொழுகை முறை வழி வகுக்கிறது எனலாம்.

நோன்பு எனும் விரதம்

நோன்பாகிய விரதத்தைப் பற்றிப் பேசாத, வலியுறுத் தாத சமயம் எதுவுமே மண்ணுலகில் இருப்பதாகக் கூற முடியாது. அனைத்துச் சமயங்களுமே விரதம் இருக்கப் பணிக்கின்றன. விரதத்தை மேற்கொள்ளும் முறைகளில் வேறுபாடு இருக்கலாம். சில மதங்கள் ஆண்டில் குறிப் பிட்ட மாதங்களில் விரதம் இருக்கப் பணிக்கின்றன. சில சமயங்கள் சில வாரங்களோ அல்லது சில நாட்களோ உண்ணா நோன்பு மேற்கொள்ளும்படி கூறுகின்றன. இன்னும், ஹிந்துமதம் போன்ற சில சமயங்கள் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் ஒரு குறிப்பிட்ட நாளோ அல்லது சில நாட்களோ அல்லது ஒரு சில மணி நேரங்களோ உண்ணாமல் விரதம் இருக்கப் பணிக்கின்றன. அதிலும், விரதத்தின்போது சோறு போன்றவற்றை விலக்கி விரதம் இருக்குமாறு அறிவுறுத்துகின்றன. ஆனால், எந்த மதமும் விரதத்தின்போது நீர் பருகக்கூடாது எனத் தடை விதிப்பதில்லை.

ஆனால், இஸ்லாமிய நோன்பாகிய விரதம் இவற்றி னின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். ஆண்டில் 'ரமளான்' மாதம் முழுமையும் பகல் முழுவதும் எந்தவொரு உணவையும் அறவே உண்ணாது, ஒரு சொட்டு நீரும் பருகாது, புகைக்கவோ நுகரவோ செய்யாது நோன்பு நோற்க வேண்டுமெனக் கட்டளையிடுகிறது. இஃதன்னி யில் ஒரு முஸ்லிம் விரும்பினால் ஒரு குறிப்பிட்ட புனித நாட்களில் நோன்பு நோற்கலாம்.

ஜகாத் எனும் தான தருமங்கள்

உலகத்திலுள்ள அனைத்துச் சமயங்களுமே மனிதன் வேண்டிய அளவு தான தருமங்கள் செய்து இறையருள் பெற விழைய வேண்டும் என்றே போதிக்கின்றன.

தானம் அளிக்கவோ தருமம் செய்யவோ வேண்டாம் எனக் கூறும் சமயம் எதுவுமே இவ்வுலகில் இல்லை என்றே கூறலாம்.

ஏழை எளியவர்கட்கு ஓரளவு வசதியுள்ளவர்களா யினும் கூட ஒவ்வொருவரும் அவர்களால் இயன்ற அளவு தான தருமங்கள் செய்ய வேண்டும் எனப் பணிக்கின்றன. ஏழை எளியோர்மாட்டு இத்தகைய தான, தருமம் செய்யும் இரக்கச் சிந்தனை உள்ளவர்களே இறைவனின் பேரருளை எளிதாகப் பெற முடியும் என்பதை எல்லாவகையிலும் எடுத்தோதுகின்றன.

இதே போன்று இஸ்லாமும் தான தருமம் மூலம் இறைவனின் இன்னருளைப் பெற வழிகாட்டுகின்றது. இஸ்லாம் மூன்று வகையான தான தருமங்களைச் செய்ய பணிக்கின்றது. இதில் 'சதக்கா' என்பது ஒன்று. ஒரு முஸ்லிம் தன் வாழ்நாள் முழுவதும் இயன்ற வழிகளிலெல் லாம் ஏழை எளிய மக்களுக்கு அவ்வப்போது தான தருமங்களைச் செய்ய வேண்டும் என்பதே 'சதக்கா' வாகும்.

அடுத்து, இஸ்லாமிய தானம் 'ஃபித்ரா' என்பதாகும். இஃது எல்லா நாளிலும் வழங்கப்படும் தானம் அன்று. ஈதுல் ஃபித்ர், அன்று (ரமளான்) தொழுகைக்காகப் பள்ளி வாசல் நோக்கிச் செல்லும் ஒவ்வொரு முஸ்லிம் தொழுகை யாளியும் ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தையோ அல்லது அதன் பெருமானத்திற்குப் பணத்தையோ ஏழை எளியவர் கட்குத் தானமாக வழங்கிவிட்டே ஈத் தொழுகையில் கலந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவதான 'ஜகாத்' எனும் தானதருமம் இஸ்லாத்தின் ஐம்பெரும் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். சுய சம்பாத்தியமுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தன் சம்பாத்தியத்தில் இரண்டரை சதவிகிதம் அதாவது நாற்பதில் ஒரு பங்கு ஏழை, எளியவர்களுக்குக் கட்டாய தானமாக வழங்க வேண்டும் எனக் கட்டளையிடுகிறது.

'ஹஜ்' எனும் புனிதப் பயணம்

உலக மதங்கள் ஒவ்வொன்றும் தத்தம் சமயச் சார்புள்ள புனிதத் தலங்களை நோக்கி புனித யாத்திரை செல்ல வேண்டுமெனக் கூறுகிறது. புனிதப் பயணம் செல்லத் தூண்டாத, வற்புறுத்தாத சமயம் எதுவுமே பூமியில் இருப்பதாகத் தெரியவில்லை.

அதே முறையில் மற்ற சமயங்களைப் போன்றே இஸ்லாமிய மார்க்கமும் தன் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாக 'ஹஜ்' எனும் புனிதப் பயணம் செல்லுவதைக் கட்டாயக் கடமையாக்கியுள்ளது.

மற்ற சமயங்களின் புனிதப் பயணத்திற்கும் இஸ்லாமின் 'ஹஜ்' கடமைக்குமிடையே மிக முக்கியமான வேறுபாடு உண்டு. பிற மதப் புனிதப் பயண நிறைவேற்றலில் நீக்குப் போக்கும் நெகிழ்வும் உண்டு. ஆனால் ஹஜ் புனிதப் பயணம் வசதியுள்ள, உடல் திறமுள்ள முஸ்லிமின் வாழ்நாள் கடமையாக இருந்தபோதிலும் அக்கடமையை செயல்படுத்த ஒரு குறிப்பிட்ட கால வரையறை உண்டு. ஒரு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அக் கடமையை குறிப்பிட்ட முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு.

அது மட்டும் அன்று, ஹஜ் புனிதப் பயணம் செல்வோர் தம் சொந்தச் சம்பாத்தியத்தைச் செலவிட்டே செல்ல

வேண்டும். அவர் நல்ல உடல் நலமும் வலிமையும் உடையவராக இருக்க வேண்டும். அத்தகையவர் தம் வாழ்நாளில் ஒரு முறை சவுதி அரேபியாவில் உள்ள மக்கமா நகரில் அமைந்துள்ள 'காபா' புனித இறையில்லத்திற்குப் புனிதப் பயணமாகச் சென்று மினாவில் தங்கி குறிப்பிட்ட நாளில், நேரத்தில் 'அரஃபா' பெருவெளியில் தங்கி மீள வேண்டும். இதுவே 'ஹஜ்' புனிதப் பயணம் ஆகும்.

இவ்வாறு இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் உலகெங்கும் உள்ள அனைத்து முக்கிய சமயங்களின் இன்றி யமையா அடிப்படைக் கட்டுப்பாடுகளாகக் குறிக்கப் படுவதிலிருந்து இவையனைத்தும் ஒரே அடிப்படையி லிருந்து முகிழ்த்தவைகளாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால், இக்கடமைகளை நிறை வேற்றும் முறைகளில் வேறுபாடுகள் உள்ளன. இவை காலந்தோறும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சமயவாதிகளால் மாற்ற திருத்தங்கட்கு உட்படுத்தப் பட்டமையால் விளைந்தவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

### திருத்தமிலா திருமறை, மாற்றமிலா மார்க்கம்

இஸ்லாம் முந்தைய சமயங்களின் அடித்தளத்தின்மீது அமைந்ததெனினும் இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி (சல்) அவர்களின் மூலம் முழுமைப்படுத்தப்பட்ட இறுதி மார்க்கமாதலின் முந்தையன போன்று மனிதர்களின் மாற்ற திருத்தங்கட்குக் கடுகளவும் உட்படா வண்ணம் மாற்றமிலா மார்க்கமாக-திருத்தப்படா திருமறையாக-இறைவன் எவ் வடிவில் இறை தூதர்க்கு வழங்கினானோ அதே மூல வடிவில் இன்றும் இருந்து வருகிறது.

முந்தைய இறைதூதர்களின் வாழ்வும் வாக்கும் பிந்தையோரின் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப மாற்றப்

பட்டு, திருத்தப்பட்டது போன்று இறுதித் தூதர் அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் அணுவளவும் மாற்ற திருத்தங்கட்கு ஆளாகவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் முந்தைய நபிமார்களின் வாழ்வும் வாக்கும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் உரியவர்களால் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. அவர்கள் மறைவுக்குப்பின் வந்தவர்களால் செவி வழிச் செய்தியாகச் சேகரம் செய்து தொகுக்கப்பட்டவைகளாகும். இதில் உண்மையும், உண்மைபோல் தோற்றமளிக்கும் பொய்மையும் புனைந்துரைகளும் தொகுப்பாளனின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் அத்தொகுப்பில் இடம் பெறுவது தவிர்க்கவியலாத ஒன்றாகும்.

## மறு உருவெடுத்த தௌராத் வேதம்

புக்தநஸர் எனும் மன்னர் ஜெரூசலம் (பைத்துல் முகத்தஸ்) மீது மேற்கொண்ட போரின்போது மோசஸ் எனும் மூஸா (அலை) அவர்கட்கு இறைவன் வழங்கிய 'தௌராத்' எனும் வேதத்தின் பிரதிகள் யாவும் எரிந்து போயின. அப்போது யூதர்கள் அனைவரும் பாபல் நகரச் சிறைகளில் கைதிகளாக அடைக்கப்பட்டுக் கிடந்தனர். சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தபோது அவர்களிடம் தௌராத் வேதப் பிரதிகள் எதுவும் இல்லாத நிலை.

தௌராத் வேதம் இருந்த இப்ரானி மொழியை அன்றிருந்த யூத சந்ததியினர் அறிந்திருக்கவில்லை. இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு இஜ்ரா எனும் பெரியார் இப்ரானி மொழி கலந்திருந்த கில்தானி எழுத்துகளைக் கொண்டு புதிதாகத் தௌராத் வேதத்தை வரையலானார். இதுவே பிற்காலத்தில் தௌராத் வேதத்தின் நகலாகக் கருதப்படலாயிற்று. இதில் பல செய்திகள் புதிதாக இணைக்கப்பட்டன. சுருங்கக் கூறின் தௌராத்

*வேதத்தின் சாயலில் பெரியார் இஜ்ராவினால் ஒரு புதிய மதமே உருவாக்கப்பட்ட தெனலாம். அப்புதிய தௌராதில் 'மூஸா (அலை) 120 வயதில் மரணித்தார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து இது மனிதர்களால் வரையப்பட்ட வேதம் என்பது தெளிவாகிறது. மூஸா (அலை) அவர்கட்கு இறைவனால் வழங்கப்பட்ட வேதத்தில் அவரின் இறப்பும் வயதும் இடம்பெற இயலாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். பெரியார் இஜ்ராவை மூஸா (அலை) அவர்களால் அறிமுகம் செய்த யூத சமயத்தைப் புனர் நிர்மாணம் செய்தவர் என்ற முறையில் இரண்டாம் ஸ்தாபகராக யூத சமய மக்களால் போற்றப்படு கிறார்.*

புனிதர் பவுல் தொகுத்த விவிலிய புதிய ஏற்பாடு

*இறை மார்க்க நெறி பிறழ்ந்த பனீ இஸ்ரவேலர்களைத் தடுத்தாட்கொண்டு இறைவழி திருப்ப, இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதரே ஈஸா (அலை) எனும் இயேசு கிருஸ்து. இதை அவரே கூறியதாக,*

*"நான் திருச்சட்டத்தையோ இறைவாக்கையோ அழிக்க வந்துள்ளேன் என எண்ண வேண்டாம். தௌராத் எனும் வேதத்தை மட்டும் நிலைநிறுத்துவதற்காகவே தோன்றியிருக்கிறேன்." (மத்தேயு 5:17)*

*என விவிலியம் தெளிவாக்குகிறது.*

*இறைவன் ஈஸா (அலை) மூலம் மனித குலத்துக்கு வழங்கிய நற்செய்திகளான வேத வசனங்களில் பலவற்றை யும் சில ஆண்டுகட்குப் பின்னர் ஈசா (அலை) அவர்களின் சீடர்கள் மொழிந்ததைத் துணைக் கொண்டு புதிய ஏற்பாட்டை தொகுத்தளித்தவர் புனித பவுல் அவர்களாவர். ஈஸா (அலை) அவர்களின் வாழ்வும் வாக்கும் அவர்கள்*

வாழ்ந்தபோதே குறித்து வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும், இறுதி இறைத் தூதரான நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்வும் வாக்கும் இறைச் செய்தியும் அவரது தோழர்களால் அவ்வப்போதே பதிவு செய்யப் பட்டன. உறுதி செய்யப்பட்டன. இறைவனால் நபிகள் நாதர் மூலம் வெளிப்படுத்தப்பட்ட திருமறைச் செய்திகள் உடனுக்குடன் பலராலும் மனனம் செய்யப்பட்டதோடு ஓடுகள், ஈச்சமரப் பட்டைகள், எலும்புகளின் மீதும் தெளிவாக எழுதி வைக்கப் பட்டன. அண்ணலார் காலத் திலேயே இறைச் செய்திகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டன.

பெருமானார் அவர்கள் தனக்கு முன்னர் வந்த இறைத் தூதர்களின் வாழ்வும் வாக்கும் மாற்ற திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டதுபோல் தனக்கும் நேரிட்டுவிடக் கூடாது எனக் கருதினார்களோ என்னவோ, அதைப்பற்றி மிக அழுத்தமாக,

“எனக்குப் பின்னர் என் மீது உள்ள அன்பாலும் ஆர்வத் தாலும் நான் கூறாததைக் கூறியதாகவோ செய்யாததைச் செய்த தாகவோ யாரேனும் கூறினாலோ எழுதினாலோ அவர்கள் என்னைச் சார்ந்தவராக மாட்டார்கள். அத்தகைய வர்கள் இறைவனின் கொடுந்தண்டனையிலிருந்து தப்பவும் முடியாது.” எனக் கடுமையாக எச்சரிக்கை செய்திருக்கிறார் கள். எனவே, அன்பு மிகுதியினாலோ வேறு காரணங் களாலோ மாநபி வாழ்வும் வாக்கும் இன்றும் உள்ளது உள்ளவாறே அமைந்து உலக மக்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக விளங்கி வருகிறதெனலாம்.

அத்துடன் இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் திருமறையும் நாயகம் (சல்) அவர்களின் காலத்திலேயே

முழுமைப்படுத்தப்பட்டு, முறையாகத் தொகுக்கப்பட்டு விட்டது. மூன்றாவது கலீஃபா உதுமான் (ரலி) காலத்தில் திருத்தப் பதிப்பாகச் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், முந்தைய வேதங்கள் பலவற்றில் செய்யப் பட்டதுபோல் மாற்ற, திருத்தங்களுக்கு இடமேயில்லாமற் போய்விட்டது. அன்றிலிருந்து இன்றுவரை யாராலும் திருத்தபடா திருமறையாகவே திருக்குர்ஆன் விளங்கி வருகிறது.

### அனைத்து வேதங்களுக்கும் மூலவேர் ஒன்றே!

இதுவரை நாம் கண்ட இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளின் அடித்தளம் உலகச் சமயங்கள் அனைத்தின் அடித்தள மாக அமைந்திருப்பதிலிருந்து உலகத்துச் சமயங் கள் அனைத்தும், அவற்றின் வேதங்கள் அத்தனையும் இறை தூதர்கள் மூலம் காலந்தொறும் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன என்பது போதரும். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளின் வரன்முறையான கோட்பாடுகள் மட்டுமே பிற சமயங்களிலிருந்து இஸ்லாத்தைச் சற்றே வேறுபடுத்திக் காட்டுகின்றன என்பது தெளிவு.

### பரம்பொருள் 'அல்லாஹ்' அனைவர்க்கும் இறைவனே

'அல்லாஹ்' எனும் அரபிச் சொல் பன்னெடுங்காலமாக அரபி மொழியில் ஏக இறைவனைக் குறிக்கும் சொல்லாக வழங்கி வருகிறது. ஹிந்து மதத்தில் கடவுள்களாக கருதப் படும் ஒவ்வொரு விக்ரத்துக்கும் ஒரு தனிப்பெயர் வழங்கி னும் எல்லாக் கடவுளர்க்கும் மேலான பெயராக 'ஏகப் பரம் பொருள்' என்ற சொல் வழங்கி வருகிறது. அதேபோன்று கிருஸ்தவ சமயத்தில் ஏசு, மேரி எனப் பல பெயர்கள் கடவுளர்களைக் குறிக்க வழங்கினும் அவற்றிற்கெல்லாம் மேலானதாக 'கர்த்தர்' என்ற சொல்லாலேயே பரம்பொருள்

அழைக்கப்படுகிறது. அதேபோன்று பெருமானார் நபியாக முகிழ்ப்பதற்கு முன்னர் 365 விக்ரகங்களை, ஒவ்வொன்றிற் கும் ஒரு பெயரிட்டழைத்து வழங்கினாலும் பொதுவாக இறைவனை 'அல்லாஹ்' என்ற பொதுப் பெயரால் அழைத்து வணங்கி வந்தனர். தமிழில் கடவுள், இறைவன், ஆண்டவன் என்றெல்லாம் குறிப்பிடும் பரம்பொருளையே 'அல்லாஹ்' என்ற பெயரும் சுட்டுகிறது.

'அல்லாஹ்' என்ற சொல்லுக்கு ஆண்பால்-பெண்பால் என்பதெல்லாம் இல்லை ஒருமை-பன்மை இல்லை.

இறப்பு-பிறப்பு எதுவுமில்லை. உருவமிலா அல்லாஹ் வுக்குத் துணை, இணை இல்லை. அல்லாஹ் யாராலும் பெறப்படவுமில்லை, யாரையும் பெறவும் இல்லை. தேவை என்பது எதுவுமே இல்லை. இத்தகைய தன்மை களைக் கொண்ட ஒரே இறைவனாகிய அல்லாஹ் இஸ்லா மியர்களாகிய முஸ்லிம்களுக்கு மட்டும் இறைவனில்லை. உலகிலுள்ள அனைத்துச் சமயங்களுக்கும்-மனித குலம் முழுமைக்குமான ஏகப் பரம்பொருளாகிய 'அல்லாஹ்' வே ஏக இறைவனாவான்.

## இஸ்லாம் வளர்ந்த வரலாறு

'இஸ்லாம்' இறைவனால் உருவாக்கப்பட்டு, மனிதர் களுக்கு வழங்கப்பட்ட இறை மார்க்கமாகும். முதல் மனித ரும் முதல் இறைதூதருமான ஆதாம் (அலை) அவர்கட்கு வழங்கப்பட்டது. இப்றாஹீம் (அலை) அவர்களால் 'இஸ்லாம்' எனும் பெயரிடப்பட்டது. அதன்பின் வந்த இறைதூதர்களாகிய நபிமார்களால் வளர்க்கப்பட்டு, இறுதி நபியாகிய அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களால் முழுமைப்படுத்தப்பட்டது. இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவோர் முஸ்லிம்களாவர்.

## இறைவனே குருவான விந்தை

முந்தைய இறை தூதர்களிலிருந்து இறுதித் தூதரான நபிகள் நாயகம் (சல்) அவர்களை வேறுபடுத்திக் காட்டும் தனித் தன்மைகள் பல உள. அவற்றுள் ஒன்ற இறைவனே அண்ணலாருக்குக் குருவாயமைந்த பான்மையாகும்.

பெருமானார் தம் வாழ்வின் இறுதிவரை எழுதப் படிக்கத் தெரியாதவராகவே இருந்தார். தம் பெயரைக் கூட எழுத்தால் எழுதக் கற்றாரில்லை. இவரைப் பற்றி திருக்குர் ஆன் குறிப்பிடும்போது 'உம்மீ' (எழுதப் படிக்கக் கற்காதவர்) என்றே குறிப்பிடுகிறது.

நாயகத் திருமேனிக்கு இளமைப் பருவத்தில் அடுத்தடுத்து தாய், தந்தையரை இழந்ததனாலும் வறுமைச் சூழலில் ஒட்டகம் மேய்ப்பவராக இருந்ததனாலும் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் வசதியும் இவருக்கு இல்லாமற் போய்விட்டது.

இதற்கெல்லாம் மேலாக இவர் எழுதப் படிக்கக் கற்காததற்கு இறை நாட்டம் வேறு விதமாக இருந்திருக்க லாமோ என எண்ணத் தோன்றுகிறது.

சாதாரணமாக ஒருவர் எழுதவும் படிக்கவும் கற்க விரும் பினால் அவற்றை அவருக்குக் கற்பிக்க ஒரு ஆசிரியர்-குரு- கட்டாயமாக இருக்க வேண்டும். குரு இல்லாமல் எழுதப் படிக்கக் கற்பது என்பது இயலாததொன்றாகும்.

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பிற் காலத்தில் மனிதகுலம் முழுமைக்குமே மாநபியாக, மாபெரும் வழி காட்டியாக-குருவாக-விளங்கப் போவதால் அம் மாபெரும் இறைஞானப் பெருஞ்சுடருக்கு அறிவுறுத் திக் கல்வி கற்பிக்கும் அருகதை வேறு எந்த மனிதருக்கும்

5

இல்லை; எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு மட்டுமே அத்தகு தகுதிப்பாடு உண்டு என்பதனால் சாதாரண மனிதரை மாநபிக்கு குருவாக அமர்த்தாமல் இறைவனே திருநபிக்கு குருவாக விளங்கும் வாய்ப்பளித்தான் போலும்.

## இறைவனின் பிரதிநிதியே மனிதன்

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனிதனைப் பற்றிய கணிப்பு மிக உன்னதமானதாகும். இஸ்லாமிய மார்க்கம் மனிதனை மிக உயர்வாக மதிக்கிறது. மாபெரும் சிறப்புக் குரியவனாகக் கருதுகிறது. இன்னும் சொல்லப்போனால் இறையம்சம் பொருந்தியவனாக இஸ்லாம் மனிதனைப் போற்றுகிறது. ஆதி மனிதர் ஆதாமை இறைவன் 'ரூஹை' ஊதி உருவாக்கியதால் மண்ணுலகில் மனிதன் இறைவனின் அம்சங்கொண்ட இறைப் பிரதிநிதியாகவே கருதப்படு கிறான். ஆதித் தாயார் ஹவ்வாவை ஆதாமின் விலாவி லிருந்து இறைவன் உருவாக்கினான்.

இன்று பல்கிப் பெருகியிருக்கும் மனிதகுலம் முழுமை யின் தோற்றுவாயாகத் திகழ்பவர்கள் ஆதிப் பிதாவாகிய ஆதாம் (அலை) அவர்களும் ஆதி மாதாவாகிய ஹவ்வா (ஏவாள்) தாயாரும் ஆவார்கள். இவர்கள் இருவரின் வாயிலாகவே மனுக்குலம் முழுமையும் தழைத்து வளர்ந் துள்ளதைத் திருக்குர்ஆன் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

## ஒரே ஆத்மா

ஒரே ஆத்மாவிலிருந்தே மனிதகுலம் முழுமையும் பல்கிப் பெருகியுள்ளது. இதன் மூலம் மனிதகுலம் முழுமையும் ஒன்றே என்ற அடிப்படையை இஸ்லாமியத் திருமறையும் உறுதிபடப் போதிக்கிறது.

"மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே

ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான் (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து), அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு, அவ்விருவரிலிருந்து அநேக ஆண், பெண்களை (வெளிப்படுத்தி) பரவச் செய்தான். ஆகவே, அந்த அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவனைக் கொண்டே (நீங்கள் உங்களுக்குள்) ஒருவருக்கொருவர் (வேண்டியவற்றை) கேட்டுக் கொள்கின்றீர்கள். இன்னும், (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு பந்துவத்திற்கும் (மதிப்பளியுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கின்றான்" *(திருக்குர்ஆன் 4:1).*

இந்த இறைவாக்கின் அடிப்படையிலேயே யுனெஸ்கோவின் இனவாதக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது என்பது இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

உலகெங்கும் ஒரே மூலத்திலிருந்து உருவாகிப் பல்கிப் பெருகியிருக்கும் மனிதகுலம் பல்வேறு இனங்களாக, நிறத்தவர்களாக, மொழியினராக, பழக்க வழக்கங்களைக் கொண்ட வர்களாக இருப்பது அழகிய மலர்த் தோட்டத்தில் காணும் பல்வேறு வகையான நிறப் பூச்செடிகளையும் அவற்றின் பன்னிற மலர்களிலிருந்து வெளிப்படும் வெவ்வேறு வகையான மணங்களைப் போன்றதாகும். இத்தோட்ட மலர்கள் ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்றும் சிறந்ததேயன்றி, அவற்றில் எந்த வண்ண மலரும் நறுமணப் பூக்களும் ஒன்றைவிட மற்றொன்று சிறந்ததெனக் கூறுவதற்கில்லை. மாலைக்கு வனப்பூட்டும் வண்ண மலர்களே மனித இனங்கள். இதையே திருமறை.

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு உங்களைக் கிளை

களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேல் என்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை எனினும்) உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனாக இருக்கிறானோ, அவன் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்கக் கண்ணிய வான். நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) நன்கறிந் தோனும் தெளிந்தோனுமாக இருக்கிறான்" (திருக்குர்ஆன் 49:13) எனத் தெளிவாகக் கூறுகிறது.

அவ்வகையில் இதுவரை உலகில் பிறந்தவர்களில் இறந்தோர் போக எஞ்சியிருப்பவர்கள் அறுநூறு கோடிப் பேர்களாவர். இவர்கள் அனைவருமே ஒரே மூலத் தாய் தந்தையர் வழிப்பிறந்த சகோதரர்கள்; உடன் பிறப்புகள் என்பதுதான் இறுதித் திருத்தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் போதித்த கோட்பாடு, அதுவே இஸ்லாமியத் திருமறை திருக்குர்ஆன் தரும் மறைச் செய்தி.

**அனைவரும் சோதரரே!**

ஆதாம் (அலை) ஹவ்வா தொடங்கிப் பெருகிய மனித சமுதாயம் எண்ணிக்கையில் பெருக்கமடையவே, அவர்களி டையே சுயநல வேட்கையும் சுரண்டல் உணர்வும் தலை தூக்கத் தொடங்கியது. இதனால் தன்னலமுடையவர் களாயினர். அதுவரை இறை நெறிக்கொப்ப வாழ்ந்த மக்கள் இறைவழி பிறழ்ந்து வாழத் தலைப்பட்டனர். இதற்கிணங்க அவர்தம் சமுதாய அமைப்புமுறையும் மாறுபட்ட போக்கில் அமைவதாயிற்று.

தொடக்கத்தில் மனிதர்கள் அனைவரும் ஒரே சமுதாயக் கூட்டமாக இருந்தவர்கள் பின்னர் தன்னல வேட்கையோடு தனித்தனிக் குழுக்களாகப் பிரிய நேர்ந்ததைப் பற்றி திருக்குர்ஆன்.

"(தொடக்கத்தில்) மனிதர் எல்லோரும் (ஒரே வழியிற் பட்ட) ஒரு சமுதாயத்தவராகவே விளங்கினர். (பின்னர்) இந்நிலை நீடிக்கவில்லை. அவர்களிடையே பிணக்குகள் தோன்றவே (நேர் வழியில் செல்வோருக்கு நற்செய்தி அறிவிப்போரும் (தீய வழியில் செல்வோருக்கு) அச்சமூட்டி எச்சரிப்போருமாகிய இறைத் தூதர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். மேலும், சத்தியத்தைக் குறித்து அவர்களிடையே தோன்றிய வேற்றுமைகள் பற்றித் தீர்ப்பு வழங்கும் பொருட்டு, அந்த இறைத் தூதர்களுடன் சத்திய வேதங்களையும் இறக்கினான். ஆனால், (இவ் வேற்றுமைகள் தோன்றிய ஆரம்பத்தில் மக்களுக்குச் சத்தியம் இன்னதென்று தெளிவு படுத்தப்பட்டதனால் அல்ல-மாறாக) சத்தியத்தின் ஞானம் கொடுக்கப்பட்ட மக்களே வேற்றுமைகளைத் தோற்றுவித்தனர். ஒளிமிக்க, தெளிவான அத்தாட்சிகளும் போதனைகளும் வந்தபின்னர் ஒருவர் மீது அக்கிரமம் செய்யும் பொருட்டு அதிலே அவர்கள் வேற்றுமையைத் தோற்றுவித்தார்கள். எனவே, சத்தியத்தைக் குறித்து அவர்கள் பிணங்கிக் கொண்டிருந்த விஷயங்களில் (தூதர்கள் மீது) ஈமான் கொண்டோருக்குத் தன் உத்திரவினால் தான் விரும்பியோரை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான்," (திருக்குர்ஆன் 2:213).

இவ்வாறு மனிதன் நழுவவிட்ட நேர்வழியை மீண்டும் மனிதர்களுக்கு நினைவுபடுத்தவும் எடுத்துக்கூறி விளக்க வும் பல்வேறு நாடுகளில், பல்வேறு கால கட்டங்களில் இறைவன் தன் தூதுவர்களை அனுப்பிய வண்ணம் இருந்தான் என்பதுதான் இத் திருமறை தரும் செய்தி.

இப்படி காலந்தொறும் அனுப்பப்பட்ட இறைதூதர் களும் மக்களுக்கு முந்தைய நபிமார்கள் உரைத்த உண்மை களை, ஏகத்துவக் கொள்கைகளை, மறுமை வாழ்வின் மாட்சியைப் பற்றியே பெரிதும் போதித்தனர்.

எச்சமயத்தவராயினும் அவர் நம் சகோதரரே

உலகெங்கும் உள்ள மக்கள் நாடு, இன, மொழி, சமயம் கடந்த நிலையில் அனைவரையும் ஒரே குலத்தவராகக் காணப் பணிக்கிறது. இஸ்லாம். அனைவருமே ஆதிப் பெற்றோர் ஆதாம்-ஹவ்வா வழி வந்தோர் என்பது அடிப்படை நியதியாகும்.

இந்த அடிப்படையில் ஒருவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரை வேற்றுமை பாராட்டாது தன் சகோதரனாகப் பாவித்து மதிக்க வேண்டும் என்பதை இஸ்லாம் எல்லா வகையிலும் வலியுறுத்துகிறது. இதனைச் சிறப்பாக எண்பிக்கும் அரிய நிகழ்ச்சியொன்று பெருமா னாரின் பெருவாழ்வில் நடைபெற்றதாக ஹதீஸில் காணப் படுகிறது.

ஒரு சமயம் நாயகத் திருமேனி தன் தோழர்களோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே இறந்த யூதர் ஒருவரது சடலத்தைச் சிலர் தூக்கி வந்தனர். அவ்விறுதி ஊர்வலக் காட்சி அண்ணலாரின் கண்ணில் பட்டவுடனே பெருமானார் அவர்கள் தோழர் களோடு மேற்கொண்டிருந்த உரையாடலை உடன் நிறுத்திய தோடு சட்டென்று எழுந்து அமைதியாக நின்றார்கள். பெருமானார் ஏன் எழுந்து நிற்கிறார் என்பதற்கான காரணத்தை அறியாத அவரது தோழர்களும் அண்ண லாரோடு எழுந்து நின்றனர். இறந்த யூதரின் சவ ஊர்வலம் பார்வையிலிருந்து மறைந்த பின்னர் பெருமானார் கீழே அமர்ந்து உரையாடலைத் தொடர்ந்தார். பெருமானார் எழுந்து நின்றதற்கான காரணத்தை அறிய விரும்பிய அவர்தம் தோழர்கள் அண்ணலாரை நோக்கி,

“இவ்வாறு தாங்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தி யதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் உண்டா என்பதை அறிய

விரும்புகிறோம்" எனக் கூறினர். இதைச் செவிமடுத்த பெருமானார் (சல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி,

"இறைவனால் படைக்கப்பட்டு, இறப்பின் மூலம் மீண்டும் இறைவனிடமே திரும்பச் செல்லும் மறைந்த அந்த யூதரும் நம் சகோதரரே. ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனுக்குச் செய்யும் மரியாதையையே செய்தேன். அது நம் கடமையும் கூட" எனக் கூறி தன் தோழர்களின் ஐயம் போக்கினார் அண்ணலெம் பெருமானார் அவர்கள்.

இறந்தவர் இஸ்லாத்துக்கு நேர் எதிரான போக்குடைய மாற்றுச் சமயத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருந்தும், அவரும் ஆதிப்பிதா ஆதாம் (அலை) வழி வந்த நம் சகோதரரே எனக் கொண்டு, அவரது இறுதிப் பயணத்தின்போது எழுந்து நின்று மரியாதை செய்த மாநபியின் செயல் மனித குலம் முழுவதும் கடைப்பிடித் தொழுகத்தக்க வழிமுறையாகும் என்பதில் ஐயமில்லை.

இஸ்லாம் மீண்டும் மீண்டும் மக்களுக்கு வலியுறுத்தும் விஷயம் உலக மக்கள் அனைவரும் ஒரே குலத்தை, ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதுதான். அது மட்டுமல்ல நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தம் வாழ்நாள் முழுமையும் இதே கருத்தையே எல்லா வகையிலும் போதித்து வந்தார்கள். சமத்துவமாகவும் சமரசமாகவும் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதை அனைத்து வகைகளிலுமே வலியுறுத்தி வந்தார்கள்.

### எண்ணத் தொலையா உட்பிரிவுகள்

தொடக்கக் காலத்தில் பல்கிப் பெருகிய மனிதர்கள் தேவையின் பொருட்டு கூட்டங் கூட்டமாகப் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்று வாழலானார்கள். இவ்வாறு பிரிந்தவர்கள் பல்வேறு குலத்தினராகவும் கோத்திரத் தினராகவும் அமைந்தனர்.

காலப் போக்கில் நாடு, இன, மொழி, சமயப் பிரிவு களோடு எண்ணற்ற உட்பிரிவுகளும் சேர மண்ணை எண்ணி னும் சாதி போன்ற மனித உட்பிரிவுகள் எண்ணத் தொலையா அளவுக்குப் பல்கிப் பெருகி, தடம்புரண்ட மனித வாழ்வு ஆற்றொணா அல்லல்கட்கு ஆட்படுவ தாயிற்று.

## எது பெருமைக்குரியது?

மக்களில் பெரும்பாலோர் எதைப் பெருமையாகக் கருதுகிறார்கள் என்பதைச் சற்று ஆழ்ந்து நோக்கினால் தம் அறிவு, ஆற்றல் ஆகியவைகளால் பெருமைப்படுபவர்களை விட தான் சார்ந்த இனத்தைக் காட்டிப் பெருமைப் படுபவர்களே அதிகம். தம் குலப் பெருமையைப் பறை சாற்றிக் கொள்பவர்கள் அநேகர் உண்டு. தான் ஒரு குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சார்ந்த குலத்தில் பிறந்த தனாலேயே தான் எல்லா வகையிலும் சிறப்புக்குரியவன் எனப் பெருமைப்படுவோரையே எங்கும் காணமுடிகிறது.

இன்னும் சிலர் தாங்கள் பேசும் மொழியின் அடிப் படையில் தம் தகுதிப்பாட்டையும் பெருமையையும் வெளிப்படுத்திச் சிறப்படைய முயல்வர்.

மேலும் ஒரு சாரார் தாங்கள் பிறந்த நாட்டின் காரண மாகவே தங்கட்குப் பெரும் சிறப்பு இருப்பதாகக் காட்டிக் கொள்வதும் உண்டு. இன்னும் சிலர் தாங்கள் பெற்ற கல்வி யைக் காட்டி மற்றவர்களினின்றும் மிகவும் மேம்பட்ட வர்கள், உயர்ந்தவர்கள் என்ற முறையில் நடந்து கொள்வதும் உண்டு. கற்றவர்கள் என்ற கர்வத்தால் மற்றவர்களிடையே பேதம் பாராட்டுவதும் உண்டு. இத்தகைய போக்குகள் இறையம்சமான மனிதனின் செயல்களாக அமைதல் அறவே கூடாது என்கிறார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள்.

"தான் பிறந்த குலத்தின் காரணமாகவோ, தான் சார்ந்த இனத்தின் பேராலோ, தான் பேசும் மொழியின் காரண மாகவோ, பிறந்த நாட்டினாலோ, தான் பெற்ற கல்வி யினாலோ ஒருவன் உயர்வு பாராட்டினால் அல்லது பேதம் காட்டினால் அது சாத்தானின் செயலாக இருக்குமே தவிற இறையம்சமான மனிதனின் செயலாக இருக்க முடியாது," என்பது பெருமானாரின் உள்ளக் கிடக்கையாகும்.

ஆனால், மனிதனுக்கு உண்மையிலேயே பெருமைதரக் கூடிய பெரும் பண்பு ஒன்று உண்டு. அது என்ன என்பதை நாயகத் திருமேனி அவர்கள் விளக்கும்போது,

"ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தன்னையொத்த மனிதர்களை நடத்துகிறான்; ஒழுக்க நியதிகளைப் பேணி நடக்கிறான்; மனிதர் என்ற அளவில் மற்றவருடைய உயிர், பொருள்களைக் கண்ணியப்படுத்துகிறான்; அவர் பின் பற்றும் சமயத்தை மதிக்கிறான்; எந்த அளவுக்கு இறை யாக்கமுடையவனாக இறைவன் வகுத்தளித்த வழியில் வாழ்கிறான் என்ற அளவுகோல்களின் அடிப்படையில் அவன் உயர்வும் தாழ்வும் கணிக்கப்படுமே தவிர வேறு எவ்வகையிலும் அல்ல" என்பது நபிகள் நாதரின் நல்லுபதேசத் திரட்டாகும்.

## குலமும் கோத்திரமும் அடையாளமே

குலமும் கோத்திரமும் நிச்சயமாக மனிதனின் பெருமைக்கோ சிறுமைக்கோ கடுகளவும் காரணமில்லை. இவை மனிதர்களிடையே அடையாளங்காட்ட அமைந் தனவே தவிர பேதங்காட்ட உருவானவை அன்று என்பதை திருக்குர்ஆன்,

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஓர் பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர்

மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். ஆனால், உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலானவர் எனப் பாராட்டிக் கொள்வதற்கு இல்லை"

(திருக்குர்ஆன் 49:13)

எனத் தெளிவுபட இறைவனே தன் திருமறையில் கூறி யிருக்கிறான். எனவே, மனிதர்களிடையே இனங்காட்ட எழுந்த குலப்பிரிவும் கோத்திரக் கிளையும் மனித இனத்தைப் பிளவுபடுத்தவோ பேதம் கற்பித்து ஏற்றத் தாழ்வு பாராட்டவோ எழுந்தவை அல்ல என்பதை மனிதர்கள் நன்கு உணர்ந்து தெளிய வேண்டும்.

### மனித குலம் முழுமையும் இறைவனின் குடும்பம்

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனிதகுலம் முழுவதை யுமே இறைவனின் குடும்பமாகவே வர்ணிக்கிறது. ஜாதி, குல, இன, மொழி, மத, நாடு காரணமாக எழும் எத்தகைய பெருமையையும் இஸ்லாம் அறவே ஏற்கவில்லை. மனித குலம் முழுவதையும் ஒரே இனமாக, ஒரே குலமாகவே காண்கிறது; மற்றவர்களையும் அவ்வாறே காணப் பணிக்கிறது.

### இறைவணக்கத்தில் இணையிலா சமத்துவம்

இறைவன் முன் அனைவரும் சமம் என்பதை எல்லா வகையிலும் நிலை நிறுத்திய பெருமை இஸ்லாத்தையே சாரும். நாடாளும் மன்னராக இருந்தாலும் அல்லது மாபெரும் தலைவராக இருந்தாலும் அல்லது அன்றைய உணவுக்கு வழியில்லாத பரம ஏழையாக இருந்தாலும் தொழுகைத் தலத்தில் வேறுபாடு சிறிதுமின்றி அடுத்தடுத்து அமர்ந்து தொழுவர். இன்னும் சொல்லப் போனால் முந்தி

வந்தவர் முன் வரிசையிலும் பிந்தி வந்தவர் பின் வரிசை யிலும் நின்று தொழுவர். முந்தி வந்து வரிசையில் நிற்பவர் ஏழையாயிருப்பின் தொழும்போது பிந்தி வந்து பின் வரிசையில் நிற்பவர் மன்னரேயாயினும் முன்வரிசை ஏழையின் பின்னங்கால்களுக்கு அருகே தலை வைத்து சஜ்தா செய்து தொழ வேண்டும். இஃது முன்பு உலகம் என்றுமே கண்டறியாத உவகப் பெரும் சமத்துவமாகும். ஜனநாயகத்தின் ஆணிவேர் இங்கு அழுத்தமாக அமைகிறது என்லாம். இதை,

'தொழுகையின்போது எவ்வித வேற்றுமை உணர்வு மின்றி ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து தொழும்போது, அவர்களிடையே ஒன்றுபடும் உணர்வு ஒப்பற்ற சகோதரத் துவ உணர்வாக முகிழ்த்தெழுகிறது' எனக் கவிதை வடிவில் பாராட்டியுள்ளார் இந்தியாவின் கவிக்குயிலாக விளங்கிய கவியரசி சரோஜினி நாயுடு அவர்கள்.

சமயம் கடந்த தொண்டே இறை வணக்கம்

மனிதர்களில் எவன் சிறந்தவன் என்ற கேள்விக்கு மிக அருமையாக விடையளிக்கிறார் பெருமானார் (சல்) அவர்கள்.

"யாரிடமிருந்து மனித குலத்துக்கு நன்மை கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அவன்தான் மனிதர்களில் சிறந்தவன்," எனச் சிந்தைகொள் மொழியில் செப்புகிறார்.

இவ்வாறு, இறைவனின் பிரதிநிதியாக, இறைக் குடும்பமாகிய மனித குலத்தின் அங்கமான மனிதன் ஒவ்வொரு வரும் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உதவி தொண்டு, அவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லது மற்ற சமயத்தவராக இருந்தாலும் அப்பணியை - தொண்டை 'இறை வணக்கம்' என இஸ்லாம் சிறப்பித்துக் கூறுகிறது.

## இறைக் கூலி எல்லா சமயத்தவர்கட்கும் உண்டு

இறைவனால் படைக்கப்பட்ட மனிதனின் தலையாய நோக்கம் எல்லா வகையிலும் இறையருளைப் பெறுதலே யாகும். இஃது இறை நம்பிக்கையாளர்களின் நற்செயலைப் பொறுத்தமைவதாகும்.

எந்தச் சமயத்தைக் சார்ந்தவர்களாயினும் அவர்கள் நிகழ்த்துகின்ற வினைகளுக்கேற்ற பயனை, அவர்கள் நம்பி வணங்கும் அவ்வச் சமய இறைவனின் பேரருளை, நற்கூலியை அவ்வச் சமயத்தவர் பெறுவர் என்பதை இறை மறையாகிய திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தின் 62-வது வசனம் மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

"நம்பிக்கையாளர்களாயினும் யூதர்களாயினும் கிறிஸ்த வர்களாயினும் ஸாபியீன்களாயினும்-எவர்கள் அல்லாஹ் வையும் இறுதி நாளையும் உண்மையாகவே விசுவாசித்து, நற்கருமத்தைச் செய்தார்களோ அவர்களுக்கு அவர் களுடைய கூலி, அவர்களுடைய இறைவனிடத்தில் நிச்சய மாக உண்டு. மேலும், அவர்கட்கு எவ்விதப் பயமும் இல்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்" என விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

## மார்க்கத்தில் கட்டாயத்திற்கு இடமே இல்லை

இறையருள் பெற விழைவோர் இஸ்லாமியராகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள் எச்சமயத்தைச் சார்ந்தோராகவும் இருக்கலாம். அவர்கள் சமயத்தை அவரவர் வழியில் பேண இஸ்லாம் எடுத்துக் கூறுகிறது. இதைப் பற்றி திருக்குர்ஆன்,

"உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர்களுக்கு அவர்கள் மார்க்கம்" என இயம்புகிறது.

இஸ்லாத்தில் இணையுமாறு மக்களை வற்புறுத்தவோ கட்டாயப்படுத்தவோ மார்க்கத்தில் அறவே இடமில்லை. இத்தகைய செயலை இஸ்லாம் கடுமையாக எதிர்க்கிறது. இஸ்லாத்தில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பும் ஒருவர் இஸ்லாமியக் கோட்பாடுகளைக் கேட்டு, இஸ்லாமிய மார்க்க ஞானத்தை அறிந்து, தெளிந்து அதன் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டு, யாருடைய கட்டாயமுமின்றி தானாகவே இஸ்லாத்தில் இணைய முற்பட வேண்டும். அவ்வாறு தான் பலரும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள் என்பதுதான் கடந்த கால வரலாறு காட்டும் உண்மை. யாரும் இஸ்லாத்தின்பால் இழுக்கப்படவில்லை என்பதுதான் பெருமானார் வரலாறு தரும் செய்தி. ஏனெனில், அவ்வாறு யாரும் கட்டாயச் சூழ்நிலையில் இஸ்லாத்தில் இணைவதை இஸ்லாம் ஏற்க விரும்பவில்லை. மாறாக அத்தகு செயலை எதிர்க்கவும் செய்கிறது. ஏனெனில் அஃது இஸ்லாமியக் கொள்கைக்கு நேர்மாறானதுமாகும். இதுவே திருமறையின் தீர்ப்புமாகும்.

"இஸ்லாத்தில் நிர்ப்பந்தமே இல்லை" (திருக்குர்ஆன் 2:256) என்பது மறைதரும் இறைவாக்காகும்.

"நபியே! நீர் கூறும்: (முற்றிலும் உண்மையான) இவ் வேதமானது உம் இறைவனால் அருளப்பெற்றது. விரும் பியவர் (இதை) விசுவாசிக்கலாம், விரும்பாதவர் (இதை) நிராகரித்து விடலாம்". (திருக்குர்ஆன் 18:29)

எனக் கூறுவதன் மூலம் இஸ்லாமிய நெறியை ஏற்பதும் ஏற்காது விடுவதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததாகும். இதற்கான எத்தகு போக்கும் செயலும் இஸ்லாமிய நெறிக்கும் அண்ணலார் வாக்குக்கும் வழி காட்டுதலுக்கும் நேர்மாறானதாகும் என்பது தெளிவு.

இதை மிகத் தெளிவாக விளக்கும் எத்தனையோ எடுத்துக் காட்டுகளை வரலாறு நெடுகக் காணலாமாயினும் குறிப்பிடத்தக்க சம்பவமொன்றைப் பெருமானார் பெரு வாழ்விலிருந்து எடுத்துக் காட்ட விழைகிறேன்.

பிறக்குமுன் தந்தையை இழந்த பெருமானார் ஆறு வயதில் தாயையும் இழந்தார். பாட்டனார் அப்துல் முத்தலிபின் அரவணைப்பும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே நீடித்தன. அதன்பின் தன் பெரிய தந்தை அபூத்தாலிபின் அன்பிலும் அரவணைப்பிலுமே வளர்ந்தார்.

இறைக் கட்டளைக்கிணங்க இஸ்லாமிய நெறியைப் பிறருக்குணர்த்தி இஸ்லாமிய நெறியின்பால் இணையத் தூண்டிய பெருமானார் தன் குடும்பத்தைச் சேர்ந்த யாரையுமே கட்டாயப்படுத்தியோ அல்லது அத்தகு சூழலை உருவாக்கியோ இஸ்லாமிய நெறியை ஏற்கச் செய்ததாக வரலாறு இல்லை.

ஹிரா குகையில் முதன் முதல் பெருமானார் பெற்ற இறைச் செய்தியைக் கேட்ட, அவர் வாழ்க்கைத் துணைவி கதீஜா பெருமாட்டியார், அவர் கூறியதில் தானாக நம்பிக்கை கொண்டு இஸ்லாத்தை ஏற்ற முதல் முஸ்லிம் ஆனாரேயன்றி, பெருமானார் அவர்கள் 'கணவன்' என்ற தன் செல்வாக்கையோ பிற தன்மைகளையோ கையாண்டு இஸ்லாத்தை ஏற்கச் செய்யவில்லை.

இவ்வாறே இஸ்லாமிய நெறியின் மேன்மையையும் உயர்மிகு சிறப்பையும் உணர்ந்து தெளிந்து, தாங்களாகவே முன்வந்து இஸ்லாத்தை ஏற்று, முஸ்லிம்கள் ஆனார்களே அன்றி ஆக்கப்படவில்லை.

ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் மக்கமா நகரை வெற்றி கொண்டபோதும், மக்காவாசிகள் அனைவரும்

தாங்களாக முன்வந்து இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்று முஸ்லிம்களாகிய போதும்கூட, பெருமானாரை வளர்த்து ஆளாக்கிய அவரது பெரிய தந்தையார் அபூத்தாலிப் இஸ்லாமிய மார்க்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டாரில்லை. என்றும்போல் முந்தைய சிலை வணக்கச் சமயத்திலேயே இருந்து வந்தார்.

எண்பது வயதை எட்டிய அவரை இறப்பு நெருங்கி விட்ட நிலையில், படுத்தபடுக்கையாகக் கிடக்கும் தன் பெரிய தந்தை அபூத்தாலிபின் அருகே அமர்ந்திருக்கும் அண்ணலார் விரும்பியிருந்தால் சிறிது வற்புறுத்தி இறுதி நேரத்திலேனும் இஸ்லாத்தில் இணையச் செய்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்வது இறைநெறிக்கு - இஸ்லாமிய மார்க்கத்துக்கு - இறை வாக்குக்கு நேர்மாறான செயலாக அமைந்து விடும் எனக் கருதிய பெருமானார் தன் பெரிய தந்தை அபூத்தாலிபை கடுகளவும் வற்புறுத்த அல்லது அத்தகு சூழலை உருவாக்க சிறிதும் முயன் றாரில்லை. அபூத்தாலிப் இறுதிவரை இஸ்லாத்தை ஏற்கா மல், முஸ்லிம் ஆகாமல் முந்தைய சிலை வணக்கச் சமயத்த வராகவே உயிர் நீத்தார் என்பது வரலாறு.

இவ்வாறு, தன் நெருங்கிய உறவினர்களை அணுக்க மாக இருந்தவர்களையே வற்புறுத்தாத, எக்காரணம் கொண்டும் நிர்ப்பந்திக்காத மார்க்கம்தான் இஸ்லாம் என்பதைச் சொல்லால் அல்லாமல் செயலாலும் உலகுக் குணர்த்தியவர் பெருமானார் (சல்) அவர்கள்.

### அவரவர் சமயம் அவரவர்க்கு

எந்தவொரு சமயத்தைச் சார்ந்தவர்களும் அவரவர் சமயங்களைப் பேணி ஒழுக வேண்டுமே தவிர, ஒரு சமயத்தைச் சார்ந்தவர் மற்றவர் சமய வழியில் குறுக்கிடு வதை இஸ்லாம் அறவே வெறுக்கிறது. அவரவர்

நம்பிக்கைக்கேற்ப அவரவர் சமய நெறிப்படி வாழ, சடங்கு சம்பிரதாயங்களைப் பேணி ஒழுகப் பணிக்கிறது.

"உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர்களுக்கு அவர்கள் சமயம்"

என்ற திருமறை வாசகம் தெளிவாக உணர்த்துவதை முன்பே கண்டோம்.

இதை உலக மக்களுக்கு முழுமையாக உணர்த்தும் வகையில் பெருமானார் (சல்) அவர்கள் தன் வாழ்க்கையில் எடுத்துக்காட்டாகக் கடைப்பிடித்தொழுகிய நிகழ்ச்சி யொன்றைக் காணலாம்.

மதீனாவில் வாழ்ந்து வந்த பெருமானார் அவர்களின் வாழ்வும் வாக்கும் மக்களின் மனதிலே மாபெரும் மாற்றங் களை விரைந்து ஏற்படுத்தி வந்தன. மக்கள் தாங்களாகவே இறை நெறியாகிய இஸ்லாத்தின் மேன்மையை உணர்ந்து, முஸ்லிம்களாகி வந்தனர். முஸ்லிம்கள் மட்டுமல்லாது மற்ற சமயத்தவர்களும் தங்களுக்கு ஏற்பட்டு வந்த ஐயப்பாடு களையெல்லாம் பெருமானாரிடமே கேட்டுத் தெளிவு பெற்று வந்தனர்.

### பள்ளி வளாகத்தில் கிருஸ்தவப் பிரார்த்தனை

மதினாவில் நபிகள் நாயகத்தை நேரில் கண்டு பல்வேறு விஷயங்களைப் பேசி விவாதிக்கப் பல்வேறு சமயத் தூதுக் குழுக்கள் வந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்க கிருஸ்தவப் பாதிரியார்கள் குழு நஜ்ரான் எனுமிடத்திலிருந்து வந்திருந்த 70 பேரங்கிய குழுவாகும். இதற்கு முன் வந்த சிறு சிறு குழுக்கள் மதீனாவில் ஆங்காங்குள்ள தனிப்பட்டவர்களின் இல்லங்களிலே தங்கி நாயகத் திருமேனியைக் கண்டு உரையாடி, ஐயந்தெளிந்து செல்வது வழக்கம். ஆனால், பெரும் எண்ணிக்கையில் நஜ்ரானிலிருந்து வந்த இந்தக்

கிருஸ்தவப் பாதிரியார் குழு நேரிடையாகப் பெருமானார் (சல்) அவர்கள் இருந்த பள்ளிவாசலுக்கே வந்து விட்டனர். நீண்டநேரம் அண்ணாலாரோடு உரையாடியபோதிலும் பேச்சு வார்த்தை முற்றுப் பெறவில்லை. மேலும், பல விஷயங்களைப் பற்றித் தொடர்ந்து பேசி தெளிவுபெற வேண்டியிருந்தது. இதற்கிடையே பாதிரிமார்கள் பிரார்த்தனை செய்வதற்கான நேரம் நெருங்கியது. அவர்கள் வெளியே சென்று பிரார்த்தனை செய்து விட்டு மீண்டும் திரும்பிவர விரும்பினர்.

இதையறிந்த பெருமானார் அவர்கள் "இரண்டு கடவுள்கள் இல்லை; ஒரே இறைவன்தான். அவனை எங்கிருந்தும் வணங்கலாம். நீங்கள் விரும்பினால் இப்பள்ளி வளாகத்தின் ஒரு பகுதியிலேயே உங்கள் கிருஸ்தவ சமயச் சடங்கு முறைகளோடு, நீங்கள் பிரார்த்தனை செய்து இறை வணக்கம் புரியலாம்." எனக் கூறினார். அண்ணலார் மனப் பூர்வமாக அளித்த பிரார்த்தனை அனுமதி பாதிரிமார்களுக்குப் பேருவகை அளித்தது. அண்ணலார் அனுமதித்த தற்கிணங்க பாதிரிமார் கள் பள்ளிவாசல் வளாகத்தின் ஒரு பகுதியில் குழுமி, தங்கள் கிருஸ்தவ மதச் சம்பிரதாயப்படி, சடங்கு முறைகளோடு தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றி மகிழ்ந்தனர்.

நஜ்ரானிலிருந்து வந்திருந்த கிருஸ்தவப் பாதிரியார் குழுவினர் மாற்றுச் சமயத்தவர் எனத் தெளிவாகத் தெரிந்திருந்தும் பள்ளிவாசல் வளாகத்திற்குள்ளாகவே இறை வணக்கப் பிரார்த்தனை புரிய அனுமதித்த பெருமானாரின் பெருந்தன்மையும் பிற சமயச் சகிப்புணர்வும் வந்திருந்த கிருஸ்தவப் பாதிரிமார்களுக்கு அண்ணலார் மீது அளவிலா மதிப்புக் கொள்ளச் செய்துவிட்டது. இச்செயல் மூலமே இஸ்லாத்தின் பிற சமயக் கண்ணோட்டம்

எத்தகையது என்பதை எளிதாகப் புரிய வைத்துவிட்டார் நாயகத் திருமேனி அவர்கள்.

இஸ்லாம் பிற பிற சமயங்களை வெறுத்து ஒதுக்காத தோடு அவற்றை மதிக்கக் கூடியது என்பதை மாற்றுச் சமய வாதிகளாகிய பாதிரியார்களையே உணர்ந்து தெளிய வைத்து விட்டது.

"இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும்
எதிரானது அன்று"

என்பது நாயகத் திருமேனியின் வாக்கமுதாகும்.

ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பி ஏற்ற சமயக் கொள்கைகளைப் பேணி வாழ முழு உரிமை உண்டு என்பதை இஸ்லாமும் அண்ணலாரின் அழகிய முன்மாதிரி யான வாழ்க்கையும் வாக்கும் எல்லா வகையிலும் உறுதி செய்கின்றன. இதனைக் கடந்தகால இஸ்லாமிய ஆட்சி வரலாறும் உறுதி செய்கிறது.

இந்தியாவில் ஐந்நூறு ஆண்டுக் காலத்திற்கு மேல் இஸ்லாமிய ஆட்சி நடத்திய முஸ்லிம் மன்னர்கள், மாற்றுச் சமயத்தவர்களின் வாழ்க்கை முறையிலோ சமயச் சார்பான சடங்கு, சம்பிரதாயங்களிலோ தலையிட்டதாக வரலாறே இல்லை. இதற்கான சிறு சம்பவத்தைக்கூட வரலாற்று ஏடுகளில் காண முடியவில்லை. பிற சமயத்தவர்களின் வழக்குகள் அந்தந்தச் சமயத்தைச் சார்ந்த நீதிபதிகளை, சமய ஞானமிக்க வல்லுநர்களைத் துணையாகக் கொண்டே விசாரிக்கப்பட்டன. அந்தந்த மத அடிப்படையிலேயே நீதி வழங்கப்பட்டன என்பதுதான் வரலாறு. பிற சமயத்தவரின் மதப் பிரச்சினைகளில் முஸ்லிம்கள் தலையிடக் கூடாது என்பது நாயக வழிமுறையும் இஸ்லாமிய நெறியுமாகும்.

உமர் (ரலி) வின் ஒப்பற்ற சமயப் பொறை

*அண்ணலெம் பெருமானார் மதீனா பள்ளிவாசல் வளாகத்தில் கிருஸ்தவப் பாதிரிமார்களைப் பிரார்த்தனை செய்து கொள்ள அனுமதித்தது போன்றே ஜெரூசலம் நகர கிருஸ்தவ மாதா கோயிலினுள் உமர்(ரலி) அவர்களைத் தொழுகை நடத்த கிருஸ்தவ பாதிரிமார்கள் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்ட அரிய நிகழ்ச்சி வரலாறாகத் தடம் பதித்து, சமய சகிப்புணர்வுக்கு, நல்லிணக்கத்துக்குக் கட்டியங்கூற நிற்பதைக் காணமுடிகிறது.*

*பெருமானார் (சல்) அவர்கட்குப் பின் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உமர் (ரலி) அவர்கள் அண்ணலாரைப் போன்றே பிற சமயச் சகிப்புணர்வுக்கோர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கி வந்தார் என்பதை வரலாறு வழிமொழிந்து கொண்டுள்ளது.*

*ஒரு சமயம் ஜெரூசலம் நகரிலுள்ள யூத, கிருஸ்தவ சமயத் தலைவர்களின் அன்பான அழைப்பை ஏற்று அங்கு சென்றார். மூன்று பெரும் சமயத்தவர்கட்கு மிக முக்கிய மான நகராகும் ஜெரூசலம், "பைத்துல் முகத்தஸ் (தூய்மை மிக்க பரிசுத்த நகர்) என முஸ்லிம்களால் போற்றப்படும் ஜெரூசலம் நகருக்கு உமர் (ரலி) வருகை புரிந்தார்.*

*மிகப் புராதனமான அப் பண்டை நகரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வரும்போது தொழுகைக்கான நேரம் நெருங்கி விட்டது. அப்போது உமர் (ரலி) அவர்களும் கிருஸ்தவ குருமார்கள் சிலரும் 'சர்ச் ஆஃப் ரிசரக்ஷன்' எனும் மாதா கோயிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந் தனர். தொழுகை நேரம் நெருங்கி விட்டதை குறிப்பாக கலீஃபா உணர்த்திய போது உடனிருந்த கிருஸ்தவ குருமார்கள் புகழ்மிகு புராதனமான அத்தேவாலயத் துள்ளேயே தொழுகை நடத்திக் கொள்ளுமாறு வேண்டிக்*

கொண்டனர். இதனினும் வசதிமிக்கதான அருகிலுள்ள மற்றொரு மாதாகோயிலான கான்ஸ்டன்டைன் தேவாலயத்தில் தொழுகைப் பாய் விரிக்கப்பட்டிருக்கிறது. விரும்பினால் அங்கு வசதியாகத் தொழுகை நடத்தலாம் எனவும் கூறி வேண்டினர்.

ஆனால், கலீஃபா உமர் (ரலி) அவர்கள் மாதாகோவில்களின் உட்புறத்தே தொழுகை நடத்தாமல் அருகே இருந்த திறந்த வெளியில் தொழுகை நடத்தினார். தொழுது முடித்தபின், தான் ஏன் தேவாலயங்களுள் தொழவில்லை என்பதற்கான காரணத்தை விளக்கினார்.

'நான் உங்கள் அன்பு வேண்டுகோளுக்கிணங்க தேவாலயத்தினுள் தொழுதிருக்கலாம். அவ்வாறு நான் தொழுகை நடத்தியிருந்தால் இன்றில்லாவிட்டாலும் நாளை ஒரு காலத்தில் நான் தொழுத இடம் என்ற காரணம் காட்டி, முஸ்லிம்கள் உரிமை பாராட்டி, அவ்விடத்தில் மசூதி நிர்மாணிக்க முயலலாம். திருக்குர் ஆன் திருமறையின் 22வது அத்தியாயத்தின் 40வது வசனம் "மடாலயங்களையும் மாதா கோயில்களையும் யூதர்களுடைய ஜெபாலயங்களையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு முஸ்லிம்களுக்கு உள்ளது" எனக் கூறி,

"அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுத்துக் கொண்டிராவிடில் மடங்கள், கிருஸ்தவ ஆலயங்கள், யூத, ஜெபாலயங்கள், அல்லாஹ்வின் பெயர் அதிக அளவில் கூறப்படும் மஸ்ஜித்கள் ஆகியவை தகர்க்கப்பட்டிருக்கும். திண்ணமாகத் தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய்வான்."

(திருக்குர்ஆன் 22:40)

என்ற திருமறை வசனங்களை திருக்குர்ஆனிலிருந்து அப்படியே அவர்களிடம் ஓதிக் காட்டினார். பிற சமயங் களை மதிப்பதோடு அச்சமய ஆலயங்களையும் பாதுகாக்க வும் பணித்த திருமறை வாசகங்களும் அவற்றிற்கேற்ப செயல்பட்ட கலீஃபா உமர் (ரலி) அவர்களின் சமயப் பொறையுணர்வும் இன்றும் நமக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக விளங்குகின்ற பான்மை என்றும் நினைந்தின் புறத்தக்கதாகும்.

இங்கு ஆழ்ந்து கவனிக்க வேண்டிய மிக நுட்பமான மற்றொரு பயன்மிகு செய்தியும் உள்ளது. கிருஸ்தவ குருமார்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க இரு மாதா கோயில்களில் ஏதாவதொன்றில் உமர் (ரலி) தொழுகை நடத்தினால், அதைக் காரணம்காட்டி, பின்னால் வரும் முஸ்லிம்கள் 'உமர் (ரலி) தொழுத தொழுகைத் தலம்' என உரிமை பாராட்டி மசூதி கட்ட முனைந்தால் மாதா கோயில் பாதிக்கப்பட்டு விடலாம். அதற்கு எக்காரணம் கொண்டும் இடம் தந்து விடலாகாது என்ற முன்னெச்சரிக்கை உணர் வோடும், எதற்காகவும் பிற சமயத்தினர் பாதிப்புக்கு ஆளா வதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்ற முன்னுணர்வும் இங்கு அரசோச்சுவதைக் காண முடிகிறது.

## பிற சமய எதிரிகளை எதிர்கொண்ட பெருமானார்

நபிகள் நாயகம் (சல்) அவர்கள், இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்ய முனைந்தபோது தன்னைப் பெரும் எதிரியாக எண்ணி மிகக் கேவலமாக நடத்திய பிற சமயத்தவர்களை பெருமானார் மக்காவை வெற்றி கொண்ட பின்னர், மாற்று மதத்தவரை எவ்வாறு நடத்தினார் என்பதை, அண்ணலாரின் வாழ்க்கை வழி அறிவதன்மூலம் 'அழகிய முன்மாதிரி' யான அவர்தம் வாழ்வும் வாக்கும் மாற்றுச் சமயத்தவரிடம், ஒரு முஸ்லிம் எம்முறையில் நடந்து

கொள்ள வேண்டும் என்பதற்கு இணையற்ற எடுத்துக் காட்டாக அமைந்துள்ளதை அறியலாம்.

மக்காவில் இறைச் செய்தி பெற்ற பெருமானார் (சல்) அவர்கள் அச்செய்தியைத் தனக்கு மிக அணுக்கமாக இருந்தவர்களிடம் மட்டும் கூறினார். அதைக்கேட்ட அவர்கள் அதை முழுமையாக ஏற்று முஸ்லிமாயினர். அத்தகையவர்களின் தொகையும் விரல்விட்டு எண்ணத் தக்கனவேயாகும். இறைச் செய்தியை-இஸ்லாமிய போதனையை மக்களிடையே உரக்கக் கூறிப் பிரச்சாரம் செய்தவரில்லை பெருமானார் அவர்கள். இரகசியமான கருத்துப் பரிமாற்ற அளவிலேயே அமைந்திருந்தது. இதையறிந்த சிலை வணக்கச் சமயத்தவர்களான மக்கா குறைஷிகள் அண்ணலாரை வெறுப்போடு நோக்கினர். ‘அல்லாஹ் ஒருவன்; அவன் உருவமற்றவன்; இணை, துணை இல்லாதவன்; முஹம்மது அவன் திருத்தூதர்’ என்ற கலிமா எனும் இறைநம்பிக்கைக் கோட்பாட்டை விட்டொழித்து, சிலை வணக்க முறையைக் கைக்கொள்ளு மாறு அண்ணலாரைப் பணித்தனர். தன் இறைக் கொள்கை யிலிருந்து கடுகளவும் மாற பெருமானார் மறுத்தபோது ஆசை காட்டினர்; அச்சுறுத்தி எச்சரித்தனர். எதற்குமே இணங்காமல் இஸ்லாமிய நெறி பேணிய பெருமானாரைத் தங்கள் உருவ வழிப்பாட்டுச் சமயத்தை ஒழிக்க வந்த கொடிய விரோதியாகக் கருதி, கொடுமைகள் பல புரிந்தனர். இறுதியில் அவரையும் அவரைச் சேர்ந்த முஸ்லிம்களையும் மக்கத்தை விட்டே வெளியேறும்படியான நிலையை ஏற்படுத்தினர். இஸ்லாத்தைப் பேணி நடக்க இயலா மக்கா முஸ்லிம்கள் தாங்கள் பிறந்த மண்ணைத் துறந்து, சொந்த பந்தம், குடும்பம், சொத்து எல்லாவற்றையும் விட்டுவிட்டு மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஓடி தம் விருப்பம்போல் இஸ்லாமிய நெறிப்படி வாழலாயினர்.

மக்காவைவிட்டு அண்ணலார் வெளியேறிய எட்டாண்டுகளுக்குப் பின்னர் மக்கா நகரை ஒரு சொட்டு ரத்தமும் சிந்தாமல் பெரும் வெற்றி கொண்டார். மதினா செல்லுமுன் மக்காவில், சிலை வணக்கக் குறைஷிகளால் கொடுக்கப்பட்ட பெருங்கஷ்டமான பதின்மூன்று ஆண்டு கள் உட்பட இருபத்தொராண்டுகளுக்கு மேலாக பெருந் துன்பம் அனுபவித்த பெருமானாரும் பிற முஸ்லிம் தோழர் களும் வெற்றி வீரர்களாக மக்காவிலுள்ள இறையில்லமான 'காபா' முன்பாக மாற்றுச் சமயத்தவர்களான மக்காவாசிகள் அனைவரும் குழுமுமாறும் அவர்களோடு பெருமானார் பேச விரும்புவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இருபதாண்டுகளுக்கு மேலாக இஸ்லாமிய நெறியைப் பரப்ப இயலாதவாறு பெருமானாரோடு அடிக்கடி போரிட் டும், பல்வேறு வகைகளில் தாக்குதல் தொடுத்தும், சொத்துகளைச் சேதப்படுத்தியும் அபகரித்தும் பெருங் கொடுமைகளைச் செய்த மக்காவாசிகள் படுமோசமான தோல்வியைத் தழுவிய நிலையில், ஆயிரக்கணக்கான முஸ்லிமல்லாதவர்கள் 'காபா' இறையில்லம் முன்பாக கவலையோடும் அச்சத்தோடு குழுமியிருந்தனர். அவர் களைச் சுற்றிலும் இஸ்லாமியப் போர் வீரர்களைக் கொண்ட இராணுவம் சூழ்ந்து நின்றது.

அப்போது மதியத் தொழுகை நேரமான 'ழுஹர்' நேரம், அப்போது பெருமானார் 'காபா' இறையில்லம் மீதேறி தொழுகை அழைப்புக்கான 'அதான்' கூறுமாறு கறுப்பு இனத்தவரான பிலால் (ரலி) அவர்களைப் பணித்தார். அவ ரும் உடனடியாகக் 'காபா' இறையில்லம் மீதேறி தொழுகை அழைப்பு விடுக்கலானார்.

"அல்லாஹ் பெரியவன்; அல்லாஹ் பெரியவன்; அல்லாஹ்வைத் தவிர வணங்குதற்குரியவர் வேறு யாருமில்லை," எனத் தொடங்கும் தொழுகை அழைப்பை

இனிய உரத்த குரலில் விடுக்கிறார். அப்போது முஸ்லி மல்லாத குறிப்பிட்ட பெருந் தலைவர்களும் அங்கே குழுமி நிற்கின்றனர். அவர்களில் அத்தாப் இப்னு ஆசீத் என்பவர் குறிப்பிடத்தக்க தலைவர். பிலால் (ரலி) அவர்களின் தொழுகை அழைப்பைக் கேட்ட மாத்திரத்தில், தன் அருகே நின்று கொண்டிருந்த தன் நண்பரின் காதுகளில் "நல்லவேளை என் தந்தையார் மறைந்து விட்டார். அவர் உயிரோடு இன்று இருந்திருந்தால், இந்தக் கருங்குரங்கு (பிலால்) 'காபா' இறையில்லக் கூரை மீது நின்று தொழுகை அழைப்பு விடுப்பதைக் காணச் சகித்திருக்க மாட்டார்," என்று கிசுகிசுத்தார்.

அண்ணலார் இமாமாக இருந்து 'லுஹர்' தொழுகையை நிறைவேற்றினார். அதன்பின், அங்கே குழுமி நின்று கொண்டிருந்த முஸ்லிமல்லாத சிலை வணக்கச் சமயத்தைச் சார்ந்த மக்காக் குறைஷியர்களை நோக்கி,

'என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?' எனக் கேட்டார்.

இதைக் கேட்டபோது குறைஷிகள் நாணத்தால் வெட்கித் தலை குனிந்தனர். தாங்கள் எதையும் வாய் திறந்து கேட்க தகுதியற்றவர்கள் என்ற எண்ணத்தில் மௌனமாக நின்றனர். அந்த நிலையில் பெருமானார் (சல்) விரும்பி யிருந்தால் இருபதாண்டுகளுக்கு மேலாக தனக்குத் துன்பமும் துயரமும் இடையறாது தந்து, வருத்தி வாட்டிய வேற்றுச் சமய விரோதிகள் அனைவரையும் சிரச்சேதம் செய்ய ஆணையிட்டிருக்க முடியும். மக்கா வாசிகளாகிய அம் மாற்றுச் சமயத்தினரின் சொத்துகள் அனைத்தையும் பறிமுதல் செய்திருக்க முடியும். தன் அதிகாரத்தின் மூலம் அவர்கள் அனைவரையும் அடிமைகளாக ஆக்கியிருக்க

முடியும். இவை எதையுமே அவர் செய்ய வில்லை. அவர், மக்கா வாசிகளை ஏறிட்டுப் பார்த்தபோது, வெட்க உணர்வால் குறுகி நிற்கும் அவர்களிடம்,

> "எந்தக் குற்றப் பொறுப்பும் உங்கள் மீது சுமத்தாது, உங்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை, வழங்கப்படுகிறது; நீங்கள் செல்லலாம்."

எனக் கூறி அத்தனை முஸ்லிமல்லாத வேற்றுச் சமய குறைஷிகளை விடுதலை செய்து அனுப்பினார் அண்ணலார்.

இந்தச் சூழலை மனதிற் கொண்டு ஒரு நிமிடம் நாம் சிந்தித்துப் பார்த்தால் பல உண்மைகள் நமக்குத் தெளிவாகப் புலப்படும்.

சற்று நேரத்துக்கு முன்புவரை முஸ்லிமான பிலால் (ரலி) அவர்களின் தொழுகை அழைப்பொலியைக் கூடக் கேட்கப் பொறுக்காமல்-அந்த அழைப்புங்கூட மக்கத்தவர் களைப் பற்றி இல்லாமல் இறைவனைப் புகழும் வாசகங் களை மட்டும் கொண்ட அழைப்பொலியைக் கேட்கப் பிடிக்காத முஸ்லிமல்லாத அத்தாப் இப்னு ஆசீத் எனும் பெரும் தலைவர் ஒரு முஸ்லிமை 'கருங்குரங்கு' எனப் பழித்த நிலைமாறி, அண்ணார் கடுகளவுகூடத் தீங்கிழைக் காது, அனைவருக்கும் அளித்த விடுதலை, அத்தலைவரின், அடிமனத்தைத் தொட்டது. ஒரு முஸ்லிமின் உன்னதத்தை அண்ணலார் வழி உணர்ந்த அவர், துள்ளிக் குதித்தவராகப் பெருமானார் முன்வந்து, தன்னையே பெருமானாரிடம் ஒப்படைத்துக் கொண்டவராக, "முஹம்மத்! நான்தான் அத்தாப் இப்னு ஆசீத். இஸ்லாத்தின் மாபெரும் எதிரியாக இருந்தவன். வணங்குதற்குரியவன் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை; முஹம்மத் இறைவனின் திருத்தூதர் என்பதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன்!" எனக் கூறி

இஸ்லாத்தில் இணைந்தார். அவர் மட்டுமல்ல, இந் நிகழ்வுக்குப் பின் உள்ளார்ந்த நிலையில் மக்கா நகர மக்கள் அனைவரும் ஓர் இரவுக்குள் இஸ்லாமாயினர் என்பது வரலாறு.

அண்ணலார் அங்கு முஸ்லிமல்லாத மாற்றுச் சமயத்த வரிடம் நடந்து கொண்ட முறையைவிட, அத்தாப் இப்னு ஆசீத் அக்கணமே மனம் மாறி இஸ்லாத்தைத் தழுவியதை விட, நம் கவனத்தை ஈர்க்கும் செயல் அடுத்து நடை பெற்றது. அப்போது அண்ணலார் சிறிதும் தயங்காமல் அத்தாபை நோக்கி,

'உங்களை மக்காவின் ஆளுநராக நியமித்துள்ளேன்', என்ற பெருமானாரின் அறிவிப்பே அது. சிறிது நேரத்துக்கு முன்னர்வரை இஸ்லாத்தின் பரம விரோதியாக, நாயகத்தின் பெரும் பகையாளியாகத் திகழ்ந்த அத்தாப் இப்னு ஆசீத் மக்காவின் ஆளுநராக்கப்படுகிறார். அதுவும் இஸ்லாமிய ஆட்சியின் ஏகப் பிரதிநிதியாக புதிய ஆளுநர் நியமித்தபின் மதீனா போர் வீரர் யாருமே வெற்றி பெற்ற மக்காவில் தங்காமல் அனைவரும் மதீனா திரும்பினர்.

இதிலிருந்து பெருமானார் (சல்) அவர்கள் வெளி நாட்டினரிடம், பிற சமயத்தவரிடம் தன் மார்க்கத்தையோ அல்லது தனது இறைக் கொள்கைகளையோ அறவே ஏற்காதவர்களிடம் எப்படி நடந்து கொண்டார் என்பதை மேற்கண்ட சம்பவம் மிகத் தெளிவாக எடுத்துக்கூறி விளக்குவதாக உள்ளது.

### மனித நேயத்திற்கோர் மாநபி

இஸ்லாத்தின் இறைநெறிக்கிணங்க அண்ணலார் வாழ் வின் அனைத்து அம்சங்களிலும் அரசோச்சி நிற்கும் அரும் பெரும் குணப்பண்பு சமயங்கடந்த சகிப்புணர்வும் மனித நேயமுமாகும்.

மனித குலம் முழுமையும் ஆதாமின் வழி வந்த சந்ததி யினரே என்ற எண்ணத்தில் நாடு, மொழி, மத வேறுபாடின்றி அனைவரையும் நேசிக்கும் இனிய மனம் படைத்தவராக விளங்கினார் மாநபி (சல்) அவர்கள்.

ஒரு சமயம் மதீனா நகருக்கு வெளியிலிருந்து நபிகள் நாயகம் (சல்) அவர்களைக் காணச் சிலர் ஒரு குழுவாக வந்திருந்தனர். வந்தவர்கள் அனைவரும் வேற்றுச் சமயங் களைச் சார்ந்தவர்கள். இன்னும் சொல்லப் போனால் இஸ்லாத்தின்பால் கடும் வெறுப்பும் பகையுணர்வும் கொண்டவர்கள். எனினும், மதீனமா நகரின் மாபெரும் சக்தியாக உருமாறிவரும் நாயகத் திருமேனியை நேரில் சந்தித்து, பல்வேறு விஷயங்களைப் பேசி முடிவு காண வந்திருந்தனர்.

வந்திருந்தவர்கள் பெருமானாரோடு நீண்டநேரம் விவாதிக்கவே நேரம் கடந்துவிட்டது. இரவு நேரமாகி விட்டதால் வந்திருந்த மாற்றுச் சமயத்தவர்களை முஸ்லிம்கள் வீட்டிற்கொருவராக அழைத்துச் சென்று விருந்தளிப்பதென முடிவாயிற்று.

குழுவில் வந்திருந்த மாற்றுச் சமயத்தவர்களில் மிகவும் முரடனாகவும் துஷ்டனாவும் தோற்றமளித்த ஒருவன் இருந்தான். அவன் பார்வையையும் முகபாவனையையும் அங்கசேஷ்டைகளையும் கண்ட முஸ்லிம்கள் யாரும் அவனை விருந்துக்கழைத்துச் செல்ல விரும்பவில்லை. இதையறிந்த பெருமானார் (சல்) அவர்கள் அத்துஷ்ட விருந்தாளியைத் தன் வீட்டிற்கு வந்து விருந்துண்ணுமாறு கூறி அழைத்துச் சென்றார்.

அண்ணலாரின் வீட்டார் தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய உணவை மட்டும் அன்று தயாரித்திருந்தனர்.

பெருமானார் விருந்துக்காக அழைத்து வந்த விருந்தாளிக்கு அவ்வுணவு வகைகளையெல்லாம் அன்போடு எடுத்துப் பரிமாறினார். அண்ணல் வீட்டைச் சேர்ந்தவர்களும் உண்ண வேண்டுமே என்ற எண்ணமேயில்லாது அனைத்து உணவு வகைகளையும் வயிறு முட்ட உண்டு தீர்த்தான். அவ்வாறு தின்று தீர்ப்பதன் மூலம் அவ்விரவு அவ்வீட்டார் அனைவரையும் பட்டினி போட வேண்டும் என்பது அத் துஷ்ட விருந்தாளியின் நோக்கமாக இருந்தது. அந்த அளவுக்கு மாற்றுச் சமயத்தைச்சார்ந்த அத்துஷ்டன் முஸ்லிம்கள் மீதும் பெருமானார் மீதும் வெறுப்பும் துவேஷ உணர்வும் கொண்டிருந்தான்.

விருந்து முடிந்தவுடன் 'உண்ட களைப்புத் தீர' உயர்தர படுக்கைகளை விரித்த பெருமானார் அதில் சுகமாக உரங்கி காலையில் செல்லுமாறு வேண்டினார். அவனும் அவ்வாறே அங்கே தங்கி உறங்கச் சென்றான்.

அளவுக்கதிகமாக இரவு உணவை உட்கொண்டதால் செரிமானக் கோளாறு ஏற்பட்டு, நள்ளிரவில் வாந்தியும், பேதியும் ஏற்பட்டது. இதனால் அவன் படுத்திருந்த விலை யுயர்ந்த படுக்கை விரிப்புகளெல்லாம் அசுத்தமாகி விட்டது. இதனால் விடிவதற்கு முன்பாகவே எழுந்து யார் கண்ணிலும் படாமல் ஓட்டம் பிடித்தான்.

காலை விடிந்தவுடன் விருந்தாளியைக் காணவந்த பெருமானார் அவன் தங்கியிருந்த அறையும் படுக்கை விரிப்புகளும் அசுத்தமாகியிருப்பதைக் கண்டு, நிலையைப் புரிந்து கொண்டு, அறையைச் சுத்தப்படுத்தியதுடன் படுக்கை விரிப்புகளையும் தம் கைப்படத் துவைத்துச் சுத்தப்படுத்தலானார். அச்சமயம் தான் இரவு அவ்வறையில் மறந்து வைத்து விட்டுப் போன விளையுயர்ந்த வாளை எடுத்துச் செல்ல மீண்டும் அத் துஷ்ட விருந்தாளி அங்கு

வந்து சேர்ந்தான். அப்போது அவன் அசுத்தப்படுத்திய படுக்கை விரிப்பை நாயகத் திருமேனி தன் கைப்படத் துவைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். வேற்றுச் சமயத்தைச் சார்ந்த, மாறுபட்ட கொள்கை, கோட்பாடு களையுடைய அவ்வேற்று விருந்தாளியின் உள்ளம் நெக்குருகியது.

திரும்பிவந்த விருந்தாளியைக் கண்ட பெருமானார் ஆவலோடு ஓடிச் சென்று, அன்பு மொழி கூறி வரவேற்று அவன் மறந்து வைத்துவிட்டுப் போன வாளை எடுத்து வந்து கொடுத்ததுடன், அவன் உடல் நலனைப் பற்றி மிகவும் அன்போடும் பரிவோடும் கேட்டார். செரிமானக் கோளாறுக்கு மருந்தளிக்கவும் முனைந்தார். தான் நினைத்த தீங்குணர்வுக்கு நேர்மாறாக அன்பும் பரிவும் அரவணைப்பும் காட்டும் நாயகத் திருமேனியின் மனித நேயப் பண்பு, அந்த மாற்றுச் சமயத் துஷ்ட விருந்தாளியைக் கண்ணீர்விடச் செய்தது.

மதீனத்தவரிடையே ஐக்கிய ஒற்றுமை

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பல்வேறு சமயங்களி டையே காட்டப்பட வேண்டிய சகிப்புணர்வின் மொத்த வடிவமாக வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற மனிதப் புனிதர் என்பதை அவரது வாழ்க்கை வரலாறு முழுமையும் விளக்குகிறது.

அவரது சமய சகிப்புணர்வின் ஒட்டுமொத்த முழு வெளிப்பாடாக அவரது மதீனா வாழ்க்கை அமைந்தது.

நாயகத் திருமேனி அவர்கள் மதீனமாநகர் வந்து சேர்ந்தபோது, அங்கே பல்வேறு வகைப்பட்ட இன, சமய சமூகத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். அங்கே ஔஸ், கஸ்ரஜ் என்ற இரு அரபி இனத்தவர்களும் யூத இனத்தைச் சேர்ந்த

பனீ நளீர்கள், பனூ குறைளாக்கல், பனீ கைனூக்சு என்ற பிரிவினர்களும் வாழ்ந்தனர். இவர்களோடு கிருஸ்தவர்கள், சிலை வழிபாடு செய்துவந்த சிறு சிறு சமயப் பிரிவினர் களும் மதீனாவில் வாழ்ந்து வந்தனர். இவர்களிடையே ஒற்றுமையோ ஒருங்கிணைந்த உணர்வோ இல்லா திருந்தது. இனப் பிரிவும் மதப் பிரிவும் அவர்களிடையே பிணக்கை யும் பிளவையும் ஏற்படுத்திக் கொண்டேயிருந்ததெனலாம்.

எப்போதாவது ஏதாவது காரணத்தால் இரு சமயத்தவர் களிடையே குழப்பம், சமயச் சச்சரவு, அதன் காரணமாகச் சண்டை ஏற்பட்டால் பெரும் பொருள் இழப்பும் உயிர்ச் சேதமும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக அமைந்து விடும். அப்போதெல்லாம் மற்ற சமயத்தவர்கள் ஒதுங்கி நடுநிலையாளர்களாக இருப்பர். இவ்வாறு ஒவ்வொரு சமயத்தவரும் மற்ற சமயத்தவரின் நலத்தைப் பற்றிக் கடுகளவும் கவலை கொள்ளாதிருப்பர். எல்லோரும் ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்பதில் அக்கறையோ ஆர்வமோ இருந்ததில்லை. இவ்வாறு கொட்டிய நெல்லிக் காய்களாகப் பிரிந்து வாழும் மதீனத்தவர் போக்கு படையெடுக்கும் வெளியாருக்கு நல் வாய்ப்பாக அமைய, அவர்கள் அடிக்கடி மதீனாமீது தாக்குதல் தொடுப்பர். அப்போது கொள்ளையிடுவதும் கொலை செய்வதும் வாடிக்கையான நிகழ்வுகளாக நடந்து வந்தன.

அன்றிருந்த சூழ்நிலையில் அராபிய இனச் சமூகத் தவர்களும் சிலை வணக்கச் சிறுசிறு சமயத்தவர்களும் இஸ் லாத்தை ஏற்றனரேயன்றி, யூத இனத்தவர் அன்றையச் சூழ லில் இஸ்லாத்தைத் தழுவ விரும்பினாரில்லை.

இதற்கு ஒரு அடிப்படைக் காரணமும் இருந்தது. தங்கள் யூதத் திருமறை முன்னறிவிப்புச் செய்திருந்த ஒரு புதிய நபியை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். நபிகள்

நாயகம் முஹம்மது (சல்) அவர்களே அந்நபி என யூத அறிஞர்களும் வேத விற்பன்னர்களும் கருதினும், புதிய நபி யூதர்களின் நலத்தை மட்டும் கருத்திற் கொண்டு செயல் படாது, பிற சமூகத்தவர் அனைவரையும் சகோதரராகக் கொண்டு செயல்படும் முறை அவர்கட்கு ஒருவித மனக்கிலேசத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியிருந்தது. ஆயினும், அவ்வுணர்வை வெளிக்காட்டிக் கொள்ளாது நாயகத் திருமேனியின் போக்குக்கு இயைபவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டார்கள். அண்ணலார் இவ் வுணர்வுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக அங்குள்ள அனைத்து இனத்தவர்கட்கும் சமயத்தவர்கட்குமிடையே இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார்.

நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த இந்நிலையை முற்றாக மாற்றியமைக்க முற்பட்டார் பெருமானார் அவர்கள். ஒரு தலைமையின்கீழ் அனைத்து இன, சமய, சமூக மக்களை ஒருங்கிணைக்கவும் சமய சகிப்புணர்வோடு ஒன்றுபட்ட நிலையில் செயல்படவுமான சூழலை உருவாக்க விழைந்தார். அதற்கான செயல்திட்டம் வகுத்துச் செயல்படுத்த முனைந்தார்.

### உலகின் முதல் சர்வ சமய மாநாடு

மதீனாவிலுள்ள அனைத்து இனத் தலைவர்களையும் சமயக் குரவர்களையும் சமூகத் தலைவர்களையும் அழைத்து, கூட்டம் நடத்தினார். மதீனா நகரிலுள்ள பல்வேறு இன மக்களும் சமய மக்களும் பிளவுபட்டு, பிரிந்து நிற்பதால் விளையும் உள், வெளி பாதிப்புகளை எடுத்து விளக்கினார். வெளியார்கள் எளிதாகத் தாக்குதல் தொடுக்க ஒற்றுமையின்மை எவ்வாறு வாய்ப்பாக அமைகிறது என்பதை எடுத்து விளக்கினார்! இன சமய

வேறுபாடு கடந்த நிலையில் நகர மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே அமைப்பாக அமைவதன் மூலம் சிதறிக் கிடக்கும் மதீனத்தவர் சக்தி ஒருங்கு திரளவும், ஒன்றுபட்ட நிலையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவுமான சிறப்புமிகு நிலை உருவாகும். அப்போது வெளியார் நம்மைத் தாக்க அஞ்சுவர்; நமக்கு நாமே பாதுகாப்பு சக்தியாகவும் உருவாக முடியும்', என்றெல்லாம் அறிவுரை கூறினார்.

எப்போதும் சண்டை, சச்சரவுகளால் மிகவும் துவண்டு போயிருந்த பல்வேறு இனத் தலைவர்களுக்கும் சமயத் தலைவர்களுக்கும் இந்த யோசனை மிகச் சிறந்த ஒன்றாகப் பட்டது. உடனடியாக அண்ணலாரின் ஆலோசனைக் கிணங்க 'நகர அரசு' ஒன்றை அமைக்க ஒப்புதலளித்தனர். ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி எல்லோரையும் ஒன்றுபடுத்த விழையும் பெருமானாரே தலைமை தாங்கி நகர அரசை அமைத்து இயக்குமாறு வேண்டினர். மதீனா நகர அரசுத் தலைவராக அண்ணாலலரையே ஒரு மனதாக எல்லோரும் தேர்ந்தெடுத்தனர்.

இவ்வாறு மனிதகுல வரலாற்றிலேயே முதன் முதலாக சர்வ சமய சமரச மாநாட்டைக் கூட்டிய பெருமைக் குரியவராக அண்ணலார் அவர்கள் அமைகிறார். மாறுபட்ட இன, மத கோட்பாட்டாளர்களை ஒருங்கு திரட்டி அவர்கள் அனைவருக்கும் பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, நிலையான நலனுக்கு வழி வகுத்த பெருமை பெருமானாரையே சாரும்.

மதீனா நகரின் வரலாற்றிலேயே முதன் முறையாக நகர ஆட்சி அமைப்பும் அதற்கு மக்களின் பிரதிநிதிகளால்

முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமையும் அப்போது அமைவதாயிற்று: அதுவும் சமயங் கடந்த நிலையில்.

சமய சகிப்புணர்வை அடித்தளமாகக் கொண்டு உருவாக் கப்பட்ட நகர ஆட்சி அமைப்பு செவ்வனே நடைபெற அண்ணலாரின் தலைமையின்கீழ் எழுத்து பூர்வமான சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. எழுதப் படிக்கக் கற்காத ஏந்தல் நபியின் முனைப்பால் உருவாக்கப் பட்ட மதீன அரசமைப்புச் சட்டமே உலகில் எழுத்துருவில் உருவாக்கப்பட்ட முதல் சட்டம் என்று இன்றும் சட்ட வரலாறு சான்று கூறிக் கொண்டுள்ளது. இச்சட்டத் தொகுப்பு ஐம்பத்திரண்டு ஷரத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இஸ்லாத்துக்கு முன்னதாக இருந்ததாகக் கூறப்படும் ரோமானிய, கிரேக்க, ஹிந்து, சீனச் சட்டங்கள் எதிலும் காண முடியாத, யாருடைய சிந்தனையிலும் முளைவிடாத அற்புதமான ஷரத்துக்களைக் கொண்ட சட்டத் தொகுப்பாக அது அமைந்துள்ளது.

அனைத்துச் சமயங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் நகர நலத்தையும் மக்களின் மேம்பாட்டையும் பற்றிய உணர்வுகள் மட்டும் அரசோச்சும் வகையில் அச்சட்டம் அமைந்துள்ளது. முஸ்லிம்கள் பேணி நடக்க இஸ்லாமிய நெறி; யூதர்கள் பின்பற்ற யூத சமயம்; கிருஸ்தவர்களை வழி நடத்த கிருஸ்தவ மதம்; அதேபோன்று அங்கிருந்த சிறு சிறு சமயத்தவர்கட்கும் சிலை வணக்கத்தவர்கட்கும் அவரவர் சமய நெறிமுறைகள் உண்டு. ஆனால், அச் சமயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, மனிதர்கள் என்ற முறையில் அனைவருக்கும் பொதுவான நலன்களை முன்னிலைப்படுத்திச் செயல்பட எவ்வித ஏற்பாடும் இருந்திருக்கவில்லை. இந்நிலையை அடியோடு மாற்ற

மதீனா சட்டம் வழியமைத்தது. தங்கள் தங்கள் சமயங் களைப் பின்பற்றி வாழும் அதே சமயம் ஒட்டுமொத்த சமுதாய நலனுக்காக, சமய சகிப்புணர்வுடன் மக்கள் நலத்தை நாடிச் செயல்பட பெருமானாரின் மதீன நகர்ச் சட்டம் வழிவகுத்தது.

அச்சட்டத் தொகுப்பின் பிழிவைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்:

1. முஸ்லிம்களும் யூதர்களும் கிருஸ்தவர்களும் பிற சமயத்தவர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் களைப் போன்று ஒருங்கியைந்து வாழ வேண்டும்.

2. யார் யார் எந்தச் சமயத்தைச் சார்ந்தவரோ அவரவர் சமயத்தைப் பின்பற்றியொழுக முழு உரிமையுள்ளவரா வார். ஒருவர் சமய விவகாரங்களில் மற்றவர்கள் அறவே தலையிடக் கூடாது

3. ஏதாவது ஒரு மூன்றாவது கட்சியுடன் போர் ஏற் பட்டால், ஒருவர் மற்றவர் உதவிக்குச் செல்ல வேண்டும். இவ்வுதவி பெறுவதற்கு ஒரு நிபந்தனையும் உண்டு. அதாவது, யார் உதவி கோறுகிறாரோ அவர் மூன்றாவது கட்சியினரால் தாக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். உதவி கோறுபவர் ஆக்கிரமிப்பாளராக இருக்கக் கூடாது.

4. வெளியாரால் மதீனா நகரம் தாக்கப்பட்டால் அப்போது, சமயம், இனம் பாராது அனைத்து மக்களும் ஒன்றுபட்டு மதீனா நகர் காப்புப் பணியில் ஈடுபடுதல் வேண்டும்.

5. போராயினும் அமைதிக் காப்பாயினும் எந்த ஒரு முக்கிய நடவடிக்கையின்போதும் ஒருவரையொருவர் கலந்தா லோசித்த பின்னரே முடிவுகள் மேற்கொண்டு செயல்பட வேண்டும்.

6. அனைத்துத் தரப்பினரும் மதீனா நகரை புனித மிகு நகராகக் கருதிச் செயல்பட வேண்டும்.

7. அனைவருக்கும் பொதுவான செயற்பாடுகளில் ஈடுபடும் போது எழும் ஐயப்பாடுகளையும் நடவடிக்கை களில் எதிர்ப்படும் சங்கடங்களையும் நபிகள் நாயகம் (சல்) அவர்களிடம் எடுத்துக்கூறி, அதற்கு அவர் தரும் தீர்ப்பை அப்படியே ஏற்று ஒழுக வேண்டும்.

பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னுட் கொண்ட அச் சட்டத்தின்படி அங்குள்ள ஒவ்வொரு சமய, சமுதாயத் தினரும் தங்கள் மனச்சாட்சிப்படி நடக்க முழுச் சுதந்திரம் உண்டு என உத்திரவாதம் அளித்தது. அவரவர் தத்தமது உசிதப்படி சமய சகிப்புணர்வைக் கைக்கொண்டு வாழ முழு உரிமை உண்டு. முஸ்லிம்கள் தங்கள் மார்க்க நெறிப்படி வாழ உரிமை இருப்பது போன்றே யூத சமயத்தவர்களும் கிருஸ்தவ மதத்தவரும் பிற சமயங்களைச் சார்ந்தவர்களும் தத்தமது சமய, ஆச்சார அனுஷ்டானத்தின்படி வாழ முழு உரிமை படைத்தவர்களாவர் என்பதை இச் சட்டம் எல்லா வகையிலும் உறுதிப்படுத்தியது. அதே போன்று தங்கள் தங்கள் சமயச் சூழலுக்குள் ஏற்படும் எத்தகைய விவகார மாயினும், அதை அவரவர் சமயச் சூழலுக்குள்ளாகவே, தங்கள் சமய அடிப்படையில் தீர்த்துக் கொள்ள வேண்டும் யூத சமய விவகாரங்கள் யூத சமய நெறிமுறைகள் அச்சமயச் சட்டங்களின் அடிப்படையிலேயே தீர்வுகாண வேண்டும். கிருஸ்தவ சமயச் சச்சரவுக்கான தீர்வை கிருஸ்தவ மதச் சட்டங்களின் கீழும், அவ்வாறே பிற சமயத்தவர்களும் தத்தமது சமய நியதிப்படியும் சட்ட அடிப்படையிலும் சமயத் தலைவர்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்பதை நபிகள் நாயகம் (சல்) அவர்கள் எழுத்து வடிவில் உருவாக்கிய மதீனா நகர்ச் சட்டம் உரிமையும் உத்திரவாதமும் அளித்தது.

*சுருங்கக் கூறின் இஸ்லாத்தின் உயிர் மூச்சான சகிப்புத் தன்மையின் அடிப்படையில், பிற சமயக் கண்ணோட்டத் தோடு மதீனா நகர்ச் சட்டம் பெருமானாரால் வடிவமைக்கப் பட்டது. இதனால் சமயக் கண்ணோட்டமும் சமுதாய வாழ் வியல் சிந்தனையும் புறத்தோற்றம் பெற்றன என்றே கூற வேண்டும்.*

*இச்சட்டத்தின்படியே அன்றையச் செயற்பாடுகள் அனைத்தும் அமைந்திருந்தன என்பதற்குப் பலப்பல எடுத்துக்காட்டுகள் வரலாறு நெடுகிலும் காணக் கிடக்கின்றன.*

### அவரவர் வேத நெறிப்படி தண்டனை

*சர்வ சமயத்தவர்களும் ஏற்றுக் கொண்ட மதீனா நகர்ச் சட்டப்படியே நடப்பதுபோல பாவனை செய்து வந்த யூதர்களில் சிலர் முஸ்லிம்களுக்கும் அண்ணலாருக்கும் மாறுபாடாக நடந்து வந்தனர். அத்தகையவர்களுள் ஒருவர் கையும் களவுமாகப் பிடிபட்டார். இவர் மதீனா முஸ்லிம் களுக்கு எதிராக, மக்காக் குறைஷிகளுக்கு உளவு சொல்லி வந்தவர். இவரைப் பொது நியமப்படி நாயகத் திருமேனி அவர்கள் நாடு கடத்தினார்.*

*பின்னர், அகழிப் போரின்போது சுமார் 300 யூதர்கள் மதீன மக்களுக்கு, குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலில் வெளிப்படையாக ஈடுபட்டு வந்தனர்.*

*அகழிப் போர் இறுதியில் மாபெரும் வெற்றியாக முஸ்லிம்களுக்கு அமைந்தது. அப்போது ஊரையே காட்டிக் கொடுக்கும் சதிச் செயலில் ஈடுபட்ட யூதர்கள் ஒரு கோட்டையினுள் சிறிதுகாலம் ஒளிந்திருந்து இறுதியில் நாயகம் (சல்) அவர்களிடம் சரணடைந்தனர்.*

இவர்களது துரோகச் செயலுக்குண்டான தண்டனையை நாயகத் திருமேனி தானே வழங்காது, யூதச் சமயத் தலை வரிடம் ஒப்படைத்து, யூத வேதாகமப்படி தண்டனை வழங்குமாறு கூறினார். அந்தந்த சமய வேதாகமப்படி அவரவர் சமயத்தவர்கட்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பது அண்ணலார் நெறி முறையும் மதீனா நகர்ச் சட்ட நியதியுமாகும்.

பெருமானார் பணித்ததற்கொப்ப மதீனத்தவர்களுக் கிடையே ஏற்பட்ட ஒப்பந்த விதிமுறைகளுக்குப் புறம்பாகச் செயல்பட்ட தேசத் துரோகக் குற்றமிழைத்த 300 பேர் களுக்கும் யூத சமய வேதாகமப்படி, யூத சமயத் தலைவர் கள் மரண தண்டனை விதிக்க, அது அவர்களாலேயே நிறைவேற்றப்பட்டது.

சமயச் சகிப்புத் தன்மையைத் தன் உயிரோட்டமாகக் கொண்ட மதீனா சட்டங்கள் பல்வேறு சமயப் பிரிவினருக்கு மான பொதுச் சட்டங்கள் என்ற சிறப்பைப் பெற்றன. இதில் ஒவ்வொரு இனத்துக்கும், தாங்கள் சார்ந்த சமயத்துக்கும் பூரண சுதந்திரம் இருந்தது. எந்தக் கட்டுப்பாட்டையும் எந்த முஸ்லிமல்லாதவர் மீதும் சிறிதும் திணிக்கவில்லை; ஆதிக்க உணர்வையும் காட்டவில்லை. இதையே திருக்குர் ஆன்:

"இன்ஜீல் வேதத்தையுடையவர்கள், அதில் அல்லாஹ் அறிவித்திருக்கும் (கட்டளைகளின்) பிரகாரமே தீர்ப்பளிக்க வும்" (5:47) எனத் தெளிவாகக் கூறுகிறது.

இதைப் போன்றே யூதர்களும் பிற சமயத்தவர்களும் தங்கள் வேதமுறைப்படி தீர்ப்பு வழங்க முழு உரிமை பெற்றனர்.

இவ்வாறு, மதீனத் தலைவராக நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இருந்தபோதிலும் அவரவர் சமய வேத நெறிப்படி

காரியமாற்ற அவ்வச் சமயத்தினர் முழு உரிமை பெற்றிருந்தனர் என்பதை மேற்கண்ட சம்பவங்கள் தெளிவாக உணர்த்திக் கொண்டுள்ளன.

### இஸ்லாத்தின் உட்கிடக்கையை உணர்த்திய சட்டம்

மாற்றுச் சமயங்களை எல்லா வகையிலும் மதிக்கப் பணித்தல், சமயச் சகிப்புத்தன்மை, முழுமையான மதச் சுதந்திரம் ஆகிய சிறப்பம்சங்கள் வாயிலாக பிற சமயங்களை சகோதரச் சமயங்களாக மதிக்கும் இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மை நிலையை - உட்கிடக்கையை உரத்த குரலில் பறைசாற்றுவதாயமைந்திருந்தது.

### சமய ஆதிக்கமின்றி
### அனைவருக்கும் சம உரிமை

மதீனா நகர் அரசமைப்புச் சட்டத்தின் மற்றொரு சிறப்பம்சம் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் ஒரு முஸ்லிமாக, மார்க்கத்தின் ஈடு இணையற்ற தலைவராக இருந்தும் அவரது வழிகாட்டுதலில் உருவாக்கப்பட்ட சட்டத்தில் முஸ்லிம்களுக்கென தனி உரிமைகளோ அன்றி சிறப்புரிமைகளோ எதுவும் வழங்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். கடுகளவும் பாரபட்சமின்றி அனைத்துச் சமயத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கப் பட்டிருந்தது.

மதீனாவின் சாதாரண குடிமகன் வெளியூரைச் சேர்ந்த தன் இனத்தவர் யாருக்கும் அடைக்கலம் அளிக்கலாம். அந்த உரிமை அவருக்கு முழுக்க உண்டு. அவ்வாறு அடைக்கலம் அளிக்கப்பட்டவருக்கு, தான் விரும்பினால் மதீனா நகரில் மற்றவர்களைப் போல வாழ குடியுரிமையும் வழங்கலாம். இதேபோல வெளியூர்க்காரருக்குக் குடியுரிமை வழங்கும் தகுதிப்பாடும் உரிமையும் யூத,

கிருஸ்தவ இஸ்லாமிய இனமக்கள் அனைவருக்கும் உண்டு என்பது இச்சட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

## அனைத்துச் சமயத்தாருக்கும் குடியுரிமை தரும் அதிகாரம்

வேற்று நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு சகல உரிமை களோடு கூடிய குடியுரிமை வழங்கும் அதிகாரம் அன்றும் சரி, இன்றும் சரி நாட்டின் மையமான அரசுக்கே சொந்தமான அதிகார உரிமையாகும். ஆனால், அண்ணலார் வழி காட்டு தலில் உருவாக்கப்பட்ட மதீனா நகர அரசமைப்புச் சட்டத்தில் மதீனாவுக்கு அப்பால் இருந்து எப்பகுதியைச் சேர்ந்தவர் வந்தாலும் அவரது இனச் சார்புடையவர்களோ அல்லது சமயச் சார்புடையவர்களோ அடைக்கலம் தந்து அவர்களை மதீனா நகரின் குடிமகன் எனும் உரிமையை அவர்களுக்கு வழங்கலாம். ஒரு யூத இனத்தையும் சமயத்தையும் சார்ந்த மதீனா நகர யூதர் ஒருவர் வேற்று நாட்டு யூதனுக்கு மதீனாவில் அடைகலம் தருவதன் மூலம் மதீனாவில் வாழும் குடியுரிமையை வழங்கலாம். இவ்வாறே ஒரு முஸ்லிமுக்கு ஒரு முஸ்லிமும் ஒரு கிருஸ்த வனுக்கு ஒரு கிருஸ்தவனும் அடைக்கலம் அளிப்பதன் மூலம் குடியுரிமை வழங்க இயலும் என்பது மதீனா நகர் சட்டவிதியாகும். இன்னும் சொல்லப்போனால் அடிமை நிலையிலிருந்து முஸ்லிமானவருக்கு குடியுரிமை வழங்கும் அதிகாரத்தை இச்சட்டம் வழங்கியதென்றால் மதீனா நகர் ஆட்சி, அண்ணலார் தலைமையில் இயங்கி, சமயங்களுக் கிடையே எத்தகைய ஒருங்கிணைவை, சமத்துவத்தை, ஒற்றுமையை உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது வியப்பூட்டும் செய்தியாக உள்ளது. இப்பெருஞ் சிறப்புக்கு அடித்தளமாக அனைத்துச் சமயங்களும் இறைவனால் அளிக்கப்பட்டவைகளே என்ற திருக்குர்ஆன் கோட்பாடும் அதனைச் செயலளவில் நிலை நிறுத்திய

பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டமுமே காரணமாகும்.

இதில் மேலும் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு சிறப்பம்சம் குறிப்பிட்ட சமயத்தின் ஆதிக்கம் என்ற பேச்சுக்கு அறவே இடமில்லாமற் போய்விட்டதுதான். அத்துடன் தனிப்பட்ட மனிதருக்கோ அல்லது மக்கள் குழுமத்துக்கோ அல்லது குறிப்பிட்ட சமூகத்துக்கோ சிறிதளவுகூட ஆதிக்கமோ அல்லது பிறரைத் தன் நலங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் தன்னல வேட்கைக்கோ அறவே இடமில்லை. மனித இனத்துக்கு அமைதிச் சூழ்நிலை உருவாக இதனினும் சிறந்த வழி வேறேதேனும் உண்டோ? இதனை நூற்றாண்டுகளாகியும் கூட இன்னும் நாம் அந்த உயரிய நிலையைப் பெற முடியாது தட்டுத் தடுமாறிக் கொண்டுள்ளோம் என்பதுதான் உண்மை.

மேலும், மனித இனம் என்ற அளவில் அனைத்துச் சமயச் சார்புள்ளவர்களும் தத்தமது இன அல்லது சமயச் சார்பாளர்களை ஏற்றுப் புரக்கவும் அவர்கள் தாம் சார்ந்த சமய உணர்வோடு மற்ற சமயத்தவர்களோடு ஒருங் கிணைந்து அமைதியோடு வாழவும் வழிகாட்டியது மதீனா நகர அரசமைப்புச் சட்டம் என்று கூறலாம்.

### சமயத் தேர்வுக்கு முழு உரிமை

மதீனா நகர அரசமைப்புச் சட்டத்தின்படி யாரும் எந்தச் சமயத்தையும் தங்கள் மனச் சாட்சிப்படி தேர்ந்தெடுத்து அதில் இணையலாம். அவ்வாறு இணைவதை எதிர்க்கவோ தடுக்கவோ யாருக்கும் உரிமை இல்லை. அதே சமயத்தில் யாரையும் எந்தச் சமயத்தில் சேர வற்புறத்தவோ, கட்டாயச் சூழ்நிலையை உருவாக்கி சமயச் சூழலுக்குள் வலிய இழுக்கவோ கூடாது. தாங்களாகவே முன்வந்து எந்தச் சமயத்தையும் ஏற்கலாம். அதன் அடிப்படையில் சடங்கு

முறைகளைப் பேணவும் சமயங்கள் கூறும் நியதிப்படி வாழவும் முழு உரிமை உண்டு.

### முழுமையான மதச் சுதந்திரம்

மதீனாவில் பெருமானாரால் உருவாக்கப்பட்ட எழுத்துப் பூர்வமான அரசமைப்புச் சட்டம் பல வகைகளில் இன்றைய உலகுக்கு ஓர் உன்னத முன்னோடிச் சட்டமாக விளங்கு கிறதெனலாம்.

முதலாவது முழுமையான மதச் சுதந்திரத்துக்கு முழுமையான உத்திரவாதமளித்தது. அனைத்து அதிகாரங் களும் ஒரே இடத்தில் குவியுமாறு மையப்படுத்தப்படாமல் சமுதாயம் முழுமைக்குமாக பரவலாக அமையுமாறு பார்த்துக் கொண்டார் பெருமானார் (சல்) அவர்கள். அதிலும் குறிப்பாக முஸ்லிம் அல்லாதவர்கள் மீது எக்காரணம் கொண்டும் இச்சட்டங்கள் தனி ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்தவே இல்லை என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

இறுதி வேதமாக இஸ்லாமியத் திருமறையாம் திருக்குர் ஆன் அமைந்திருந்த போதிலும் அஃது கடுகளவும் முஸ்லிம் அல்லாதவர்களிடம் திணிக்கப்படவோ அன்றி ஆதிக்கம் செலுத்தவோ அனுமதிக்கப்படவில்லை. அவரவர் சமயச் சூழலுக்குள், தங்கள் வேதவாக்கின்படி கொள்கை கோட் பாடுகளுக்கிணங்க இயங்க முழுமையாக அனுமதிக்கப்பட்டார்கள். கிருஸ்தவர்களோ அல்லது யூதர்களோ அல்லது வேறு சிலை வணக்கச் சமயத்தவர் களோ சமயக் குழுமமாக ஒன்றிணைந்து வாழ அனுமதிக்கப் பட்டனர். தங்களுக்குள் ஏற்படும் சண்டை, சச்சரவுகள், கொள்கை கோட்பாட்டு வேறுபாட்டுப் பிரச்சினைகள் எதுவாயினும் அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்த நீதிபதிகளைக் கொண்ட வழக்கு மன்றங்கள் மூலம் தங்கள் வேத

அடிப்படையிலான சமயச் சட்ட விதிகளின் அடிப்படையில் தீர்வுகாண முழு அளவில் அனுமதிக்கப்பட்டனர். இதில் உரிய தீர்வு கிடைக்காதவர் கள் இஸ்லாமிய நீதி மன்றத்தை அணுகக் கட்டாயப்படுத்தப் படவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

**அவரவர் மதச் சட்ட அடிப்படையில் தீர்வு**

இதே முறையைத்தான் இந்தியாவை அறுநூறு ஆண்டு களுக்குமேல் அரசாண்ட முஸ்லிம் மன்னர்கள், மத அடிப் படையில் எழுந்த எந்தப் பிரச்சினையானாலும் அவற்றை அந்தந்த மதப் பெரியவர்கள்-நீதிபதிகளைக் கொண்டு, அந்தந்த வேதங்களின் அடிப்படையில் தீர்ப்புச் சொல்லித் தீர்வு கண்டு வந்தார்கள் என்பது வரலாறு. ஏனெனில், எந்தச் சமய மக்கள்மீதும் இஸ்லாம் எவ்வித ஆதிக்கத்தையும் செலுத்த அனுமதியில்லை என்பதுதான் உண்மையாகும். இந்த நிலை இந்த இருபதாம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியில்கூட செயல்வடிவு பெறவில்லை என்பது எல்லா வகையிலும் வருந்துதற்குரிய தொன்றாகும்.

**வணக்கத் தலங்களைக் காப்பதில்**
**அனைத்துச் சமயத்தவர்க்கும் சமபங்கு**

மதீன நகர அரசமைப்புச் சட்டப்படி அவ்வச் சமய சார்புள்ளவர்கள் தங்களது வணக்கத் தளங்களையும் சமயப் புனிதவிடங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமயத்தவர் மற்ற சமயத்தவர்களின் வணக்கத்தலங் களையும் புனித இடங்களையும் கண்ணியப் படுத்த வேண்டும். பழிக்கவோ இழிவாகப் பேசவோ அறவே கூடாது. இயன்ற வரை மாற்றார் வழிபாட்டுத் தலங்களை யும் புனித இடங்களையும் காப்பதில் அனைத்துச் சமயத்த வர்கட்கும் பொறுப்பு உண்டு என்பதையும் அச்சட்டம் வலியுறுத்தத் தவறவில்லை.

இதைவிடச் சமயப் பொறைக்கு, சமரச உணர்வுக்கு எடுத்துக்காட்டான செயலை எங்காவது காண முடியுமா?

மனித குலத்துக்கு இறைநெறி புகட்டி வழிகாட்ட வந்த அழகிய முன்மாதிரியான அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மதீனா நகர அரசமைப்புச் சட்டம் மூலம் சமய சகிப்புத்தன்மைக்கு இணையற்ற எடுத்துக்காட்டாக விளங்கு கிறார்கள்.

இக்கால மக்கள் ஏற்றிப் போற்றத்தக்கவகையில் அன்றே பல்வேறு சமயச் சார்புள்ளவர்கள் சகிப்புணர்வை யும் ஒற்றுமையையும் ஒருங்குணர்வையும் வெறும் சொல்லால் அல்ல, எழுத்து வடிவிலான சட்டம் மூலம் நிலை நாட்டிய பெருமைக்குரியவராகத் திகழ்கிறார்.

**சமயப் பாதுகாப்பு மட்டுமல்ல**
**சமூகப் பாதுகாப்பும்**

மதீனா நகர அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சம் அங்குள்ள பல்வேறு சமய சமூகத்த வரிடையே சமூகப் பாதுகாப்பை உருவாக்கியதாகும்.

ஏதேனும் ஒரு சமூகத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் பொருளாதார பாதிப்புக்கு ஆளானால் அச்சமயத்தை அல்லது சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் பாதிக்கப் பட்ட வரை பொருளாதார முட்டுப்பாட்டினின்றும் காப்பாற்று வது கடமையாகும் எனச் சட்டவிதி கூறியது. இதற்கிணங்க ஒவ்வொரு சமயச் சார்புள்ள சமூகத்தவரும் பாதிப்புக்கு ஆளான மற்றவர்க்கு உதவலாயினர். இதனால் யாரும் பொரு ளாதாரக் காரணங்களால் பாதிக்கப்பட்டு. வேதனையுறும் நிலை இல்லாதாக்கப்பட்டது. ஏனெனில், ஒருவருக்கு ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினையை தொடர்புடைய அனைவரும் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினையாகக் கருதி ஒருங்கிணைந்து உதவ முன் வந்தனர்.

இன்று ஐரோப்பிய நாடுகளில் உருவாகி செயல்பட்டு வரும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் அன்றைய மதீனா அரசமைப்புச் சட்டத்தின் எதிரொலியாக உருவாக்கப்பட்ட திட்டமே எனக் கூறினும் பொருந்தும். வேலையில்லாத அல்லது வேலை செய்து சம்பாதிக்க இயலாத யாரேனும் ஒருவர் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு, முட்டுப்பாட்டுக்கு ஆளானால் அவருக்கு அரசே உதவித் தொகையாக நிதியுதவி வழங்கிக் காப்பாற்றுகிறது. இதன் மூலம் சமூக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்கட்கு உதவி துயர் துடைக்கப்படுகிறது.

## எண்ணிக்கை பேதமில்லை

மதீனா நகர அரசமைப்புச் சட்டம் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற எண்ணிக்கை பேதம் கடந்த ஒன்றாக, ஆழ்ந்த சமய சகிப்புணர்வுடன், சமூக விழிப்புணர்வோடு மக்களுக்கு எல்லா வகையிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கி ·நல்லதோர் நகரச் சமுதாயமாக மலர்ந்திருந்தது.

ஒவ்வொரு சமயத்தவரும் மாறுபாடு அல்லது வேறுபாட்டுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் சமயச் சகிப்புணர்வுடன், தங்கள் தங்கள் சமய அடிப்படையில் முழுச் சுதந்திரத்துடன் வாழ்ந்தனர். தங்கள் மத நம்பிக்கை யின்படி வாழவும் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் வழியேற்பட்டது.

இவ்வாறு, உலகம் என்றென்றும் பின்பற்றி ஒழுகத் தக்க ஓர் உன்னத அரசமைப்புச் சட்டத்தை, முன் மாதிரி சட்ட வரைவைத் தந்து வரலாறு படைத்த பெருமை பெருமானார் அவர்களையே சாரும்.

## முஸ்லிம், முஸ்லிமல்லாதாரின் மனத்தை வருத்தக் கூடாது

ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாதாரின் மனத்தை எக்காரணம் கொண்டும் வருத்திவிடக் கூடாது என்பது இஸ்லாமியக் கொள்கை, கோட்பாடுகள் மட்டுமின்றி பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் நமக்கு உணர்த்தி வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைந்துள்ள ஹதீஸ்கள், இன்றும் இதை நமக்கு எடுத்துக்கூறி விளக்கி வருகின்றன.

அலி(ரலி) அவர்கள் எப்போதுமே இஸ்லாமிய உணர்ச்சி மிக்கவர்; துடிப்புமிக்க முஸ்லிமாவார். ஒரு சமயம் சாலை வழியே நடந்து சென்றார். சிறிது தொலைவில் இவருக்கு முன்னதாக யூத சமயத்தைச் சேர்ந்த யூதர் ஒருவர் நடந்து சென்று கொண்டிருந்தார். ஒரு யூதருக்குப் பின்னால் அவரைப் பின்தொடர்ந்து செல்பவராக சாலையில் பின்னால் நடக்க விரும்பாமல் விரைந்து நடந்து, அவரை முந்திச் செல்ல முனைந்து தன் நடையை விரைவு படுத்தினார். தான் விரும்பியவாறே யூதரைக் கடந்து அவருக்கு முன்னால் செல்பவராக முந்திச் சென்றார். வேகமாக நடந்து வந்ததால் மூச்சு இரைக்க பெருமானார் முன்வந்து நின்றார், தன்முன் அலியார் மூச்சு இரைக்க வந்து நின்ற காரணத்தை அலியார் மூலமே கேட்டறிந்த அண்ணலார் மிகவும் மன வருத்தமடைந்தார். அலியாரின் செயல் பெருமானாருக்கு வேதனையளித்தது. மாற்றுச் சமயமான யூத சமயத்தவர் என்ற வெறுப்புணர்வால் அவரைப் பின்னுக்குத் தள்ளி முன்னேவர முனைந்த செயல் தவறானது. இதனால் அந்த யூதர் மனம் வேதனைப் பட்டிருக்கலாம். எனவே, அவரிடம் உடனே அலி (ரலி) சென்று, தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுவர வேண்டும் எனப் பணித்தார். அண்ணலாரின்

கட்டளைக் கிணங்க அலி (ரலி) அவர்களும் அந்த யூதரிடம் சென்று மன்னிப்புக் கோரி மீண்டார். (ஆதாரம்: நிகாதே ஸர்மதீ பக். 46)

இவ்வாறு பிற சமயத்தவர்களிடம் நேரடியாகவோ மறை முகமாகவோ அவர்கள் மனம் புண்படும்படி அல்லது வருந்தும்படி நடந்து கொள்ள முயலக் கூடாது என்பதை அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களும் அவர்கள் போதித்த சத்திய மார்க்கமான இஸ்லாமும் உத்தமமான உயர் பண்பை இன்னும் போதித்து வருவதை அறிய உள்ளம் இரும்பூதெய்துகிறது.

## இஸ்லாமிய ஆட்சியில் பிற சமயத்தவர்

பரந்த அரபுப் பகுதி பெருமானாரின் தலைமையின் கீழ் வந்த பின்னரும் இதே அடிப்படையிலேயே இஸ்லாமிய ஆட்சியும் சமுதாயப் போக்கும் வலுவுடன் அமைவ தாயிற்று என்பதை இன்றும் இஸ்லாமிய வரலாறு உணர்த்திக் கொண்டுள்ளது.

நபிகள் நாயகம் (சல்) அவர்களின் காலத்திலும் அவருக்குப் பிறகும் இஸ்லாமிய ஆட்சி வெகு வேகமாகப் பரவியது. அண்ணலாரின் மறைவுக்குப் பிறகு பதினைந்து ஆண்டுகளுக்குள் இஸ்லாமிய ஆட்சி ஆசியா, ஐரோப்பா, ஆஃப்ரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் பரந்து விரிந்து நிலைபெற்றது. இஸ்லாமிய ஆட்சி விரிவாக்கத்தின்போது மக்களிடையே பெரும் எதிர்ப்போ கலகமோ இல்லை என்பது வியப்பளிக்கும் செய்தியாகும். இதைப்பற்றி பெல்ஜியப் பேராசிரியர் லாமென்ஸ் கூறும்போது, "அபூபக்ரின் படை சிரியாவை ஆக்கிரமித்தபோது மக்களிட மிருந்து எவ்வித எதிர்ப்பும் ஏற்படவில்லை. எதிர்ப்பில்லா வெற்றியாகவே அமைந்தது. அது மட்டுமல்ல, அபூபக்ரும் அவரது படையினரும் நாட்டின்மீது படையெடுத்து

வந்தபோது அந்நாட்டின் குடிமக்களான கிருஸ்தவர்கள் படையெடுப்பாளர்களை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்ற தாக டச்சு வரலாற்றுப் பேராசிரியர் தெ கொயெஜி குறிப்பிடுகிறார்.

**கிருஸ்தவ ஆட்சியில் இல்லா**
**மதச் சுதந்திரம் இஸ்லாமிய ஆட்சியில்**

நான்காவது கலீஃபாவான அலி (ரலி) அவர்களின் ஆட்சியின்போது பைஸாந்தியப் பகுதி முழுமையும் வெற்றி கொள்ளப்பட்டிருந்தது. அப்போது அங்கிருந்த முஸ்லிம் களிடையே உள்நாட்டுப் போர்ச் சூழல் உருவாகியது. இந்த அரிய வாய்பைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டு இழந்த பகுதியை மீண்டும் பெற்றுவிட விரும்பிய கிருஸ்தவப் பேரரசர் இரண்டாம் கான்ஸ்டான்ட் இஸ்லாமியப் பகுதியிலிருந்த கிருஸ்தவர்களுக்கு ஒரு இரகசியச் செய்தியை அனுப்பினார். அதில் "இப்போது ஒரு அரிய வாய்ப்பு உருவாகியுள்ளது. உங்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுங்கள். அதே சமயத்தில் நானும் என்னுடைய படையை உங்களுக்குத் துணையாக அனுப்பி வைப்பேன். நாம் நம்முடைய பொது எதிரியாகிய முஸ்லிம்களை விரட்டியடித்து நாட்டைவிட்டே வெளியேற்றி விடலாம்" எனப் பேரரசர் கூறியிருந்தார். இக் கடிதத்தை பெற்ற பைஸாந்திய கிருஸ்தவர்கள் "உங்களுக்கு வேண்டுமானால் அவர்கள் (முஸ்லிம்கள்) நம் சமய விரோதிகளாகப் படலாம் ஆனால், முஸ்லிம்களின் ஆட்சியின்கீழ் வாழும் கிருஸ்த வர்களாகிய நாங்கள் ஒரு கிருஸ்தவ ஆட்சியின்கீழ் பெற முடியாத முழுமையான மதச் சுதந்திரத்தோடு வாழ்கிறோம். முஸ்லிம்களுக்கிடையே மோதல் இருந்தபோதிலும், அதனால், கிருஸ்தவர்களின் மதச் சுதந்திரம், மகிழ்ச்சியான வாழ்வு எந்த விதத்திலும் பாதிக்கப் படவில்லை. எனவே,

உங்களுக்கு ஆதரவளிப் பதன் மூலம் கிருஸ்தவ சமயச் சுதந்திரத்தையோ எங்களது நிம்மதியையோ கெடுத்துக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை," எனப் பதிலளித்தனர் என்பது வரலாற்றுச் செய்தி.

## மாலிக் கபூர் படைக்கெதிராக தமிழ் முஸ்லிம்கள்

இதே போன்ற ஒரு நிகழ்ச்சி நம் தமிழகத்திலும் நடைபெற்ற வரலாற்றுச் சான்று இன்றும் கட்டியங்கூறிக் கொண்டுள்ளது.

தமிழகம் வந்த முஸ்லிம்கள் தங்கள் வாழ்க்கை நெறியாலும் வாழும் முறையாலும் மக்களின் நம்பிக்கையை மட்டுமல்ல நாடாளும் மன்னர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகவும் விளங்கினர். இதன் விளைவாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் போர்ப் படையில் அங்கம் பெற்றிருந்தனர். மைசூரை ஆண்டுவந்த ஹொய்சாள மன்னன் வீர வல்லாளனிடம் அறுபதினாயிரம் முஸ்லிம் வீரர்கள் அவன் போர்ப்படையில் போர்வீரர்களாகப் பணியாற்றி வந்தனர் என இப்னு பதூதா குறிப்பிட்டுள்ளார்.

போர்ப் படையில் மட்டுமல்ல, நாட்டு நிர்வாகத்திலும் முக்கியப் பொறுப்புகளில் முஸ்லிம்கள் அங்கம் பெற்றிருந்தனர். பாண்டிய நாட்டை ஆண்டு வந்த ஜாதவர்மன் சுந்தர பாண்டியனின் தலைமையமைச்சராக சையத் தகிய்யுத்தீன் என்பவர் பணியாற்றி வந்தார். போர்ப்படையின் தலைமைப் பொறுப்பும் அவரிடமே இருந்து வந்தது. இவருடைய சகோதரர் சையித் ஜமாலுத்தீன் என்பவர் போர்த் தளபதியாக இலங்கை மன்னன் பராக்கிரமபாகு மீது படையெடுத்துச் சென்ற படைக்குத் தலைமை தாங்கிச் சென்ற பெருமைக்குரியவர். சீனமன்னன் குப்ளாய் கானின் அரசவையின் பாண்டிய நாட்டின் தூதுவராக அமர்ந்து பணியாற்றியுள்ளார்.

இக் காலகட்டத்தில் அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தான்.

பாண்டிய நாட்டைப் பொறுத்தவரை தலைமை யமைச்சர் ஒரு முஸ்லிம் படைத் தளபதி மட்டுமல்ல, படை வீரர்களில் பல்லாயிரவர் முஸ்லிம்கள் என்ற நப்பாசையில் இப்படையெடுப்பை மேற்கொள்ள விழைந்தான்.

இவ்வுணர்வின் அடிப்படையில் சையித் தகிய்யுத் தீனுக்கு ஒரு இரகசியக் கடிதம் அனுப்பினான் மாலிக்கபூர். அதில், தாம் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையைத் தாக்கப் போவதாகவும் அதில் முஸ்லிம் என்ற முறையில் போரிடாமல் முஸ்லிம் வீரர்களோடு ஒதுங்கியிருக்கு மாறும் வேண்டி கடிதம் அனுப்பியிருந்தான். இதைப் பெற்று, கடுங்கோபம் கொண்ட சையித் தகிய்யுத்தீன் உடனே மறுமொழியாக, “நாங்கள் பாண்டிய நாட்டின் குடிமக்கள். இந்நாட்டு உப்பைத் தின்று வளர்ந்த நாங்கள் எக்காரணம் கொண்டும் இம்மண்ணுக்குக் கடுகளவும் துரோகமிழைக்க மாட்டோம். நாங்கள் உங்கள் படையைப் போர்க் களத்தில் சந்திக்கத் தயாராக உள்ளோம்” என்று சூளுரைத்துக் கடிதம் எழுதியதோடு படையெடுத்து வந்த மாலிக்கபூரின் படையை எதிர்த்து உக்கிரமாகப் போர்புரிந்தனர் முஸ்லிம்கள் என்பது வரலாறு.

இவ்வாறு முஸ்லிம்கள் எந்த மண்ணில் வாழ்கிறார் களோ அந்த மண்ணுக்கு நன்றியுள்ளவர்களாக, அங்கு ஏற்படும் வெற்றி தோல்விகளைத் தங்கள் வெற்றி தோல்விகளாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பது தான் வரலாற்றுச் செய்தி.

### அழிக்கத் தூண்டிய உட்குழுப் பூசல்

பைஸாந்தியப் பேரரசு ஆட்சியானது கிருஸ்தவ ஆட்சியாயினும் சமய உட்குழுப் பற்றுடையவர்களின்

ஆட்சியாகவே நடந்து வந்தது. ஆகவே ஆளும் பேரரசர் கிருஸ்தவ சமயத்தின் எப்பிரிவைச் சார்ந்துள்ளாரோ அதைத் தவிர அதே கிருஸ்தவ மதத்தின் பிற பிரிவுகளைச் சார்ந்தவர் களுக்கு எதிரான முறையிலேயே செயல்பட்டு வந்தனர். தங்கட்கு மாறுபட்ட, மாற்றுப் பிரிவைச் சார்ந்த கிருஸ்தவர் களை அழித்தொழிக்கவும் தயங்கவில்லை என்றால் மாற்றுச் சமயத்தவர்களின் நிலை எத்தகையது என்பதைப் பற்றிக் கூற வேண்டியதில்லை.

இதற்கு அன்றையச் சூழ்நிலையில் கிருஸ்தவ ஆட்சி யாளர்களிடையே மாறி மாறி ஏற்பட்டு வந்த கிருஸ்தவ சிலை வணக்கப் பிரச்சினையும் ஒரு முக்கிய காரணமாகும். இதற்கான பின்னணியை வரலாற்று அடிப்படையில் அறிவது அவசியம்.

### உருவ வழிபாடு கற்பித்த கிரேக்கர்

உலகிலேயே உருவ வழிபாட்டிற்கு ஊற்றுக்கண்களாக விளங்கியவர்கள் கிரேக்கர்கள் என வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன்னரே தங்கள் நாட்டின் மாமேதைகளுக்கும் வீரர்களுக்கும் தியாகிகளுக் கும் உருவம் அமைத்து அவர்களின் நினைவை என்றென் றும் போற்றிக் காக்க முனைந்தார்கள். நாளடைவில் இவ்வறிஞர், வீரர் சிலைகளை வணக்கத்திற்குரியவைகளாக மாற்றி வணங்கத் தொடங்கினர். இம்முறையை அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் பரப்பினர் எனக் கூறப்படுகிறது.

கிரேக்கர் என்றைக்கு இந்தியாவின் சிந்துச் சமவெளி யில் கால் பதித்தார்களோ அப்போதே அப்பகுதியில் குடியேறி வாழ்ந்து வந்த ஆரியர்கட்கு உருவ வழிபாட்டு முறையைக் கற்றுக் கொடுக்கலாயினர். பின்னர் ஆரியர்கள் எங்கெல்லாம் பரவினார்களோ அங்கெல்லாம் உருவ

வழிபாடும் பரவலாயிற்று. இதுதான் இந்தியாவில் உருவ வழிபாடு தோன்றிய வரலாறு என சில வரலாற்றாசிரியர்கள் ஆராய்து கூறியுள்ள னர்.

கிருஸ்தவ சமயமும் உருவ வழிபாடும்

யூத சமயம் இறைவனுக்கு உருவம் அமைப்பது அறவே கூடாது எனக் கூறியது. உருவ வழிபாட்டுப் பழக்க முள்ள கிரேக்கர்கள் யூத சமயத்தில் புதிதாக இணைத்தாலும் மற்ற யூதர்கள் அவர்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளாது எண்ணெயும் தண்ணீரும் போலவே பட்டும் படாமலும் வைத்திருந்தார்கள். இன்னும் சொல்லப் போனால் கிரேக்க யூதர்களை மற்ற யூதர்கள் ஒருவகையில் வெறுத்து வந்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கிருஸ்தவ சமயம் தோன்றிய பின்னர் கிரேக்கர்கள் பெருமளவில் கிருஸ்தவத்தில் இணைந்தனர். கிரேக்க யூதர்களும் கிருஸ்தவத்தில் சேர்ந்தனர். புதிய கிரேக்க கிருஸ்தவர் தங்கள் கிரேக்கப் பண்பாட்டிற்கொப்ப கிருஸ்த சமயத்திலும் உருவ வழிபாட்டை நுழைக்கலாயினர். தங்கள் முன்னோர்களை சிலை வடிவில் வணங்கி வந்த கிரேக்கர்கள் கிருஸ்தவத்தில் இணைந்த பிறகு இயேசு கிருஸ்துவுக்கும் அவர் தாயார் மரியத்திற்கும் சிலை வடித்து வணங்கத் தொடங்கினர். புதிதாகத் தங்கள் சமயத்திற்கு வந்து இயேசுவையும் மரியாவையும் சிலை வடிவில் வணங்கிக் கௌரவிப்பதாகக் கருதிய பாதிரிகளும் வாளாவிருந்து விட்டனர். இதனால் காலப்போக்கில் கிருஸ்தவ சிலை வணக்கமுறை அழுத்தமடைய்லாயிற்று. கி.பி.3ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் மன்னர் சர்ச்சுகளில் சிலை வணக்க முறையை ஆதரித்து ஆணை பிறப்பித்தார். கி.பி 754இல் 3வது லியோ மன்னன் சிலை வணக்க முறையை கடுமையாகத் தடை செய்தார். கி.பி 787இல் 6வது கான்ஸ்டன்டைனின் தாயாரான கிரேக்க,

வம்சத்தைச் சேர்ந்த ஐரீனி எனும் அரசி அரசு அதிகாரத்தை ஏற்றவுடன் கிருஸ்தவக் கோயில்களில் மீண்டும் சிலை வணக்க முறையைக் கொண்டு வந்தார். கி.பி.833இல் கான்ஸ்டாண்டிநோபிளின் டியூவேல்ஸ் மன்னர் சர்ச்சுகளில் சிலை வடிவிலோ படவடிவிலோ வணக்கமுறை அறவே இருக்கக் கூடாதென கடுமையாகக் கட்டளை பிறப்பித்தார். இவருக்குப்பின் விக்கிரக வணக்க நம்பிக்கையாளரான இவர் மனைவி கி.பி 841 பிப்ரவரி 18 ஆம் நாள் 'சிலை வணக்க முறையை எதிர்ப்போர் மத விரோதிகளாவர்' என அறிவித்து சிலை வணக்கமுறையை மீண்டும் கொண்டு வந்தார். சிலை வணக்கமுறையை எதிர்த்த, ஆதரித்த அரசர்களும் அரசிகளும் ஒவ்வொரு முறையும் கிருஸ்தவ பாதிரியார்களின் சபையைக் கூட்டியே முடிவெடுத்துச் செயல்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ்வாறு மாறி மாறி ஏற்பட்டு வந்த சிலை வணக்கம் பிரச்சினை மக்களின் வாழ்வை வெகுவாக அலைக் கழித்ததை வரலாறு பதிவு செய்துள்ளது.

**சிலை வணக்க மாதா கோயில் இடிப்பு**

பைஸாந்தியப் பகுதியை முஸ்லிம்கள் கைப்பற்று வதற்கு முன்னதாக அப்பகுதியை பேரரசர் லியோ இஸுரியன் என்பவர் ஆண்டு வந்தார். இவர் கிருஸ்தவ சமயத்தைச் சார்ந்தவராயினும் அதில் சிலை வணக்க முறையை ஏற்காத கிருஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவர். மாதா கோயில்களில் சிலை வணக்கம் செய்யும் கிருஸ்தவர்களைக் கடுமையாகத் தண்டித்தும் வந்தார். தன் கட்டளைக்கு இணங்காது, ஏதாவது மாதா கோயிலில் சிலை வணக்கம் நடைபெற்றால் அம்மாதா கோயிலையே இடித்து விடுவார். இதற்காக நாடெங்கும் தன் படையை அனுப்பி கிருஸ்தவர் களின் வழிபாட்டு முறையைக் கடுமையாகக் கண்காணித்து

வரச் செய்தார். அதோடு, சிலை வணக்க மாதா கோயில் களை இடித்துத் தரை மட்டமாக்கி வந்தது பேரரசன் லியோ இஸுரியன் சிலைவணக்க எதிர்ப்புக் கிருஸ்தவப் படை. இப்படை நாடெங்கும் தன் கைவரிசையைக் காட்டி இறுதியாக மௌன்ட் சினாய் பகுதியை அடைந்தது.

அங்கே ஒரு கிறிஸ்தவ மடாலயம் இருந்தது. அங்கே இருந்த கிருஸ்தவர்கள் சிலை வணக்கப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அம்மடாலயத்தில் தங்கி இருந்த கிருஸ்தவத் துறவிகள் தங்கள் விருப்பம் போல் சமயச் சடங்குகளைச் செய்து, சிலை வணக்கமாக ஏசுவையும் மாதாவையும் மற்ற தெய்வங்களையும் வழிபட்டு வந்தார்கள்.

ஆனால், அந்த மௌன்ட் சினாய் பகுதி அப்போது உமையா கலீஃபாக்களின் ஆட்சிப் பகுதியாக அமைந்திருந் தது. முஸ்லிம்களின் ஆட்சிப் பகுதியின் எல்லையில் சிலை வணக்கத்தலமாக அமைந்திருந்த அம்மாதாகோயில் மடால யத்தை பேரரசர் லியோ இஸுரியனின் படைகள் தாக்கி அழிக்க முயன்றபோது, முஸ்லிம் படை வீரர்கள் அவர்களை அடித்து விரட்டி, மாதாகோயிலைக் காத்தனர். அது மட்டுமல்லாது, இஸ்லாமிய ஆட்சியின் எல்லைப் பகுதிக்குள் மாதா கோயில் மடாலயம் அமைந்திருப்பதால் பைஸாந்தியப் போர் வீரர்களால் அம்மடாலயத்திற்கு ஏதேனும் ஊறுபாடு நேரலாம் என்று அஞ்சிய முஸ்லிம் ஆட்சியினர் அம்மடாலயத்திற்கு முழுமையான பாதுகாப்பு அளித்துக் காத்தனர். இதன் மூலம் அக்கிருஸ்தவ மடாலயம் அழிவினின்றும் முழுமையாகக் காப்பாற்றப்பட்டதோடு, அஃது என்றும் போல் அமைதியாகச் செயல்பட அரண் போலமைந்து பாதுகாப்பளித்தனர் என்பது வரலாறு தரும் அரிய செய்தியாகும்.

இச்சம்பவத்தின் மூலம் நாம் இஸ்லாமிய நெறி, சமுதாயப் போக்குபற்றிய ஒரு மகத்தான உண்மையைத் தெளிவாக அறிந்துணர முடிகிறது. பைஸாந்தியப் பேரரசர்கள் தங்கள் சமயப் பிரிவை அடிக்கடி மாற்றிக் கொண்டார்கள். எண்ணிய போதெல்லாம் தன் மேனி வண்ணத்தை மாற்றிக் கொள்ளும் 'பச்சோந்தி'யைப் போல் மாறிவரும் சூழலுக்கேற்ப தம் சமயப் பிரிவை ஏற்றுப் பேணுவதுபோல் தன் குடிமக்கள் அனைவரும் ஏற்று நடக்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதும் மறுப்பவர் களைக் கடுமையாகத் தண்டிப்பதும் அவர்தம் போக்காக அமைந்து வந்தது. இதனால், மக்கள் தங்கள் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப சமயச் சார்புடையவர்களாக இருப்பதைவிட பைஸாந்தியப் பேரரசர்களின் போக்குக் கேற்ப செயல்படுவதையே தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கு மாறுபட்ட கிருஸ்தவர் தன் கை, கால், காது, மூக்கு என அவயவங்களை இழக்க வேண்டும். சில சமயம் உயிரையும் இழக்க வேண்டும்.

அதே சமயத்தில் இஸ்லாமிய மார்க்கத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் மாற்றுச் சமயத்தைச் சார்ந்த பிற சமயத்தவர் கள் முழுச் சுதந்திரத்தோடு, தங்கள் சமயத்தைப் பின்பற்ற, வழிபாடு செய்ய, சமயச் சடங்குகளை நிறைவேற்ற முழுமையாக அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மதச்சம் பிரதாயங்களில் நம்பிக்கைகளில் தலையிடவோ அவற்றைப் பற்றி விமர்சிக்கவோ திருமறையாகிய திருக்குர்ஆனும் பெருமானார் வாழ்வையும் வாக்கையும் விளக்கும் 'ஹதீஸ்' களும் அனுமதிக்காததால் கிருஸ்தவர்களும் பிற சமயத்த வர்களும் முழுச் சுதந்திர உணர்வோடும் சுமுகமான சமுதாயச் சூழலோடும் தத்தமது சமய நெறிகளைப் பேணி நடக்க முடிந்தது.

## மாதா கோயில் சிலை காத்த முஸ்லிம்கள்

இஸ்லாமிய நெறிப்படி இறைவனுக்கு இணை வைப்பதை அறவே ஏற்காததோடு, அதைப் பெரிதும் வெறுப்பவர்கள் முஸ்லிம்கள். சிலை வணக்கத்தைக் கடுகளவும் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க மாட்டார்கள். ஆயினும் பிற சமயத்தவர் நம்பிக்கையை மதிப்பவர்கள். அதற்கு ஊறுபாடாக ஒருபோதும் இருக்கக் கூடாது என்பதே திருமறையாம் திருக்குர்ஆன் உணர்த்தும் உணர்வாகும்.

'அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகின்றார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்.' *(6:108)* எனப் பணிக்கிறது இஸ்லாம்.

இதன் மூலம் பிறசமயத்தவர்களின் வணக்கத் தலங்கள், அவர்கள் போற்றும் வேதங்கள், அவர்கள் மேற்கொண்டொழுகும் சமயச் சடங்குகள் ஆகிய அனைத்தையும் மதிக்க வேண்டும் என இஸ்லாம் உணர்த்துகிறது.

இதற்கேற்ற எத்தனையோ எடுத்துக் காட்டுகள் அண்ணலார் வாழ்க்கையிலும் அவர்தம் வாழ்வையும் வாக்கையும் வழுவாது பின்பற்றிய கலீஃபாக்களின் வரலாற்று நெடுகிலும் காண முடிகிறது.

பைஸாந்தியப் பேரரசன் லியோ இஸுரியனைவிட தீவிரமாக சிலை வணக்க முறையை ஏற்காதவர்கள் மட்டுமல்ல. கடுமையாக எதிர்ப்பவர்கள் முஸ்லிம்கள். அவர்கள் நினைத்திருந்தால், இஸ்லாம் மார்க்கம் அனுமதித்திருந்தால் இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி சிலை வணக்கத்தலமான அம்மடாலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கியிருக்கலாம். ஆனால் இத்தகு செயலை, வழிமுறையை இஸ்லாம் ஏற்காத காரணத்தால் முஸ்லிம்கள் அந்த இழி செயலில்

ஈடுபடவில்லை. சிலை வணக்கத்தார் எப்போதாவது தாங்களாக உணர்ந்து, தெளிந்து, மனம் மாறி சிலை வணக்க முறையைக் கைவிடும் வரை இஸ்லாம் பொறுமையாக இருப்பதோடு அவர்களின் சிலை வணக்க வழிபாட்டு முறையை எதிர்த்து, அவர்கள் நம்பிக்கையை ஊறுபடுத்தும் முறையில் தீங்காகப் பேசவும் மாட்டார்கள் என்ற திருமறை வழிமுறையைக் கடைப்பிடித்ததன் மூலம் அம்மடாலயம் அழிவினின்றும் முழுமையாகக் காப்பாற்றப்பட்டது.

முஸ்லிம்களின் பெருந்தன்மையான போக்கும் மாற்றுச் சமயத்தவரை மதிக்கும் தகைமையும் அம்மடாலயத் துறவிகளின் மனதில் மாபெரும் மதிப்பை ஏற்படுத்தியது. தங்களின் நன்றியுணர்வை வெளிப்படுத்தக் கருதிய மடாலயக் கிருத்துவத் துறவிகள் தங்கள் மடாலய வளாகத்திலேயே ஒரு மசூதி கட்டிக்கொள்ள அனுமதித்தார் கள் என்றால் பிற சமயத்தவர்களை முஸ்லிம்கள் எந்த அளவுக்கு மதித்து நடந்தார்கள் என்பதற்கு இச்சம்பவம் இணையற்ற எடுத்துக்காட்டாக வரலாற்றில் மணம் பரப்பிக் கொண்டுள்ளது.

## முஸ்லிம்களுக்கு என்ன தீர்வோ
## அதுவே மாற்றுச் சமயத்தவர்கட்கும்

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மறைவெய்திய பின், அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தலைமைப் பொறுப்பேற்றார்கள். சின்னாட்களுக்குப் பின் நாட்டின் எல்லைப் பகுதியிலிருந்து ஆளுநர் ஒருவர் கலீஃபாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் வேற்றுச் சமயத்தைச் சார்ந்த சில வெளிநாட்டு வணிகர்கள் வியாபாரத்தின் பொருட்டு நம் நாட்டிற்குள் வணிகம் செய்ய வர விரும்புகிறார்கள். அவர்களிடமிருந்து எவ்வகையில் 'சுங்கத் தீர்வை' வசூலிப்பது என்பதற்கு வழி கூறுமாறு வேண்டியிருந்தார். அதற்கு, "அவர்கள் நாட்டிற்குள் நுழையும் முஸ்லிம்

வியாபாரிகளிடமிருந்து என்ன சுங்கத்தீர்வை வசூலிக்கிறார்களோ அதே தீர்வைதான். நாட்டிற்குள் நுழையும் பிற நாட்டு, பிற சமய வணிகர்களிடமிருந்தும் வசூலிக்கப்பட வேண்டும்" எனப் பதில் அளித்தார் கலீஃபா.

இதே முறையில்தான் பாரசீகத்திலிருந்து வருபவர்களிடமிருந்தும் சீனாவிலிருந்து வரும் வணிகர்களிடமிருந்தும் சுங்கத்தீர்வை வசூலிக்கப்பட்டது.

ஏதாவது ஒரு நாட்டிற்குள் நுழையும் முஸ்லிம் வணிகர்களிடமிருந்து அந்நாட்டினர் சுங்கத் தீர்வை வசூலிக்கவில்லையெனில், அந்நாட்டவர் இஸ்லாமிய நாட்டினுள் வணிகத்திற்காக நுழையும்போது அவர்களிடமிருந்து சுங்கத் தீர்வை எதுவும் வசூலிக்கப்படுவது இல்லை.

இவ்வாறு பிற சமயத்தைச் சார்ந்த வெளிநாட்டு வணிகர்களுக்கென தனி சுங்கத் தீர்வை எதையும் வசூலிப்பது இஸ்லாமிய அரசின் நோக்கமாக இருக்கவில்லை. அது மட்டுமன்று, எந்த வேற்றுநாட்டிலாவது பெண்கள் பயன்படுத்தும் பொருட்களின்மீது சுங்கத் தீர்வை வசூலிக்கப்படாத நிலையில், அப்பெண்களின் பொருட்களுக்கு முஸ்லிம்களின் இஸ்லாமிய நாட்டில் சுங்கத் தீர்வை வசூலிக்கப்படுவதில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும்.

இதற்காகப் பெண் தொடர்பான எல்லா விஷயங்களுமே இஸ்லாமிய ஆட்சியினரால் அப்படியே பின்பற்றப்பட்டன என்பதில்லை. சான்றாக, எகிப்து நாட்டை முஸ்லிம்கள் வெற்றி கொள்வதற்குமுன் நைல் நதிப் பெருக்கெடுக்கவில்லையென்றால் ஒரு அழகிய பெண்ணை, நன்கு அலங்கரித்து நைல் நதியில் தள்ளி மூழ்கடிப்பார்கள். பெண்ணைப் பரிசாகப் பெற்ற நைல் நதிக் கடவுள் மகிழ்ந்து பொங்கியெழும் என்பது அவர்தம் நம்பிக்கையாக இருந்தது.

முஸ்லிம்கள் எகிப்தை வெற்றி கொண்ட பின்னர் நைல் நதி வற்றிக் கொண்டே வந்தது. பழங்கால நம்பிக்கையில் மூழ்கியிருந்த எகிப்திய பெரியவர்கள் சிலர் எகிப்தின் இஸ்லாமிய ஆளுநரான அமீர் இப்னு அல்-அஸ் என்பவரிடம் தங்கள் வழக்கப்படி, தங்கள் மத அனுஷ்டானப்படி அலங்கரிக்கப்பட்ட அழகிய பெண்ணை நைல் நதிக் கடவுளுக்குப் பரிசளிப்பதன் மூலம் மீண்டும் நைல் நதியில் வெள்ளப் பெருக்கெடுக்க வழி செய்யுமாறு வேண்டி கடிதம் எழுதினார். இதற்கு ஆளுநர், நைல் நதி முகவரிகளோடு கூடிய கடிதமொன்றை அவர்கட்கு அனுப்பினார்; அதில் 'நைல் நதியே! உன் விருப்பப்படி பெருக்கெடுத்தால், நாங்கள் உன்னை வேண்டத் தேவையில்லை; அவ்வாறின்றி இறைவன் உன்னைப் பொங்கியெழச் செய்வதாயின், அவ்வாறே நிகழ நான் இறைவனை இறைஞ்சுகிறேன்' என இறைவனை வேண்டி கடிதம் எழுதியிருந்ததோடு முன்பு அழகிய பெண்ணை மூழ்கடித்தது போல் நைல் நதியில் அக்கடிதத்தை மூழ்கடித்தார்கள். இறைவனது பேரருளால் நைல் நதி பொங்கியெழுந்தோடியது. அன்று முதல் பெண்ணை நதியில் மூழ்கடிக்கும் மூட நம்பிக்கையும் மறைந்தொழிந்தது.

இவ்வாறு பழைய பழக்க வழக்கங்களில் ஏற்புடையவற்றை ஏற்றும் ஏற்கத் தகாதவற்றை நீக்கியும் செயல்பட்டனர் இஸ்லாமிய ஆட்சியினர்.

### பெண்ணின் நலன் காத்த மற்றொரு சம்பவம்

பெண்ணின் பெருமைக்கும் சிறப்புக்கும் எதிரான பழக்க வழக்கங்கள் எங்கிருந்தாலும் அவற்றை அடியோடு ஒழித்துக் கட்டப்பட்டன என்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்ட முடியுமெனினும் அவற்றில் ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தம் என எண்ணுகிறேன்.

உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்த கால கட்டத்தில் முஸ்லிம்கள் இந்திய மண்ணில் ஆட்சி அமைத்தனர். அப்பகுதியில் வாழ்ந்த இந்துக்களிடையே கணவன் இறந்து விட்டால், அவனுடன் அவன் மனைவி யையும் சேர்த்து எரியூட்டும் 'பெண் உடன்கட்டை ஏறும்' கொடிய பழக்கம் இருந்து வந்தது. மனைவிக்கு முன்ன தாகக் கணவன் இறந்து விட்டால், அவனை எரியூட்டும் சிதையில் அவனது விதவை மனைவி பாய்ந்து கணவனோடு அவளும் எரிந்து இறக்க வேண்டும். மனைவி தானாகத் தீயுட் புக மறுத்தாலும் அவள் கட்டாயமாக உடன் கட்டையேறி கணவனோடு சேர்த்துக் கொல்லப்பட்டு விடுவாள். கணவன் உயிரோடிருக்க மனைவி இறந்து விட்டால், அவன் மனைவியோடு உடன்கட்டை ஏற வேண்டியதில்லை. இரு மனம் ஒன்றிணையும் புனித மிகு திருமணம் இத்தகைய 'உடன்கட்டை ஏறும்' கொடிய பழக்கத்தால் கொச்சைப்படுத்தப்பட்டு வந்தது.

இக்கொடிய பழக்கத்தை அறிந்த இஸ்லாமிய ஆட்சியினர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இக் கொடிய பழக்கத்தை உடனடியாக நிறுத்தி பெண்ணினத் தைக் காத்தனர். ஹிந்துக்களின் நம்பிக்கையின் வாய்ப்பட்ட செயல் என்பதற்காகவும் சமய சகிப்புணர்வோடு முஸ்லிம் கள் வாளாயிருந்து வேடிக்கை பார்க்கவில்லை. நன்மையின் பாற்பட்ட செயல்களின்பால் தங்கள் சமய சகிப்புணர்வைக் காட்டி அந்நற்செயல் மேலும் பரிமளிக்கச் செய்தனர். சமயச் சகிப்புத் தன்மையின் பேரால் முஸ்லிம்கள் தீமைக்குத் துணை போகவில்லை என்பதுதான் வரலாறு புகட்டுகின்ற உண்மை.

முஸ்லிம்கள் எந்த நாட்டிற்குச் சென்றார்களோ அந்த நாட்டில் வழங்கும் சமயக் கொள்கைகளில் அநாவசியமாகத் தலையிடுவதே இல்லை. "அவர்கள் மார்க்கம் அவர்

களுக்கு; உங்கள் மார்க்கம் உங்களுக்கு" என்ற திருமறை வாக்கிற்கொப்ப சமய சகிப்புத் தன்மையோடு நடந்து மாற்றுச் சமயத்தவர்களை மதிப்பர்; மகிழ்வுறுத்துவர்.

அதே சமயம் அச்சமயங்களின் மூலக் கொள்கைக்கு மாறுபாடாகவும் வேறுபாடாகவும், தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப எதையாவது புகுத்தி, சமய ஒழுங்குக்கு, அறவழிப் போக்குக்கு ஊறுபாடாக அமையும் எதையும் நீக்கி, அச்சமயத்தின் மூலக் கொள்கையைக் காக்கவும் அதன்மூலம் சமூக நலத்தைப் பாதுகாக்கவும் முஸ்லிம்கள் தயங்கியதில்லை.

### மத இடைச் செருகல் நீக்கிய கலீஃபா

பாரசீகத்தை கலீஃபா உமர் (ரலி) அவர்கள் வெற்றி கொண்டபோது அந்நாட்டில் ஒருவகை திருமண முறை இருந்தது. ஜொராஸ்டிர சமயத்தைச் சேர்ந்த ஒருவர் தன் நெருங்கிய உறவினரைத் திருமணம் செய்து கொள்ளலாம். அவர் தங்கையாகவோ தன் மகளாகவோ, தன் தாயாராக வோகூட இருக்கலாம். அறுவறுக்கத்தக்க இத்திருமண வழக்கம் சமய அடிப்படையில் புனிதமாகக் கூடக் கருதப்பட்டது. கலீஃபா உமர் (ரலி) அவர்கள் இத்திருமணப் பழக்கத்தை உடனடியாக ஒழிக்கும்படி கட்டளையிட்டார். காரணம் இத்திருமணமுறை ஜொராஸ்டிர சமயத்தின் மூலக்கொள்கை அல்ல; பாரசீக மன்னன் ஒருவன் தன் தங்கையை மணந்து கொள்ள விரும்பி, தன் விருப்பத்தை ஜொராஸ்டிர சமயக் கொள்கையாக ஆக்கி விட்டான். கலீஃபா உமர் (ரலி) அவர்களின் நடவடிக்கை மூலம் இடைக்காலத்தில் இடைச் செறுகலாக ஜொராஸ்டிர சமயத்தில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட கொள்கை நீக்கப்பட்டதன் மூலம் ஜொராஸ்டிர சமயம் தன் தனித்துவத்தைக் காத்துக் கொள்ள முடிந்தது. மற்றபடி

முஸ்லிம் ஆட்சியினர் எக்காரணம் கொண்டும் பிற சமய அடித்தளக் கொள்கைகளை மாற்றவோ திருத்தவோ நீக்கவோ முயன்றார்களில்லை.

## இஸ்லாத்தை முதன்முதல் ஆதரித்த கிருஸ்தவ மன்னர்

இறை அறிவிப்புக்குப்பின் இஸ்லாமிய நெறியைத் தன்னைச் சுற்றிலும் நெருக்கமாக இருந்தவர்களிடையே ரகசியமாக எடுத்துக்கூறி இஸ்லாமிய மார்க்கத்தின்பால் ஈர்த்து வந்ததை அறிந்த குறைஷிகள் அதை எதிர்க்கத் தலைப் பட்டனர். பெருமானாரின் நெருங்கிய உறவினரும் மாபெரும் வீரர்களான ஹம்ஸா (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் குறைஷி களின் குரூர எதிர்ப்பு ணர்வு நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மீது மட்டுமல்லாமல் இஸ்லாத்தை ஏற்றவர்கள் மீதும் திரும்பியது. இதனால் எண்ணற்ற துன்பங்களை விளை விக்கலாயினர், பொறுக்க முடியாத நிலையில் இஸ்லாமிய மார்க்க நெறியை ஏற்ற முஸ்லிம்கள் பக்கத்து நாடுகள் பலவற்றுக்கும் சென்றார்கள். இதன்மூலம் குறைஷிகளிட மிருந்து பாதுகாப்புத் தேடுவதோடு இறைநெறியாகிய இஸ்லாத்தை அப்பகுதி மக்களிடம் எடுத்துக்கூறி விளக்கு வதும் அவர்கள் நோக்கமாக இருந்தது. இத்தகைய இஸ்லாமியப் பிரச்சாரம் மக்கள் முதல் மன்னர்வரை நடைபெற்றது.

மக்காவிலிருந்து அவ்வாறு பாதுகாப்புத் தேடி அபிசீனியா நாடு வந்த முஸ்லிம்கள் இஸ்லாம் பற்றிய செய்திகளை - இறைமொழிகளை - ஈஸா (அலை) அவர்களைப் பற்றியும் மர்யம் பற்றியும் திருமறை கூறும் இறை மொழிகளைக் கேட்ட கிருஸ்தவரான அபிசீனிய அரசர் இஸ்லாத்தைப் பெரிதும் மதிக்கத் தலைப்பட்டதோடு முஸ்லிம்களை ஆதரித்துப் பாதுகாக்கலானார். இவ்வாறு

*இஸ்லாத்தை ஆதரித்த முதல் கிருஸ்தவ மன்னர் என்ற பெருமையைப் பெற்றவர் அபிசீனிய மன்னரே என்பது வரலாறு தரும் செய்தியாகும்.*

மாதா கோயில் மண்டபம் கட்டிய கலீஃபா

*1978ஆம் ஆண்டு அக்டோபர் பதினைந்தாம் நாளன்று ரோம் நகரில் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்தேன். உலகத் கத்தோலிக்கத் தலைமை போப் இருக்கும் வாட்டிகன் நகரம் அங்குதான் உள்ளது. லண்டனிலிருந்து ரோம் வந்த என்னை அழைத்துச் செல்ல வந்திருந்த அருட்தந்தை ஆண்டனி வாட்டிகனைச் சேர்ந்த பாதிரியார். ரோம் விமான தளத்திலிருந்து நகரை நோக்கிக் காரில் சென்று கொண்டிருக்கும்போது பழங்கால மாதா கோயில் ஒன்றைக் காட்டினார். மிகப் பெரும் தூண்களோடு கூடிய மாபெரும் மண்டபத்தைக் கொண்ட மாதா கோயில் அது. சட்டென்று என்னை நோக்கி "இம் மாபெரும் மாதா கோயில் மண்டபத்தைக் கட்டியது யார் தெரியுமா?" எனக் கேட்டவர், என் பதிலுக்குக் காத்திராமல் தொடர்ந்து, "அது உங்களுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்" என்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறி நிறுத்தினார். என் குடும்பத்தவர் கட்டியிருந்தால் கட்டாயம் எனக்குத் தெரிந்திருக்க நியாய முண்டு. ஆனால் என் குடும்பத்திலிருந்து ரோமில் காலடி எடுத்துவைக்கும் முதல் நபரே நான்தான். எனவே, தெரியாது என்பதைப் புலப்படுத்த பக்கவாட்டில் தலையை ஆட்டினேன்.*

*"நீங்கள் ஒரு முஸ்லிம் என்ற முறையில் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய வரலாற்றுச் சிறப்புள்ள செய்தி அது" என்று பூடகமாகக் கூறி என் முகத்தை நோக்கி மர்மப் புன்னகை பூத்தார்.*

இதைக் கேட்டு ஆர்வத் தூண்டலால் உந்தப்பட்ட நான் பொறுமை இழந்தவனாக, 'விவரமாகக் கூறினால் தானே தெரியும்' எனக் கூறி முடிக்குமுன் அவர் கூறினார்.

"அப்போது உமர் (ரலி) ஆட்சி அரபகத்தில் நடந்து வந்தது. உலகெங்கும் இஸ்லாத்தைப் பரப்பவும் அண்டை நாடுகளின் நட்பை, நல்லெண்ணத்தைப் பெறவும் அவரது தூதுவர்கள் எங்கும் சென்றனர். "தாங்கள் யாருக்கும் எச்சமயத்தவர்கட்கும் எதிரானவர்கள் அல்ல; எங்கள் மார்க்கமான இஸ்லாம் எந்த ஒரு சமயத்துக்கும் எதிராக உருவானதல்ல என்பதை உணர்த்தும் வகையில் இம்மாதா கோயிலின் மண்டபத் தூண்கள் பன்னிரண்டும் உருவாக உதவியவர் உமர் (ரலி) என்பது வரலாற்றுச் செய்தி" எனப் பாதிரியார் உருக்கமாக விளக்கியபோது என் கண்கள் பனித்துவிட்டன. எவ்வளவு பரந்த மனப்பான்மையோடும் சகிப்புணர்வோடும் பிற சமயங்களை அணுகியிருக் கிறார்கள். பிற சமயங்களை சகோதர சமயமாகக் கருதும் சமயப் பொறையும் கண்ணோட்டமும் அண்ணலாரின் வழிமுறையாகவும் திருமறை புகட்டும் வாழ்வியல் நெறியாகவும் அமைத்து வழிகாட்டும் தகைமையை நெஞ்சார நினைத்துப் போற்றினேன்.

இந்தியச் சமயங்களில் இஸ்லாமியத் தாக்கம் எத் தகையது என்பதை அறியுமுன் இந்தியக் கலாச்சாரத்தின் தனித் தன்மை எத்தகையது என்பதை அறிவது அவசிய மாகும். அப்போது தான் இந்தியப் பண்பாட்டின் சகிப்புத் தன்மையையும் இஸ்லாத்தின் சமயநல்லிணக்கப் பண்பையும் நாம் உய்த் துணர முடியும்.

**என்றும் உயிர்ப்புடன் விளங்கும்**
**இந்தியக் கலாச்சாரம்**

உலகிலுள்ள மிகப் பழமையான கலாச்சாரப் பண்பாடு

களிலேயே உயிர்ப்புடன் இன்றும் வாழ்ந்து வருவது இந்தியப் பண்பாடேயாகும் என்பது வரலாறு தரும் பேருண்மை யாகும். இந்தியாவைப் போல பழைமையான பண்பாடுகள் பல உண்டு. கிரேக்கக் கலாச்சாரமும் ரோமப் பண்பாடும் எகிப்து நாகரிகமும் இன்றும் நம்மை வியக்க வைப்பவைகளாகவே உள்ளன. ஆனால், அதனை வரலாற்று ஏடுகளிலும் ஆங்காங்குள்ள பழஞ்சின்னங் களிலும் சிதைவுகளிலும் மட்டுமே காணமுடிகிறதே தவிர ஆங்காங்குள்ள மக்களின் வாழ்விலோ சமுதாயப் போக்கிலோ அதன் சாயல்களைக் கூட இன்று காண இயலவில்லை. இவையெல்லாம் சில நூறு ஆண்டுகட்கு முன்பு உருவான புதிய கலாச்சார, நாகரிகப் போக்குகளை ஏற்று முந்திய கலாச்சாரப் போக்குகளை முழுமையாகக் கை விட்டு விட்டன. இன்றையப் போக்குக்கும் அன்றையப் போக்குக்கும் தொடர்பே இல்லாத நிலை உருவாகி யுள்ளதை வரலாறாக மட்டுமே அறிய முடிகிறது.

இந்தியாவை அடுத்துள்ள எல்லா வகையிலும் பழம் பெருமைக்குரிய பெருநாடாக அமைந்திருப்பது சீனா வாகும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலான கலாச்சார, நாகரிகத்தை அண்மைக் காலம்வரை இடையறாது பெற்றிருந்த நாடும் கூட. ஆனால் அண்மைக்கால அரசியல், பொருளாதார, கலாச்சார மாறுதல்களின் விளைவாகப் பழையவற்றை 'கலாச்சாரப் புரட்சி' என்ற பெயரால் அறவே விலக்கி, புதிய போக்கை உருவாக்கிக் கொண்டு விட்டது. அங்கும் பழைமைக்கும் புதுமைக்குமிடையே விரைவாக விரிந்த இடைவெளி ஏற்பட்டு வருகிறது. அவ்வகையில் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன் பழமைச் சிறப்பை இழக்காமல் புதுமைப் போக்குகளையும் இணைத்துக் கொண்டு தன் தனித் தன்மையை இழக்காமல் சிறப்போடு விளங்கி வருவது இந்தியக் கலாச்சாரம்

மட்டுமே என்பது மாபெரும் வரலாற்று உண்மையாகும். இதற்குக் காரணம் என்ன?

**'யார்' என்பதை விட 'என்ன' என்பதே இந்திய பண்பாட்டின் தனித்தன்மை**

இந்தியப் பண்பாட்டின் தனிப்பெரும் சிறப்பு அஃது 'யார்' என்று பார்ப்பதைவிட 'என்ன' என்பதில் மட்டுமே அதிகம் கருத்தூன்றுவதைத் தன் இயல்பாகக் கொண் டிருப்பதுதான். உலகத்துப் பண்பாடுகள் அனைத்துமே இங்கே வந்து சங்கமித்திருக்கின்றன. உலகிலுள்ள சமயங்கள், அவற்றின் தத்துவச் சிந்தனைகள், கொள்கை கோட்பாடுகள் அனைத்துமே இங்கே வந்து தடம் பதிக்கத் தவறவில்லை. அப்போதெல்லாம் அவற்றிலுள்ள நல்லன சிலவற்றை தன் போக்கில் உருமாற்றித் தனதாக்கிக் கொள்ள இந்தியக் கலாச்சாரம் தயங்கியதே இல்லை. இதன் மூலம் காலந்தோறும் மாறி வரும் புதிய போக்குகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதனால்தான் உலகத்துப் பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளின் சாயலை, உலகத்துச் சமயங்களின் அடிப்படைத் தனித்தன்மைகளை யெல்லாம் இந்தியத் தத்துவ, கலாச்சார, பண்பாட்டுக் கூறுகளில் இன்றும் உயிர்ப்புடன் இருந்து வருவதைக் காணமுடிகிறது என வரலாற்று ஆய்வாளர்கள் பெருமை யோடு குறிப்பிடுகிறார்கள்.

**சகிப்புத்தன்மை எனும் தனிப் பெரும் தகைமை**

இவ்வாறு காலந்தோறும் புதுப்புதுச் சிந்தனைகளைத் தன்னுட் கொண்டு புத்துயிர் பெற்றுவரும் பாரதப் பண்பாட் டின் அடித்தளப் பண்பாட்டு கூறாக அமைந்திருப்பது 'சகிப்புத் தன்மை' எனும் தனிப்பெரும் சக்திமிகு பண்பாடா கும். இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சி வரலாறு பல்வேறு

தத்துவ, கலை, பண்பாடுகளின் கலப்பு-இணைப்பு-பிணைப்பு என்பதாகவே உள்ளது. இதனாலேயே பிற நாடுகளின் பழம்பெரும் பண்பாடுகள் தத்துவச் சிந்தனைகள் எல்லாமே இறப்பைத் தன்னுட்கொண்டு மறைந்துவிட்ட போதிலும் இந்தியப் பண்பாடு, கலை, கலாச்சாரம், தத்துவச் சிந்தனைகள் கால வெள்ளத்தை எதிர்த்து இன்றும் ஆற்றலோடு விளங்கி, உலகுமுன் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன என்றால் அதற்குரிய ஆணிவேறாக அமைந்திருப்பது 'சகிப்புத் தன்மை' எனும் தனிப்பெரும் பண்பாடாகும்.

## ஹிந்து மதத்தை மேலை உலகுக்குணர்த்திய அல்புரூனி

அசோகர் தன் தூதர்கள்மூலம் கிழக்காசிய நாடுகளில் புத்த சமயத்தை மட்டும் பரப்பவில்லை; அத் தூதுவர்கள் மூலம் இந்தியத் தத்துவங்களும், கலாச்சார, பண்பாடுகளும் பரப்பப்பட்டன. ஆனால், மேலை நாடுகளில் இந்தியச் சமயங்களை தத்துவ சித்தாந்தங்களை, கலை, கலாச்சார, பண்பாட்டுச் சிறப்புகளை உலகறியச் செய்யும் மூலவராக ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு அமைந்திருந்தவர் அல்புரூனி எனும் முஸ்லிமாவார். "ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு உலகப் பேரறிஞர்களாக விளங்கியவர்கள் இருவர். அவர்கள் அல்புரூனியும் அவிசென்னாவும் ஆவர்" என யுனெஸ்கோ போற்றியுள்ளது. புகழ்பெற்ற வரலாற்று தத்துவ மேதையான அல்புரூனி ஒருமுறையல்ல, பலமுறை இந்தியா வந்து, வேதம் உட்பட இந்தியத் தத்துவச் சிந்தனைகளை மிக நன்றாக உணர்ந்து தெளிந்து, கலை, பண்பாட்டுத் தனித் தன்மைகளை நுணுகி ஆய்ந்து, அவற்றின் சிறப்புகளையெல்லாம் அரபு மொழியில் பெருநூலாக எழுதினார். இவற்றை முஸ்லிம்கள் அறிந்ததோடு நில்லாது இந்நூல் லத்தீன், கிரேக்க மொழிகளில் பெயர்க்கப்பட்டது. பின்னாளில் இவை ஸ்பெயின் நாட்டில் டோலடோ நகரில்

மொழிபெயர்ப்புக்கென்றே உருவாக்கப்பட்டிருந்த பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் முதலான ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்வாறு பல நூறு ஆண்டுகட்கு முன்பே முதன் முதலாக இந்தியத் தத்துவங்களை, ஹிந்து சமயம், கலை, கலாச்சாரத்தை, பாரதப் பண்பாட்டு மேன்மைகளை மேலை உலகு தெளிவாக அறிந்து கொள்ள கதவு திறந்துவிட்ட பெருமை இஸ்லாமியரான அல்புரூனி அவர்களையே சாரும் என வரலாற்றறிஞர்கள் இன்றும் புகழ்ந்து எழுதி வருகிறார்கள்.

### இந்தியா வந்த பல்வேறு இனத்தவர்

இந்தியாவிற்கு உலகெங்கணுமிருந்து பல்வேறு இனத்தவர்கள் அடுத்தடுத்து வந்து இந்தியப் பண்பாட்டில் தங்கள் செல்வாக்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தினர்.

வேற்று இனப் படையெடுப்பாளர்களாக முதலில் வந்தவர்கள் ஆசிய இனத்தவர் (கி.மு.2500). தொடர்ந்து பாரசீகர்கள், கிரேக்கர்கள், பார்திகன்ஸ், இஸ்கெதியன்ஸ், ஹூணர்கள், அராபியர்கள், பட்டாணியர்கள், முகலாயர் கள், அஹோம்ஸ், போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர்கள் ஆகிய பல்வேறு இனத்தவர்களின் வருகையின் மூலம் அவர்தம் சமய, வாழ்வியல், கலை, இலக்கிய, பண்பாட்டு முறைகள் இந்திய வாழ்வியல் துறைகள் அனைத்திலும் அழுத்தமாகப் படிந்தன.

### கலை, இலக்கிய வளர்ச்சியில் திருப்புமுனை

ஆட்சி மொழியாக இருந்த பார்சி, அரபி இவைகளோடு, சமஸ்கிருதமும் கலந்த கலப்பு மொழியாக உருது அமைந்தது. பார்சி, அரபி மொழிகளுக்கு மிகுந்த ஆதரவு அரசால் அளிக்கப்பட்டது. இவ்விரு மொழிகளிலும் சமஸ்கிருத நூல்கள் பலவும், உபநிஷத், பகவத் கீதை

போன்றவை பாரசீக மொழியில் பெயர்க்கப்பட்டு, பின்னர் அதிலிருந்து ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டன.

கட்டடக் கலையும் இசை, ஓவியக் கலைகளும் இஸ்லாமியப் பண்பாட்டின் அடிப்படையில் அமையலாயின. அராபிய மருத்துவ முறையான யுனானி இந்திய மருத்துவத்துறையில் செல்வாக்குப் பெற்றது. அதே போன்று எழுத்துக்கலை (Calliography)யும் கைத்தறித் தொழில் துறையும் தனி முத்திரை பதித்து இந்தியத் தொழில்துறை வளர்ச்சிக்கு வளமூட்டின.

## இந்திய மன்னர்களான முஸ்லிம் அரசர்கள்

இந்தியாவின்மீது வெளிநாட்டாரின் படையெடுப்புகள் பல்வேறு வடிவங்களில், வகைகளில் அமைந்தன. வைதீக சமயத்தவர்களான ஆரியர்கள் படையெடுப்பாளர்களாக வந்தபோதிலும் இங்கேயே நிரந்தரக் குடிகளாக ஆனார்கள். பின்னர் இஸ்லாமியர்கள் வந்தார்கள். அவர்கள் முதலில் வணிகர்களாகவும் மாலுமிகளாகவும் வந்தார்களேயன்றி நாடாளும் நோக்கில் வரவில்லை. சிந்துவை ஆண்ட மன்னன் அங்கு வாணிகம் செய்துவந்த அரபு வணிகர்களுக்குப் போதிய பாதுகாப்புத் தரத் தவறியதால்தான் முஹம்மது பின் காஸிம் என்பவர் முதன்முதலாக சிந்துவின் மீது படையெடுப்பு நடத்த நேர்ந்தது என்பது வரலாற்று உண்மை. அதன்பின் முஹம்மது கோரி இந்தியப் படையெடுப்பை நடத்திய போதிலும் ஆட்சி செலுத்தவில்லை. இந்தியாவின் முதல் முஸ்லிம் மன்னர் என வரலாற்றாசிரியர்கள் வர்ணிக்கும் குதுப்உத்தீன் முற்றிலும் இந்தியராக மாறி இந்திய மன்னராகவே ஆட்சி செலுத்தினார். இந்தியாவுக்கு வெளியே அவருக்கு நாட்டமில்லாதது மட்டுமல்ல, எந்த ஒட்டும் உறவும் அறவே இல்லாதவராக, இந்திய மன்னராகவே ஆட்சி செய்து வந்தார். அவருக்குப் பின் ஆட்சிக் கட்டில் ஏறிய முஸ்லிம்

மன்னர்கள் அனைவரும் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்து அரசுரிமை பெற்றவர்கள்.

இதே போன்று மாமன்னர் பாபர் இந்தியாவைக் கைப்பற்றியவுடன் தன் இருப்பிடத்தை காபூலிலிருந்து டில்லிக்கு மாற்றிக் கொண்டார். அவருக்குப் பின் அரியணை யேறிய மொகலாய மன்னர்கள் அனைவரும் இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்த இந்திய மன்னர்களாகவே விளங்கினர். இந்தியாவுக்கு வெளியே அவர்கட்கு எந்தத் தொடர்பும் இருந்திருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையான 'ஹஜ்' கடமையை அரபு நாட்டிலுள்ள மக்கா நகர் சென்று நிறைவேற்ற வேண்டும். வெளிநாடு சென்று நிறைவேற்ற வேண்டிய இன்றி யமையாக் கடமையைக்கூட இந்தியாவுக்கு வெளியே சென்று டில்லியை ஆண்ட எந்த முஸ்லிம் மன்னரும் நிறைவேற்ற விழையவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். அந்த அளவுக்கு அந்நிய நாடு எதையும் காணாது இந்திய மண்ணோடு ஒன்றி, இந்திய மன்னர்களாகவே விளங்கியுள்ளனர். இந்திய வரலாற் றிலேயே ஆட்சியதிகாரம் செலுத்தியவர்களில் இந்திய நாட்டுக்கு வெளியே தங்கள் அடிப்படையை வைத்துக் கொண்டு ஆட்சி செலுத்தியவர்கள் ஆங்கிலேயர், ஃபிரெஞ்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்களே ஆவர். இந்த அடிப்படையிலேயே மறைந்த நேருஜி, அன்னை இந்திரா, அமரர் ராஜீவ் ஆகியோர் இங்குள்ள முஸ்லிம்கள் அனைவரும் பாரம்பரிய மிக்க இந்திய மண்ணின் மைந்தர்கள்-பாரதப் புதல்வர்கள் என்றும், அவர்களால் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் இஸ்லாமிய மார்க்கம் இந்தியச் சமயமே ஆகும் எனவும் அடிக்கடி முழங்கி வந்தனர்.

## இஸ்லாம் இந்திய நாட்டின் சொந்த மார்க்கமே!

*"இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் பெரும் எண்ணிக்கையைவிட, பல நூற்றாண்டுகளாக இந்திய வாழ்க்கை நெறிக்கு அவர்கள் செய்திருக்கும் தொண்டுதான் முக்கியத் துவம் வாய்ந்ததாகும். இஸ்லாமிய மாண்புகள் (Values) இந்த நாட்டின் கலாச்சாரம், சிந்தனை, செயல் முறைகளின் மீது ஆழ்ந்த செல்வாக்கைப் பதித்திருக் கின்றன. வாழ்வின் எந்தத் துறையும் அவ்வாறு பயன் பெறாமல் இருக்கவில்லை. தத்துவம், ஆன்மீகம், அரசு நடத்தும் முறைகள் (State crafts), சமூக அமைப்புகள், கலை, கட்டிடக்கலை, இசை, இலக்கியம், கணிதம், மருத்துவம் இன்னும் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் இந்தப் பயன்களை நாம் பார்க்கலாம். நம் உணவுப் பழக்க வழக்கமும், உடல் அமைப்புகளும், ஏன் நாம் பேசும் வார்த்தைகள் கூட அந்தப் பயன்களின் நற்பாதிப்புகளைப் பெற்றுத்தான் இருக்கின்றன."*

*ஹிஜ்ரி 15ஆம் நூற்றாண்டையொட்டி டெல்லியில் 1981 ஜனவரி 28, 29, 30இல் நடைபெற்ற மாநாட்டில் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி மேற்கண்டவாறு பேசி இந்திய முஸ்லிம்கள் அனைவரும் இம்மண்ணின் மைந்தர்களே என்பதை ஆணித்தரமாக உறுதிப்படுத்தினார்கள். மேலும் அவர்கள் இதை விளக்கிப் பேசும்போது "இஸ்லாத்தை நாம் எப்போதும் நம் சொந்த மார்க்கமாக அங்கீகரித்து வந்திருக் கின்றோம். இஸ்லாம் இந்தியாவில் தடையின்றி, தொடர்ந்து வாழும் பல கலாச்சாரங்கள், பல தத்துவங்கள் கொண்ட நம்முடைய இந்தியா ஓர் உடல் என்றால் அந்தப் பல்வேறு தத்துவங்களும் கலாச்சாரங்களும் அதன் அங்கங் களாக அமைந்துள்ளன. இந்திய உடலின் ஒவ்வோர் அங்க மும் அதனுடைய தனிச் சிறப்பையும் சிறப்பம்சத்தையும்*

பாதுகாத்துக்கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் நாம் அனுமதியளிக்கிறோம். இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் நம் தேசிய வாழ்வில் முழுமையான சம பங்கினை வகிக்கக் கூடியவர்களாகத் திகழ்கின்றனர்." என முத்தாய்ப்பாகக் கூறினார் முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள்.

### ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கிய முஸ்லிம் மன்னர்கள்

இன்றைக்கு நாம் ஏக இந்தியாவைக் காண்கிறோம். இதற்கு அடித்தளம் அமைத்து ஒருங்கிணைந்த பாரதத்தை உருவாக்கி நம்மையெல்லாம் ஒரே நாட்டவர் என்ற உயர் நிலைக்கு உயர்த்தியவர்கள் முஸ்லிம் மன்னர்களே ஆவார்கள்.

பல்வேறு மன்னர்களின் ஆட்சிப் பகுதிகளாகச் சிதருண்டு கிடந்த இந்தியாவை, எண்ணற்ற குறு நில மன்னர் ஆட்சிகளை அகற்றி, ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கிய பெருமை முஸ்லிம்களை, குறிப்பாக மாமன்னர் அவ்ரங்கஸீப் ஆலம்கீர் அவர்களையே சாரும். நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியே நிர்வாக அதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். வரிமுறைகள் சீரமைக்கப்பட்டதால் அரசு வருமானத்துக்கு நிரந்தரவழி காணப்பட்டது. உலோக நாணயங்கள் அச்சிடப்பட்டன. மைய அரசு உருவாக்கப்பட்டு அனைத்து நிர்வாகப் பகுதிகளும் கண்காணிக்கப்பட்டன. இதன்மூலம் வரலாற்றில் முதன்முறையாக 'இந்தியா ஒரே நாடு' என்ற உணர்வு மக்களிடையே உருவாகி நிலை பெற்றது.

### அவ்ரங்கஸீபும் வரலாற்று அவதூறும்

இச்சந்தர்ப்பத்தில் மாமன்னர் அவ்ரங்கஸீப் பற்றிய உண்மைகளை அறிவது அவசியம். இந்திய முஸ்லிம்

மன்னர்களிலேயே ஹிந்து சமயத்தின், ஹிந்துக்களின் விரோதியாக வர்ணிக்கப்பட்டு வருபவர் அவ்ரங்கஸீப் ஆலம்கீர். அவரது செயற்பாடுகளை வைத்து நோக்கும் போது இக்குற்றச்சாட்டுகள் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது மட்டுமல்ல, திட்டமிட்ட சதிச் செயலாகவும் காணப்படுகிறது.

ஹிந்து சமய விவகாரங்களில் அவர் தலையிட்டதாக ஒரு சிறு சம்பவத்தைக்கூட காணமுடியவில்லை. மாறாக, ஹிந்து சமய வளர்ச்சிக்கு அவர் துணையாக இருந்த எத்தனையோ சம்பவங்கள் அவர் வாழ்க்கை வரலாற்றில் நெடுகக் காணக் கிடக்கின்றன. இந்திய வரலாற்றிலேயே ஹிந்து மதக் கோயில்களுக்கு மிக அதிகமான மானியங் களை அளித்த பெருமை மாமன்னர் அவ்ரங்கஸீப் அவர் களையே சாரும். தன் அரசவைக்கு வந்து சைவ சமயப் பெருமைகளைக் கூறிய தமிழ்கூறு நல்லுலகின் குமர குருபரரைப் பாராட்டி பரிசளித்ததுடன் காசியில் சைவ சமய மடம் கட்டிக் கொள்ள நிலமும் பணமும் கொடுத்தார். தென்னாட்டில் திருப்பனந்தாள் ஆதீனத்துக்குப் பெரும் நிலப்பகுதியை மானியமாக அளித்ததாக கர்ணபரம்பரைச் செய்தி கூறுகிறது. இதுபோல எத்தனையெத்தனையோ.

இதற்குக் காரணம், இஸ்லாமிய நெறி தவறாத ஓர் உண்மை முஸ்லிமாக வாழ்ந்து வந்த அவர், எல்லாச் சமயங்களும் சமய வேதங்களும் இறைவன் அளித்தவையே என நம்புவதோடு பிறசமய வளர்ச்சிக்கு உதவுவதையும் தன் இன்றியமையாக் கடமையாகக் கொண்டு செயல்பட்ட வராவார்.

அரசியல் காரணமாக ஹிந்து மன்னர்களோடு போரிட் டிருக்கலாம். எதிரி மன்னர்களை வெற்றி கொண்டிருக்க லாம். அவர்களை அடக்கி, ஒடுக்கி, ஏன் அழித்தும் இருக்க லாம். அது அரசியல் நெறி. ஆனால், ஒரு ஹிந்து மன்னனாக

இருந்தாலும் சாதாரண குடிமகனாக இருந் தாலும் அவர்தம் சமய நம்பிக்கைகளை அவ்ரங்கஸீப் பெரிதும் மதித்தார். அவர்தம் நம்பிக்கை நிறைவேற்றத்துக்கு இயன்ற வகை களிலெல்லாம் துணை நின்றார் என்பதற்கு அவர் வாழ்க்கை நெடுகிலும் எத்தனையோ எடுத்துக் காட்டுகளைக் காண முடிகிறது. அவற்றுள் ஒரு சம்பவத்தை இங்கு சான்றாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

### ஹிந்து சமய நம்பிக்கையும் மாமன்னர் அவ்ரங்கஸீபும்

வீர சிவாஜி அரசியல் காரணங்களுக்காக அவ்ரங்கஸீப் ஆலம்கீரால் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டிருந்த நேரம். சிறையில் திடீரென சிவாஜியின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. சிறையிலேயே தக்கமுறையில் தேர்ந்த மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் நோயின் கடுமை குறையவில்லை. அப்போது மாமன்னரி டம் சிவாஜி வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

"மதுராபுரியிலுள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு இரு குதிரைகளைத் தானமாக வழங்க வேண்டும். மதுராபுரி கிருஷ்ணன் கோயில் பிராமணர்கள் தனக்காகப் பிரார்த்தனை செய்தால் தன் நோய் குணமாகி விடும்" என்று வேண்டினார். கோயிலுக்குக் குதிரைகளைத் தானம் செய்வதன் மூலமும் பிராமணர்கள் தனக்காகப் பிரார்த்தனை செய்வதன் மூல மும், தன் நோய் தீரும் என்ற சிவாஜியின் மத நம்பிக்கையை மாமன்னர் அவ்ரங்கஸீப் மதித்து, அவ்வாறு செய்ய அனுமதி வழங்கியதாக வரலாறு கூறுகிறது. மாமன்னருக்கு இஸ்லாமிய அடிப்படையில் இத்தகு செயலில் நம்பிக்கை யில்லை என்றாலும், தன் விரோதியான சிவாஜி சிறைப் பட்டிருந்த வேளையிலும் அவரது ஹிந்து சமய நம்பிக்கையை மதித்து அனுமதி வழங்கினார் என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் இஸ்லாம் பிற சமய நம்பிக்கைகளை மதிக்கப் பணித்திருப்பதுதான்.

தவ்ஹீது எனும் ஏகத்துவ நறுமணம் வீசும் இந்தியா

இஸ்லாமிய நெறிக்கும் இந்திய மண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு எப்போதும் இருந்து வந்திருக்கிறது. இறையருள் பெற்ற திருநாடாகவே பெருமானார் இந்திய நாட்டைக் கருதி பாராட்டி வந்தார். ஆதி மனிதரும் நபியுமான ஆதம் (அலை) பிறந்த பெருமைமிகு பூமி. ஏகத்துவக் கொள்கை முளைவிட்ட புனித மண். இங்கிருந்தே தவ்ஹீது நறுமணம் உலகெங்கும் பரவியது. இதை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சி ஒன்று அண்ணலார் வாழ்வில் நடைபெற்றது.

காபா இறையில்லத்தில் ஹஜ்ருல் அஸ்வத் (கருநிறக் கல்) பதிக்கப்பட்டுள்ள மூலைப்பகுதி 'ருக்னுல் ஹிந்த்' என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது 'ருக்னுல் ஹிந்த்' என்றால் 'இந்தியாவை நோக்கும் மூலை' என்று பொருள்.

இந்த மூலைப் பகுதியில் தொழுகைக்குப் பிறகு, இந்தியாவை நோக்கியவண்ணம் திறந்த மார்போடு அண்ணலார் அவர்கள் நிற்பது வழக்கம். அப்போது அத் திக்கிலிருந்து வீசும் தென்றல் காற்று அவர் மார்பில் படும்போது அவருக்கு மிகவும் இதமாக இருக்கும். அதை நாயகத் திருமேனி வெகுவாக ரசித்து மகிழ்வதுண்டு. பலப் போதும் பெருமானார் இவ்வாறு செய்வதைக் கண்ட நபித் தோழர்கள், 'பெருமானார் இவ்வாறு செய்வதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் உண்டா?' என அண்ணலாரை வினவலாயினர். அதற்கு விடையாகப் பெருமானார் அவர்கள்.

"ஹிந்த் (இந்தியா)விலிருந்து தென்றலாக வீசிக் கொண்டிருக்கிற தவ்ஹீது (ஏக தெய்வ வணக்கம்)னுடைய சுகந்தத்தை, சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறினார்களாம்.

இதிலிருந்து இந்திய நாடு பண்டுதொட்டே ஏக இறை வணக்கக் கோட்பாட்டின் நிலைக்களனாக விளங்கிவந்த, இறையருள் பொழியும் புனித பூமி என்பது தெளிவாகிறது. இந்தியாவில் பொங்கிப் பொழியும் ஆன்மீக மாண்பு பெருமானாரிடம் அளப்பரிய மதிப்பை ஏற்படுத்தியிருப்ப தையும் நம்மால் நன்கு உணர முடிகிறது. எனவே, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் 'ஹிந்த்' (இந்திய) நாட்டைப் புகழத் தவறியதே இல்லை.

பிற்காலத்தில் பல தெய்வ வணக்கமுறை இந்தியாவில் உருவான போதிலும் முற்கால இந்தியாவில் ஏக தெய்வக் கொள்கையே நிலவி வந்ததை, முந்தைய இந்திய வேதங் களின் அடிநாதக் கொள்கையாக ஏகத்துவ இறைக் கோட்பாடு விளங்கி வந்தது என்பதை வேத விற்பின்னர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதையே இந்திய ஆதி வேதமான ரிக் வேதம் 'ஏகேஸ்வர மார்க் (கம்)' எனக் கூறுகிறது. இதையே ரிக் வேத சுலோகமான 'ஏகம் ஸத்விப்ராபஹு~தா வதந்தி' என்பது தெளிவாக்குகிறது. இதிலிருந்து இந்தியாவின் ஆதி வேதக் கொள்கை ஏக தெய்வ வணக்கமே என்பது உறுதியாகிறது. எனவே, இந்தியாவை ஏகத்துவ மணம் கமழும் புனித பூமியாக அண்ணலார் புகழ்ந்ததில் வியப்பேது மில்லை.

அதுமட்டுமல்ல, ஆதிவேதமான ரிக் வேதம் உட்பட இந்திய வேதங்கள் பலவும் இறுதித் தூதராக முஹம்மது நபி (சல்) அவர்கள் இறைவனால் அனுப்பப்படுவார் என்பதை முன்னறிவிப்பு செய்துள்ளன என்பது எண்ணத்தக்க செய்தி யாகும். ரிக் வேதம் 'மாமஹே' (முஹம்மது) இறுதி இறைத் தூதராக வருவார்' என இரண்டு இடங்களில் குறிப்பிட் டுள்ளது. சாம வேதம், 'அஹ்மத்' என்றும் அதர்வண வேதம் 'மஹாமத்' (முஹம்மது) எனவும் இறுதித் தூதரின் பெயரைக் குறிப்பிடுகின்றன.

நான்கு ஹிந்து மத வேதங்களும் ரிஷிகளும்

ஹிந்து மதத்தின் பெரும் வேதங்களான ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் நான்கும் மற்ற வேதங்களும் ரிஷிகளாலோ மற்ற மனிதர்களாலோ இயற்றப்பட்டவைகள் அல்ல. அவைகளும் மற்ற சில வேதங்களும்கூட இறை வனால், இறைச் செய்திகளாக வழங்கப்பட்டவைகளே என்பதுதான் ஹிந்து மத ஆச்சாரியர்களின் கருத்து.

ஹிந்து மதத்தை நிறுவியவர் 'யார்' என்பது இன்று வரை கண்டறியவியலா ஒரு புதிராகும். பிரம்ம சூத்திரம் செய்த வியாசரும் கீதை வழங்கிய கண்ணனும் தங்களுக்கும் முன்னதாக வேதங்கள் இருந்ததாகக் குறிப்பிடுவதிலிருந்து இவர்களுக்கும் முன்னரே வேதங்கள் வழக்கில் இருந்து வந்துள்ளன என்பது தெளிவாகிறது.

இவ்வேதங்கள் ரிஷிகளோடு நெருங்கிய தொடர்புடை யவையாயினும் இவற்றை இயற்றியவர்கள் ரிஷிகள் அல்ல. இதை எண்பிக்கும் வகையில் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள்,

"இந்த வேத மந்திரங்களைச் செய்த ரிஷிகளை இவற் றின் ஸ்தாபகர்கள் என்று சொல்லலாமா என்று பார்த்தால், அவர்களோ இந்த வேதங்களை தாங்கள் செய்ய (இயற்ற) வில்லை என்கிறார்கள். எங்கள் மூலம்தான் இந்த மந்திரங் கள் லோகத்துக்கு வந்தன என்பது வாஸ்தவம். அதனால் தான் எங்களை மந்திர ரிஷிகளாகச் சொல்லியிருக்கிறது. எங்கள் மூலம் வந்ததேயொழிய, நாங்களே அவற்றைச் சொல்ல (இயற்ற)வில்லை. நாங்கள் அப்படியே மன மடங்கித் தியான நிஷ்டையில் இருக்கிறபோது இந்த மந்திரங்கள் ஆகாயத்தில் எங்கள் முன்னே தெரிந்தன. நாங்கள் அவற்றைக் கண்டறிந்தவர்கள்தான் (மந்த்ர த்ரஷ்டா); செய்தவர்கள் (மந்த்ர கர்த்தா) அல்ல என்கிறார் கள்" என எடுத்துக் கூறுவதன்மூலம் இந்திய வேதங்கள் ஏக

இறைவனால் ஒருவகை வஹீ மூலம் வழங்கப்பட்டவை களேயன்றி அவை மனிதர்கள் யாராலும் இயற்றப்பட்டவை கள் அல்ல என்பதைத் தெளிவாக்குகிறார்.

இவ்வாறு முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதம் (அலை) தோன்றிய இந்தியப் பகுதியில் பல்வேறு வேதங் கள் பல்வேறு இறைத் தூதர்கள் மூலம் ஏக இறைவனால் வழங்கப்பட்டுள்ளன என்பதை காஞ்சிப் பெரியவர் போன்ற வர்களின் ஆய்வுக் கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையில் இறை தூதரான நபிகள் நாயகம் (சல்) மூலம் இறுதி வேதமாக அமைந்திருப்பதே இறைமறையாகிய திருக்குர்ஆன்

## இஸ்லாமியர் உறவால் பிறந்த
## ஆதி சங்கரரின் 'அத்வைத'க் கொள்கை

ஹிந்து சமயத்தின் மாபெரும் எழுச்சிக்கும் மறுமலர்ச் சிக்கும் காரணமாயமைந்தவர் ஆதி சங்கரர் ஆவார். தனி யொரு மனிதராக தென்முனை கேரளத்தின் காலடியிலிருந்து வட இமயம்வரை சென்று ஹிந்து சமயத்தை புனர் நிர்மாணம் செய்தவர்; அதற்கு மாபெரும் உந்து விசையாக அமைந்தது அவரது 'அத்வைத'க் கொள்கை.

ஆதி சங்கரரின் மூலத் தத்துவம் 'அத்வைதம்' ஆகும். அத்வைதம் என்பது வேதாந்த மதங்களுள் ஒன்றாகும். பிரம்மம் இரண்டற்ற மூலப்பொருளாகும். 'அத்வைதம்' என்ற சொல்லுக்கு இரண்டற்றது என்பது பொருளாகும்.

ஆதி சங்கரர் இக்கொள்கையை இஸ்லாத்திலிருந்து தான் பெற்றார் என்பதை தத்துவ அறிஞர்கள் பலரும் ஒரு முகமாகக் கூறி வருகின்றனர். இதைப் பற்றி இஸ்லாமிய கலைக் களஞ்சியம் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது: "எட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் மலையாளத்

திலுள்ள காலடியில் பிறந்த சங்கரர் அங்கு வந்து இஸ்லாமியப் பிரச்சாரம் செய்த முஸ்லிம்களின் உருவமற்ற ஒரே இறைவன் என்ற இறை வணக்கப் பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு, அத்வைத கொள்கையை ஹிந்து மதத்தில் நுழைத்தார் என்று ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

இதிலிருந்து ஏகத்துவக் கொள்கையான தவ்ஹீது ஆதி சங்கரரிடம் ஏற்படுத்திய தாக்கமே அத்வைதக் கொள்கை யாக உருவெடுத்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

### இந்தியச் சமயங்களின் மறுமலர்ச்சிக்கு உந்து சக்தியான இஸ்லாமிய நெறி

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையான ஏகத்துவக் கொள்கையும் (ஓரிறைக் கோட்பாடு) இறை ஞானமும் (தஸவ்வுப்) ஹிந்து சமய ஆர்வலர்களிடையே ஒரு புதுவித உத்வேகத்தை ஊட்டி வளர்க்கலாயின. 'சர்வ வல்லமை யுள்ள ஒரே இறைவனின், படைப்புகளே உலகிலுள்ள அனைத்தும். மனிதப் படைப்பில் எவ்வித வேற்றுமையும் இல்லை. இறை வேதம் எல்லோருக்கும் பொது. 'நற்பணி செய்யும் நற் சிந்தனையாளரே மனிதருள் சிறந்தவர்' என்பன போன்ற கோட்பாடுகள் இந்துக்களைப் பெரிதும் ஈர்த்தன. ஏகத்துவ அடிப்படையில் பக்தி இயக்கங்கள் ஆங்காங்கே உருவாயின. சங்கரர், இராமானுஜர், பஸவர், இராமானந் தர், வல்லபாச்சாரியார். சைதன்யர், கபீர்தாஸ் போன்றவர் கள் பக்தி இயக்கங்களைத் தோற்றுவித்து ஜாதி வேற்றுமை களைக் களைய முற்பட்டனர். தமிழ்நாட்டில் சித்தர்களும் சூஃபிகளும் தோன்றி ஏகத்துவ இறைக் கோட்பாட்டை நிலை நிறுத்தவும் சாதி சமய வேறுபாடுகளைக் களைந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டை நிலைநாட்டவும் உழைக்க லாயினர். இதன் விளைவாக இந்திய நாட்டின் மதச் சார்பற்ற தன்மை உருவாக வழிபிறந்தது.

## இந்திய சமயப் பிரிவுகளும் இஸ்லாமியச் செல்வாக்கும்

இந்திய நாட்டிற்குள் கால்பதித்த இஸ்லாம் இந்தியச் சமயங்களைச் செம்மைப்படுத்த எல்லா வகையிலும் உதவியுள்ளது என்பதை டாக்டர் தாரா சந்த் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் தங்கள் நூல்களில் விரிவாகவும் தெளிவாகவும் ஆய்ந்து கூறியுள்ளார்கள். டாக்டர் தாரா சந்த் அவர்களின் 'இந்தியப் பண்பாட்டில் இஸ்லாத்தின் செல்வாக்கு' என்ற நூல் இதற்கான பல ஆதாரங்களை அடுக்கடுக்காகக் கூறி விவாதிக்கிறது.

தென்னகத்தில் அரபு வணிகர்கள் வாயிலாகப் பரப்பப்பட்ட இஸ்லாமிய நெறி, கொள்கை, கோட்பாடு, தத்துவங்கள் புதிய வடிவிலும் கோணத்திலும் பல்வேறு சமயப் பிரிவுகள் உருவாகத் தூண்டுகோலாயமைந்தது என்பது சரித்திர, சமய ஆய்வாளர்களின் கருத்தாகும். இதைப் பற்றி "இந்தியாவின் சமயங்கள்" என்ற தமது நூலில் பர்த் (BARTH) என்பவர் கீழ்க்கண்டவாறு விவரித்துள்ளார்:

"ஆஃப்கானியர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள் அவர்களுடைய மதத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் இந்த நாட்டைக் கைப்பற்றுபவர்களாக வருவதற்கு வெகு காலத்திற்கு முன்னாலேயே கலீஃபாக்களுடைய காலத்து அராபியர்கள் இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களில் வணிகர்களாக வந்து, இந்த நாட்டு மக்களோடு வியாபாரத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு விட்டார்கள். 9-வது நூற்றாண்டிலிருந்து 12-வது நூற்றாண்டு வரையில் இந்தப் பிரதேசத்தில் தான் சங்கரர், ராமானுஜர், ஆனந்த் தீர்த்தர் (மத்வர்), பஸவர் ஆகியவர்களுடைய பெயர்களோடு இணைக்கப்பட்டிருக்கின்ற சமய இயக்கங்கள் தோன்றின. அவற்றிலிருந்துதான் சரித்திரபூர்வமாக இந்தியாவில் காணப்படும் சமயப்

பிரிவுகள் பிறந்தன. வெகுகாலத்துக்குப் பின்னால் வரையில் இதற்குச் சமமாக ஹிந்துஸ்தானத்தில் வேறு எதுவும் காணப்படவில்லை.''

மேலும், 'தத்துவ, பக்தி இயக்கங்களுக்கு இஸ்லாமிய அடிப்படையும் செல்வாக்கும் உண்டா?' என்ற கேள்விக்கு விடை தரும் வகையில் மேலும் விவரிக்கிறார்.

''தென்னிந்தியாவில் தோன்றிய தத்துவ பக்தி இயக்கங்கள் ஆகியவற்றில் காணப்படும் தன்மை ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்தால் அவை ஆதிகாலத்தில் சமயக் கோட்பாடுகளிலிருந்து பிறந்தவை தாம் என்று சொல்ல முடியும். ஆனால், அந்தத் தன்மைகள் அனைத்தையும் மொத்தமாகப் பார்க்கும்போதும், அவைகளுடைய குறிப்பிட்ட அழுத்தத்தை நோக்கும் போதும் யாரும் காணத் தவறாத அளவுக்கு அவை இஸ்லாமியக் கோட்பாடுகளை ஒத்திருக்கின்றன. ஆகையினால் இஸ்லாத்தினுடைய செல்வாக்கினாலேயே அவை அப்படி தோன்றின என்ற வாதத்தை ஒத்துக் கொள்ளக்கூடியதாக ஆக்குகின்றன. முன்னர் விவரிக்கப்பட்ட சமய இயக்கங்கள் அனைத்திலும் இந்த முடிவுக்கான சாட்சியம் நேரடியாகக் கடன் வாங்கியதாகச் சொல்ல முடியாமலும் சூழ்நிலையையும் சந்தர்ப்பத்தையும் கொண்டு முடிவு செய்யக்கூடியதாகவுமே இருக்கிறது. என்றாலும், அல்புரூனி எழுதியது போல 'ஹிந்துக்கள் மட்டுமீறிய தன்மதிப்புடைய வர்க்கமாவார்கள். அவர்கள் பிற கருத்துகளை தங்களுடையதாக ஆக்கிக் கொள்வதில் தலைசிறந்த கலைஞர்களாக இருந்தார்கள். வெகு சுலபமாகக் கண்டுபிடித்துவிடக் கூடிய, கலை நயமற்ற 'காப்பி' யடித்தலின் மூலம் தங்களுடைய கௌரவம் குறைந்து போவதற்கு அவர்கள் இடங்கொடுக்கவில்லை. இந்தியாவினுடைய கலாச்சாரத்தின் பழங்காலச் சரித்திரம் முழுவதும் இக்கூற்றுகளின் உண்மைக்குச் சான்று பகர்வதாகவே இருக்கிறது.'' (பக்-107-108)

இந்த அடிப்படையில் பஸவருடைய போதனைகளும் வீர சைவர்களுடைய கோட்பாடுகளும் இஸ்லாமியத்தோடு மிக நெருக்கமாக இருப்பதைப் பற்றி கூறும்போது, "பஸவருடைய போதனைகள் ஆதியில் அன்று நிலவியிருந்த ஹிந்து கோட்பாடுகள், சடங்குகள், சமூக வழக்காறுகள் ஆகிய அனைத்தையும் ஒருங்கே மறுப்பதாக அமைந்திருந்தது. வீர சைவர்ககள் 'பரமசிவம்' என்ற பெயரில் ஒரே கடவுளை வணங்குபவர்களாக ஆனார்கள். அந்த ஒரே கடவுள் உருவமற்றவன்; தனித்தவன்; யாரையும் சார்ந்தவன் அல்லன்; ஆனந்த வடிவானவன்; எந்த மாற்றமும் இல்லாதவன்; யாவற்றுக்கும் மேலானவன்; அவன் தனிமனிதனுடைய ஆன்மாவுக்கு வழிகாட்டுவதற்காக 'அல்லமா பிரபு' என்ற பெயருடன் உலக ஆசானாக வெளிப்படுகிறான். அவர்களுடைய கொள்கையின்படி ஆன்மாவுடைய பிரயாணத்தில் மூன்று கட்டங்கள் இருக்கின்றன. முதற் கட்டத்தில் இறைவனிடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் விரதங்கள் அனுஷ்டிப்பதும் பக்தி செயல்களில் ஈடுபடுவதுமாகும். இரண்டாவது கட்டத்தில் இறைவனைப் பரிபூரணமாக சார்ந்து, அகந்தையை ஒழித்து அவனிடம் தன்னையே ஒப்புவித்து விடுவது; மூன்றாவது கட்டத்தில் இறைமையோடு கலந்து ஆனந்த மயமாய் ஆகிவிடுவது.

"இவை எல்லாவற்றையும்விட வீர சைவர்களுடைய நடைமுறைதான் இங்கு முக்கியமாகக் கவனிக்கத்தக்கவை. பெண்ணின் சம்மதமின்றித் திருமணம் இல்லை. விவாகரத்து அனுமதிக்கப்பட்டது. விதவைகள் எந்தவிதமான அபசகுனத்தினுடையவும் அறிகுறியாய் இல்லாமல் மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை உண்டு. பிரேதங்கள் எரிக்கப்படாமல் அடக்கம் செய்யப்பட்டன. சிரார்த்தம் போன்ற சடங்குகள் இல்லை. மறு பிறப்பில் நம்பிக்கை இல்லை.

*"இவற்றின் காரணமாகத்தான் 'லிங்காயதம்' பிரிவு இந்தப் பிராந்தியங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வாக்கினால் தோன்றியது என்ற முடிவு மறுக்க முடியாததாக ஆகிறது. அதனுடைய புரட்சிகரமான கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் வேறு எந்த அடிப்படையிலும் விளக்க முடியாமலிருக்கிறது. ஹிந்துக்களிடம் ஊறிப்போன புனர் ஜென்ம நம்பிக்கை, பிணத்தை எரித்தல், சாவின்போது தீட்டை ஒழிக்கச் செய்யும் சடங்குகள், ஜாதி, ஆண்-பெண் அடிப்படையில் உண்டான ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஒழித்தல், விவாக சீர்திருத்தம், புனிதமான குருவின் தலைமையில் பணியாற்றும் வீர சிஷ்யர்களுடைய கூட்டம், 'அல்லமா பிரபு' என்ற பெயரில் (அல்லாஹ் என்பதன் சாயலில்) கடவுளைக் குறிப்பிடுதல் ஆகிய அனைத்தும் எந்த மறுப்புக்கும் இடமின்றி இஸ்லாத்திலிருந்தே பிறந்தன என்பதை உணர்த்தும்" என்று டாக்டர் தாரா சந்த் கூறுகிறார். (பக். 119-120)*

## ஸ்ரீ ராமானுஜர் சமத்துவப் போதனையும் இஸ்லாமியச் செல்வாக்கும்

*இஸ்லாமிய நெறி இங்கு வாழும் மக்களை மிக எளிதில் ஈர்த்ததற்கான காரணங்களைப் பற்றி ஆராய்ந்து கூறுகிறார் ஆய்வறிஞர் புகழ்மிகு நீதிபதி எம்.எம்.இஸ்மாயீல் அவர்கள். "பிறப்பின் அடிப்படையில் வர்ண பேதம், ஜாதி வேற்றுமை கற்பிப்பதும் அதன் காரணமாக ஏற்றத்தாழ்வு கற்பிப்பதையும் போல தனிமனிதனுடைய தன்மான உணர்ச்சியைப் புண்படுத்துவது வேறு எதுவும் இருக்க முடியாது.*

*"எங்கு பிறந்தவனாயினும், எந்நிறத்தவனாயினும், எவ்வினத்தவனாயினும், எத்தரத்தவனாயினும், ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய*

வுடன் பரிபூரண சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் பெற்று விடுகிறார்கள் என்பது இஸ்லாத்தினுடைய சக்தி வாய்ந்த தாரக மந்திரமாகும். இது முஸ்லிம்களிடையே கொள்கையளவில் நின்றுவிடாமல் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில், தொழுகை போன்ற வழிபாட்டு முறைகளிலும் திருமணம் போன்ற சமுதாய நிகழ்ச்சி களிலும் முழுமையாக இடம் பெற்றுள்ளது. ஆகவேதான், தனிமனிதனுடைய தன்மான உணர்ச்சிக்கு இது ஒரு பெரிய ஆகர்ஷண சக்தியாகும். இந் நாட்டில் வாழ்ந்திருந்த பெரும் பான்மையான மக்களை இஸ்லாம் கவர்ந்ததற்கு இதுவே பிரதான காரணமாக ஆயிற்று".

(நீதிபதி எம்.எம் இஸ்மாயீல் "இஸ்லாமும் இந்திய சமயங்களும்" பக். 7, 8)

இந்த அடிப்படையில் ஸ்ரீ ராமானுஜரின் சமத்துவ போதனையை அணுகும்போது ஆய்வாளர்களுக்குப் புதிய உணர்வுகளும் தகவல்களும் புலனாகின்றன. இஸ்லாத்தின் சமத்துவ உணர்வுச் சிந்தனை ஸ்ரீ ராமானுஜரின் சமத்துவப் போதனைகளுக்குத் தூண்டுகோலாயமைந்ததை அன்றையக் காலச் சூழலும் நிகழ்வுகளும் சான்றளிப்பவையாயுள்ளன.

ஸ்ரீராமானுஜர் காலத்தில் இஸ்லாமிய நெறி சோழ மண்டலத்தில் முனைப்போடு பரவி வந்தது. சோழ நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்துவந்த முஸ்லிம்களின் வாழ்க்கை முறையும் சிந்தனைப் போக்கும் பிற சமய மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பனவாக அமைந்தன. அதற்குத் திருச்சியில் அடக்கமாகியுள்ள நத்ஹர் ஒலி போன்ற இஸ்லாமிய மார்க்க ஞான மேதைகள் இடையறாது மக்களிடையே இஸ்லாமிய நெறியை எளிமையாக விளக்கிப் பிரச்சாரம் செய்து வந்ததும் ஒரு காரணமாகும். இதனால் இஸ்லாமிய நெறியின்பால் பொது மக்கள்

மட்டுமல்லாது நாட்டை ஆண்டு வந்த மன்னர்களும் அரசு அதிகாரிகளும்கூட மதிப்பும் மரியாதையும் காட்டி வந்தனர். முஸ்லிம்களுக்கு மார்க்க அடிப்படையில் உதவுவதில் பேரார்வம் காட்டினர். கூன்பாண்டியன் போன்ற ஹிந்து மன்னர்கள் முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதற்கான பள்ளிவாசல்களைக் கட்டிக் கொள்வதற்கான நிலங்களை வழங்குவதிலே மகிழ்ச்சி கொண்டார்கள். ஏக இறைவனை இடையாள் இல்லாது நேரடியாக வணங்கலாம். ஓரிறைக் கொள்கையை ஏற்ற யாரும், வர்ணபேதம், ஜாதி வேற்றுமை இல்லாது யாரும் இறை வேதத்தை அவரவர் தாய் மொழியிலேயே நேரடியாகக் கற்றுத் தெளியலாம். இவ்வாறு மக்களிடையே சமத்துவத்தையும் சகோதரத் துவத்தையும் அழுத்தமாக உருவாக்கும் இஸ்லாமிய நெறியின்பால் மக்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். இதன் விளைவாக மக்கள் வேகமாக இஸ்லாத்தின்பால் இணைந்து வந்தனர். இதனையறிந்த ஸ்ரீராமானுஜர் இஸ்லாம் போன்று வர்ணபேதம், ஜாதி பேதம் பாராட்டாது மனிதர்களுக்காக இறைவன் அளித்த ஹிந்து வேதங்களை நேரடியாக மக்களிடம் கொண்டு சென்று போதிக்க முனைந்தார். அது வரையிலும் வேத மந்திரங்களை யாரெல்லாம் கற்றுக் கொள்ளக் கூடாது. யாரெல்லாம் கேட்கக் கூடாது, யாரெல் லாம் கோயிலுக்குள் நுழையக்கூடாது என ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தார்களோ அவர்களிடம் இறை வேதத்தைக் கொண்டு சென்று அவற்றை அறியச் செய்து, அதன்மூலம் தெய்வத்திடம் மக்களை அழைத்துச் செல்லும் போக்கை யும் போதனைகளையும் மேற்கொண்டு இறைவன்- இறை வேதம்-மக்களுக்கிடையே இருந்த பெரும் இடைவெளி நீங்க இஸ்லாமியச் செல்வாக்கும் பெருந்துணை யாயமைந்ததை அன்றையச் சூழலின் அடிப்படையில் டாக்டர் தாரா சந்த் போன்றவர்கள் ஆய்ந்து கூறித் தெளிவேற்படுத்தியுள்ளார்கள்.

வட இந்தியாவில் பக்தி இயக்கம் தோன்றப் பெரிதும் காரணமாயமைந்தவர் ராமானந்தர் என்பவராவார். காசிமா நகரைச் சேர்ந்த இவர் நீண்ட காலம் முஸ்லிம்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இஸ்லாமிய நெறியை மார்க்க அறிஞர்களிடமிருந்து கேட்டும் விவாதித் தும் தெளிவு பெற்றிருந்தார். இஸ்லாத்தின் உயிர் மூச்சுக் கொள்கையான தவ்ஹீது-ஏகத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் ஹிந்து மதப் பிரச்சாரத்தைச் செய்ய லானார்.

இவரைத் தொடர்ந்து இவர் மாணவர் கபீர்தாஸ் இன்னும் வீறுகொண்ட முறையில் எழுச்சியோடு ஹிந்து மத பக்திப் பிரச்சாரம் வலுவானதொரு இயக்கமாகவே நடைபெற்றது. இவர் ஒரு பிராமண விதவையால் பெற்றெடுக்கப்பட்டு, ஒரு முஸ்லிம் குடும்பத்தவர்களால் வளர்க்கப்பட்டவர். எனவே, இரு சமயச் சார்பும் அவருக்கு அழுத்தமாக இருந்தபடியால் இவரது பக்தி மார்க்கப் பிரச்சாரம் இவரது குருவான ராமானந்தரையும் விஞ்சும் வகையில் அமைந்ததில் வியப்பேதும் இல்லை.

இவரது பக்திப் பிரச்சாரத்தின் மையப் பொருள் ஏகத்துவக் கடவுட் கொள்கையாகவே அமைந்திருந்தது. 'ராமும் ரஹீமும் ஒன்றே' என்பதை மிக அழுந்தத்திருத்த மாகப் பிரச்சாரம் செய்து வந்தார். இரு சமய உணர்வு களுக்கிடையே இருந்த இடைவெளியை குறுக்கி அவற்றிற் கிடையே ஒருவகை இணைப்பையும் பிணைப்பையும் உருவாக்க முயன்றார். இவரது பாடல்களில் மெய்ஞ்ஞான உணர்வுகளாகிய சூஃபித்துவத் தத்துவங்கள் விரவி யிருந்தன. இதற்கு வளமூட்டும் வகையில் அரபி, பார்சி மொழிச் செல்வாக்கும் சற்றுத் தூக்கலாக இருக்கவே செய்தது. இவரைப் போன்றே தாது தயாள் என்பவர் பக்தி

மார்க்கப் பிரச்சாரத்தில் "உருவமற்ற ஒரே இலாஹி நீயாகவே இருக்கிறாய். ராமும் ரஹீமும் நீயாகவே உள்ளாய். கேசவா என்பதுவும் கரீம் என்பதுவும் உன் பெயரேயாகும்" என்று பிரச்சாரம் செய்தார். மகாராஷ்ரத்தில் தோன்றிய ராமதேவர் உருவமற்ற ஒரே இறைவனை வணங்கப் பணித்த இவர், சிலை வணக்க முறையை வன்மையாகக் கண்டித்துத் தன் பக்தி மார்க்கப் பிரச்சாரத்தைச் செய்து வந்தார்.

இவரைத் தொடர்ந்து துக்காரம் என்பவர் பக்தி மார்க்கப் பிரச்சாரத்தை ஒரு இஸ்லாமியனைப் போன்றே செய்து வந்தார். இவரது பக்திப்பாடல்களில் இஸ்லாமிய உணர்வும் சிந்தனையும் நெறியும் பெரிதும் இழையோடின. சான்றாக அவர்,

"பெரிய திருப்பெயர்களில் முதலாவதாக இருப்பது 'அல் லாஹ்' என்பதேயாகும். அதனை ஜெபிக்க மறந்து விடாதே! அல்லாஹ் ஒருவனே. அவனுடைய நபியும் ஒருவரே. அங்கே நீ ஒருவனே. இங்கே நீ ஒருவனே! நண்பனே! நானுமில்லை, நீயுமில்லை!" என்பது அவரது பாடலின் கருத்து. தொடர்ந்து லால்தாஸ், பாபாலால் பிரான்நாத், ராம்சரண், ஜகஜீவன் தாஸ், புல்லா சாஹிப், சந்திரதாஸ், கேசவதாஸ், கரீம்தாஸ், தூலந்தாஸ் போன்ற பலரும் பக்தி இயக்கப் பிரச்சாரத்தை வடபுலமெங்கும் செய்து வந்தனர். இவர்தம் பக்திப் பிரச்சாரத்தின் மையப் பொருள் "இறைவன் ஒருவனே" அவன் உருவமற்றவன் என்பதேயாகும். இதை உறுதிப்படுத்தும் வகையிலேயே இவர் தம் சொல்லும் செயலும் அமைந்திருந்தன.

இதே போன்ற பணியைத் தென்னகத்தில் குறிப்பாக, தமிழகத்தில் சித்தர்களும் சூஃபிகளாகிய மெய்ஞ்ஞானப் புலவர்களும் மிகத் திறம்பட சமய சமரச சன்மார்க்கப்

பணியைத் தமிழ் ஞானப்பாடல் மூலமாகத் திறம்பட பிரச்சாரம் செய்து வந்தார்கள்.

ஞான இலக்கிய சமய சமரசம்

மெய்யறிவாளன் தன்னை ஆராய்வதன்மூலம் இறைவனைப் பற்றியும் ஆராய்கிறான். இப்போக்கே சித்தர்களிடமும் இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகளாகிய சூஃபிகளிடமும் மிகுந்து காணப்படுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சித்தர்களுக்கும் சூஃபிகளாகிய இஸ்லாமிய மெய்ஞ்ஞானக் கவிஞர்களுக்குமிடையே எத்தகைய வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. சித்தர்கள் ஆடம்பர ஆராவாரப் போக்குகளை வெறுத்தார்கள். சாதி, மத, சம்பிரதாயங்களைக் கடந்த நிலையில் அனைவரையும் ஒருசேர நேசித்தார்கள். மனித நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் உழைத்தார்கள். இதே போக்கை முழுமையாகக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் இஸ்லாமிய சூஃபிகள். இதனாலேயே 'பதினெண் சித்தர்கள்' பட்டியலில் மச்சரேகை சித்தர் எனப்படும் ஐதுரூஸ், குணங்குடி மஸ்தான் என அவழக்கப்படும் சுல்தான் அப்துல் காதிர், தக்கலை மெய்ஞ்ஞானி பீர் முஹம்மது அப்பா ஆகிய மூன்று முஸ்லிம் சூஃபிகள் இடம் பெற்றுள்ளார்கள். இதுவே இவர்களுக்கிடையே எண்ணத்திலும் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் போக்குகளிலும் ஒரே விதத் தன்மை இருந்ததற்குச் சான்றாகும்.

கருத்தொற்றுமை மட்டுமல்ல
சொல் ஒற்றுமையும் உண்டு

தாயுமானவரும் குணங்குடி மஸ்தானும் வெவ்வேறு சமயச் சார்புடையவர்களாயினும் அவர்தம் சிந்தனையும்

அதன் வெளிப்பாடான கருத்துகளும் வேறுபாடு காண இயலா வண்ணம் ஒன்றுபோலவே அமைந்துள்ளன. அவர்கள் தங்கள் பாடல்களில் கையாண்டுள்ள சொல்லாட்சியும் கூட ஒரே மாதிரி அமைந்து, உணர்வு ஒற்றுமைக்குக் கட்டியங் கூறுகின்றன.

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி"

எனப் பாடுகிறார் தாயுமானவர்

"அங்கும் இங்கும் என ஒண்ணா அகண்ட
பரிபூரணமாய்
எங்கு நிறைந்த இறையே நிராமயமே

என முழங்குகிறார் குணங்குடி மஸ்தான்.

"பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே!"

என்கிறார் தாயுமானவர்.

"பார்க்கும் இடம் எல்லாம் பரிபூரணமாக
ஏற்கையுடன் நின்ற இயல்பே நிராமயமே!"

என்பது குணங்குடியார் பாடல்

இவ்வாறு சித்தர்களும் சூஃபிகளும் ஒரேவித உணர்வோடும் சிந்தனையோடும் ஏக தெய்வக் கொள்கையையும் சாதி, மதம் கடந்த சகோதரத்துவத்தையும் நிலைநாட்ட பெரிதும் முயன்றிருக்கிறார்கள்.

ஆன்ம நேய ஒருமைப்பாடு காணும் வள்ளலார்

சித்தர்களும் சூஃபிகளும் காண விரும்பிய ஓரிறை உணர்வடிப்படையிலான உலக சகோதரத்துவம் நிலைபெற, புகழ்மிகு சித்தரான திருவருட் பிரகாச வள்ளலார் சிதறுண்டு

கிடக்கும் மக்கள் குலம் ஒன்றுபட, ஆன்மநேய ஒருமைப் பாடு பெறத் தூண்டுகிறார்.

இஸ்லாமியர்கள் ஹஜ் புனிதப் பயணத்தின்போது அணியும் துறவுணர்வூட்டும் இஹ்ராம் வெள்ளுடையான தைக்கப்படாத ஒரு துண்டை இடுப்பிலும் மற்றொரு துண்டை மேலே போர்த்தியும் எப்போதும் காட்சி தரும் வள்ளலார் உருவ வழிபாட்டை விடுத்து ஜோதி வடிவாக இறைவனைக் கண்டு வணங்கிப் போற்றி வந்தார். இவரது இறையுணர்வையே திருமறையாகிய திருக்குர்ஆன்,

> "அல்லாஹ் மண் விண் இவ்விரண்டில்
> ஒளியாய் இருக்கிறான்" (திருக்குர்ஆன் 24:35)

எனத் தெளிவுபடக் கூறுகிறது.

இத்தகு போக்குடைய 'திருவருட்பா'வை சைவ சமயத்தைச் சார்ந்த சிலர் ஏற்காததோடு அதை மருட்பா எனக் கூறி விலக்க முற்பட்டபோது, இறையுணர்வு பூத்துக் குலுங்கும் சமரச சன்மார்க்க நெறி காட்டும் வள்ளலார் பாடல்கள் 'மருட்பா' அன்று, அருட்பாவே யாகும் என்பதை எதிர்ப்பாளர்களிடையே திறம்பட விளக்கி நிலை நாட்டிய சதாவதானி செய்குத்தம்பி பாவலர் சமய ஒற்றுமைக்கும் சமய சமரசத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டாக வரலாற்றில் திகழ்கிறார்.

## சொல் கடந்த ஞான உணர்வு

குணங்குடி மஸ்தான் போன்ற இஸ்லாமிய மெய்ஞ்ஞானி கள் தங்கள் சமய சமரச உணர்வுகளை வெளிப் படுத்த இஸ்லாமியச் சொற்களான அரபுச் சொற்களை எந்த அளவுக்குப் பயன்படுத்தினார்களோ அதே அளவுக்கு இந்து சமயத் தத்துவச் சொற்களான நந்தீஸ்வரன், விட்டுணு, உருத்திரன், சிவன், அம்பலம், சக்தி, தட்சிணா மூர்த்தி

போன்ற சொற்களைத் தாராளமாகக் கையாண்டு தன் ஞானப் பாக்களை இயற்றியுள்ளார். இச்சொற்கள் ஹிந்துக் கடவுள் களின் பெயராகவும் ஹிந்துத் தத்துவ நுட்பங்களைப் புலப் படுத்தும் சொற்களாகவும் அமைந்துள்ளதே, இவற்றை இஸ்லாமிய நெறிபேணும் முஸ்லிமாகிய தான் பயன் படுத்துவதா என அவர் எண்ணவில்லை.

தத்துவவியல் சார்ந்த ஞானத் துறையின் 'பரிபாஷை' சொற்களான இவை தத்துவக் கலைச் சொற்களாகும். இவை ஞானத் துறையில் தனிப்பொருள் கொண்ட சொற்களாகும்.

நந்தி-குரு: விட்டுணு - வாங்கிய மூச்சை உள் நிறுத்தும் கும்பகம்; உருத்திரன் - வெளியிடும் மூச்சாகிய இரேசகம்; சிவன், சக்தி-வெளியே வாயு சிவம்; உள்ளே புகும் வாயு சக்தி; சிவம் உயிர், சக்தி உடல்; அம்பலம்-புருவ நடு; தட்சிணா மூர்த்தி-குரு எனத் தத்துவத் துறையில் தனிப் பொருள் தந்தபோதிலும் தாங்கள் புலப்படுத்த விழையும் ஞானக் கருத்துகள் சமயங்கடந்தவை என்பதை உணர்த்தவே குணங்குடி மஸ்தான் போன்ற இஸ்லாமிய மெய்ஞ்ஞானச் செல்வர்களாகிய சூஃபிகள், ஹிந்துக்கள் சமய அடிப்படை யில் பயன்படுத்தும் சொற்களைத் தாராளமாகக் கையாண்டு தங்கள் சிந்தனைகளையும் மார்க்க உணர்வுகளை-ஞானக் கருத்துகளை சமய சமரச எண்ணத்திற்கு வண்ணமூட்டும் வகையிலும் சமய நல்லிணக்க உணர்வுக்கு வலுவூட்டும் வகையிலும் செயல்பட்டுள்ளனர் என்பது எண்ணி இன்புறத் தக்கதாகும். குணங்குடியார் போன்ற மெய்ஞ்ஞானிகளின் பொதுமை உள்ளம் வழிகாட்டும் ஒளி விளக்காகும்.

### இஸ்லாமிய சூஃபிகளும் ஹிந்து சமயச் சீடர்களும்

சித்தர்களைப் போன்றே இஸ்லாமிய மெய்ஞ்ஞானி களாகிய சூஃபிகளின் சீடர்களாக அமைந்தவர்களில்

பெரும்பான்மையினர் ஹிந்து சமயத்தையும் பிற சமயங் களையும் சேர்ந்தவர்களே ஆவர்.

குணங்குடி மஸ்தான், தக்கலை பீர் முஹம்மது அப்பா, பெண்பாற் சூஃபிகளில் தென்காசி ரசூல் பீவி, இளையான் குடி கச்சிப்பிள்ளையம்மாள் போன்றோர் பெற்றிருந்த சீடர்களில் ஒரு சிலர் தவிர மற்றவர்களெல்லாம் பிற சமயத்தவர்களே ஆவர். காரணம், சூஃபிகளின் சிந்தனை களும் கருத்துகளும் இஸ்லாத்தின் அடிப்படையில் சமயங் கடந்த கண்ணோட்டத்தோடு இருந்ததேயாகும்.

சூஃபியிசத்தின் அடித்தளப் பண்புகளாக அமைந்திருப் பவை மூன்று என்பார் இந்தியச் சூஃபி ஞானி காஜா நஸ்ருத்தீன் என்பார். அவையாவன 1.காய சுத்தி (தஸ்கிய நப்ஸ்) 2. இதய சுத்தி (திஸ்பியா கல்பு), 3 ஆத்ம சுத்தி (தஜ்லியா ரூஹ்) என்ற இம்மூன்று கோட்பாடுகளும் சமயங் கடந்த தன்மை கொண்டவை என்பதில் ஐயமில்லை. இறைநாட்டமும் கடைத்தேற்ற ஆர்வமும் கொண்ட அனைவருக்கும் பொதுவானவை. எனவே, சித்தர்கள், சூஃபிகள் போன்றவர்கள் சமய சமரசத்தைத் தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டதோடு மக்களும் அவற்றைக் கைக்கொண்டு பேணி பெரு நிலைபெற வழிகாட்டி உழைத்தனர்.

### மதபேதம் ஓதி மதிகெட்டவர்க்கு எட்டாத வான் கருணை வெள்ளம்

குணங்குடி மஸ்தான் போன்ற இஸ்லாமிய மெய்ஞ் ஞானக் கவிஞர்கள் சாதி, சமய வேறுபாடுகட்கு அப்பாற் பட்ட நிலையில், ஏக இறையுணர்வோடு, மனித குலம் முழுமைக்குமான 'இலங்கு மெய்ஞ்ஞான' உணர்வுகளை ஊட்டி, ஒவ்வொருவரையும் இறை நெறி வழி வாழும் மனிதப் புனிதர்களாக மாற்றும் அருந்தொண்டை ஆற்றிய

வர்கள். ஆகவேதான், அவர்தம் சமயங்கடந்த அருந் தொண்டை, சமரச சன்மார்க்கப் பணியைப் போற்றிப் புகழ வந்த குணங்குடியாரின் சீடர் மகாவித்துவான் சரவணப் பெருமாளையரவர்கள் தன் நான்மணி மாலையில்

"கடல் சூழ் புவியில் உளத்து: இருளைக்
கருணை ஒளியினால் களைந்து
விடல் சூழ் பவரிற் குணங்குடியான்
மிக்கோன் எனற்கோர் தடையுளதோ"

எனப் புகழ்ந்துரைக்கலானார்.

குணங்குடியார் தன் குருபரனை ஒருபரனாகக் கொண் டாடிடும் சமநோக்கோடு "மதபேதம் ஓதி மதி கெட்டவர்க்கு எட்டாத வான் கருணை வெள்ளம்" எனக் கொண்டாடுவதற் கொப்ப அவர் தம் மாற்றுச் சமயச் சீடர்கள் மதபேதமின்றி அவரைப் போற்றிக் கொண்டாடலாயினர். மத பேதமற்ற சமரச உணர்வு முழுமையாக மக்களிடம் முகிழ்த்தெழ வேண்டும். அத்தகைய பெரு நிலை என்று ஏற்படுமோ என ஏங்கி,

"தீது மத பேதங்கள் அற்றுமே எங்குமிது
செல்வதுவும் எக்காலமோ"

எனப் பாடுகிறார்.

இறைவனின் இன்னருளைப் பெற அழைப்பு விடுக்கும் போதுகூட 'முஸ்லிம்கள்' என்று குணங்குடியார் அழைக்க வில்லை. மத, இன, மொழி உணர்வுகட்கு அப்பாற்பட்ட முறையில் அனைவரையும் சமரச உணர்வோடு அழைக் கிறார்.

"போவோம் குணங்குடிக்கு எல்லோரும்
புறப்படுங்கள்
போவோம் குணங்குடிக்கு எல்லோரும்"

அவர் கூறும் 'குணங்குடி' என்பது ஊரல்ல; அனைத்து நல்லுணர்வுகளுக்கும் நற்குணங்களுக்கும் மூலமான, அவை குடியிருக்கும் மூலப் பொருளான பரம் பொருளையே-இறைவனையே குறிக்கிறது.

இறைவனின் பேரருட் திறம் அணுவிலும் அண்ட கோடிகளிலும் இரகசியமாய் விளங்குவதன் காரணத்தை அறிய விழையாமல் உன் தெய்வம், என் தெய்வம் எனப் பிதற்றித் திரிவதைக் கண்டு,

"அண்ட கோடிகளையும் தன்னுள் வைத் தணுவிணுக்
கணுவான காரணத்தை
அறியாமல் என்தெய்வம் உன்தெய்வம் என்பார்க்கு
அவ்வகைக் காரணத்தை
எண்டிசை விளைக்கின்ற வித்தாயிருந்துமோ
நிடமற்ற காரணத்தை
எய்திக் களிக்கவடி யேனுமுமை நம்பினேன்
எதிர் காட்டி ஆளுதற்கே"

எனத் தன் குரு பிரானாகிய ஹஜ்ரத் முஹையித்தீனை நோக்கிப் பாடுகின்றார்.

இதைப் போலவே விஷ்ணு சுவாமி, மத்வாச்சாரியார், நிம்பார்க்கர் (பாஸ்கராச்சாரியார்) போன்ற ஹிந்து சமயாச் சாரியர்களின்-போதனைகளின் செழுமைக்கும் இஸ்லா மியத் தத்துவச் சிந்தனைகள் உரமாயமைந்துள்ளன என்பதைத் தத்துவ ஆய்வுலகம் நன்கறிந்துள்ளது.

இவ்வாறு ஹிந்து சமய நெறியினுடைய செழிப்பான வளர்ச்சிக்கும் வளமூட்டும் மாறுதல்களுக்கும் இஸ்லாமிய நெறியும் அதன் கட்டுக்கோப்பான நடைமுறைகளும் நேரடி யாகவும் மறைமுகமாகவும் பெருங் காரணமாயமைந் துள்ளதை, அமைந்து வருவதை மறுக்கவோ மறைக்கவோ

முடியாது. இத்தகு பங்களிப்பு மூலம் முஸ்லிம்களும் பிற சமய மக்களும் இதயத்தால் நெருங்கி வர இயல்கின்றது. அவர்களிடையே உருவாகும் இணைப்பும் பிணைப்பும் மேலும் வளர, வலுப்பட இன்னும் அதிக அளவில் சமயத்த வர்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். இது காலக் கட்டாயமும் கூட.

பிற மத உணர்வுகளுக்குப் பாதுகாப்பு

ஒவ்வொருவரும் தத்தமது சமயக் கோட்பாட்டைப் பின்பற்றுவதற்கும் தங்கள் மனச்சாட்சிப்படி நடப்பதற்கும் இஸ்லாம் முழு உரிமை வழங்குகிறது. அது மட்டுமல்ல மற்றுமொரு தனிமனித உரிமையையும் உறுதி செய்கிறது. அதுதான் ஒரு சமயத்தவரின் மத நம்பிக்கையை, சமயச் சடங்கை மற்ற சமயத்தவர்கள் மதித்து நடக்க வேண்டும் என்பதே அது. இந்த உணர்வுக்குப் புறம்பாக நம்பிக்கை, செயல்பாடுகளுக்கு மாறுபாடாக நடப்பதை இஸ்லாம் அறவே ஏற்கவில்லை. இதைத் திருக்குர்ஆன் திருமறை,

"(நம்பிக்கையாளர்களே) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (ஆண்டவன் என) அழைக்கின்றார் களோ அவற்றை நீங்கள் பழிக்காதீர்கள்." (6:108)

இவ்வாறு பணிப்பது சிலைகளையும் கடவுளர் உருவங் களையும் வணங்குவதை மட்டுமன்று, தாங்கள் பெரிதும் மதித்துப் போற்றும் தலைவர்களின் உருவங்களை சிலை வடிவிலும் படவடிவிலும் வணங்கிப் போற்றுவதற்கும் பொருந்தும். ஒரு முஸ்லிமின் மார்க்க அடிப்படையில் இத்தகைய உருவ வணக்கமுறை தவறானதாக இருந்த போதிலும், பிற சமயத்தவர்களின் கண்ணோட்டத்தில் இச்செயல் மதிப்பும் மரியாதையும் உடைய செயலாகக் கருதப்படலாம். இதனால், இச்செயலை இழித்து பழித்து பேசுவதால் அச்சமயத்தவர்களின் அல்லது போக்குடைய

வர்களின் மனம் புண்படலாம். எனவே இதை ஏற்புடைய செயலாக இஸ்லாம் ஏற்காமல் அதை அடியோடு தவிர்க்க வேண்டும் எனக் கட்டளையிடுகிறது.

அவ்வாறாயின், பிற சமயங்களைப்பற்றி, கொள்கை கோட்பாடுகளைப்பற்றிப் பேசவோ, விவாதிக்கவோ அறவே கூடாதா எனக் கேட்கலாம். பிற சமயங்களைப் பற்றி பேசுவதையோ விவாதிப்பதையோ இஸ்லாம் அறவே தடைசெய்யவில்லை. இத்தகைய கலந்துரையாடல்கள், விவாதங்கள் பிற சமயத்தவர்களின் மனம் எக்காரணம் கொண்டும் புண்பட்டு விடாதபடி மிகவும் கவனத்தோடும் உயர்ந்த பண்பாட்டோடும் நடைபெற வேண்டும் என்பதை இஸ்லாம் மிகவும் அழுத்தமாக வலியுறுத்துகிறது. இதையே திருமறை,

"வேதம் பெற்றுள்ள மக்களோடு பண்பட்ட அழகிய முறையிலன்றி விவாதம் செய்யாதீர்கள்"

எனப் பணிக்கிறது. இக்கட்டளையானது வேதங்களை யுடைய மதத்தவர்ட்கு மட்டுமின்றி பிற சமய நம்பிக்கை யாளர்கட்கும் பொருந்தும்.

பிற சமயங்களை மதிக்கப் பணிப்பதோடு அவற்றிற்குப் பாதுகாப்புக் கேடயமாகவும் செயல்படத் தூண்டுகிறது இஸ்லாம்.

### இஸ்லாத்தின் பிற சமயப் பரந்த நோக்கு

உலகிலுள்ள ஒவ்வொரு சமயமும் தத்தமது சமயத் தைப் பாதுகாப்பைப் பற்றியே பெரிதும் பேசுகின்றன; வலி யுறுத்துகின்றன. ஆனால் இஸ்லாம் மார்க்கம் மட்டுமே இறைவணக்கத் தலமாகிய மஸ்ஜிதுகளைப் பாதுகாப்பது பற்றிப் பேசுவதைவிட பிறசமய வணக்கத் தலங்களாகிய யூத ஜெபாலயங்கள், கிருஸ்தவ மாதா கோயில்கள் போன்ற

*இறை வணக்கத் தலங்களைப் பாதுகாப்பது பற்றியே அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டுவதை இறை மறையாகிய திருக்குர்ஆன் மூலம் அறிந்தின்புற முடிகிறது.*

*"அல்லாஹ் சில மனிதர்களை வேறுசில மனிதர்களைக் கொண்டு தடுத்து விலக்காதிருந்தால் மடாலயங்களும் மாதா கோயில்களும் யூத ஜெபாலயங்களும் அல்லாஹ்வின் திருநாமம் அதிகமதிகம் தியானிக்கப்படும் மஸ்ஜிதுகளும் தகர்க்கப்பட்டே போயிருக்கும்"*
*(திருக்குர்ஆன் 22-40)*

*தொடக்கத்தில் முஸ்லிம்கள் உருவ வழிபாட்டை விடுத்து ஒரே இறைவனை மனத்தளவில் எண்ணி வணங்கும் இஸ்லாத்தின் ஏக தெய்வக் கொள்கையை ஏற்காத குறைஷிகள் முஸ்லிம்களைச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கினார்கள். ஏக தெய்வ இறை நம்பிக்கையிலிருந்து இம்மியும் பிசகாத முஸ்லிம்கள், பிறந்த மண்ணை விட்டு, சொத்து சுகங்களைத் துறந்து செல்ல நேர்ந்த போதும்கூட ஓரிறைக் கொள்கையை நிலை நாட்ட அனைத்துத் தியாகங்களையும் மனமுவந்து ஏற்றவர் கள் முஸ்லிம்கள், சிலை வணக்க உருவ வழிபாட்டாளர் களாகிய குறைஷிகளுக்கு அடுத்த நிலையில் யூத மதத்தவர் களும், கிருஸ்தவ வழிபாட்டாளர்களாக விளங்கியவர்கள் தாம். ஆயினும் கூட அவர்களின் வணக்கத் தலங்களின் பாதுகாப்புக்குக் கட்டியங் கூறுகிறது இஸ்லாமியத் திருமறை என்பது எண்ணத் தக்கதாகும். பல தெய்வ, சிலை வணக்க வழிபாட்டாளர்கள் தாங்களாக உணர்ந்து தெளிந்து ஏக தெய்வக் கொள்கையை ஏற்கும்வரை அவர்களது சமய உணர்வுகளை, வழிபாட்டுச் சமய சம்பிரதாயங்களை அவற்றிற்கு நிலைக்களனான வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என இஸ்லாம் போதிக்கிறது. இஸ்லாம் தவிர வேறு சமயங்கள் எதுவும் இத்தகைய*

உணர்வை, கட்டளையைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிய வில்லை. பிற சமயச் சகிப்புத் தன்மைக்கும், மத நல்லிணக் கத்துக்கும் இதைவிடச் சிறந்த சான்றை உலக வரலாற்றில் காண முடியுமா?

முதலில் வந்த வேத சமயம் என்பதால் முதலிடத்தை யூத சமயத்திற்கும் இரண்டாவது வேதம் பெற்ற சமயம் என்பதால் கிருஸ்தவ மாதா கோயில்களுக்கும் இறுதியாக வந்த வேத மார்க்கம் என்பதால் இஸ்லாமிய மஸ்ஜிதுகள் மூன்றாவது இடத்தையும் பெறுகின்றன.

இந்த இறைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டகாலச் சூழ லைக் கருத்திற்கொண்டு நோக்கும்போதுதான், இதன் கன பரிமாணம் எத்தகையது என்பதை நம்மால் உணர்ந்து தெளிய முடியும்.

அன்றைய யூத மத ஜெபாலயங்கள் செல்வ வளம் மிக்க வைகளாகத் திகழ்ந்தன. பொன்னும் மணியும் குவிந்துள்ள கருவூலங்களாகவே விளங்கின. எனவே, இப்பொருள் வளங்களைக் கவர்வதற்காக இச் ஜெபாலயங்களைத் தாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது வரலாறு தரும் தகவல்கள். அதேபோன்று அக்கால மடாலயங்களிலும் மாதா கோயில்களிலும் இளம் பெண்கள் 'கன்னிகாஸ்திரீ' களாகத் தங்கி இறைத் தொண்டில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகிறது. அத்துடன், செல்வச் செழிப்பும் கொண்ட மடாலயங்களையும் மாதா கோயில்களையும் தாக்கும் முயற்சிகள், தீயவர்களால் அவ்வப்போது மேற்கொள்ளப் பட்டன. அத்தகைய செயல்கள் முஸ்லிம்களால் முறியடிக் கப்பட்டு, யூத மத ஜெபாலயங்களும் கிருஸ்துவ சமய மடாலயங்களும் மாதா கோயில்களும் காக்கப் பட்டன. 1450 ஆண்டுகட்கு முன்னதாக இஸ்லாத்தினால் கட்டிக் காக்கப் பட்டு நிலை நிறுத்தப்பட்ட இத்தகைய மதச்

சகிப்புணர்வோடு அவற்றைக் காக்கும் சமய தாராளக் கொள்கையின் விளைவாகவே பழம்பெரும் யூத, கிருஸ்துவ வணக்கத் தலங்கள் பலவும் இன்றளவும் நிலை பெற முடிந்தது என்பதுதான் வரலாறு தரும் பேருண்மை.

சமய உணர்விலா 'நாடாளும் மன்னர்கள்'

முஸ்லிம் மன்னர்களாகட்டும் ஹிந்து மன்னர்களா கட்டும் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் போரிடு வதோடு நாடு பிடிக்கும் வேட்கையுடையவர்களாகவே வரலாற்றில் காணப்படுகிறார்கள். அந்த வகையில் முஸ்லிம் மன்னர் களில் சிலரிடம் இஸ்லாமிய உணர்வை விட 'நாடாளும் மன்னர்கள்' என்ற உணர்வே மேலோங்கி யிருந்ததை அவர்தம் செயற்பாடுகள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. இதில் ஹிந்து, முஸ்லிம் என்பதெல்லாம் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகிறது என்பதைப் பல வரலாற்று நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. இதற் கேற்பவே அவர்தம் படைத் தளபதிகளும் அமைந்தனர்.

கஜினியின் படைத் தளபதியாக விளங்கியவர் திலக் எனும் ஒரு ஹிந்துவே என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். திலக் கஜினியின் வெற்றியே குறியாகக் கொண்டிருந்தவர். கஜினி ஆட்சிப் பகுதியில் எங்கு என்ன குழப்பம் அல்லது அமைதியின்மை அல்லது புரட்சி ஏற்பட்டாலும் அங்கு சென்று வீர தீரத்துடன் போராடி அடக்கி வெற்றி பெரும் வல்லமை கொண்டவர். ஒரு சமயம் துருக்கிப் பகுதியில் முஸ்லிம்களிடையே மூண்டெழுந்த மாபெரும் சச்சரவை அடக்க கஜினி தளபதி திலக்கையே அனுப்பினார். முஸ்லிம் மக்களை மிகக் கொடூரமான முறையில் அடக்கினார் திலக். இதைப்பற்றி வரலாற்று வல்லுநரான பி.என். பாண்டே என்பவர் கூறுகிறார் :

*"கஜினி முகம்மதுவின் சேனைத் தளபதியாக இருந்தவர் ஒரு ஹிந்து. அவர் பெயர் திலக். மத்திய ஆசியாவில் உள்ள துருக்கிஸ்தானில் கஜினி முகம்மது ஆட்சியில் புரட்சி ஏற்பட்டது. அதை அடக்க கஜினிமுகம்மது, திலக்கைத் தான் அனுப்பினார். துருக்கிஸ்தான் நூற்றுக்கு நூறு சதவிகிதம் முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசம். அங்கே நடந்த புரட்சியை அடக்குவதற்கு கஜினியின் தளபதி திலக் செய்த அட்டூழியங்களுக்கும் அதிமதிகளுக்கும் அளவே இல்லை. அந்த நிகழ்ச்சிக்கு ஒப்பாக வரலாற்றில் மற்றொரு கொடிய நிகழ்ச்சியை எடுத்துக் கூறமுடியாது. அத்தகைய அராஜகம் நடந்தது. இதையெல்லாம் மதப்போர் என்பதா? கஜினி முகம்மதுவின் தளபதி திலக் முஸ்லிம் பிரதேசத்தில் செய்த அட்டூழியத்தை என்னவென்று கூறுவது?" (வரலாற்றறிஞர் பி என்.பாண்டே 13-1-1996 'தி டைம்ஸ் ஆஃப் இண்டியா' பேட்டியில்)*

மன்னர் செயல்களுக்கு மதச் சாயம்

வரலாறு நெடுகிலும் ஒரு உண்மை பளிச்சிடுகிறது. மன்னர்களின் போர் நடவடிக்கைகளுக்கு மதச் சாயம் பூசும் செயலே அது. தங்கள் தவறான ஆதிக்க நோக்குக்குப் பாதுகாப்புத் தேடும் முயற்சி இது. சிலசமயம் 'ராஜதந்திரப் போக்கு' என மகுடம் பெறுவதுமுண்டு. இதைப் பற்றி வரலாற்றறிஞர் பி.என்.பாண்டே கூறுவதைக் கேட்போம்.

"இஸ்லாத்தின் பெயரைக் கூறி முஸ்லிம் மன்னர்கள் போர்களை நடத்தியுள்ளனர். அதேபோல மற்ற மதங்களைச் சேர்ந்த மன்னர்களும் தத்தமது மதங்களின் பேரால் பல போர்களை நிகழ்த்தியுள்ளனர். இத்தகைய போர்களுக்கும் மதங்களுக்கும் சம்பந்தமில்லை. மன்னர்கள் தங்களின்

ஆதிக்கப் போக்கிற்கு, மதங்களைப் பகடையாகப் பயன் படுத்தியுள்ளனர் என்பதே உண்மை"

*(தி டைம்ஸ் ஆஃப் இண்டியா இதழில் பி.என்.பாண்டே)*

ஜிஹாதின் பெயரில் அரசியல் மோசடி

எங்காவது முஸ்லிம் மன்னர்கள் ஒரு நாட்டை ஆக்கிர மிக்கவோ அல்லது ஆளும் பகுதியை விஸ்தரிக்கவோ படையெடுப்பு நிகழ்த்தினால் அதை 'இஸ்லாமிய ஜிஹாது'எனக் குறிப்பிடுவது மிக மோசமான மோசடி யாகும். முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் இஸ்லாம் பற்றிய பல தவறான கருத்துகள் பரப்பப்பட்டுள்ளன. அவற் றுள் ஒன்று 'ஜிஹாது' என்பதுமாகும். முஸ்லிம் அல்லாத வர்களிடையே மட்டுமல்ல முஸ்லிம்களிடை யிலும் இஸ்லாமிய நெறியின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து தெளியாநிலை இருந்து வருவதை மறுப்பதற்கில்லை.

சுருங்கச் சொன்னால் இஸ்லாத்தைப் பற்றிய மிகத் தவறான பிரச்சாரத்துக்கு 'ஜிஹாது' என்ற சொல் பயன் படுத்தப்பட்டு வருகிறது. எங்காவது முஸ்லிமிகளிடையே தீவிரத் தன்மை தலைதூக்கினால் அதை 'ஜிஹாது' என்ற சொல்லால் குறிப்பிடுவது இன்று வழக்கமாகி விட்டது. தீவிரவாதத்துக்கும் சாந்தி சமாதான மார்க்கமான இஸ்லாத்துக்கும் தொடர்பே இல்லை என்பது மிகத் தெளிவான உண்மை.

**ஜிஹாதின் உண்மைப் பொருள் என்ன?**

ஒரு முஸ்லிம் மேற்கொள்ளும் ஜிஹாதுவினுடைய நோக் கம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதை "வ ஜாஹிதூ ஃபீஸபீலிஹி" என்ற சொற்றொடர் மிகத் தெளிவாகக் கூறு கிறது. இதற்கு 'அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்யுங் கள்' என்பது பொருளாகும்.

## இரு வகைகளில் 'ஜிஹாது'

திருக்குர்ஆன் அடிப்படையில் ஜிஹாது இருவகைப் பட்டதாக அமைந்துள்ளது. ஒன்று 'ஜிஹாதுல் அஸ்கர்'; மற்றொன்று 'ஜிஹாதுல் அக்பர்'.

ஒரு முஸ்லிம் தனக்கோ அல்லது தன்னைச் சார்ந்தவர்களுக்கோ ஆபத்து வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து என்று வரும் போது அதை உடனடியாக எதிர்த்துப் போராடுவது அவன் செய்யும் 'ஜிஹாதுல் அஸ்கர்'. தன்னைப் பாதுகாத்துக் கொள்வது வன்முறையும் அல்ல, தீவிரவாதமும் அல்ல! சுருக்கமாக இதை வெளிப்பகையை அல்லது பகைவர்களை எதிர்த்துப் போராடுதல் எனக் கூறலாம்.

மற்றொன்று 'ஜிஹாதுல் அக்பர்' ஆகும். இதற்கு 'மாபெ ரும் போராட்டம்' என்பது பொருளாகும்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் கண், காது, மூக்கு, வாய், மெய் (உடம்பு) என்னும் ஐம்பொறிகள் உண்டு. இவற்றோடு தொடர்புடையவை ஐம்புலன்கள் ஆகும். இதை ஹிந்து மதத் தத்துவத்தில் 'ஐந்திரியங்கள்' எனக் கூறுவர்.

இத்தகைய ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் ஆற்றலைப் பெறுவதற்குப் பெரும் முயற்சி செய்து போராடி, ஆன்றவிந்தடங்கிய சான்றோர் ஆவதற்கு முயற்சிப்பதே மாபெரும் ஜிஹாது ஆகும். இதையே வள்ளுவரும்,

> உரனெனும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
> வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

எனக் கூறினார்.

அதாவது அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி ஆள்பவன் அறிவுக்கு வித்துப் போன்றவனாவான் என்பது அவர்தம் கருத்தாகும்.

## வேட்டை நாயும் வெறி நாயும்

இதே கருத்தை இன்னும் அழகான உவமான, உவமேயங்களுடன் சிந்தைகொள் மொழியில் எடுத்தியம்பு கிறார் குணங்குடியார் அவர்கள்.

மாசற்ற மனமே தெளிவான சிந்தனைகளும் ஆன்மீக உணர்வுகளும் பூத்துக் குலுங்கும் தோட்டம். மனதைப் புனிதப்படுத்துபவன்தான் இறையருள் நாட்டத்தை எளிதாகப் பெறமுடியும். வேட்டை மேற் செல்பவன் வேட்டைப் பொருளை எளிதாகப் பெற வேட்டை நாய் களைத் துணைக்குக் கொண்டு செல்வான். அவன் கண்ணில் படும் வேட்டைப் பொருளை எசமானனின் குறிப்பிற்கேற்ப விரைந்து சென்று பிடித்து வந்து சேர்க்கும். வேட்டை நாய்களுக்குப் பதிலாக வெறி நாயைத் துணைக் கொண்டு வேட்டைக்குச் சென்றால், அது வேட்டைப் பொருளைப் பாய்ந்து சென்று பற்றி வராததோடு, தன்னைக் கொண்டு சென்ற வேட்டைக்காரன்மீதே பாய்ந்து கடித்துக் குதறி காயமேற்படுத்திவிடும் இதேபோன்று, இறையருள் பெற விரும்புபவன் அன்பு, அருள் ஆகிய இனிய பண்புகளைக் கைக் கொண்டால், அவற்றின் துணை கொண்டு இறை யன்பை - அருளை எளிதாகப் பெறலாம். மாறாக வேட்டை நாய் போன்று அவா, வெகுளி, ஆசை, அகங்காரம், இன்னாச் சொல் போன்றவற்றைக் கைக்கொண்டு இறை யருள் பெற விழைந்தால், இறையன்பை - அருளைப் பெற முடியாமற் போவதோடு, இத்தீய குணங்களே அவன் அழிவுக்கும் காரணமாக அமைந்து விடும் என்பதை,

"வேட்டை பெரிதென்றே வெறி நாயைக் கைப்பிடித்து
காட்டிற் புகலாமோ கண்ணே றகுமானே"

என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார் குணங்குடி மஸ்தான்.

பிறருக்குத் தீயன எண்ண அல்லது செய்ய உள்ளத் தளவில் உருக்கொண்டெழும் தீய உணர்வுகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுதலே சிறப்புமிகு செயலாகும். அதுவே 'ஜிஹாதுல் அக்பர்' ஆகும்.

இவ்விரண்டையும் இன்னும் சிறிது ஆழ ஆராய்ந்தால் இவற்றின் உன்னதச் சிறப்புகள் தெற்றன விளங்கும்.

சாந்தி - சமாதான மார்க்கமாக இறைவனால் அறிவிக்கப் பட்டுள்ள இஸ்லாத்தில் ஆக்கிரமிப்புக்கு இடமே இல்லை. ஒரு முஸ்லிம் முதலில் யார் மீதும் தாக்குதல் நடத்தவோ, போர் தொடங்கவோ, அன்றி எதிரியின் நிலத்தையோ பொருளையோ ஆக்கிரமிப்புச் செய்யவோ இஸ்லாம் அனு மதிக்கவில்லை. ஆனால், அதே சமயம் பிறரால் முஸ்லிம் கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகும்போதோ அல்லது பிறர் படையெடுத்து வரும்போதோ அல்லது ஆக்கிரமிப்புச் செய்யும் போதோ தற்காப்புக்காக போரிடுவதையும் அதன்மூலம் வெற்றி பெறுவதையும் இஸ்லாம் தடை செய்யவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆரம்ப காலத்தில் வாணிபம் செய்யும் பொருட்டு சிந்துவெளிப் பகுதிக்கு வந்து தங்கியிருந்த அரபு வணிகர்கள் அப்பகுதியை ஆண்ட ஹிந்து மன்னர்களாலும் மற்றவர்களாலும் பெரும் பாதிப்புக்கு ஆளானார்கள். பாதுகாப்பற்ற நிலையில் சிந்து வெளிப் பகுதியில் வணிகத் தொழில் புரிவது பெரும்பாடாக இருந்தது. இதையறிந்த அரபக ஆட்சித் தலைவர்கள் சிந்து வெளிப் பகுதி அரபு வணிகர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையிலேயே அப்பகுதிக்கு முகம்மத் பின் காசிம் என்பவர் படையுடன் அனுப்பி வைக்கப்பட்டாரே யன்றி, அப்பகுதியை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு படை கொண்டு இந்திய மண்ணில் கால் பதிக்க வரவில்லை என்பதுதான் வரலாறு.

தற்காப்புக்கே போர்

இஸ்லாம் யாரோடும் சண்டையிடுவதை அறவே விரும்பவில்லை. வம்புச் சண்டைக்கு வருவோரை எதிர்க்க நேரிடும் போதுகூட தற்காப்புக்காகச் சண்டையிடுவதையே அனுமதிக்கிறது. நியாயமற்ற எதிரியின் தாக்குதலை எதிர்த்துப் போரிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும் கூட, போர் என்பது கடைசி ஆயுதமாகத்தான் இருக்க வேண்டுமெனப் பணிக்கிறது. போரைப் 'பகைமையின் கருவி' என இஸ்லாம் கடிந்துரைக்கிறது.

"உன்னை எதிர்த்துப் போரிடுவோரை எதிர்த்து அல்லாஹ்வுக்காகப் போரிடு ; ஆனால், அவர்களை முதலில் நீ தாக்கி விடாதே. ஆக்கரமிப்பாளர்களை அல்லாஹ் விரும்புவதில்லை" எனத் திருக்குர்ஆன் எடுத்தியம்புகிறது.

இதற்குக் கட்டியங் கூறும் மற்றொரு சான்றாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பிரிவான படைப்போர் இலக்கியங்கள் விளங்குகின்றன. தமிழில் புதுவகை இலக்கியங்களாக உருவாக்கப்பட்ட படைப்போர் இலக்கியங்கள் 18 உண்டு. இவ்விலக்கியங்களின் தலைப்புகள் அனைத்தும் கதாநாயகர், அல்லது நாயகிகளின் பெயரில் அமையாது, எதிரிகளின் பெயரிலேயே அமைந்துள்ளன. சாதாரணமாக யார் படையெடுத்து செல்கின்றாரோ அல்லது போருக்குக் காரணமாக அமைகின்றாரோ அவர் பெயரால் இலக்கியப் படைப்பின் தலைப்பு அமைவதுதான் மரபு. ஆனால், முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் உருவாக்கிய படைப்போர் இலக்கியங்கள் அனைத்துமே முஸ்லிம் அல்லாதவர்களின் எதிரிகளின் பெயராலேயே அமைந்துள்ளன. இவ்வாறு முஸ்லிம்களின் மீது ஆக்கிரமிப்பாகப் படையெடுத்து வந்த முஸ்லிம் அல்லாத எதிரிகளின் பெயராலேயே 'இரவுசுல் கூல் படைப்போர்', 'செய்யிதத்துப் படைப்போர்',

'இபுனியன் படைப்போர்', 'வடோச்சிப் படைப்போர்', 'உச்சிப் படைப்போர்' என அழைக்கப்படுவது எண்ணத் தக்கதாகும்.

இரண்டாவது பொருளான 'தீயன செய்யத் தூண்டும் உள்ளத்து விலங்குணர்வை எதிர்த்துப் போரிடுதல்' என் பதையே திருக்குர்ஆன் திருமறையும் பெருமானாரின் வாழ்வும் வாக்குமான ஹதீஸ்களும் அதிகமதிகம் வலி யுறுத்துகின்றன. இதற்கான பயிற்சிக்களமாக உருவானதே இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் துறையான 'சூஃபியிஸம்'. தன் மன இச்சைகளுக்கு அடிமையாகாமல் அதனை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதுதான் 'ஜிஹாது'.

தவறான செயல்களைச் செய்வோரைத் திருத்தி அவர்களை நேரான செயல்களின்பால் திருப்புகின்ற செயலும் 'ஜிஹாது' தான்.

தான் முயன்று தேடிய செல்வத்தை இறைவழியில் செலவு செய்வதும் 'ஜிஹாது' ஆகும்.

எனவே, 'ஜிஹாது' என்ற சொல்லை 'முஸ்லிமல்லாத வர்கள்மீது நடத்தும் புனிதப் போர்' எனத் தவறான பொருள் விளக்கம் தந்து இஸ்லாமிய நெறி மீது மாசு கற்பிக்க முயல் வது முற்றிலும் தவறான போக்காகும். இதை உண்மைக்குப் புறம்பான ஒருவகை விஷமப் பிரச்சாரம் என்றே கூறலாம்.

பிற சமயத்தவர்மீது 'ஜிஸ்யா' வரி ஏன்?

'ஜிஹாது' போன்றே இஸ்லாமியரல்லாதவர்களால் மிகத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு அல்லது தவறான முறையில் பொருள்தரும் வகையில் விளக்கப்பட்டு வரும் இஸ்லாமியச் சட்டச் சொல் 'ஜிஸ்யா' என்பதாகும்.

முஸ்லிம்களிடம் எவ்வித வரியும் வாங்காத நிலையில் 'முஸ்லிம் .அல்லாதவர்' என்ற ஒரே காரணத்துக்காகத்

தண்டத் தீர்வை போன்று வசூலிக்கப்பட்ட வரி என்ற மனப் பிரமையே ஆங்கில எழுத்தாளர்களாலும் இஸ்லாமிய விரோதப் போக்குள்ளவர்களாலும் இதுவரை ஏற்படுத்தப் பட்டு வந்துள்ளது.

அவர்கள் கருதுவதுபோல் 'ஜிஸ்யா' என்பது முஸ்லி மல்லாதவர்களிடமிருந்து கட்டாயமாக வசூலிக்கும் தண்டத் தீர்வையோ அல்லது அபராதத் தொகையோ அன்று. பின், ஏன் இந்தத் தனி வரி?

இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்களால் கொடுக்கப்பட்டு வந்த சிறு வரியே இது. இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாத பிற சமயக் குடிமக்கள் போர்ப் படைகளில் சேருவதினின்றும் விலக்குப் பெறும் பொருட்டும், சமுதாய வாழ்வில் தம் உயிர் உடைமை களுக்கு முழுப் பாதுகாப்புப் பெறும் பொருட்டும் அரசுக்கு இச்சிறு வரியைச் செலுத்தி வந்தனர்.

மன்னரின் ஆட்சியின்கீழ் வாழும் அனைத்து இன, சமய மக்களும் இராணுவத்திலும் பிற சமுதாயப் பணியிலும் தேவைப்படும்போது இணைந்து நின்று சேவையாற்ற வேண்டியது 'குடிமக்கள் என்ற முறையில் அனைவரின் இன்றியமையாக் கடமையாகும் என்பது எல்லோரும் ஒப்ப முடிந்த உண்மையாகும்.

ஆனால், இஸ்லாமிய ஆட்சியில் போர்ப்படையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பது கட்டாய விதி யாகும். ஆனால், இவ்விதி முஸ்லிமல்லாதவர்கட்குக் கட்டாயமில்லை. விரும்புபவர் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றலாம். விரும்பாதவர் 'ஜிஸ்யா' எனும் மிகச் சிறு தொகையை வரியாகச் செலுத்தியிருந்தால் அவர்கள் முழு அளவில் விலக்குப் பெறலாம். இவ்வாறு வசூலிக்கப்படும் 'ஜிஸ்யா' வரி முழுக்க சமுதாய நலப் பணிக்காக மட்டுமே

செலவிடப்படுமேயன்றி அரசு நிர்வாகக் காரியங்களுக்கோ அறவே செலவிடப்படுவதில்லை. சுருங்கச் சொன்னால் முஸ்லிம் அல்லாதவர்களின் ஒட்டுமொத்தச் சமுதாய நலனுக்கும் பாதுகாப்புக்குமென வசூலிக்கப்பட்ட தொகையே 'ஜிஸ்யா'. இந்த ஜிஸ்யா வரியின் பெரும் பகுதி ஹிந்துக் கோயில்களின் பராமரிப்புக்கும் புனருத்தாரணத்துக்கும் பயன்படுத்தப்பட்டு வந்ததாகப் பல வரலாற்றுக் குறிப்புகள் காணக் கிடக்கின்றன.

அதுமட்டுமல்ல, முஸ்லிம்களிடமிருந்து இரண்டரை சதவீதம் 'ஜக்காத்'எனும் ஏழை வரியை அரசு கட்டாயமாக வசூலித்து வந்தது. ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்ற வேண்டிய ஐம்பெரும் கட்டாயக் கடமைகளில் இஃதொன்றாகும். நாட்டு மக்களில் ஜக்காத்துக்குரியவர்கள் அனைவருக்கும் சமநிலையில் இத்தொகை பகிர்ந்தளிக்கப்படும். நாட்டு மக்களில் முஸ்லிம்களிடமிருந்து மட்டுமே 'ஜக்காத்' தொகை வசூலிக்க முடியும். பிற சமயத்தவர்களாகிய பிற குடிமக்களிடமிருந்து 'ஜக்காத்' தொகை வசூலிக்க முடியாதாகையால், அதற்குப் பகரமாக ஜக்காத் அளவுக்கு 2 1/2 சதவிதம் இல்லாவிடினும் ஒரு சிறுதொகையை தான் வரியாக முஸ்லிமல்லாதவர்களிடமிருந்து அரசு வசூலித்தது. ஜக்காத் தொகையைவிட 'ஜிஸ்யா' தொகை மிகச் சிறியதாகும். 'ஜக்காத்', 'ஜிஸ்யா' இரு தொகைகளும் சமுதாய மக்களின் நலப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட்டன. மிகக் குறைவான 'ஜிஸ்யா' தொகையை அரசுக்குத் தந்து நிறைய பயன்களை அரசிடமிருந்து திரும்பப் பெறும் வாய்ப்பு இதனால் முஸ்லிம் அல்லாதாருக்கு வாய்த்தது. இதைத் தெளிவாக நன்குணர்ந்த பிற சமய மக்கள் மிகுந்த விருப்போடு மனமுவந்து 'ஜிஸ்யா' சிறு வரியை அரசுக்கு அளித்து வந்தனர் என்பது வரலாற்று உண்மை.

அதிலும்கூட, பெண்கள் , வயது முதிர்ந்தோர், சிறுவர் கள், துறவிகள், பார்ப்பனர்கள், பாதிரிகள், தம் சமயப் பணியில் ஈடுபட்டிருப்போர், பார்வையிழந்தோர், உடல் ஊனமுற்றவர்கள், தீராப் பிணியால் பீடிக்கப்பட்டோர் ஆகியோரிடமிருந்து 'ஜிஸ்யா' வரி வசூலிக்கக் கூடாது என்பது விதியாகும்.

இந்த வரியை முஸ்லிம் மன்னர்கள் வசூலித்தது போன்று பதினான்காம் நூற்றாண்டில் யூத சமயக் குடி மக்களிடமிருந்து அன்றைய ஹிந்து மன்னர்கள் வசூலித்த தாக வரலாறு கூறுகிறது.

இஸ்லாமியர் ஆட்சியில் முஸ்லிமல்லாத குடிமக்கள் எக்காரணம் கொண்டும் அநீதிக்கு ஆளாகி விடக்கூடாது. அவ்வாறு நேரின் ஆட்சியாளர்கள் அல்லாஹ்வின் கொடுந் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது. இதைப் பற்றி அண்ணலார் அவர்கள் மிகக் கடுமையாகக் கருத்துரைத் திருக்கிறார்கள்.

"எவரேனும் முஸ்லிம் அல்லாத குடிமக்களைக் கொடு மைப்படுத்தினால், இறுதித் தீர்ப்பு நாளின்போது அக் கொடியவர்களுக்கு எதிராகக் கொடுமைப்படுத்தப்பட்டவர் கள் சார்பில் நான் வாதாடுவேன்." என்று நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உண்மை இவ்வாறு இருக்க, இதற்கு மாறுபட்ட கருத்தையும் உணர்வையும் வரலாற்றாசிரியர்களான ஆங்கிலேயர்கள் வேண்டுமென்றே திரித்துக் கூறி, முஸ்லிம் களுக்கும் பிற சமயத்தினருக்குமிடையே வேறுபாட்டுணர் வும் அதன் மூலம் ஒற்றுமையின்மையும் என்றென்றைக்கு மாக நீடிக்கச் செய்யும் சதிச் செயலேயன்றி வேறில்லை என்பதை அறிவுலகம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது.

மனிதர்களுக்கிடையே எந்த வித வேறுபாட்டுணர்வை யும் வெளிப்படுத்தி, அவர்களை வருத்துவதை இஸ்லாம் அறவே அனுமதிக்கவில்லை. மற்றவர்களிடையே அன்பை யும் பாசத்தையும் பொழிந்து, இணக்கத்தோடு வாழ வழி வகுக்கிறது. இத்தகு செயற்பாடும் அண்டை வீட்டாரிட மிருந்தே தொடங்கப்பட வேண்டுமென இஸ்லாம் விதிக்கிறது.

## அண்டை வீட்டிலிருந்து அகில உலக அமைதி

சமுதாயத்தின் அடிப்படை அலகாக அமைவது குடும்பம். சாந்தியையும் சமாதானத்தையும் உயிர் மூச்சாகக் கொண்ட இஸ்லாம் உலக அமைதிக்கான பணி அண்டை வீடுகளிடை யே உருவாகி நிலைபெறும் உறவைச் சார்ந்தே அமைய முடியும் என்ற கருத்தை அழுத்தமாக உணர்த்து கிறது.

அண்டை வீட்டினரிடையே உறுதிப்படும் உறவின் உன்னதம் சங்கிலிக் கோர்வையாக வீடு, தெரு. ஊர், நாடு உலகம் என விரிந்து சிறக்கிறது. அஃது ஒருமைப்பாட்டின் இணைப்புப் பாலமாகவும் அமைகிறது. எனவேதான், அடுத்தடுத்துள்ள அண்டை வீட்டாரின் கடமைகளைப் பற்றி இஸ்லாம் பெரிதும் அறிவுறுத்துகிறது. அண்டை வீட்டார் கைக்கொண்டொழுகத்தக்க கடமைகளைப் பற்றிப் பெருமா னார் பெரிதும் பேசியுள்ளார்.

அண்டை வீட்டார் உறவினர்களாகவோ உறவினர் அல் லாத முஸ்லிம்களாகவோ அல்லது முஸ்லிம் அல்லாத பிற சமயத்தவர்களாகவோ இருக்கலாம். அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடம் இன, மத, மொழி வேறுபாடு அறவே இல்லாது அவர்களிடம் நேசமும் பாசமும் காட்டிப் பழக வேண்டும். அன்பும் பண்பும் கொண்டு ஒருங்

கிணைந்து, ஒத்துவாழ எல்லாவகையிலும் முயல வேண்டும்.

'ஒரு முஸ்லிமின் சமுதாய நல உணர்வு அவனது அண்டை வீட்டாரிடமிருந்து தொடங்கப்பட வேண்டும்'. என இஸ்லாம் விதிக்கிறது.

இதற்கு அடித்தளமான உணர்வையும் சிந்தனையையும் ஊட்டும் வகையில் திருமறை,

"பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள் (அவ்வாறே) உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினருக்கும், அண்டை வீட்டின ரான அந்நியருக்கும் (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் உங்கள் ஆதிக்கத்திலிருப்போருக்கும் (அன்புடன் நன்றி செய்யுங் கள்) எவன் கர்வங்கொண்டு, பெருமையாக நடக்கின் றானோ அவனை, நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை." (திருக்குர்ஆன் 4:36) என்பது திருமறை தரும் வாக்கமு தாகும்.

சமுதாயத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறத் தக்கவர்களில் அண்டை வீட்டாரே எல்லா வகையிலும் முன்னுரிமை பெறத்தக்கவர்களாக அமைகின்றனர். இதையே பெருமானார் (சல்) அவர்கள்,

"தனது அண்டை வீட்டாருக்கு நல்லவராயிருப்பவரே இறைவன் திருமுன் அனைவரினும் மேலானவராவார்" என்றும்,

"தன் அண்டை வீட்டாருக்கு நன்மை செய்பவர்தான் உண்மையான நம்பிக்கையாளராவார்" என்றும்,

"நீங்கள் நன்மை செய்பவர் என்று அண்டை வீட்டுக்காரர் கூறினால் நீங்கள் நல்லவர்" எனக் கருதப்படு வீர்கள். அல்லா மல் நீங்கள் தீமையே செய்பவர் என்று அண்டை வீட்டுக் காரர் கூறினால் நீங்கள் தீயவராகவே கருதப்படுவீர்" என்றெல்லாம் கூறுவதன்மூலம் ஒருவர் தன் அண்டை வீட்டாருடன் எவ்வாறெல்லாம் சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

எது அண்டை வீடு?

ஒருவரது வீட்டையொட்டியோ அல்லது அருகாகவோ அமைந்துள்ள வீடா? அல்லது அவன் வீட்டிற்கு நான்கு அல்லது எட்டுத் திக்கிலும் அடுத்தடுத்து அமைந்துள்ள வீடுகளா?

இக்கேள்விக்கு விடை கூறவந்த இஸ்லாம் 'ஒருவனது வீட்டின் அனைத்துத் திக்கிலும் அமைந்துள்ள நாற்பது வீடு கள் அண்டை வீடுகளாகக் கருதப்படும்' எனத் தெளிவுபடக் கூறுகிறது.

தான் வாழும் வீட்டைச் சுற்றி மட்டுமல்ல, தன் பணியிடத்திலோ அல்லது பயணத்திலோ இருக்கும்போது தன் அருகிருப்போரும் அண்டையராகவே கருதப்படுவர். இவர்கள் அனைவருடனும் ஒரு முஸ்லிம் அன்புடனும் பரிவுடனும் நடந்துகொள்ள வேண்டும். அவர்கட்கு உதவியோ ஒத்துழைப்போ தேவைப்படும்போது, அவர்கள் கேட்காமலே, நாமாகவே முன் சென்று உதவ வேண்டும். அவர்கள் அந்நியராக இருந்தாலும், அந்நியச் சமயங்களைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர்தம் உணர்வுகளை, நம்பிக்கைகளை நாம் பெரிதும் மதித்து நடக்க வேண்டும். அவர்களது கொள்கைகளும் கோட்பாடுகளும் இஸ்லாமிய நெறி முறைகளுக்கு வேறுபட்டும் மாறுபட்டும் இருந்

தாலும் அண்டை அயலார் என்ற முறையில் அவர்களின் உணர்ச்சிகளோ நம்பிக்கைகளோ ஊறுபட்டுவிடாமல், உள்ளம் புண்பட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்பதை இஸ்லாம் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது.

அதுமட்டுமல்ல, நம் அண்டை அயலாருக்கு ஏதேனும் தீங்கு, வெளியிலிருந்து மற்றவர்களால் ஏற்படுகிறது என்றால் இனம், உறவு, மதம் எதுவும் பார்க்காமல் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கும் முழுப் பொறுப்பு அண்டை வீட்டுக்காரர் என்ற முறையில் ஒரு முஸ்லிமின் இன்றியமையாக் கடமையாகிறது.

"எவருடைய தீங்கிலிருந்து அண்டை வீட்டார் பாது காப்புப் பெற முடியவில்லையோ, அவன் சுவர்க்கத்தில் நுழைய மாட்டான்" என்பது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் அமுத மொழியாகும்.

இவ்வாறு யாராக இருந்தாலும் எவ்வகையான வாழ்க்கை நெறியை, சமயக் கோட்பாடுகளைப் பின்பற்று பவர்களாக இருந்தாலும் அவர்களை சமுதாயத்தின் இன்றியமையா அங்கமாகக் கருதி, அவர்கள் உணர்வு களையும் சமய நெறிகளையும் கொள்கைக் கோட்பாடு களையும் வெறுத்தொதுக்காது, உதாசீனப்படுத்தாது, அவர்கள் அளவில் மதிக்கும் உன்னதமான சகிப்புணர்வு வெளிப்பாட்டின்மூலம் சமுதாய ஒருங்கிணைவை உருவாக்க இஸ்லாம் வழிகாட்டுகிறது.

அண்டை வீட்டாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண் டும் என்பதற்கு அண்ணலாரின் வாழ்வும் வாக்கும் வழிகாட்டியாயமைந்துள்ளன.

மதீனாவில் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் வாழ்ந்து வந்தபோது அவரது அண்டை வீட்டுக்காரராக இருந்த மாற்றுச் சமயத்தவரான யூதர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

பெருமானாரின் வீட்டில் ஏதாவது சிறப்புணவு தயாரிக்கப்பட்டால், அதன் ஒரு பகுதியை அவருக்கு அளிக்காமல் அண்ணலார் சாப்பிட்டது இல்லை என்ற தகவல் ஹதீஸில் காணப்படுகிறது.

“அண்டை வீட்டார் பசித்திருக்க ஒரு முஸ்லிம் வயிறார உணவு உண்ணக் கூடாது. அவ்வாறு உண்பவன் உண்மையான இறை நம்பிக்கையாளனாக இருக்க முடியாது” என்பது அண்ணலாரின் புகழ் பெற்ற பொன்மொழியாகும்.

அண்டை வீட்டார்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி அன்பளிப்புகள் வழங்கிக் கொள்ள வேண்டும். பரிமாறிக் கொள்ளும் அன்பளிப்புப் பொருட்கள் அற்பமானவையாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் அன்பைப் பெருக்கிக் கொள்ள, பாசத்தைப் பகிர்ந்து கொள்ள, அதன் மூலம் சாந்தியும் சமாதானமும் உருவாக வாய்ப்பாயமைகிறது. எனவேதான்,

> “அண்டை வீட்டார் அளிக்கும் எப்பொருளையும்
> அற்பமாகக் கருதக் கூடாது”

என அறிவுரை கூறியுள்ளார் அண்ணலெம் பெருமானார் (சல்) அவர்கள்.

சாதாரணமாக அண்டை, அயலார்க்கு எதையேனும் அன்பளிப்பாகத் தர விரும்பினால், அப்பொருள் சிறந்ததாக இருக்க வேண்டும் என எண்ணுவது இயல்பு. அதிலும் இவ்வுணர்வு பெண்களுக்குச் சற்று அதிகமாகவே உண்டு என்பது உளவியல் தரும் உண்மை. எனவேதான் குறிப்பாகப் பெண்களை நோக்கி,

"பெண்களே! ஓர் அண்டை வீட்டார் அன்பளிப்பாக ஒரு பொருளை தனது அண்டை வீட்டாருக்குக் கொடுத்தால் அதனை அற்பமானதாக கருதக் கூடாது; அது ஒரு ஆட்டின் குழம்பானாலும் சரியே". எனக் கூறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எவ்வளவு அற்பமான பொருளாயினும், அதனை முகம் சுழிக்காது, விமர்சிக்காது அன்போடு பெற்று மகிழ வேண்டும். கொடுக்கப்படும் பொருளைவிட, கொடுக்க விழைந்த உள்ளத்து உணர்வையே பெரிதாகக் கருத வேண்டும். அதன்மூலம் அண்டை வீட்டாரை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்பது அண்ணலாரின் அறிவுரையாகும்.

அண்டை வீட்டாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு உணவு சமைக்க முற்படும் போதே மனதில் உருக்கொள்ள வேண்டும் என்கிறார் பெருமானார் (சல்) அவர்கள்.

"வீட்டில் கறி சமைக்கும்போது அண்டை வீட்டாரைக் கருத்தில் கொண்டு குழம்பை (நீர் ஊற்றி) பெருக்கிக் கொள்வீர்களாக" என்பது நபிமொழியாகும்.

ஒரு சமயம் நபித் தோழர் ஒருவர் நபிகள் நாயகம் (சல்) அவர்களை நோக்கி,

"வீட்டின் இரு பக்கத்திலும் இரு வீட்டார் அண்டை வீட்டுக்காரர்களாக இருக்கிறார்கள். ஆனால், நம் தேவை போக மீந்திருப்பது மிகக்குறைவான சிறுபொருளே. இந்த அன்பளிப்பை ஒருவருக்கு மட்டுமே கொடுக்கவியலும். இந்நிலையில் அதை யாருக்கு அளிப்பது?" என்று ஒரு வினாத் தொடுத்தார். அதற்கு விடையளிக்க முனைந்த பெருமானார் அவர்கள்,

அவ்விரு அண்டை வீட்டாருள் உனக்கு மிக அருகாக வாசலை உடையவருக்கு அந்த அன்பளிப்பை வழங்கு வீராக எனக் கூறித் தெளிவுபடுத்தினார் மனிதப் புனிதர் மாநபி அவர்கள்.

ஒரு சமயம் நாயகத் திருமேனியிடம் ஒரு சஹாபி,

'ஒரு பெண் நோன்பு நோற்பதன் மூலமும் தொழுகை, தான தர்மங்களால் பலரும் பாராட்டும் நிலைபெற்றிருந்தும் தன் நாவினால் தன் அண்டை வீட்டார்களைத் துன்புறுத்து கிறாள்...' எனக் கூறிய மாத்திரத்தில்,

'இதன் காரணமாக அவள் நரகத்திலிருப்பாள்' எனப் பதிலளித்தார் அண்ணலார் அவர்கள், மேலும் நாயகத் திருமேனி அவர்கள்,

"இறுதித் தீர்ப்பு நாளில் அனைத்துக்கும் முதலாக (விசாரணைக்கு) வரும் இரு மனிதர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு இரு அண்டை வீட்டார் பற்றியதாகும்."

எனக் கூறியதன் மூலம் அண்டை வீட்டாரின் உறவின் தன்மை எத்தகு வலிமையானது என்பதை உணர்த்துகிறார் அண்ணலார் அவர்கள்.

இரு அண்டை வீட்டார்களில் ஒருவர் மற்றவர்க்கு ஏதேனும் தீங்கிழைத்திருக்கலாம்: அவையே மறுமை நாளின் இறுதித் தீர்ப்புக்கான விசாரணையின்போது மிகப் பெரும் குற்றமாகக் கருதப்பட்டு, விசாரணையில் முந்துரிமை பெறும் என்பது நாயகத் திருமேனியின் உட்கிடக்கையாகும்.

இவ்வாறு மக்களின் உரிமைகள் தொடர்பான அனைத்து அம்சங்களிலும் சிறப்பான முதலிடம் அண்டை வீட்டுக்காரர்களின் உரிமைக்கே என்பதை இஃது தெளி வாக்குகிறது.

இதை வலியுறுத்தும் வகையில் இத்தகைய நிலை ஏற்படா வகையில் அண்டை வீட்டார் எவ்வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பெருமானார் (சல்) அவர்கள் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்துகிறார்.

அண்டை வீட்டார் உம்மிடம் ஆதரவு வேண்டினால் அவரை ஆதரிப்பீராக! உதவிகோரினால் உதவி புரிவீராக! அவருக்குத் தேவை ஏற்பட்டால் உபகாரம் செய்வீராக! அவர் நோயுற்றிருந்தால் சென்று விசாரிப்பீராக! இன்னும் அவர் மரணமடைந்தால் அவர் ஜனாஸாவின் பின் செல்வீராக! அவருக்கு நன்மை ஏற்பட்டால் மனமாற வாழ்த்துவீராக! அவருக்குத் துன்பம் ஏதும் ஏற்பட்டால், அவரைத் தேற்றுவீராக! அவர் வீட்டுக் காற்றைத் தடுக்கும் முறையில் (உயரமான) கட்டடம் எழுப்பாதிருப்பீராக! நீர் ஒரு பழம் வாங்கும்போது அவருக்கும் (ஒரு துண்டு) அளிப்பீராக! நீர் (அவ்வாறு) செய்ய இயலாவிட்டால் உமது வீட்டிற்கு இரகசியமாகக் கொண்டு செல்வீராக! மேலும், அவருடைய குழந்தைகள் பெருமூச்சு விடும்படி உமது குழந்தைகள் அந்தப் பழத்துடன் வெளியேறாதிருக்கச் செய்வீராக!''

என்றெல்லாம் பெருமானார் அவர்கள் கூறுவதன் மூலம் ஒரு முஸ்லிம் தன் அண்டை, அயலார் மனம் எவ் வகையான பாதிப்புக்கும் ஆளாகாதவாறு கண்ணும் கருத்து மாக நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

இவ்வாறு அண்டை வீட்டாரிடம் அழுத்தம் கொள்ளும் அன்புப் பிணைப்பு தெரு அளவில், பின்னர் ஊர் அளவில், அடுத்து நாட்டு அளவில் வளர்ந்தோங்கி உலக அளவில் நிலைபெறும் இத்தகு இனிய சூழ்நிலை அரசோச்சும்போது அற்பக் காரணங்களுக்காக உருவெடுக்கும் இனக்

கலவரமோ சமயச் சண்டையோ, வகுப்பு மோதலோ அல்லது நாடுகளுக்கிடையே போரோ தலைதூக்க வாய்ப்பே இல்லாது போவதோடு மனித வாழ்க்கை இன்பப் பூங்காவாகவும் மாறி விடுமே!

## முஸ்லிம் ஆனவன் முஸ்லிம் ஆகாத பெற்றோரிடமும் உற்றாரிடமும் நடக்க வேண்டிய முறை யாது?

ஒரு முஸ்லிம் அண்டை அயலாரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனப் பணிக்கிறதோ அதேபோன்று புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர் பிற சமயத்தைச் சார்ந்த தன் பெற்றோரிடமும் உற்றார் உறவினரிடமும் எம்முறையில் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெளிவாக வழிவகை களைக் கூறுகிறது.

பிற சமயத்தைச் சார்ந்த ஒருவர், இஸ்லாமியக் கொள்கை, கோட்பாடுகளின்பால் ஈர்க்கப்பட்டவராக, அதன் இறைநெறி உணர்ந்து தெளிந்தவராக 'கலிமா' சொல்லி தீன் நெறியாகிய இஸ்லாமிய நெறியில் தன்னை முழுமையாக இணைத்து முஸ்லிம் ஆகிவிடுகிறார். அவரது வாழ்க்கைப் போக்கும் இறைவழிபாட்டு முறைகளும் முந்தைய சமயப் போக்கினின்றும் முற்றிலும் மாறுபட்ட தாக அமைகிறது. இஸ்லாமிய நெறிமுறைகளை முற்றாகப் பேணி வாழ முனைகிறார்.

ஆனால், இவரைத் தொடர்ந்து இவருடைய பெற்றோரோ உற்றார் உறவினர்களோ யாரும் இஸ்லாம் ஆகவில்லை. அவர்கள் அனைவரும் தங்கள் மதச் சம்பிரதாயப்படியே வாழ்கிறார்கள். இந்நிலையில் இஸ்லாத்தில் இணைந்து முஸ்லிமாகியவர் பிற சமயத்தைச் சார்ந்த பெற்றோர்களிடமும் உற்றார் உறவினர்களிடமும் தன் அன்பை, பாசத்தை, தன் இரத்தபந்த உறவை, உணர்வை எவ்வாறு பேணிக் காப்பது?

இதற்கு இஸ்லாமியத் திருமறையாகிய திருக்குர் ஆன் எல்லோரும் ஒருமுகமாக ஏற்றுப் போற்றத்தக்க வழிமுறையை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது?

புதிதாக இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம் ஆனவர் பிற மதத்தைச் சார்ந்துள்ள தன் பெற்றோர், உற்றார் உறவினரிடம் எவ்விதப் பாகுபாடும் வேற்றுமை உணர்வும் அறவே காட்டக் கூடாது. எப்போதும்போல் அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் பணிக்கிறது.

“உன் பெற்றோர் இறைவனுக்கு இணை வைத்து வணங்குவதை வலியுறுத்தினால் அதை நீ ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதே என்றாலும் உன் பெற்றோரிடம் நீ என்றும்போல் இனிமையுடன் ஒன்றிணைந்து நடந்து கொள்வாயாக.”

எனக் கூறுவதன்மூலம் முஸ்லிம் ஆன ஒருவன் முஸ்லிம் ஆகாத பிற சமயம் பேணும் தன் பெற்றோரிடம் எவ்வாறு சிறப்பான முறையில் நடந்து கொள்ள வழி காட்டுகிறதோ அதே முறையில் முஸ்லிம் அல்லாத உற்றார் உறவினர்களிடமும் அன்போடு இதமாக நடந்து கொள்ள வேண்டும் எனப் பணிக்கிறது. தான் இணைந்ததுபோல் தன் பெற்றோரோ மற்ற இனப் பந்துக்களோ இணைய வில்லையே எனக் கருதி அவர்களிடம் தார தம்மியமோ பாகுபாடோ காட்டி நடப்பதைக் கடும் குற்றமாக இஸ்லாம் கருதுகிறது.

## பிற மத உணர்வை ஊனப்படுத்த உரிமை இல்லை

பிற சமயச் சார்புள்ளவர்கள் குடும்பத்தவர்களாக இருந்தாலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அல்லது மாற்றாரா யினும் அவர்களது சமய உணர்வை வெளிப்படுத்த அவர்கட்கு முழு உரிமை உண்டு. அவர்களது உணர்வும்

கருத்தும் நமக்குப் பிடிக்காவிட்டாலும் அவர் சமய உணர்வுகளை மதிக்க வேண்டுமே தவிர எதிர்க்கக் கூடாது. சமயப் பொறையை ஒவ்வொருவரும் அணிகலனாகப் பூண்டிருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வேணவா.

ஒருவர் எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்த போதிலும் அவரது சமய நம்பிக்கைகளை, சட்டதிட்டங் களை, சடங்கு சம்பிரதாயங்களை எக்காரணம் கொண்டும் இழிவுபடுத்தவோ, குறைகூறவோ, குறைத்து மதிப்பிட் டுரைக்கவோ ஒரு முஸ்லிமுக்கு எந்த உரிமையும் இல்லை என இஸ்லாம் எடுத்தியம்புகிறது. இதற்குத் திருக்குர்ஆனில் மட்டுமல்ல, இறுதித் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்க்கையிலும் எத்தனையோ சான்றுகளைக் காணமுடிகிறது. அவற்றில் ஒரு நிகழ்ச்சி மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது.

நபிகள் நாயகத்தின் நம்பிக்கைக்குரிய நற்றோழராக விளங்கியவர் அபூபக்ர் (ரலி) அவர்கள். அண்ணலாரின் வலக்கரமாக ஆரம்பம் முதல் இறுதிவரை திகழ்ந்தவர்.

ஒரு சமயம் அவர் கடைவீதிக்குச் சென்று, தனக்கு வேண்டிய சில சாமான்களை ஒரு யூதன் கடையில் வாங்க முற்பட்டார். கடைக்கார யூதர் தான் கூறிய விலையை உறுதிப்படுத்த யூதர்கள் வழக்கமாகக் கூறும் “உலகிலுள்ள அனைவரையும் விட மூஸா (அலை) அவர்களை சிறப் புடையவராக்கிய இறைவன் மீது ஆணையாக” என்ற வாக்கியத்தைக் கூறி, தான் சொன்ன விலையை அறுதி யிட்டு உறுதிப்படுத்தும் வகையில் கூறினார். இவ்வாச கத்தைக் கேட்ட அபூபக்ர் (ரலி) அவர்களின் முகம் சினத்தால் சிவந்து விட்டது.

“உலகிலுள்ளவர்களிலெல்லாம் உயர்ந்த மூஸா” எனப் புகழ்கிறாயே, அப்படியானால் அனைத்து நபிமார்களுக்கும்

தலைவராக விளங்கும் அண்ணல் நபி (சல்) அவர்களுக்கும் மேலானவரா மூஸா (அலை) எனக் கேட்டதோடு யூதரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தும் விட்டார். அடிவாங்கிய யூதர் நபிகள் நாயகத்திடம் நீதி கேட்டு வந்து நின்றார். நபிகள் நாதர் தக்க முறையில் நீதி வழங்குவார் என்பது அவரது திட நம்பிக்கை.

கன்னத்தில் அறைவாங்கிய யூதரின் வாதத்தைக் கேட்ட பெருமானார், தன் அன்புக்குரிய அணுக்கத் தோழரான அபூபக்ர் அவர்களை வழக்கு மன்றத்துக்கு அழைத்து, 'ஏன் அவர் கன்னத்தில் ஓங்கி அறைந்தீர்கள்? என அபூபக்ரை நோக்கிக் கேட்டார் அண்ணலார் அவர்கள்.

'இறுதித் திருத்தூதர் ஏந்தல் நபியைவிட மூஸா (அலை) அவர்களை உயர்த்திக் கூறியதைக் கேட்கப் பொறுக்காமல் கோபத்தில் அறைந்ததாகக் கூறினார். இதைக் கேட்ட அண்ணலார் அவர்களின் முகம் கடும் சினத்தால் சிவந்து விட்டது. இருப்பினும் பொறுமையோடு அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி 'மூஸாவை விட என்னைச் சிறப்பாக்காதீர். அவ்வாறு ஆக்குவது தவறு' எனக் கூறித் தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கிலிருந்தும் தீர்ப்பிலிருந்தும் பல உண்மைகள் நமக்குத் தெளிவாகிறது. மாற்றுச் சமயத்தவரான யூதர் 'அனைவரிலும் உயர்ந்தவர் மூஸா (அலை)' அவர்கள்' எனத் தன் யூதச் சமயச் சார்பான, யூதர்களின் கொள்கையை வெளிப்படுத்த யூதருக்குப் பூரண உரிமை உண்டு என்பதை பெருமானார் ஏற்றார். அதோடு அக்கொள்கை வழிப்பட்ட கருத்தைப் புலப்படுத்துவதைத் தடுக்க அல்லது தலையிட யாருக்கும் உரிமையில்லை என்பதைப் பெருமானார் உறுதிப்படுத்தினார். தன் அணுக்கத் தோழரான அபூபக்ர் அவர்கள் மீது கடுங்கோபம் கொண்டதன் மூலம் பிற சமய

நம்பிக்கையாளர்களின் நம்பிக்கைகளை மதிக்க வேண்டுமே தவிர, அவர்கள் மீது நம் நம்பிக்கைகளைத் திணிக்க முற்படக் கூடாது என்பதை அண்ணலெம் பெருமானார் அவர்கள் அழகுற உணர்த்திக் காட்டினார்.

அதுமட்டுமல்ல வழக்கு என்று வந்துவிட்டால் நீதியின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதை எல்லா வகையிலும் மெய்ப்பிக்கும் வகையில் இச்சம்பவம் மூலம், ஒவ்வொரு சமயத்தினரும் தத்தமது சமயக் கொள்கை களைப் பகிரங்கமாக வெளிப்படுத்த பூரண உரிமை உண்டு என்பதை உலகுக்குணர்த்திக் காட்டினார்கள் பெருமானார் (சல்) அவர்கள்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய மற்றோர் சிறப்பம்சம் நபிமார்களுக்கிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற தார தம்மியமில்லை. அனைவரும் சமமானவர்களே என்பதை உணர்த்தவே அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி பெருமானார் அவர்கள் 'மூஸா (அலை) அவர்களைவிட என்னை சிறப்பாக்காதீர்கள்' என்று கூறினார்கள்.

மதச் சுதந்திரம் அடிப்படை உரிமை

ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்று தன் விருப்பம்போல் தான் விரும்பி ஏற்றுள்ள சமயத்தைப் பின்பற்றியொழுகும் உரிமையாகும். ஒரு சமயத்தைப் பின்பற்றி, அதன் சட்டதிட்டங்களின்படி வாழும் ஒருவரை எக்காரணம் கொண்டும் அவ்வாறு ஒழுகுவதினின்றும் தடுப்பதோ அல்லது நேர்முகமாகவோ அன்றி மறைமுகமாகவோ கட்டாயப்படுத்த முற்படுவதை இஸ்லாம் கடுமையாக எதிர்க்கிறது.

"மார்க்க விஷயத்தில் எவ்விதக் கட்டாயமும் இல்லை"

என்ற திருமறை வாக்கிற்கிணங்க ஒரு முஸ்லிம் மாற்றுச்

சமயத்தாரை எந்த வழிமுறையைப் பின்பற்றியும் மத மாற்றத்திற்குக் கட்டாயப்படுத்தக் கூடாது என்பதில் மிக உறுதியாக உள்ளது. அதேபோன்று மாற்றுச் சமயத்தாரும் ஒரு முஸ்லிமிடம் எத்தகு கட்டாயத்தையோ அல்லது கட்டாயச் சூழல் உருவாக்கத்தையோ இஸ்லாம் உறுதி யுடன் எதிர்க்கிறது.

இதை பெருமானார் நபித்துவம் பெற்ற பின், மக்கத்தில் வாழ்ந்த பதின்மூன்று ஆண்டு காலத்தில் அவரும் அவரது தோழர்களும் மாற்று மதத்தைச் சேர்ந்த சிலை வணக்கக் குறைஷிகளால் பட்ட பெருந்துன்பங்கள் மூலம் நன்கு உணர்ந்திருந்தார்கள். அக்கால கட்டம் முழுவதும் நபிகள் நாயகமும் நபித் தோழர்களும் தாங்கள் விரும்பி ஏற்றுப் பின்பற்றி வந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பேணும் உரிமையை நிலைநாட்ட மேற்கொண்ட போராட்ட வாழ்க்கையாகவே அமைந்திருந்தது. தாங்கள் எந்த மார்க்க உரிமைக்காகப் போராடினார்களோ அதே போன்ற மதச் சுதந்திரம் மாற்றுச் சமயத்தார்க்கும் உண்டு என்பதை மிக நன்றாக உணர்ந்திருந்தார்கள். எனவே, ஒவ்வொரு சமயத் தாருக்கும் தத்தமது சமயத்தைப் பேண, பின்பற்றி வாழ, முழு உரிமை உண்டு; அஃது அவர்களின் ஜீவதார உரிமை என உலகுமுன் உரத்த குரலில் இஸ்லாம் பிரகடனம் செய்கிறது.

மக்காவில் சிலை வணக்கச் சமயத்தைச் சேர்ந்த குறைஷி களால் பெருமானாரும் அவரது தோழர்களும் பெருந்துன்பத் திற்காளான சமயத்தில்தான்,

> "உங்கள் மார்க்கம் உங்களுக்கு; அவர்கள்
> மதம் அவர்கட்கு"

என்ற புகழ்பெற்ற இறை வசனம் வேதமொழியாக வெளிப்பட்டு மத உரிமையை நிலை நாட்டியது.

## தலைப்பாகையை தூது அனுப்பிய பெருமானார்

பெருமானாருக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரிகளாக விளங்கிய மக்கா குறைஷிகளில் குறிப்பிடத்தக்க ஒருவர் ஸப்வான் இப்னு உமையா என்பவராவார்.

மக்கா வெற்றிக்குப் பின்னர் பலரும் இஸ்லாத்தை ஏற்றனர். ஆனால் இவர் இஸ்லாத்தை ஏற்காதிருந்தார். ஆரம்ப காலம் முதலே பெருமானாருக்கும் முஸ்லிம் களுக்கும் அளவிலா துன்பங்களையும் தொல்லைகளையும் கொடுத்து வந்ததோடு இரு சாராருக்குமிடையே நடை பெற்ற போர்களில் முஸ்லிம்களில் பலரைக் கொன்றவரும் கூட. இதனால் மக்கா வெற்றிக்குப் பின்னர் பெருமானாரும் பிற முஸ்லிம்களும் தன்னைக் கடுமையாகத் தண்டிக்கலாம் எனக் கருதி மக்காவைவிட்டு வெளியேறி குன்றுப் பகுதி களில் ஒளிந்து வாழ்ந்தார்.

இதையறிந்த நாயகத் தோழர்களில் ஒருவரான ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் பயத்தால் ஓடி ஒளிந்துள்ள ஸப்வானை மன்னிக்கும்படி வேண்ட, பெருமானாரும் பெருமனதோடு மன்னித்தார். மலைக் குன்றுகளில் உமர் (ரலி) ஸப்வானைத் தேடிக் கண்டுபிடித்து இதைக் கூறியபோது அவர் இதை நம்பவில்லை. காரணம், முஸ்லிம்களுக்குகெதிராகப் பெரும் கொடுமைக்காரனாகயிருந்த தன்னை அண்ணலார் மன்னிக்கவே மாட்டார் என்பது அவர் எண்ணமாக இருந்தது. இதையறிந்த பெருமானார் உமர் (ரலி) மூலம் தன் தலைப்பாகையை கொடுத்தனுப்பினார். தலைப் பாகையைக் கண்ட பின்னரும் ஸப்வான் நம்பிக்கை கொள்ளாது போகவே உமர் (ரலி) அவரை வற்புறுத்தி பெருமானாரிடம் அழைத்துச் சென்றார். ஸப்வானை நேரில் கண்ட பெருமானார், ஸப்வான் அதுவரை செய்த குற்றங்கள் அனைத்தையும் மன்னித்து விட்டதாகக் கூறினார்.

விரும்பும்போது இஸ்லாத்தை ஏற்கலாம்

இதைக் கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்த ஸப்வான் தான் இஸ்லாத்தை ஏற்க இரண்டு மாத கெடு கேட்டார். தாங்கள் விரும்பும் காலத்தை எடுத்துக் கொள்ளலாம். அதுவரை பழைய சிலை வணக்கச் சமயத்திலேயே இருந்து கொள்ள லாம் எனக் கூறினார். அப்போது முதல் ஸப்வான் அண்ண லாருடனேயே இருக்கத் தொடங்கினர். ஆயினும் தன் சமயக் கொள்கை, கோட்பாடுகளைப் பின்பற்றியே வந்தார். அப்போது, ஹுனைன் என்ற பகுதியில் சண்டை நடந்தது. ஸப்வான் அண்ணலாருடன் போர்க்களம் சென்ற போதிலும் ஸப்வான் போரிடாமல் நடுநிலை வகித்தார். இறுதியில் பெருமானாருக்குப் பெரு வெற்றி கிடைத்தது. வெற்றி பெற்ற பொருட்களை, போரிடாது நடு நிலை வகித்த ஸப்வான் ஆசையோடு வெறித்துப் பார்ப்பதைக் கண்ணுற்ற பெருமானார். 'ஸப்வான்! இப்பொருட்களின் மீது உங்கட்கு விருப்பமிருந்தால் வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளுங் கள்' என மகிழ்வோடு கூறினார்.

முஸ்லிம்களுக்கு காலமெல்லாம் மாளாத துன்பங் களைத் தந்துவந்த தன்னை மன்னிப்புக்குப் பிறகும் இஸ்லாத்தில் இணைய கடுகளவும் வற்புறுத்தாது, பழைய சிலை வணக்கச் சமயத்திலேயே இருக்க அனுமதித்த பெருமானார், அன்னிய சமயத்தவனான, முஸ்லிம்களோடு சேர்ந்து போரிடாத நிலையிலும் போரில் கிடைத்த வெற்றிப் பொருள்களை விரும்பும் அளவு எடுத்துக் கொள்ள அனுமதித்த அண்ணலாரின் தயாளம், கருணை ஸப்வானை வெட்கித் தலைகுனியச் செய்துவிட்டது. அண்ணலாரின் சமயப் பொறை, ஸப்வானை இஸ்லாத்தில் இணையச் செய்தது.

இறுதிவரை இஸ்லாத்துக்கு விரோதியாக இருந்த ஸப் வானை மக்கா வெற்றிக்குப் பிறகு கடுமையாகத் தண்டித்

திருக்க முடியும். கட்டாயப்படுத்தி அல்லது அத்தகு சூழலை ஏற்படுத்தி இஸ்லாத்தில் இணையத் தூண்டியிருக்கலாம். ஆனால், எதையுமே செய்யாது மன்னித்த பெருமானார், முந்தைய சமயத்திலேயே ஸப்வானைத் தொடர அனுமதித்ததோடு, போர்க்களத்தில் பரிசும் அளிக்க முன் வந்தார் பெருமானார்.

இறை வாக்கையும் பெருமானார் பெருவாழ்வையும் வாழ்க்கையின் இரு கண்களாகக் கொண்டு பேணிவரும் முஸ்லிம்கள் வாளால் இஸ்லாத்தைப் பரப்பினர் எனக் கூறுவது உண்மைக்கு முற்றிலும் புறம்பான புரட்டு வாதமாகும்.

இறைவன் நாடியிருந்தால் ஒரு விநாடியில் அத்துணை மனிதர்களின் மனத்துள்ளும் இஸ்லாமிய உணர்வைப் பாய்ச்சி உலகிலுள்ளோர் அனைவரையும் முஸ்லிம்களாக்கி யிருக்க முடியுமே, ஏன் அவ்வாறு நிகழவில்லை. தன்னால் படைக்கப் பட்ட ஒவ்வொரு மனிதரும் தன்னைப் பற்றியும் தாங்களாகவே சுய உணர்வோடு சிந்தித்து தெளிந்து இஸ்லாத்தின்பால் இணைவதையே இறைவன் பெரிதும் விரும்புகிறான். இதே கருத்தைத்தான் தன் நபியை நோக்கிக் கூறுவது போல் திருமறையில்,

“(நபியே!) உம் இறைவன் விரும்பியிருந்தால், பூமியில் உள்ள அனைவருமே ஒன்றுபட்டு நம்பிக்கையாளர்களாகி யிருப்பார்கள். (எனவே) மனிதர்கள் (யாவருமே) நம்பிக்கையாளர்களாகி விட வேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா!” (திருக்குர்ஆன் 10:99)

இதே போன்ற மற்றொரு இறைவசனமும் திருமறை யில் காணப்படுகிறது.

“நாம் விரும்பினால் அவர்களுடைய கழுத்துகள் பணிந்து குனிந்து வரும்படி (வேதனை) செய்யக் கூடிய

*அத்தாட்சியை வானத்திலிருந்து அவர்கள் மீது நாம் இறக்கியிருப்போம்'' (திருக்குர்ஆன் 26:4)*

அவ்வாறு செய்யாததற்கு அடிப்படைக் காரணம் இறை நெறியாகிய இஸ்லாத்தை ஒவ்வொருவரும் அறிந்து உணர்ந்து, தெளிந்து அதன்பால் இணைய வேண்டும் என்பதேயாகும்.

முதன்முதல் இறைச் செய்தி பெற்ற பெருமானார், அச்செய்தியை வெளியிட்டபோது வெகுண்டெழுந்த குறைஷிகள் பெருமானாருக்கும் அவரைப் பின்பற்றிய நபித் தோழர்களுக்கும் சொல்லொணாத் துயரங்களைக் கொடுத் தனர். அவற்றையெல்லாம் பொறுமையாக ஏற்றுச் சகித்துக் கொண்ட அண்ணலார் குறைஷிகளை எதிர்த்து ஒரு விரலைக் கூட உயர்த்தவில்லை. அவர்கள் விரும்பி யிருந்தால் எதிர்த் தாக்குதல் நடத்தி தங்கள் இஸ்லாமிய நெறியை வலுக்கட்டாயமாகத் திணிக்க முயன்றிருக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. தாயிப் நகரில் இஸ்லாத்தை எடுத்துச் சொன்னதற்காகக் கல்லடிபட்டுத் திரும்பிய பெருமானார் தற்காப்புக்காகக் கூட எதிரிகளோடு போராடவில்லை. ஏன்? இறை நெறியாகிய இஸ்லாத்தை மாற்றுச் சமய மக்களிடையே எடுத்துக்கூறி விளக்குவது மட்டுமே நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு அல்லாஹ் விடுத்துள்ள கட்டளை. இதையே திருமறை,

*“நபியே இவ்வளவு விவரித்துக் கூறிய பின்னரும் அவர்கள் (உம்மைப்) புறக்கணித்து விட்டால், (அதைப் பற்றி நீர் கவலைப்படாதீர். ஏனென்றால்) அவர்களைப் பாதுகாப்போராக நாம் உம்மை அனுப்பவில்லை. (அவர்களுக்கு நம்முடைய தூதை) எடுத்துரைப்பதைத் தவிர (வேறொன்றும்) உம்மீது கடமையல்ல.''*

*(திருக்குர்ஆன் 42:48)*

மனிதர்களுக்கும் தூதருக்குமுள்ள கடமையைப் பற்றி, "அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடவுங்கள்; (அவனுடைய) தூதருக்கும் வழிப்பட்டு நடவுங்கள்; நீங்கள் புறக்கணித்தால் (அது உங்களுக்குத்தான் நட்டம்) - ஏனென்றால் நம் தூதர் மீதுள்ள கடமையெல்லாம், அவர் (தன்னுடைய தூதைப்) பகிரங்கமாக எடுத்துரைப்பதுதான்".

(திருக்குர்ஆன் 64; 12)

இந்த இறைமொழிகளின் அடிப்படையில் ஆராய்கையில் பெருமானார் காலத்திலும் சரி, பின்னரும் சரி இஸ்லாத்தை ஏற்பதோ அல்லது ஏற்காதிருப்பதோ மக்களே சுயேட்சையாக முடிவெடுக்க வேண்டுமே தவிர, எவ்வித நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்துவது இறைக் கட்டளைக்கு நேர்மாறான செயலாகும். இதை நன்கு உணர்ந்திருந்த முஸ்லிம்கள் தாங்கள் நாடாளும் பெருமன்னர்களாக அரசோச்சியபோதுகூட, மாற்றுச் சமயத்தவர்மீது எவ்வித நிர்ப்பந்தத்தையும் திணிக்காததோடு தாங்கள் விரும்பும் மதத்தை, விரும்பிய முறையில் பேணி வழிபட, மக்களுக்கு பரிபூரண உரிமை உண்டு என்பதை நிலைநிறுத்தி வந்தனர் என்பதுதான் வரலாறு.

### ஹுதைபியா ஒப்பந்தமும்
### பிற சமயத்தாரோடு சமாதானமும்

சாந்தியையும் சமாதானத்தையும் உயிர்மூச்சாகக் கொண்ட இஸ்லாம் வெவ்வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதன்மூலம் சமரச உணர்வு பொங்க வாழமுடியும் என்பதை உலகுக்குக் காட்டும் உன்னதச் செயலாக 'ஹுதைபியா ஒப்பந்த' நிகழ்ச்சி வரலாற்றில் அரிய உதாரணமாக இடம் பெற்றுள்ளது.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு தொடங்கியபோது, மதீனாவில் வாழ்ந்த 1400 முஸ்லிம்கள் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தலைமையில் மக்காவிலுள்ள காபாவை நோக்கி ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள்.

ஆயுதம் ஏதுமின்றி நிராயுதபாணிகளாக இஹ்ராம் வெள்ளுடை தரித்துப் புறப்பட்டவர்கள் மக்காவுக்கு அருகில் தங்கியிருந் தார்கள். இவர்கள் மக்கா வருவதை யறிந்த சிலை வணக்கச் சமயத்தவரான மக்கா குறைஷிகள் காலீத் இப்னு வலீத் எனும் முரட்டு வீரரின் தலைமையில் பெரும் படையை அனுப்பினர். இதை ஞான உணர்வால் உய்த்துணர்ந்த பெருமானார் போரைத் தவிர்க்கும் பொருட்டு தன் தோழர்களோடு வேறு வழியாகச் சென்று மக்கா நகருக்கு அருகேயுள்ள ஹுதைபியா எனுமிடத்தில் தங்கியிருந்தனர். இவர்களை எக்காரணம் கொண்டும் மக்கா நகருக்குள் அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த மக்கா குறைஷிகள் பலமான பாதுகாப்பு வளையத்தை நகரைச் சுற்றி அமைத்தனர். அத்துடன் நிலைமையை, வருகையின் நோக்கத்தை அறிந்துவர சுகைல் என்பவரை அண்ணலாரிடம் அனுப்பி வைத்தனர். சுகைல் இஸ்லாத்தில் இணையாவிட்டாலும் பெருமானாரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தவர். எனவே, நபியோடு பேச்சு நடத்த அனுப்பியதற்கிணங்க அவர் அண்ணலாரை அணுகியபோது பெருமானார், தாங்கள் போரிட வரவில்லை என்றும் மக்காவிலுள்ள காபா இறையில்லம் சென்று 'ஹஜ்' கடமையாற்றவே வந்திருப்பதாகவும், தேவை என்று கருதினால் இதற்காக அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளவும் தான் தயாராயிருப்பதையும் ஹஜ் கடமையை நிறைவேற்ற உறுதியாயிருப்பதையும் பெருமானார் சுகைல் மூலம் சொல்லியனுப்பினார்.

எதிரி மதக்காரர்களான தாங்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்த போதிலும் முன்னர் குறைஷிகளின் பெரும் படை சிறு தொகையினரான முஸ்லிம்களிடம் தோல்வி கண்டு வந்ததை நினைவுகூர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர். ஒப்பந்தம் செய்து கொள்ள உர்வா என்பவரை குறைஷிகளின் சார்பில் அனுப்பி வைத்தனர்.

ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் இரு சாராருக்குமிடையே நடைபெற்றன. மாற்றுச் சமயத்தவரிடம் எந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விட்டு கொடுத்து சமரச ஒப்பந்தம் காண விழைந்தார் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள். இறுதியில் ஒப்பந்தமும் எழுதப்பட்டது. ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் மாற்றுச் சமயத்தவர்களான மக்கா குறைஷிகளுக்குச் சாதகமாகவும் முஸ்லிம்களுக்குப் பாதகமாகவுமே எழுதப்பட்டிருந்தன. அவையாவன:

(1) இம்முறை முஸ்லிம்கள் ஹஜ் புனிதப் பயணக் கடமைகளை மக்காவினுள் நுழைந்து நிறைவேற்றிக் கொள்ளாமல் மதீனாவுக்குத் திரும்பிச் சென்றுவிட வேண்டும்.

(2) அடுத்த ஆண்டில் அவர்கள் ஹஜ் புனிதப் பயணத்தை நிறைவேற்ற மக்காவினுள் வரலாம். ஆனால், மூன்று நாட்களுக்கு மேல் மக்காவில் தங்கியிருக்கக் கூடாது.

(3) தற்போது மக்காவாசிகளுள் முஸ்லிம்கள் எவரும் காணப்படின், அவரை மதீனாவுக்கு அழைத்துச் செல்லக் கூடாது; மதீனாவிலிருந்து வந்திருப்பவருள் எவராவது இஸ்லாத்தைக் கைவிட்டால், தாராளமாக இப்போதே மக்காவுக்குள் வரலாம்.

(4) மக்காவாசி யாராவது மதம் மாறி இஸ்லாத்தை ஏற்று மதீனாவுக்குப் புகலிடம் தேடி ஓடி வந்தால், முஸ்லிம்

கள் அவருக்குத் தஞ்சமோ பாதுகாப்போ அளிக்காமல் அவரை குறைஷிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆனால், மதீனாவாசி எவராவது மதம் மாறி மக்காவுக்குள் வந்து விட்டால், அவரைக் குறைஷிகள் அடைக்கலமாக ஏற்றுக் கொள்வர். முஸ்லிம்கள் அவர் மீது உரிமை பாராட்டித் திரும்பக் கேட்கக் கூடாது.

(5) அரேபிய நாட்டிலுள்ள இம் மக்கள் இவ்விரு கட்சியினரில் எவருடனும் நேச உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்த ஒப்பந்தத்தை இரு தரப்பு உடன்படிக்கை என்பதைவிட ஒரு சார்பு ஒப்பந்தம் என்று கூறுவதே பொருத்தமாகும். அண்ணலாரையும் அபூபக்ரையும் தவிர, மற்ற முஸ்லிம்கள் அனைவருக்கும் இவ்வொப்பந்தம் உடன்பாடாக இல்லையென்றாலும் நபிகள் நாதரின் சமாதான உணர்வுக்கிணங்க, அனைவரும் ஒப்புதலளித்து மதீனா திரும்பினர். அப்போது வல்ல அல்லாஹ் 'வஹீ' மூலம்,

"(நபியே! ஹுதைபியா சமாதான ஒப்பந்தத்தின் மூலம் நிச்சயமாக நாம் உமக்கு (மிகப் பெரிய) தெளிவானதொரு வெற்றியைத் தந்தோம்" (திருக்குர்ஆன் 48:1) என்று அறிவித்தான்.

இந்த ஒப்பந்தம் மூலம் தாங்கள் படுதோல்வியடைந்து திரும்புவதாகக் கருதி மனம் புழுங்கிய முஸ்லிம்களுக்கு இறைவனின் "வெற்றி" அறிவிப்பு வியப்பைத் தந்தபோதிலும் முஸ்லிம்களின் மாபெரும் வெற்றிக்கு அவ்வொப்பந்தமே ராஜபாட்டையாக அமைந்தது. 1,400 ஹஜ் பயணிகளாக வந்த முஸ்லிம்களை மக்காவினுள் நுழைய விடவில்லை. ஆனால், அடுத்த ஆண்டே 10,000 முஸ்லிம்களுக்கு மக்கா நகரம் தானாக கதவு திறந்து விட்டு வரவேற்றது என்பது வரலாறு.

சமய நல்லிணக்கத்துக்கான பல படிப்பினைகளை ஹுதைபியா ஒப்பந்தம் உலகுக்குணர்த்திக் கொண்டுள்ளது.

அதுவரை முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாத பிற சமயத்தவர்களும் கீரியும் பாம்புமாக இருந்த நிலையை மாற்றி, ஓரிடத்தில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர் களும் கூடியமர்ந்து பேச பெரும் வாய்ப்பேற்படுத்தித் தந்தது. ஒருவர் உணர்வை மற்றவர் அறியவும் அதை மதிக்கவுமான மன நிலை உருவாகியது. அதுவரை ஒருவரையொருவர் சந்திக்க அறவே விரும்பாத நிலை மாறி, இரு சாராரும் மனம் விட்டுப் பேசவும் தங்கள் சமயக் கருத்துகளைப் பறிமாறிக் கொள்ளவும் வாய்ப்பளித்தது. அமைதிக் காலமான அவ்வோராண்டு காலம் முழுவதும் தங்குதடையின்றி மார்க்கப் பிரச்சாரம் நடைபெறவும் முஸ்லிம்களின் நல்லொழுக்கப் பண்பாடுகளின்பால் ஈர்க்கப்பட்ட பிற சமயத்தினர் இஸ்லாத்தின்பால் வந்து இணையவும் வாய்ப்பாயமைந்தது.

ஹுதைபியா உடன்படிக்கை சமய நல்லிணக்கத்துக் காகவும் சமரச உணர்வையூட்டவும் சாந்தியையும் சமா தானத்தையும் நிலைநாட்டவும் எந்த அளவு வேறுபட்ட சமயத்தவர் கள் ஒத்திணங்கிப் போக வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக ஹுதைபியா ஒப்பந்தம் அமைந்துள்ள தெனலாம். சண்டையில் முடியாததை சமாதானத்தில் சாதிக்கவியலும் என்பதற்குப் பெருமானாரின் செயற்பாடு கள் வழிகாட்டும் ஒளி விளக்காகும்.

ஹுதைபியா ஒப்பந்தம் கையெழுத்தான சமயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது.

மக்கா குறைஷிகளின் சார்பில் தூதுவராகப் பெருமா னாரிடம் வந்து பேச்சு வார்த்தை நடத்தியவர் சுகைல் என்பவராவார். அவர் சிலை வணக்க மதத்திலேயே மிகவும்

பிடிப்புள்ளவராக இருந்தார். ஆனால், அவருடைய மகன் அபூஜந்தல் என்பவர் இஸ்லாமியக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டு, முஸ்லிமாகி, இஸ்லாமிய முறையிலான வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளலானார். அவர் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகியதை விரும்பாத மக்கா குறைஷிகள் அவரை எவ்வளவோ வற்புறுத்தி, அடித்து உதைத்துச் சித்திரவதை செய்து இஸ்லாத்தைவிட்டு விலகும்படி கோரினர். அபூஜந்தல் உறுதியாக மறுத்து, இஸ்லாத்தைப் பேணலானார். இதை விரும்பாத மக்கா குறைஷிகள் அவரை சங்கிலியால் கட்டி ஒரு வீட்டில் சிறை வைத்தனர். அவர் எப்படியோ தப்பித்து, ஹுதைபியா வந்துள்ள பெருமானாரோடும் முஸ்லிம்களோடும் இணைந்து கொள்ள ஹுதைபியா வந்து சேர்ந்தார். அதற்குச் சற்றுமுன்தான் ஒப்பந்தத்தில் பெருமானார் கையொப்பமிட்டிருந்தார். உடலெல்லாம் கடுமையான காயங்களோடு பசியாலும் பட்டினியாலும் வாடி வதங்கிப் போயிருந்த அபூஜந்தலை பெருமானாரும் பிற முஸ்லிம்களும் கண்டு பெரிதும் மனம் வருந்தினாலும் ஒப்பந்தத்தின் மூன்றாவது விதிப்படி 'தற்போது மக்காவாசிகளுள் முஸ்லிம்கள் எவரும் காணப்படின் அவரை மதீனாவுக்கு அழைத்துச் செல்லக் கூடாது', என்பதற்கிணங்க, பெருந்துன்பத்திற்காளாகியிருந்த அபூஜந்தலை தங்களோடு அழைத்துச் செல்ல பெருமானார் விரும்பாது, அவருக்கு ஆறுதல் கூறி மக்கா குறைஷிகளிடமே ஒப்படைத்தார். எந்த நிலையிலும் 'ஒரு முஸ்லிம் கொடுத்தவாக்கைக் காப்பாற்ற எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயங்கக் கூடாது' என்ற நபியுணர்வு செயல் வடிவு பெற புதிய சம்பவம் ஒரு களமாக அமைந்தது. அத்துடன் உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் தவிர்க்கவும், எவ்வளவு வேறுபாடும் மாறுபாடும் உள்ள சமயத்தவர்களாயினும் அவர்களிடையே ஒருங்

கிணைவையும் சமாதானத்தையும் பேண எத்தகு தியாகத் தையும் செய்யத் தயங்கக் கூடாது என்பதற்கு இஃதோர் சாட்சியாயுள்ளது.

**சிலை வணக்க பனீகுளாஆ-இன மக்களை**
**பாதுகாக்கவே மக்கா படையெடுப்பு**

ஏகத்துவத்தை ஏற்ற இறை நம்பிக்கையாளனான முஸ் லிம், கொடுத்த வாக்கை முழுமையாகக் காப்பாற்ற பெரிதும் கடமைப்பட்டுள்ளான் என்பதைக் கண்டோம்.

சிலை வணக்கக் குறைஷிகள் பெருமானரோடு ஹுதைபியா உடன்படிக்கை செய்து வீண் சண்டை சச்சரவு, உயிர் இழப்புகளைத் தவிர்த்துக் கொண்டார்கள் அல்லவா. அதே போன்று சிலை வணக்கச் சமயத்தைச் சேர்ந்த மற்றொரு பிரிவினரான பனீகுளாஆ வகுப்பினர் அண்ண லாரோடு நல்லுறவு கொண்டிருந்தார்கள். பெருமானாரும் அவர்தம் தோழர்களும் மாற்றுச் சமயத்தவர் எனக் கருதாது பனீகுளாஆ வகுப்பினரோடு நட்புக் கொண்டிருந்தனர்.

பெருமானாருக்கோ, பெருமானாரோடு உறவு கொண் டுள்ள பிறருக்கோ எந்த ஊறும் செய்யக்கூடாது என்ற ஹுதைபியா உடன்படிக்கைக்கு எதிராக மக்கா குறைஷிகள், தங்களைப் போன்றே சிலை வணக்க சமயத்தவர்களான பனீகுளாஆ வகுப்பினரைக் கடுமையாகத் தாக்கி, பொருட் சேதத்தையும் உயிர்ச் சேதத்தையும் உண்டு பண்ணினார்கள். அண்ணலாரோடு நல்லுறவு கொண்டிருந்த பனீகுளாஆ வகுப்பினர் பெருமானாரிடம் முறையிட்டனர். இஸ்லாத் துக்குப் புறம்பான சிலை வணக்கத்தவர்களை மற்றொரு சிலை வணக்கப் பிரிவினரான குறைஷிகள்தானே தாக்கினர் என எண்ணாமல் பனீகுளாஆ-மக்களைக் காக்கவேண்டிய பெரும் பொறுப்பு முஸ்லிம்களாகிய தங்களுக்கு உண்டு எனக் கருதிய அண்ணலார் இக்கொடிய தாக்குதலுக்குச்

சரியான சமாதானம் கூறும்படி குறைஷிகளுக்குத் தாக்கீது அனுப்பினார். ஆனால் குறைஷிகள் இதற்குத் தக்க சமாதானம் ஏதும் கூற முன்வரவில்லை. இதனால் மன வருத்தம் அடைந்த பெருமானார். தங்கள் நண்பர்களாக வுள்ள சிலைவணக்கச் சமயத்தவர்களான பனீகுளாஆ மக்களுக்கு பாதுகாப்பும் உதவியும் செய்ய முன்வந்தார். இனியும் அவர்கட்கு குறைஷிகளால் தீங்கு ஏற்படா வண்ணம் தடுக்கும் முகத்தான் மக்கா குறைஷிகளின் மீது படை யெடுத்தார் அண்ணலார். மக்காமீது நடத்திய படையெடுப்பு அல்ல. அஃது சிலை வணக்கப் பிரிவினரான பனீகுளாஆ வகுப்பினரின் நிரந்தரப் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு என்றே கூறலாம். இவ்வாறு அண்ணலார் அவர்கள் முஸ்லிம்கள் நலம்மீது கொண்டிருந்த அதே அளவு அக்கறையும் கவலையும் முஸ்லிமல்லாத மாற்றுச் சமயத்தவர் நலனிலும் கொண் டிருந்தார் என்பதே உண்மை.

### சமநீதி வழங்குவதில் இஸ்லாத்தின் முன்மாதிரி

சமநீதி வழங்குவதில் ஆள்பவர்-ஆளப்பவோர், இஸ்லா மியர்-பிற சமயத்தினர் என்ற வேறுபாட்டுணர்வுக் கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் அனைவரையும் சமமாகப் பாவித்து நீதி வழங்குவதில் இஸ்லாம் புதிய நடைமுறையை - சமநீதிச் சாதனையை முதன் முதலாக உலகில் நிலை நாட்டியது எனலாம்.

நான்காவது கலீஃபாவாக அலி(ரலி) ஆட்சி நடத்தி வந்த சமயம், கலீஃபாவின் இரும்புக் கவசம் காணாமற் போய் விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. பிறகு தான் தெரிய வந்தது அந்தக் கவசம் கூஃபா நகரைச் சேர்ந்த ஒரு கிருஸ்தவரிடம் இருப்பது.

கலீஃபாவாக இருந்த அலி (ரலி) நினைத்திருந்தால் அக் கிருஸ்தவரிடமிருந்து அக்கவசத்தை எளிதாகத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பறிமுதல் செய்து திரும்பப் பெற்றிருக்க முடியும். அவ்வாறு செய்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. யாராக இருந்தாலும் வழக்கு மன்றம் மூலம்தான் பெற வேண்டும் என்பதால், தனது இரும்புக் கவசம் கூஃபா கிருஸ்தவரிடம் இருப்பதாகவும் முறைப்படி நீதிமன்றத்தில் முறையிட்டு வழக்குத் தொடுத்தார் அலி (ரலி) அவர்கள்.

நீதிபதி ஷுரஹ் பின் ஹாரிஸ் என்பவர் வழக்கை விசாரித்தார். நாட்டின் நான்காவது கலீஃபாவான அலி (ரலி) அவர்கள் ஒரு சாதாரண குடிமகன் போல் வழக்கு மன்றம் வந்து, கிருஸ்தவரிடம் இருக்கும் கவசம் தன் உடைமை என்றும் அதனைப் பெற்றுத் தருமாறும் நீதிபதியை வேண்டினார். அந்தக் கவசம் தன்னுடையது தான் என்பதை நிரூபிக்க தன் மகனை சாட்சிக்கழைத்தார். தந்தை வழக்கில் தனயன் சாட்சி ஏற்கப்பட மாட்டாது எனக் கூறி வழக்கை முற்றாகத் தள்ளுபடி செய்துவிட்டார் நீதிபதி ஷுரஹ் பின் ஹாரிஸ்.

நாட்டின் தலைமைப் பொறுப்பில், ஆட்சி அதிகாரத் தில் இருக்கும் கலீஃபாவே சாதாரண குடிமகனாக வழக்கு மன்றம் வந்து முறையிட்டதையும் மகன் சாட்சியம் செல் லாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதையும் அறிந்த அக்கிருஸ்தவர் மிகவும் மனம் நெகிழ்ந்து போய் விட்டார். இஸ்லாமியராயினும் மாற்றுச் சமயத்தவரா யினும் எல்லோரும் மனிதர்கள் என்ற நிலையில் சமநீதி வழங்கும் இஸ்லாமிய சட்டத்தின் தகைமை அவரது மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவே, அவராகவே முன் வந்து தன்னிடமிருக்கும் இரும்புக் கவசம் அலியாருடையதே என ஒப்புக் கொண்டார். கவசத்தையும்

அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார். இவ்வாறு இஸ்லாமியராக இருந்தாலும் அல்லது மாற்றுச் சமயத்தவர் களாக இருந்தாலும் நீதியின் முன் சமமாகவே நடத்தப் பட்டார்கள்.

## அரசியேயாயினும் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது

கலீஃபாக்களின் ஆட்சியில்தான் இந்நிலை என்பதில்லை. இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியின் போதும் இஸ்லாத்தின் இதே சமநீதி முறைதான் மிகுந்த கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்பட்டு, சமூக நீதி-சமநீதி நிலை நாட்டப்பட்டது என்பதற்கு எத்தனையோ சான்றுகளைக் காட்ட முடியும்.

மன்னர் ஜஹாங்கீரின் ஆட்சிக்காலம். அவரது அன்பு மனைவி நூர்ஜஹான் அறிவுக் கூர்மை மிக்கவர்; நிர்வாகத்திறன் வாய்க்கப் பெற்றவர். இதனால், மன்னர் ஜஹாங்கீருக்கு நிர்வாகத்தில் பெருந்துணையாய் விளங்கி வந்தார்.

ஒருநாள் தன் தோட்டத்தின் ஓர் பகுதியில் அம்பெய்யும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அப்போது எதிர்பாராமல் தோட்டத்தின் வெளிப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த ஹிந்து சமயத்தைச் சேர்ந்த ஒரு சலவைத் தொழிலாளியின் உடலில் அம்பு பாயவே அவன் அப்போதே உயிரிழந்தான். இதையறிந்த அரசி நூர்ஜஹான் அவன் இறப்புக்கு தானே முழுப் பொறுப்பு எனக் கூறினார். வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி சலவைத் தொழிலாளி சாவுக்குக் காரணமான நூர்ஜஹான் கொலைக் குற்றவாளி எனக் கூறி, அக்குற்றத்திற்கு மரண தண்டனை விதித்துத்

தீர்ப்புக் கூறினார். நாடாளும் மன்னரின் மனைவி, ஆட்சி அதிகாரத்தில் பெரும்பங்கு வகித்து வந்த பட்டத்து ராணி சிறையில் அடைக்கப்பட்டார்.

மன்னர் ஜஹாங்கீர் மரண தண்டனையிலிருந்து அரசியை விடுவிக்க இஸ்லாமியச் சட்டத்தில் ஏதேனும் வழி வகைகள் உண்டா என இஸ்லாமியச் சட்ட வல்லுநர் களைக் கேட்டுக் கொண்டார். ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் சட்டத்தில் ஒரு சலுகை இருப்பதைக் கண்டறிந்தார்கள். கொலை செய்யப்பட்டவரின் வாரிசுகள், யாருடைய வற்புறுத்தலோ கட்டாயமோ இல்லாது தானாக முன்வந்து மரணத்துக்கான ஈட்டுத் தொகை கேட்டுப் பெற்றுக் கொண் டால், குற்றவாளியை மன்னித்து விடுதலை செய்து விட முடியும் என்பதே அது. இதையறிந்த மன்னர் ஜஹாங்கீர், இறந்தவரின் வாரிசுகளின் ஒப்புதல் பெற எக்காரணம் கொண்டும் தன் செல்வாக்கையோ அதிகாரத்தையோ கடுகளவும் பயன்படுத்தக் கூடாது எனக் கடுமையாகக் கட்டளையிட்டார்.

பிறகு, குடிமக்களே ஹிந்து சலவைத் தொழிலாளியின் மனைவியிடம் சென்று ஈட்டுத் தொகை பெற்று குற்ற வாளியை மன்னிக்கும் சட்ட முறையை எடுத்துக்கூறி வேண்டினர். அவளும் மனமிரங்கி ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு கொலைக் குற்றவாளியை மன்னிப்ப தாகக் கூறினாள். இதனால் நூர்ஜஹான் மரண தண்டனையி லிருந்து விடுதலை பெற முடிந்தது.

ஒரு சாதாரண சலவைத் தொழிலாளியாக, மாற்றுச் சமயத்தவராக இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்ற நிலையில் சமநீதி வழங்க இஸ்லாமியச் சட்டமோ, அதன் வழி அரசு நடத்திய முஸ்லிம் மன்னர்களோ கிஞ்சிற்றும் தவறவில்லை என்பதற்கு

இதுபோன்ற சான்றுகள் எண்ணற்றவை வரலாறு நெடுக உண்டு.

கிருஸ்தவர்களுட ்் ட்டன்படிக்கை

பெருமா அவர்கள் அகழ்ப் போருக்கும் ஹு்தை பியா உடன்படிக்கைக்கும் இடையே ஸீனா மலையில் இருந்த காதரின் மடத்திலிருந்த கிருஸ்தவ பாதிரிமார்களிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த ஒப்பந்த ஷரத்து கள் சமய நல்லிணக்க உணர்வுக்குக் கட்டியங் கூறுவனவாக அமைந்துள்ளன. அவைகளில் சில:

● கிருஸ்தவ பாதிரிமார்களில் எவரேனும் பிரயாணம் செய்யும் பொழுது மலை மீதோ குன்றின்மீதோ, கிராமத் திலோ, மக்கள் வாழும் வேறு இடத்திலோ கடலிலோ, பாலைவனத்திலோ, சந்நியாசி மடத்திலோ, மாதா கோவி லிலோ, இறை வணக்கம் செய்யுமிடத்திலோ இருப்பாரா னால், அவர்களையும் அவர்களுடைய பொருட்களையும் பாதுகாக்க நானும் என் எல்லா மக்களும் அவர்களுக்கு எல்லா உதவியையும் செய்வோம். ஏனென்றால், அவர் களெல்லாம் என்னுடைய மக்களில் ஒரு பகுதி ஆவர். மேலும், அவர்களால் எனக்குப் பெருமை உண்டு.

● கிருஸ்தவர்களுடைய நீதிபதிகளையும் ஆளுநர் களையும் மாற்றவும் நீக்கவும் முஸ்லிம் உத்தியோகஸ்தர் களுக்கு உரிமை கிடையாது. அவர்கள் அனைவரும் விலக்கப்படாமல் அந்தந்த உத்தியோகத்தில் இருப்பார்கள்.

● அவர்களுடைய மாதா கோயில்கள், சந்நியாசி மடங்கள் அல்லது மதசம்பந்தமான வேறு விஷயங்களில் கிருஸ்தவர்களுக்கு உதவி தேவையாக இருந்தால் அவர் களுக்கு முஸ்லிம்கள் உதவிசெய்ய வேண்டும்.

சிறுபான்மையினராக முஸ்லிம்கள் வாழும் பகுதியில் சிறுபான்மையினரான கிருஸ்தவர்கள், யூதர்கள் எவ்வாறு

சமத்துவமாகவும் தக்க பாதுகாப்போடும் வாழ பெரும்பான் மையினர் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு பெருமானார் வழிமுறைகள் இலக்கணமாகவே அமைந் துள்ளதெனலாம்.

## பிற சமயத்தவரின் அபகாரத்திற்கு உபகாரம் செய்த பெருமானார்

சிலை வணக்கச் சமயத்தவர்களான மக்கா குறைஷிகள் அண்ணலாருக்கும் அவரைப் பின்பற்றிய முஸ்லிம்களுக் கும் செய்த அக்கிரமங்கள், அபகாரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. பிறந்த மண்ணை விட்டே விரட்டியடித்தனர். மதீனா சென்ற பிறகும் விடாமல் பெருமானாரோடு போரிட்டு அழிக்க முயன்றனர்.

இந்நிலையிலும் மக்கா குறைஷிகளுக்கு வேண்டிய மிக முக்கிய உணவுப் பொருளான கோதுமையை தவறாது அனுப்பிவந்தவர் எமாமா மாநிலத்தைச் சேர்ந்த துமாமா எனும் முஸ்லிமாவார். குறைஷிகளின் அக்கிரமப் போக்குகள் அதிகரித்தபோது மக்காவுக்கு அனுப்பிவந்த கோதுமையை தொடர்ந்து அனுப்பாது நிறுத்திவிட்டார். இதனால் மக்காவில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட, கடும் பஞ் தலை தூக்கியது. குறைஷிகள் எவ்வளவோ மு ம், துமாமா கொடிய குறைஷிகளுக்குக் கோதுமை தர த்துவிட்டார். பசியாலும் பட்டினியாலும் துவண்டு போன மக்கா குறைஷிகள் வேறு வழியில்லாமல் பெருமா னாருக்குத் தூதனுப்பி துமாமாவைத் தொடர்ந்து கோதுமை அனுப்பி பஞ்சம் போக்குமாறு வேண்டினார்.

மாற்றுச் சமயத்தவர்களான குறைஷிகள் செய்த கொடுமைகளையெல்லாம் நாயகத் திருமேனி கொஞ்சமும் நினைவிற் கொள்ளாமல், பகைவர்க்கருளும் அன்பு உள்ளத் தோடு துமாமாவுக்கு ஆள் அனுப்பி வழக்கம்போல் மக்கா

*குறைஷிகளுக்குத் தொடர்ந்து கோதுமை அனுப்பியுதவுமாறு செய்தார். அதன்மூலம் மக்கா வாழ் குறைஷிகளிடையே நிலவிய கொடிய உணவுப் பஞ்சமும் நீங்கிற்று.*

*அண்ண[illegible]ளாவிருந்திருந்தால் துமாமா எதிர்பார்த்தபடி பஞ்சத்தின் கொடுமை தாளாத குறைஷி மக்கள் திருந்தி முந்தைய சிலை வணக்கச் சமயத்தைவிட்டு விட்டு இஸ்லாத்தின்பால் வந்திருக்கவோ அல்லது முஸ்லிம்கள் மீது கொண்டிருந்த பகையுணர்வைக் குறைத்துக் கொள்ளவோ முடியும். அதற்கான வளமான வாய்ப்பு இருந்தும், அதை ஏற்க பெருமானார் சிறிதும் விரும்பவில்லை. இத்தகைய செயலும் ஒருவகையான மறைமுகக் கட்டாயமேயாகும் என எண்ணினார். "இஸ்லாத்தில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை" என இறைவனே திருமறையில் கூறியிருக்கும்போது நாயகத் திருமேனி அவ்வழியை எப்படி ஏற்பார்? மனிதாபிமான நிறைகுடமான நாயகத் திருமேனி முஸ்லிம்- முஸ்லிமல்லாதார் என்ற உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் எல்லோரையும் ஒன்றாகக் கருதி செயல்பட்டு இறைநெறிக்கு இலக்கணமாயமைந்தார்.*

### பாதிரியார்கள் பெற்ற பெருமதிப்பு

*அண்ணலாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றி ஆட்சி செய்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் பிற சமயத்தவர்களின் சமய, சமுதாய உரிமைகளைப் பேணிக் காப்பதில் எப்போதும் பெரும் கவனம் செலுத்தினர் என்பதற்கான சான்றுகளை வரலாறு நெடுகக் காண முடிகிறது.*

*கான்ஸ்டான்டிநோபிளை வெற்றி கொண்ட துருக்கிப் பேரரசர் இரண்டாம் முஹம்மது, தம்மை கிரேக்க-கிருஸ்தவ சமுதாயத்தின் பாதுகாவலர் என அறிவித்தார். அதற்கிணங்க போப்பாண்டவரின் ஆதிக்கத்திற்குட்படாத கிருஸ்தவர்களுக்குத் துளியளவு தொல்லைகூட யாரும் தரக்*

கூடாது என கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிருஸ்தவத் தலைமைப் பாதிரியாருக்கும் அவரைத் தொடர்ந்து வரக்கூடிய பாதிரி யார்களுக்கும் முன்பு இருந்த உரிமைகள் அனைத்தும் மீண்டும் வழங்கப்பட்டன. அத்துடன் அவர்களின் ஆதிக்கத் திற்குட்பட்ட நிலங்களுக்குரிய நிலவரி முதலான அனைத்து வரிகளையும் வசூலித்துக் கொள்ளும் முழு உரிமையும் வழங்கப்பட்டன.

துருக்கியின் வெற்றிக்குப் பின் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிருஸ்தவ தலைமைப் பாதிரியார் ஜென்னாதியாஸுக்குரிய, அப்போது தலைமைப் பாதிரி யாருக்கு ஆயிரம் பொற்காசுகளையும் ஏறிச் சவாரி செய்ய குதிரையையும் அன்பளிப்பாக வழங்கினார். அக்குதிரை மீதேறி நகரில் பரிவாரத்துடன் பவனிவந்தார். கான்ஸ்டான்டிநோபிள் வெற்றி கொள்வதற்குமுன் அங்கிருந்த கிருஸ்தவ தலைமைப் பாதிரியாருக்கு என்னென்ன உரிமைகளும் அதிகாரமும் இருந்ததோ அவை அனைத்தையும் மீண்டும் சுல்தான் அளித்தார். இன்னும் சொல்லப்போனால் முன்னர் இருந்ததைவிட அதிகமான உரிமைகளும் அதிகாரமும் அளிக்கப்பட்டதாக வரலாற்றா சிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிருஸ்தவர்களுக்கென தலைமைப் பாதிரியார் தலைமையில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. தங்கள் சமய அடிப்படையில் விசாரணை செய்து அபராதமும் சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது. கிருஸ்தவ சமயக் குற்றவாளிகளுக்கென தனிச் சிறைச்சாலைகள் அமைக்கப் பட்டன. இந்நீதி மன்றங்கள் மரண தண்டனைவரை குற்றத் தண்டனை அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது, பாதிரியார்கள் வழங்கும் இத்தீர்ப்புகளை அமுல்படுத்தும் படி முஸ்லிம் அதிகாரிகளுக்கு சுல்தான் ஆணையிட்

டிருந்தார். மற்றபடி கிருஸ்தவ மதத் தொடர்பான விஷயங் களிலும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் முழு அதிகாரம் கிருஸ்தவ சபைகளுக்கே உண்டு என்பது சட்டப் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. முஸ்லிம் அதிகாரிகள் மட்டுமல்ல, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த சுல்தானே தலையிடுவதில்லை. இன்னும் சொல்லப் போனால் எந்த ஆளுநராவது இதற்கு மாறுபாடாக நடக்க முயன்றால் அந்த விஷயத்தைச் சுல்தான் பார்வைக்குக் கொண்டு செல்லவும், இன்னலுக்கு ஆளான கிருஸ்தவர் களின் துயர் துடைக்கவும் தலைமைப் பாதிரியாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மாற்றுச் சமயமான கிருஸ்தவர்கள் எல்லா விதமான உரிமைகளையும் சலுகைகளை, அதிகாரங் களையும் பெற்று முஸ்லிம்களுக்கு இணையான நிலையில் எவ்விதக் குறையும் இல்லாது வாழ்ந்து வந்தனர் என்ற வரலாற்றுச் செய்திகள் இஸ்லாத்தின் பிற சமய நல்லிணக்கப் போக்கையும் பிற சமயக் கண்ணோட்டத் தையும் அதற்கு வழிகாட்டியாயமைந்த பெருமானார் வாழ்வையும் வாக்கையும் நமக்கு இன்றும் உணர்த்திக் கொண்டுள்ளன.

மதிப்பதும் ஏற்பதும் ஒன்றா?

ஒவ்வொரு முஸ்லிமும் இறுதித் தூதருக்கும் இறுதி வேதத்திற்கும் முன்னதாக அனுப்பப்பட்ட இறைதூதர்களை யும் அவர்கட்கு வழங்கப்பட்ட இறை வேதங்களையும் கோட்பாட்டளவில் ஒப்புக் கொள்கிறான். அதனால் அவற்றை மதிப்பதும் அவனுக்குரிய கடப்பாடாகிறது. ஆயினும், அவற்றை அவன் ஏற்றுச் செயல்படுத்த முனைவ தில்லை. இறுதித் தூதரையும் இறுதி வேதத்தையும் முழுமை யாக ஏற்று, வாழ்வில் முழுமையாகச் செயல்படுத்தி முழுமை முஸ்லிமாக ஆக முனைகிறான். இதன் மூலம்

துணை இல்லாதவன்; அவனை யாரும் பெறவும் இல்லை; அவன் யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை' என அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது. மற்றொரு மதம் 'இறைவன் ஒருவனல்ல; அவர்கள் பலர். அவர்கட்கு துணையும் உண்டு, பிள்ளைகளும் குடும்பமும் உறவு முறைகளும் உண்டு' என்கிறது.

ஒரு சமயம் மனிதனுக்கு மறுபிறவி என்பதே இல்லை. இறந்த மனிதனின் ஆன்மா இறுதித் தீர்ப்பு நாள்வரை காத்திருக்க வேண்டும். அவ்வாத்மா இவ்வுலக வாழ்வில் செயல்பட்டதற்கேற்ப நரக வேதனையோ அல்லது சொர்க்கப் பெருவாழ்வோ பெறமுடியும்'என்கிறது.

ஆனால், வேறொரு சமயமோ மனிதனுக்குப் பல பிறவி கள் உண்டு. அவன் செயற்பாடுகளுக்கேற்ப அவன் பிறவி எடுத்துக்கொண்டே இருப்பான்' என்று கூறுகிறது. மனிதன் மட்டுமல்ல இறைவனும் மனிதர்களில் ஆணாகவும் பெண்ணாகவும், ஏன் சில சமயங்களில் விலங்கு வடிவாகவும் கூட (நரசிம்மவதாரம்) அவதாரம் எடுப்பதுண்டு எனக் கூறுகிறது. இவைகளையெல்லாம் எவ்வாறு ஒரு நிலையில் ஒரே படித்தரமாக வைத்து ஏற்க முடியும்? அப்படி ஏற்பது எவ்வாறு அறிவுக்குப் பொருத்த முடையதாக ஆகும்? கறுப்பையும் வெண்மையையும் ஒரே மாதிரியான வண்ணமாக ஏற்பது எங்ஙனம்? என்றெல்லாம் எழுப்பப்படும் வினாக்களை எளிதாக ஒதுக்கிவிட முடியாது. அவை ஆழ்ந்த ஆய்வுக்குரியவைகளே ஆகும்.

உலக மதங்கள் அனைத்துமே ஒரே மூலாதார அடிப் படையுடையனவேயாகும் என்றாலும் காலப் போக்கில் அவைகளே வளர்த்துக் கொண்ட கடவுட் கொள்கைகளும் இறை வழிப்பாட்டுச் சமயச் சடங்கு, சம்பிரதாயக் கோட்பாடுகளும் வெவ்வேறு விதமாய், எதிரும் புதிருமாக

மதிப்பது அல்லது ஒப்புக் கொள்வது என்பது வேறு; ஏற்பது அல்லது நடைமுறைப்படுத்துவது என்பது வேறு எனத் தெளிவாகிறது.

எம்மதமும் சம்மதம் எனும்
கருத்து ஏற்புடையதுதானா?

அண்மைக் காலமாக ஒரு கவர்ச்சிகரமான முழக்கம் நம்மிடையே முழங்கப்பட்டு வருகிறது. 'எம்மதமும் சம்மதம்' எனும் முழக்கமே அது. அனைத்துச் சமயங்களும் அவை புகட்டும் கொள்கை, கோட்பாடுகளும் சமமான வையே. அவை சத்தியத்தின்பாற்பட்டவையே. இறைய ருளைப் பெறவும் மேலுலகப் பெருவாழ்வு பெறவும் இவ்வுலக வாழ்வு வெற்றி காணவும் எந்த மதமாயினும் வேறுபாடின்றி அவற்றை ஏற்றுப் பின்பற்றலாம். குறிப் பிட்ட ஒரு மதத்தின் கொள்கை கோட்பாடுகளை மட்டும் ஏற்ப தென்பது ஏற்புடையதன்று; அஃது பிற்போக்குத் தனமானதும் கூட. அவ்வாறு கூறுவதும் செயல்படுவதும் சமய சகிப்புணர்வின்மையையே வெளிப்படுத்தும் ஒன்றா கும் என்ற உணர்வை ஊட்டுகின்ற முறையில் 'எம்மதமும் சம்மதமே'எனக்கூறித் தங்கள் பரந்த உள்ளத்தைப் பறைசாற்ற பலரும் முற்படுகின்றனர்.

இத்தகைய முழக்கங்கள் கேட்பதற்கு மிகவும் இதமான தாகவும் மனதுக்கு ஒருவகை மகிழ்ச்சியூட்டுவதாகவும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், ஆழ்ந்து நோக்கின் இஃது ஏற்புடைய முழக்கம்தானா என்ற எண்ணம் எழுந்து, நம்மை அறிவுப்பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டு கிறது.

எதிரெதிர் திசைகள் எவ்வாறு
ஒரே திசையாக முடியும்?

ஒரு மார்க்கம் 'இறைவன் ஒருவனே. அவன் இணை.

அமைந்துள்ளன. இவற்றுள் காணப்படும் ஒற்றுமைகளைக் காட்டிலும் வேற்றுமைகளே அதிகம். எனவே, வேற்றுமைகளுள் ஒற்றுமை காணும் தன்மைகளைத்தான் நாம் கைக்கொள்ள வேண்டுமே தவிர, ஒற்றுமை, சமயப் பொறை, சகிப்புத் தன்மை என்ற பெயரால் உண்மைக்கு மாறான முறையில் அனைத்துச் சமயப் போக்குகளையும் அப்படியே ஏற்றிப் போற்றி வணங்குவதாகப் பாசாங்கு செய்ய வேண்டிய அவசியமில்லை. இஃது ஒரு வகையான போலித்தனமான, உண்மைக்கு மாறான போக்கே என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

அவரவர் சமயம் அவரவர்க்கு என்பதே சத்தியம்

உள்ளது உள்ளவாரே அவரவர் சமயத்தை அவரவர் பேணி வரும் வகையில் அவரவர்க்கு அவரவர் மதம் என்பதே சரியானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்க முடியும். மாறாக, எல்லா மதமும் எல்லோருக்கும் சம்மதம் என்பது முரண்பட்ட கோட்பாடே தவிர ஏற்புடைய கருத்தாக இருக்க முடியாது என்பதே தெளிந்த அறிவுடையோர் எண்ணம். இவ்வுணர்வின் வெளிப்பாடாக அமைந்திருப்பதே "உங்களுக்கு உங்கள் மார்க்கம் ; அவர்களுக்கு அவர்கள் மதம்" என்ற திருமறையின் இறைவாக்கு.

எம்மதமும் சம்மதம் என்ற கருத்தை வலுவாகப் பரப்பி வருவோர் யார்? இவர்கள் எந்த ஒரு மதத்திலும் ஆழ்ந்த பற்றோ தெளிந்த சமய அறிவோ இல்லாதவர்களாகவே இருப்பதைக் காணலாம். இன்னும் சொல்லப்போனால் சமயச் சிந்தனையற்ற, நாத்திக உணர்வு கொண்டவர்களே இத்தகைய கருத்தையும் உணர்வையும் ஊட்டி வருகிறார்கள் எனலாம். இவர்கள் தங்களை முற்போக்குச் சிந்தனையாளர்களாக, சமயச் சீர்திருத்தவாதிகளாகக் காட்டிக் கொள்வதில் தனி மகிழ்ச்சி கொள்பவர்களுமாவர்.

எனவே, போதிய அடிப்படை ஏதும் இல்லாத, 'எம்மதமும் சம்மதம்' எனும் மேற்போக்கான முழக்கம் வெறும் குழப்பங்களுக்கு வழிகோலும் குழறுபடியான வாதமே தவிர வேறு அன்று. ஒவ்வொரு சமயத்தவர்களும் தங்கள் தங்கள் சமயம் உணர்த்தும் நெறிகளையும் சமயச் சம்பிரதாயங்களையும் பேணி வருவதே சரியானதாகவும் பொருத்தமுடையதாகவும் இருக்க முடியும்.

இன்னும் சொல்லப்போனால்,

'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்', 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய் பொருள் காண்பது அறிவு' என்ற வள்ளுவர் வாய்மொழியை முற்றதாகப் புறக்கணித்து யார் கூறினும், எதைக் கூறினும் அஃது எனக்கேற்புடைத்தே என்ற முறையில் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற வகையில் செயல்படத் தூண்டும் இப்போக்கானது உண்மையைத் தேடியலையும் வேட்கையை மழுங்கச் செய்வதாகவும் ஆக்கிவிடுகிறது. உண்மை எது? உண்மையல்லாதது எது? என்ற பகுத்தறிவுப் பண்போ, உண்மையைக் கண்டறிந்து ஏற்கும் துணிவோ இல்லாத நிலை உருவாக வழிகோலும் ஒன்றே 'எம்மதமும் சம்மதம்' எனும் பொருளற்ற, உணர்ச்சித் தூண்டலான வெறும் முழக்கம்.

தடம்புரண்ட இறை வேதங்கள்

உலகிலுள்ள அனைத்துச் சமயங்களின் அடிப்படையும் ஒரே மாதிரியாகவே இறைவனால் இறைத் தூதர்கள் மூலம் மனித குலத்துக்கு வழங்கப்பட்ட போதிலும் அவற்றைக் காலப் போக்கில் மனிதர்கள் தங்கள் விருப்புவெறுப்பு களுக்கேற்ப மாற்ற திருத்தங்களைச் செய்து, அதன் தனித் தன்மைகளை மாற்றி விட்டனர் என்பதை முன்பே விரிவாகக் கண்டோம். முதல் மனிதரும் நபியுமான ஆதாம்

(அலை) அவர்கள் தொட்டு இறுதி நபிவரை வழங்கப்பட்ட இறைச் செய்திகள் ஒரே மூலத்தையுடையனவே என்பதை திருமறை,

"(நபியே!) உமக்கு முன்வந்த இறை தூதர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையேயன்றி (வேறொன்றும் உமக்குக் கூறப்படவில்லை)" (41:43)

எனக் கூறும் திருக்குர்ஆன் வாக்கும், தொடர்ந்து,

"அவர்கள் தங்கள் வேத வசனங்களை சரியான இடங்களி லிருந்து மாற்றுகிறார்கள்" (5:13)

என்ற இறை வசனமும் மூல இறை வேதங்கள் எவ்வாறு மாற்ற திருத்தங்களுக்கு உள்ளாகித் தங்கள் தனித் தன்மையை, சரியான இறைநெறி வழிகாட்டலை இழந்து நிற்கின்றன என்பதை தெளிவாக்குகின்றன. ஆயினும் அவ்வேதங்களை உண்மையாகக் கொண்டு ஒழுகும் அவ்வச் சமய மக்களை மதிக்க வேண்டியது ஒவ்வொரு வரின் இன்றியமையாக் கடப்பாடு ஆகும்.

நம்பிக்கையே நன்மை தரும்

ஒருவர் தன் மதத்தைப்பற்றி, அதன் சிறப்பம்சங்களைப் பற்றி எடுத்துக்கூறி விளக்குவது தவறாகாது. ஆனால், அம்மதக் கொள்கைகளை அவர்தம் விருப்பத்துக்கு மாறாக ஏற்கும்படி வலியுறுத்துவது-நிர்ப்பந்திப்பது-மத வெறியா கும். இத்தகைய போக்கை இஸ்லாம் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது. அவர்களாக அறிந்து உணர்ந்து, தெளிந்து, அதன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு ஏற்றுச் செயல்படும் இயல்பான நிலையையே இஸ்லாம் வலியுறுத்துகிறது.

முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது, இறுதி இறைத்தூதர் மீது, அவர்மூலம் பெற்ற இறுதி இறைவேதமாகிய

திருக்குர்ஆன் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பது போன்று பிறசமயத்தவர்களும் அவர்கள் வணங்கும் இறைவன் மீதும் அவர்தம் வேதத்தின் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தால் அதுவும் போற்றத்தக்கதேயாகும். இதைப் பற்றி இஸ்லாமியத் திருமறை திருக்குர்ஆன்,

"வேதத்தை உடையவர்களும் உங்களை (முஸ்லிம்களை)ப் போன்றே நம்பிக்கை கொண்டிருப்பின் அது அவர்களுக்கு நன்மையாகும்!" *(திருக்குர்ஆன் 3;110)*

அசோகரின் சமய சகிப்புணர்வு

பௌத்த சமயத்தை இந்தியாவில் மட்டுமல்லாது கிழக்காசிய நாடுகளிளெல்லாம் முனைப்புடன் பிரச்சாரம் செய்தவர் அசோகச் சக்கரவர்த்தி. அவர்கூட, தன் மதத்தின் உயர்வைப் புலப்படுத்த பிற சமயக் கருத்துகளையும் கோட்பாடுகளையும் தாழ்த்திப் பேசுவதைத் தவறு என்கிறார். அவர் தனது கல்வெட்டுகளில் ஒன்றில், "ஒருவர் தம் மதத்தைக் கண்ணியப்படுத்துவதும், அளவு கடந்த பற்றுதல் காரணமாக மற்ற மதங்களைவிட தம் மதமே மேலானது என்று கூறுவதும் பிற மதங்களின் அந்தஸ்தைக் குறைப்பதாகும்,"

எனக் கூறியுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்க தாகும்.

விவேகானந்தர் நோக்கில் இஸ்லாம்

இஸ்லாமியத் தத்துவச் சிந்தனைகளும் கருத்துகளும் ஹிந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்தான விந்தையை பக்தி இயக்க வரலாறு தெளிவாக்கிக் கொண்டுள்ளது. தாழ்த்தப் பட்டவர்கள் சாதி, சமூகக் கொடுமைகளால் எந்த அளவு பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதையும் அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற இஸ்லாமும் முஸ்லிம் ஆட்சியும் எந்த அளவு துணை நின்றன என்பதையும் அழகாக எடுத்து

விளக்குகிறார் விவேகானந்தர். ஹிந்து சமய மறுமலர்ச்சிக் கென புது இயக்கம் கண்ட விவேகானந்தர் தமது 'எதிர்கால இந்தியா' எனும் நூலில்,

"ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் முஸ்லிம் ஆட்சி சுதந்திரம் அளித்தது. அதன் காரணமாகத் தான் நம் மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர் முஸ்லிம்களா னார்கள். கத்தியும் நெருப்பும் கொண்டே இம்மத மாற்றம் அனைத்தும் நடந்தது என நினைப்பது பைத்தியக்காரத் தனம்."

மேலும் இத்தகைய கருத்தை வெளிப்படுத்துவோரை நையாண்டியுணர்வோடு "நான் மலையாளத்தில் பார்த்ததை விட முட்டாள்தனமான விஷயம் உலகில் எங்கேயாவது உண்டா? தாழ்த்தப்பட்டவர்கள், மேல் சாதியினரின் தெருக் களில்கூட நடக்க அனுமதிக்கப்படவில்லை... தாழ்த்தப் பட்டவர்கள் நம் (ஹிந்து) குழந்தைகளாக இருக்கும்வரை பட்டினி போட்டுச் சாகடிக்கிறோம். அவர்கள் மதத்தை மாற்றிக் கொண்டவுடன், அவர்களுக்கு விருந்து போடு கிறோம் என்றால், இதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறு உண்டா? இந்த வெட்ககரமான சாதி வித்தியாசங்கள் அறவே ஒழிய வேண்டும்" எனத் தன் கால சமூக நிலையை ஆழ்ந்த வருத்தத்துடன் வெளிப்படுத்தியுள்ளார் விவேகானந்தர்.

ஏற்றத் தாழ்வுமிக்க இந்நிலையை மாற்ற பக்தி இயக்கப் பெரியார்கள் மேற்கொண்ட நிலையையும் அதற்கு இஸ்லாமிய நெறியில் ஆட்சி செய்த முஸ்லிம்களின் ஆட்சி எந்த அளவுக்கு உறுதுணை செய்தது என்பதையும் குறிப் பிடும்போது,

"சங்கரருக்குப் பிறகு இராமனுஜர் தோன்றினார். சங்கர ருடைய புத்தி அதிநுட்பமானது; ஆனால், அவருடைய இருதயம் அவ்வளவு விசாலமானதாக இருக்கவில்லை.

இராமானுஜருடைய இருதயம் விசாலமானதாக இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அவர் பச்சாதாபப்பட்டு வருந்தினார். அவர்களுடைய பழைய அனுஷ்டானங்களை யும் பழக்க வழக்கங்களையும் இயன்றவரையில் பரிசுத்தப் படுத்தி புதியதாக்கி ஆதரித்தார். அதே சமயத்தில் உயர்ந்த ஆத்மீக சாதனைகளையும் பிராமணர்களிடமிருந்து பறையர் கள்வரை அனைவருக்கும் உரிமையாக்கினார். இதுதான் இராமனுஜர் செய்த அரும்பணி. இப்பணி வட இந்தியா முழுவதும் முஸ்லிம்கள் ஆட்சியின் போதே பரவியது எனலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார் விவேகானந்தர்.

இதிலிருந்து ஹிந்து சமயச் சீர்திருத்தத்துக்கு, பக்தி இயக்க எழுச்சிக்கு இஸ்லாமும் இஸ்லாமியர் ஆட்சியும் பெருந் துணையாயமைந்து, இந்த நாட்டில் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ சமுதாயம் உருவாக நேர்முகமாகவும் மறைமுக மாகவும் உதவிவந்ததை விவேகானந்தர் சுட்டிக்காட்டுவதன் மூலம் நம்மால் உணர்ந்து தெளிய முடிகிறது.

அதுமட்டுமல்ல சமய சுதந்திரத்தைப் பேணிக் காப்பதி லும் சமூக ஒருமைப்பாட்டை உருவாக்குவதிலும் முஸ்லிம் ஆட்சி எத்தகைய பங்காற்றியுள்ளது என்பதை 'கிழக்கும் மேற்கும்' என்ற நூலில் விவேகானந்தர் விவரிக்கும்போது,

"மதத்தின் கதவுகளைத் தொடாமல் திறந்தே வைத்திருக்க வேண்டும். தொடக்கூடாது... முகம்மதிய சாம்ராஜ்ஜியம் நம் நாட்டில் நீண்ட காலத்திற்கு எவ்வளவு வலிமையுடனும் திண்மையுடனும் விளங்கிற்று என்பதை எண்ணிப் பாருங் கள். இதற்கு என்ன காரணம்? **அவர்கள் (முஸ்லிம்கள்) நம் மதத்தில் தலையிடாததுதான்.** சொல்லப் போனால் இந்துக் களே முகம்மதியப் பேரரசிற்குப் பெரும் ஆதாரமாக, தாங்கும் தூண்களாக விளங்கினார்கள் எனலாம். ஜஹாங்கீர், ஷாஜஹான், தாராசிகோ போன்ற முகலாய

மன்னர்கள் ஹிந்து அன்னையர்களுக்குப் பிறந்தவர்கள் தாம்...” எனக் கூறுவதிலிருந்து இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் யாரும் ஹிந்து சமய விவகாரங்களில் தலையிடவில்லை என்பதும் ஹிந்து சமய பக்தி இயக்கங்கள் தோன்றவும் அதன் செயல்பாடுகள் வெற்றி பெறவும் பெருந்துணையாய மைந்தனர் என்பதும் தெளி வாகிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில்,

“இந்தியாவில் முஸ்லிம்களிடையே ஏழை எளிய மக்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன? வாள் கொண்டு மதமாற்றம் செய்தார்கள் என்பது அறிவீனமாகும். புரோகிதர்களிடமிருந்தும், பண்ணையார்களிடமிருந்தும் விடுதலை கிடைக்கும் பொருட்டே ஏழை எளிய மக்கள் இஸ்லாத்தைத் தழுவி இருப்பார்கள் என்று தோன்றுகிறது,” எனக் கூறுவதோடமையாது அதற்கான சிறப்புக் காரணத்தையும் கண்டறிந்து கூறுகிறார் விவேகானந்தர்,

“இனத்தையும் நிறத்தையும் கடந்து முஸ்லிம்கள் காட்டுகின்ற, கடைப்பிடிக்கிற முழுமையான சமத்துவத் திலேதான் இவர்களின் சிறப்பு இருக்கிறது.”

விவேகானந்தரின் இக்கருத்துகள் இஸ்லாமிய மார்க்கத் தின் வெற்றி ரகசியங்களை, முஸ்லிம்களின் சமய உணர் வுக்கப்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மனிதாபிமான செயற்பாடுகளையும் உணர்த்துவதாயுள்ளது.

## தேசியப் பண்பாடும் சமயப் பண்பாடும்

கலை, கலாச்சாரத்தன்மைகளை உட்கொண்ட ஒன்றே ‘பண்பாடு’ என அழைக்கப்படுகிறது. சமயப் பண்பாடு என்பது அவரவர் பின்பற்றும் சமய ஆச்சாரத்தின் அடிப்படை யில், ஆன்மீக உணர்வூட்டமாக அமைந்துள்ள ஒன்றாகும். தேசியப் பண்பாடு என்பது சமயச் சடங்கு முறைகளுக்கும்

சமயப் போக்கிற்கும் அப்பாற்பட்ட நிலையில், சமுதாயத்தவர் எல்லோருக்கும் பொதுவாயமைந்துள்ள, சமயச் சார்பற்ற பொதுப் பண்பாடாகும்.

ஒவ்வொரு சமயப் பண்பாடும் அச்சமயத்தின் உட்கிடக்கைக்கிணங்கவே அமையும். அது இயல்பும்கூட. இருப்பினும் சமயப் பண்பாடானது தேசியப் பொதுப் பண்பாட்டின் கூறுகள் பலவற்றை தன்னுட் கொண்டதாக அமைவதும் தவிர்க்க முடியாததாகும். இந்திய முஸ்லிம் பண்பாடும் அரேபிய முஸ்லிம் பண்பாடும் ஒரே சமய அடிப்படையைக் கொண்டிருப்பினும் அவற்றிடையே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருக்கவே செய்கின்றன. இந்தியக் கிருஸ்துவப் பண்பாட்டிற்கும் ஐரோப்பிய கிறிஸ்துவப் பண்பாட்டிற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. இஃது அவ்வப்பகுதி மக்களின் தேசியப் பண்பாடுகளின் தாக்கத்தால் அமைவதாகும். இது தவிர்க்க முடியாததும்கூட. ஹிந்து சமயப் பண்பாடும்கூட ஒரே நாட்டிற்குள், அவ்வப்பகுதி சமூகப் பொதுப்பண்பாட்டின் தாக்கத்திற்கேற்ப மாறுதலைப் பெற்றே வழங்கி வருகின்றன என்பது எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். சிலசமயம் சமூகப் பண்பாடுகளில் மதப் பண்பாடுகள் செல்வாக்குச் செலுத்துவதும் உண்டு.

ஒவ்வொரு மதத்தவரும் அவரவர் சமயத்தைச் சார்ந்த கலை, ஆச்சார, பண்பாடுகளை முழுமையாகப் பேணி நடக்க முழு உரிமை பெற்றவராவார். அதனை மாற்றுச் சமயத்தவர் மதித்து நடக்க வேண்டியது இன்றியமையாக் கட்டுப்பாடு ஆகும். ஆயினும், தத்தமது சமயச் சார்பான கலை, ஆச்சாரங்களை பிறரும் பேணி நடக்கத் தூண்டும் வகையில் நேரடியான அல்லது மறைமுகமான தூண்டுதல்கள் செய்வது ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. இச்செயல் சமய சகிப்புத் தன்மை அல்லது சமய

நல்லிணக்கப் போக்கு வளர்வதற்கு வளமான வழியாக அமைய இயலாது என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும்.

'எனவே, அவரவர் சமயப் பண்பாடு அவரவர் சமயத்தவர்கட்கு' என்பதே ஏற்றுக் கொள்ளத்தக்க இனிய போக்காக அமைய இயலும். இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் எல்லோருக்கும் பொதுவான சமுதாயமும் அதை ஆட்சி செய்யும் பொது அரசும் சமயச் சார்பற்ற தன்மையை அடித்தளமாகக் கொண்டு இயங்க வேண்டியது இன்றி யமையாததொன்றாகும். இதைக் கருத்தில் கொண்டே நம் நாட்டின் மிகப்பெரும் தேசியத் தலைவர்கள் சமுதாய-சட்ட மேதைகள் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை வகுக்கும்போது, சமயச் சார்பற்ற தன்மையை அரசின் அடித்தளக் கொள்கையாக அறிவித்தார்கள். இதன் மூலம் அவரவர் தனிவாழ்வில் அரசோச்சம் பல்வேறு மதங்களும் சமயச் சடங்கு, சம்பிரதாயங்கள் பொது வாழ் வான சமுதாய வாழ்வை பாதிப்பதே இல்லை. அதைப் பற்றி சற்று ஆராய்வோம்.

### மதச் சார்பின்மைக் கொள்கையின் உட்பொருள்

நமது இந்திய அரசமைப்புச் சட்டம் பல தனித்தன்மை வாய்ந்த சிறப்புக்களுடையதாக விளங்குகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று 'செக்குலரிஸம்' என அழைக்கப் படும் 'சமயச் சார்பின்மை'க் கொள்கையாகும்.

பல இனங்களையும் பல மதங்களையும் உடைய நாடாக இந்தியா அமைந்திருப்பதால் 'இந்திய அரசின் மதம்' என எதனையும் ஏற்க வேண்டிய அவசியமில்லை என அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஒரு மனதாகக் கருதி, 'சமயச் சார்பின்மை'க் கொள்கையை அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறச் செய்தார்கள். இதன் மூலம்

இந்தியாவில் உள்ள அனைத்துச் சமயங்களையும் அவற்றைப் பின்பற்றுபவர்களையும் சமமாகப் பாவிப்பதும் நடத்துவதும் இக்கொள்கையின் அடிப்படை நோக்கமாகும்.

மதச் சார்பின்மை கொள்கை பற்றி 7.8.1952 அன்று மாநிலங்களவையில் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் கூறிய கருத்து மேலும் தெளிவூட்டுவதாக அமைந் துள்ளது.

"ஒரு மதச் சார்பற்ற அரசு என்றால் என்ன? எந்த ஒரு மதத்திற்கும் எதிரானதல்ல. மதச்சார்பற்ற தன்மை என்பது, எந்த ஒரு மதத்தையும் இந்த அரசு பின்பற்றவில்லை என்பதுதான் அதன் பொருள். இத்தகைய அரசு எந்த ஒரு மதத்தையும் ஆதரிக்கவில்லை அல்லது எதிர்க்கவில்லை என்பது தான் அதன் உட்பொருள். எந்த ஒரு மத விவகாரங்களிலும் தலையிடுவது மதச் சார்பற்ற அரசின் வேலையல்ல, எல்லா மத விவகாரங்களிலும் அது நடுநிலை வகிக்க வேண்டும்" என்ற காயிதே மில்லத்தின் கருத்து மிகக் தெளிவாகவும் திட்பமாகவும் சமயச் சார்பின்மைக் கொள்கையை விளக்குகிறது.

இந்திய நாட்டில் வாழும் சிறுபான்மை இஸ்லாமியச் சமுதாயத்தினர் மதச்சார்பற்ற நம் அரசிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை 3-8-1951 ஆண்டில் லோக் சபையில் தலைவர் காயிதே மில்லத் அவர்கள் மிகத் தெளிவாக,

"ஒரு விஷேசமான சலுகைகளையோ, அதிகப்படியான அனுகூலங்களையோ, சிறுபான்மை மக்களாகிய நாங்கள் கேட்கவில்லை. நமது தாய்நாட்டில் பெரும்பான்மை சமயத்தினர் என்னென்ன உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கிறார்களோ, அத்தகைய சலுகைகளும் உரிமை

களும் எங்களது எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு எங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றே நாங்கள் எதிர்பார்க்கிறோம்," எனக் கூறியதன் மூலம் உலகெங்கும் பல்வேறு நாடுகளில் சிறுபான்மையினராக வாழும் மக்கள் எதை அந்தந்த அரசுகளிடமிருந்து எதிர்பார்க்கிறார்களோ அதையே தான் இஸ்லாமியர்களாகிய இந்திய முஸ்லிம்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெளிவாக, அதே சமயத்தில் அழுத்தந் திருத்தமாக இஸ்லாமிய நெறி வழி கேட்கிறார் காயிதே மில்லத் அவர்கள்.

இதே நிலையை கிருஸ்தவ, பௌத்த சிறுபான்மைச் சமயத்தவர்கட்கும் பொருந்தும் என்பது சொல்லாமலே பெறப்படுகிறது.

இந்தியாவில் 600 ஆண்டுக்கால முஸ்லிம் ஆட்சியில் தாங்கள் முற்றாகப் பேணி பின்பற்றி வந்த ஷரீயத் சட்டங்களை ஹிந்து சமயம் போன்ற பிற சமய மக்களிடம் திணித்ததாக வரலாறே இல்லை. இங்கு மட்டுமல்ல ஸ்பெய்ன்வரை பரவிய முஸ்லிம்களின் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த கிருஸ்தவர்கள், யூதர்கள் போன்ற பிற சமயத்தவர் மீதும் இம்மியளவு கூடத் திணித்ததாக, திணிக்க முயன்றதாக எந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லை. காரணம், அவ்வாறு ஆட்சியாளர்களோ பிறரோ திணிக்க முயல்வதையே இஸ்லாம் கடுமையாகத் தடுக்கிறது. அவரவர் மதச் சம்பிரதாயப்படி வாழ முழுமையாக அனுமதிக்க வேண்டும் எனப் பணிக்கிறது. "அவர்கட்கு அவர்கள் மதம், நமக்கு நம் மார்க்கம்" என்பது திருமறை தரும் கட்டளையாகும். இதே முறைதான் தொடர வேண்டும் எனச் சிறுபான்மையினரான இந்திய இஸ்லாமியச் சமயத்தவரான முஸ்லிம்கள் விரும்புகிறார்கள்.

### எது சிறந்த வீடு? நாடு?

ஒரு சமயம் நாயகத் திருமேனி அவர்கள் தன் தோழர்களை நோக்கி, "எது சிறந்த வீடு தெரியுமா?" எனக் கேட்டார்கள். பதில் கூற இயலாத நபித் தோழர்கள், அண்ணலாரிடமே அதற்கு விடை கூறுமாறு வேண்டி னார்கள். அதற்குப் பதில் தர முனைந்த நபிகள் நாயகம் (சல்) அவர்கள், "எந்த வீட்டில் ஒரு அனாதைக் குழந்தை தான் ஒரு அனாதை என்ற உணர்வே இல்லாது அன்போடும் அரவணைப்போடும் இருக்கிறதோ, அந்த வீடுதான் சிறந்தது" என்று கூறினார்கள்.

அதேபோன்று எந்த நாட்டில் வாழ்கின்ற மத, இன, மொழிச் சிறுபான்மை மக்கள் தாங்கள் சிறுபான்மையினராக உள்ளோம் என்ற உணர்வே இல்லாது முழுப் பாதுகாப் போடும் சமத்துவத்தோடும் வாழ்கிறார்களோ அந்த நாடுதான் சிறந்த நாடாக இருக்க முடியும். நம்நாடு அத்தகைய சிறந்த நாடாக- சமத்துவமிக்க ஜனநாயக நாடாக திகழ வேண்டும் என்பதுதான் நல்லுள்ளம் படைத்தோரின் பெரு விருப்பம்.

### உலக ஒருமைப்பாட்டிற்குக் கட்டியம் கூறும் பெருமானாரின் இறுதிப் பேருரை

நபிகள் நாயகம் (சல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது அரஃபாத் பெருவெளியில் ஆற்றிய இறுதிப் பேருரை மனித குல ஒற்றுமைக்கும் உலக ஒருமைப்பாட்டிற்கும் என்றென்றும் வழிகாட்டும் ஒளி விளக்காகவே அமைந் திருக்கிறதெனலாம்.

"ஓ மனிதர்களே! உங்களுடைய இறைவன் ஒருவனே! உங்கள் மூலப் பிதா ஆதாம் (அலை) அவர்களும் ஒருவரே! அரபிகள், அரபிகள் அல்லாதவர்களைவிட எந்த விதத் திலும் சிறந்தவர்கள் அல்ல. அதுபோல அரபி அல்லாதவர்

களிலும் வெள்ளையர்கள் கறுப்பர்களைவிடச் சிறந்தவர்கள் அல்ல. ஆனால், உங்களில் ஈமானிலும் (இறை நம்பிக்கை) ஒழுக்கத்திலும் யார் உயர்ந்தவர்களோ அவர்களே உண்மையில் உயர்ந்தவர்கள். ஒரு மனிதன் மற்றொரு மனிதனைவிட - ஒரு நாட்டான் மற்றொரு நாட்டானைவிட, ஒரு நிறத்தான் வேறு நிறத்தானைவிட எந்த விதத்திலும் சிறந்தவன் அல்ல."

பெருமானாரின் இந்த இறுதிப் பொழிவில் வெளிப்படும் அறிவிப்பானது மனித சமத்துவத்தையும் உலக ஒருமைப்பாட்டையும் என்றென்றும் கட்டிக்காக்கும் சங்க நாதமாக அமைந்து அவனிக்கு வழிகாட்டிக் கொண்டுள்ளதெனலாம்.

## சமயச் சாயம் பூசப்படும் தனிப்பட்டோர் விருப்பு வெறுப்புகள்

சாதாரணமாக இரு சமயங்களைச் சார்ந்தவர்களிடையே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அதை இரு தனிப்பட்ட மனிதர்களிடையே ஏற்பட்ட தகராறாக மட்டுமே கருதி செயல்பட வேண்டுமேயல்லாது இரு மதத்தவர்களுக்கிடை யேயான மதச் சண்டையாகக் கருதும் போக்கு அறவே ஒழிய வேண்டும். சான்றாக, கரீமும் முருகனும் தனிப்பட்ட முறையில் சண்டையிட்டுக் கொள்ள நேர்ந்தால், தனிப்பட்ட இரு மனிதர்களிடையே ஏற்பட்ட சண்டையாகக் கொண்டு, யார் தவறு செய்தவரோ அவர் தண்டிக்கப்பட வேண்டும். மாறாக கரீமாகிய முஸ்லிமும் முருகனாகிய ஹிந்துவும் சண்டையிட்டுக் கொண்டதாகக் கருதும் போக்கு முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இன, மதக் கலவரங்களுக்கு மத உணர்வு அடிப்படையிலான இப்போக்கே அடித்தளக் காரணமாயமைகின்றது. எந்தவொரு சிறு செயலுக்கும் சமயச் சாயம் பூசும் போக்கு, குழப்பத்துக்கும்

வெறுப்புணர்வுக்குமே வழியாயமைகிறது. தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் தாங்கள் சார்ந்த சமயத்திற்குரிய இடம் எது என்பதில் திட்டவட்டமான உணர்வும் சிந்தனையும் இருப்பதில்லை.

### சமய அறிவில்லா சமயப் போலிகள்

உண்மையான சமய அறிவும் உணர்வும் உள்ளவர்களால் சமுதாயத்தில் எந்த விதப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. இஸ்லாம் உட்பட எந்த ஒரு சமயமும் இத்தகு போக்கை அனுமதிப்பதும் இல்லை. சமய அறிவு இல்லாத சமயப் போலிகளாலேயே சமுதாய வீதியில் குழப்பமேற்படுகிறது. ஒரு ஹிந்துவுக்கு மகனாகப் பிறந்து விட்ட காரணத்தாலேயே இந்துவாக இருப்பவர்களாலும் முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்துவிட்டதாலேயே முஸ்லிம் என நடமாடி வருபவர்களாலும் ஒரு கிருஸ்தவனுக்கு மகனாகப் பிறந்துவிட்டதால் மட்டுமே கிருஸ்தவனாகக் கருதிக் கொள்பவர்களாலுமே எல்லா சமயச் சண்டைகளும் சச்சரவுகளும் சமுதாயத்தில் ஏற்படுகின்றன. சமயச் சார்புள்ளவர்கட்கு மகனாக பிறந்த இவர்கள் தங்கள் சமய அறிவைப் போதிய அளவு பெறாது, மதப் பெயர் தாங்கிகளாக மட்டும் இருப்பவர்கள். எனவே, உண்மையான சமய அறிவு உள்ளவர்கட்கும் சமய அறிவில்லாது, வெறும் சமயப் பெயர் தாங்கிகளாக உலவுபவர்கட்குமிடையே மாபெரும் இடைவெளியுள்ளது. இந்த இடைவெளியைப் பயன்படுத்தும் சமூக விரோதச் சக்திகள் சமயப் பெயர் தாங்கிகளிடையே உருவாக்கும் சமயவெறி பல்வேறு தீங்குகளுக்குக் காரணமாயமைகிறது.

### தனிமனிதனும் சமுதாய மனிதனும்

ஒவ்வொரு மனிதனும் இருவேறு நிலைகளில் இயங்கக் கூடியவனாக இருக்கிறான். ஒன்று தனிமனிதன், மற்றொன்று சமுதாய மனிதன்.

ஒருவன் தன் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக் கேற்ப, தான் விரும்பியவாறெல்லாம், யாருடைய தலையீடு மின்றி வாழும் தனியுரிமை தனிமனித வாழ்வுக்குண்டு. இதற்கு எல்லா வகையிலும் ஏற்றநிலைக்களனாக அமைவது இல்லமாகும். வீட்டிலிருக்கும்போதோ அல்லது தன்னுடைய தனியுடைமையான இடங்களில் அன்னிய மனிதர்களின் தலையீடே இல்லாமல் வாழக்கூடிய சூழ் நிலைகளில் அவன் எப்படி வேண்டுமானாலும் வாழ முழு உரிமை உண்டு. விரும்பியதை உண்ண, உடுக்க, சமய வழிபாடுகளை, சடங்குகளை நிறைவேற்ற பரிபூரண உரிமை உண்டு.

ஆனால், அவன் தன் வீட்டை விட்டோ அல்லது தனியு ரிமை கொண்ட வளாகத்தை விட்டோ வெளியேறி வீதியில் காலடி எடுத்து வைத்தவுடன் அவனது தனிமனித உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. அவன் சமுதாய மனிதனாகி விடுகின்றான். பல்வேறு வகையான மனிதர்கள் உலவும் இடம் சமுதாய வீதி. பலவகை மனிதர் கள் மட்டுமல்லாது பல்வேறு வகையான சமய உணர்வு களும் சிந்தனைகளும் கருத்துகளும் உலவும் இடமாகவும் சமுதாய வீதி அமைகிறது. அதற்கேற்ப தனிமனித உரிமைகள் கட்டுப்பட்ட நிலையில் அமைய வேண்டிய தாகிறது. சுருங்கச் சொன்னால், சாலையில் என் விருப்பப் படி கைத்தடியைச் சுழற்றிச் செல்ல உரிமை உண்டெனி னும், பிறர் கண்ணில்படாதவாறு சுழற்றிச் செல்ல மட்டுமே உரிமை உண்டு.

தனிமனிதனுக்கு எவ்வாறு உரிமைகளும் கடமைகளும் உண்டோ அதேபோன்று சமுதாய வீதியில் உலவும் ஒவ் வொரு சமுதாய மனிதனுக்கும் நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாடுகள் பல உண்டு. இதைப்பற்றிய தெளிவான

உணர்வும் சிந்தனையும் ஒவ்வொருவருக்கும் இல்லாத தாலேயே சமுதாயத்தில் அமைதியின்மையும் குழப்பங் களும் சண்டை, சச்சரவுகளும் ஏற்பட ஏதுவாகின்றன. அதிலும், குறிப்பாக தனிமனிதத் தொடர்புள்ள சமயங்களை சமுதாய வீதிக்கு இழுத்து வந்து பிறர் மீதும் திணிக்க முயலும்போதுதான் எல்லா தகராறுகளுமே முளைவிட்டு, கிளைத்துப் படர்கின்றன.

எந்தச் சமயமும் தனி மனிதத் தொடர்புடைய ஒன்றாகத் தான் இருக்கிறது. சமய உணர்வுகளும் தத்துவங்களும் கருத்துகளும் உள்ளம் தொடர்பானவைகளாகும். ஒவ் வொருவரும் எந்த அளவுக்குத் தங்கள் உள்ளத்தில் இறை உணர்வையும் இறைச் சிந்தனையையும் கருத்துகளையும் தேக்கி, செயல் வடிவில் தன் வாழ்வில் நிறைவேற்றி வெற்றி பெறுகிறாரோ அந்த அளவுக்கு அவர் இறைவனின் பேரன்பையும் அதன் மூலம் பேரருளையும் பெற்றுய்ய முடியும் என்பது ஒவ்வொரு சமயமும் உணர்த்தி வருகின்ற உண்மை. இதற்குரிய இடங்களாக ஒவ்வொருவரின் வீடும் இறையில்லமும் சமயச் சார்பான வளாகங்களும் அமை கின்றன. சமயச் சார்பான நடவடிக்கைகளுக்கு உரிய இடம் சமுதாய வீதி அல்ல.

சமுதாய வீதியில் நடமாடும் ஒவ்வொருவரும் சமுதாய மனிதனுக்குரிய உரிமைகளை அனுபவிக்கவும் கடமை களை ஆற்றவும் மட்டுமே முயல வேண்டும். ஒவ்வொரு வரும் தங்கள் சமயச் சார்புகளை திணிக்காமலும் மற்றவர் களின் சமய உணர்வுகளை மதித்தும் நடக்க வேண்டிய இன்றியமையாக் கட்டுப்பாடு ஒவ்வொரு சமுதாய மனிதனுக்கும் உண்டு. உண்மையான சமய உணர்வாளர் களும் சிந்தனையாளர்களும் இத்தகைய போக்கை யுடையவர்களாகவே இருக்கிறார்கள். இஸ்லாமும் இதையே வலியுறுத்துகின்றது.

## சமயப் பிரச்சினைகளும் தீர்வும்

பல்வேறு சமயங்கள் உலவும் ஒரு நாட்டில், சமயத் தொடர்பாக எழும் பிரச்சினைகள் எதுவாயினும் அஃது சமயத் தலைவர்களாலேயே தீர்க்கப்பட வேண்டுமே யொழிய, சமயத்திற்கு அப்பால் உண்மையான சமய அறிவோ பற்றே இல்லாது இயங்கும் அரசியல்வாதிகளால் அல்ல. இவர்களின் தலையீட்டால் உண்மையான சமய உணர்வுகளும் ஆழிய சமயத் தத்துவக் கருத்துகளும் சிந்தனையும் பாழ்படுத்தப்படுவதோடு அவை கேலிக் குறியவைகளாகவும் ஆக்கப்பட்டு விடுகின்றன. எனவே மன ஒருமைப்பாடும் சமய நல்லிணக்க உணர்வும் உறுதி யாக நிலைபெற, அரசியலை சமயத்தோடு இணைக்கும் போக்குத் தவிர்க்கப்பட வேண்டும் என்பது கடந்த காலம் உணர்த்தும் உண்மை யாகும்.

கோயில், மசூதி, சர்ச், விகார், குருத்துவாராக்களை விட்டு சமுதாய வீதியில் கால்வைக்கும் ஒவ்வொருவரும் சமயங் கடந்த இந்தியனாக, 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்ற பாரதி கூறும் வாழ் வியல் நெறிக்கேற்ப வாழ முனைய வேண்டும். இதுவே உண்மையான இந்தியப் பண்பாடு. இதன் மூலமே அனைத்துச் சமயங்களைக் கண்ணியப்படுத்தவும் மனித நேயத்தை வளர்க்கவும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க வும் வலுப்படுத்தவும் இயலும், இதற்கான ராஜபாட்டை யாக அமைந்திருப்பதே இறை வழியாகிய இஸ்லாமிய நெறி முறை.

## வேற்றுமையில் ஒற்றுமை

ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் பாவனை யில் இந்தியா முழுவதும் ஒரேவிதப் பண்பாடு-இந்துத்துவப்

பண்பாடு-பின்பற்றப் படவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. 'ஹிந்துயிஸம்' வேறு, இந்துத் துவம் வேறு. 'ஹிந்துயிஸம்' மதத் தொடர்பான கொள்கை, கோட்பாடு. 'இந்துத்துவம்' என்பது மத நெறியல்ல, அரசியல் போக்கு. ஒலிச்சாயலைப் பயன்படுத்திச் செய்யப் படும் குழப்பம். இந்தியா பல இனங்களையும் மொழிகளை யும் மதங்களையும் கலை, பண்பாடுகளையும் கொண்ட மிகப்பெரிய நாடு. இவையனைத்தையும் ஏற்றிப் போற்றி மதிப்பதில்தான் இந்திய ஒற்றுமையின் உயிரோட்டமே அடங்கியுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட தங்களைக் கொண்ட எந்த நாட்டிலும் இருவகைப் பண்பாடுகள் இருப் பது இயல்பு. ஒன்று சமயங்கடந்த நிலையில் அனைவருக் கும் பொதுவான சமுதாயப் பண்பாடு. மற்றவை அந்தந்த சமயச் சூழலுக்குள் உருவாகி நிலை பெற்றிருக்கும் சமயப் பண்பாடு. இந்திாவைப் பொருத்தவரை பாரதப் பண்பாடு சமுதாய வீதியில் உலவும் அனைத்துச் சமயத்தவர்க்கும் பொதுவான சமுதாயப் பண்பாடு. இது சமயச் சார்பற்றது. இந்துத்துவம் என்ற பெயரில் ஹிந்து சமயச் சார்பான ஹிந்துயிஸப் பண்பாட்டை ஒரே பண்பாடாகக் கொண்டு எல்லோரும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துவது எல்லா வகை யிலும் இந்திய ஒற்றுமைக்கு ஊறுபாடாகவே அமைய முடியுமே தவிர உதவிகரமாக அமையவே முடியாது என்பது வரலாறு புகட்டும் உண்மை. இந்தியா வின் பல்வேறு இன, மொழிகளையும் அனைத்துச் சமயங் களையும் அதன் அடிப்படையிலான கலை, பண்பாடுகளை யும் நேசிப்பதன் மூலம், மதிப்பதன் வாயிலாகவுமே இந்திய ஒற்றுமையை வலுப்படுத்த முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. இதற்கேற்ப வேற்றுமை யில் ஒற்றுமை காணும் உயர் பண்பு நெறியை போற்றி வளர்க்க முற்பட

வேண்டும். ஆற்றல்மிகு இப்போக்கே பல்வேறு இனத்தவர்களிடையே, மொழியினரிடையே, சமயத்தவர் களிடையே நெருக்கத்தை உருவாக்கும்; புரிந்துணர்வைப் போற்றி வளர்க்கும்; ஒற்றுமையை வலுப்படுத்தும்; ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிகோளும். அத்தகு ஆக்கச் சிந்தனைகள் பூத்துக் குலுங்கும் பொன்னாடாக நம் நாட்டை உருவாக்குவோமாக.

## பார்வை நூல்கள்

பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்

**-மணவை முஸ்தபா**

மத்திய கிழக்கின் சிறப்பு வரலாறு

**-அ. உஸ்மான் ஷெரீப்**

தர்ஜுமதுல் குர் ஆன்

**-அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது (பாகவி)**

குர்ஆன் தர்ஜமா

**-மௌலானா எம். அப்துல் வஹ்ஹாப், எம்.ஏ; பி.டிஹெச்**

திரு விவிலியம் - இயேசு சபை வெளியீடு

தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்

**-மணவை முஸ்தபா**

ஹிந்து தர்மம்

**-கூ.அ.ராஜ்முகம்மது**

இஸ்லாமும் இந்தியச் சமயங்களும்

**-நீதிபதி எம்.எம்.இஸ்மாயீல் சாஹிப்**

ஜமா அத்துல் உலமா, சமரசம் இதழ் கட்டுரைகள்

இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்

**-எம்.ஆர்.எம்.அப்துற்-றஹீம்**

# இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்

மணவை முஸ்தபா